ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்

(விளக்கவுரையுடன்)



ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்

19.1.17

40வது புத்தகக்காட்சி

விளக்கவுரை

S. செளந்தரராஜன்

வெளியிடுவோர்

S. சுப்ரமணியன்

92/63, ஆணைக்கட்டி தெரு,

திருவண்ணாமலை.

முதற் பதிப்பு : மார்ச் 2016

© உரிமை : S. சுப்ரமணியன்

விலை : ரூ.100/-

Printed by : LKM COMPUTER PRINTERS,
T. Nagar, Chennai - 17.
Phone : 9940682929

நூலாசிரியரைப் பற்றி...

இந்நூலின் ஆசிரியர் எனது தந்தையார் தெய்வத்திரு. சௌந்தரராஜன் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் 1947ம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் தெய்வத்திரு. சுப்புராய அய்யர் மற்றும் செங்கம்மாள் ஆகியோர் ஆவர். இவர் இளமையில் பள்ளிக் கல்வியுடன் வேதம், ஸ்தோத்திரங்கள் ஆகியவற்றை திரு. வெங்கடேச சாஸ்திரிகள் அவர்களிடம் பயின்றதோடு காயத்திரியா னந்த ஸ்வாமிகளிடம் யோகாஸனமும் பயின்றார். இவர் திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் தன்னுடைய பணி நேரம் தவிர மற்ற நேரம் அனைத்தையும் ஆன்மீகப் பணிகளுக்காகவே செலவிடுவார். இவர் எங்களது குலதெய்வமான மயிலம் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமியிடம் அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார். அந்த குஹக் கடவுளின் அருள்தான் இவரை இந்த ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரத்தினை பாராயணம் செய்ய வைத்ததோடு, இந்நூலினை எழுதவும் வைத்தது எனலாம். எனது தந்தையாருக்கு இந்த ஸ்தோத்திர முகாந்திரம் எவ்வாறு கிடைத்தது என்பதை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர் குஹானந்த மண்டலியைச் சேர்ந்த தேவி உபாசகர் ஆவார். தனது பரமகுருநாதரான ஸ்ரீ சிதானந்த நாதர் அவர்களின் தீக்ஷா தினமான தை அமாவாசையன்று இந்நூலினை வெளியிடுவதே எனது தந்தையின் ஆவல். ஆனால் இந்நூலினை வெளியிடும் முன்னரே குஹக் கடவுளின் திருவடியை அடைந்து விட்டார். அவரது விருப்பத்தின்படி இந்நூலினை நான் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைவதோடு இந்நூலினையும் அவரது திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்.

இங்ஙனம்,

சௌ. சுப்பிரமணியன்

பொருளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	5
	ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்	7
1.	கணேச வந்தனம்	15
2.	ஆதிசங்கரரின் வினயம்	20
3.	ஸுப்ரமண்யரின் மஹிமைகள்	24
4.	ஸமுத்ரக்கரையில் எழக்காரணம்	31
5.	ஸமுத்ரக்கரையில் எழக்காரணம்	35
6.	கந்தமாதன மலையில் அமர்ந்த காரணம்	39
7.	கந்தமாதன மலையில் வஸிக்கக் காரணம்	43
8.	பள்ளியறை, மஞ்ச வர்ணனை	47
9.	திருவடி மஹிமை	52
10.	இடைப்பிரதேச வர்ணனை	57
11.	மார்பு பிரதேச வர்ணனை	62
12.	திருக்கரங்களின் மஹிமை	67
13.	திருமுகங்களின் அழகு	72
14.	திருமுகங்களின் பெருமை	76
15.	கருணைக் கடாக்ஷ விசேஷம்	79
16.	சிரஸ்களின் பெருமை	83
17.	ஆடை ஆபரண அழகு வர்ணனை	87
18.	சோமஸ்கந்த ப்ரபாவம்	92
19.	ஸுப்ரமண்யரின் நாம விசேஷங்கள்	97
20.	அநாதரக்ஷகன்	114
21.	அந்திமகாலத்து ரக்ஷகன்	117
22.	கராவலம்பனம்	124
23.	மனக்லேசம் நீக்குபவன்	128
24.	மனக்கவலைகளை அழிக்க வேண்டல்	133
25.	இலை விபூதி மஹிமை	137
26.	இந்திரியங்களின் கடமை	147
27.	ஏழைப்பங்காளன் – ஸுப்ரமண்யன்	153
28.	வழிவழி அடியவராக வேண்டுதல்	157
29.	பகை நீக்கி அருள வேண்டுதல்	160
30.	பிழை பொறுத்து அருள வேண்டல்	165
31.	வணங்குதல்	171
32.	போற்றி! போற்றி!	182
33.	பலச்ருதி – நூற்பயன்	188

முன்னுரை

'ஸுப்ரமண்ய புஜங்கம்' ஆதிசங்கரரால் திருச்செந்தூர் ஸுப்ரமண்யர் மீது பாடப்பட்ட ஸ்தோத்ரமாகும்

இப்புஜங்கம் முழுவதைப் படித்தாலும் 'ஸுப்ரமண்ய' என்ற பெயரைக் காண இயலாது. ஷண்முகனைப் பல இடங்களில் வர்ணித்துத் துதிக்கிறார். 'ஷண்முக புஜங்கம்' என்று பெயரிடாது, பரம்பொருட்தன்மை என்ற கருத்தைக் கொண்டு 'ஸுப்ரமண்ய புஜங்கம்' என்றே அழைக்கப் படுகிறது.

திருவண்ணாமலை (லேட்) ப்ரம்மஸ்ரீ வெங்கடேச சாஸ்திரிகளிடம் நான், ஓரளவு வேதம், ஸ்தோத்திரங்கள், ஸஹஸ்ரநாமங்கள் பயின்றேன். எவ்வளவோ ஸ்தோத்திரங்கள் கற்றும், ஸுப்ரமண்ய புஜங்கம் விடுபட்டுவிட்டது. அவர் காலமான ஓராண்டு முடிவில் (1983) விடியற்காலை கனவில் தோன்றி 'ஸுப்ரமண்ய புஜங்கம்' பாராயணம் செய் என்றார். நானும், கனவிலேயே அவர் அதைக் கற்றுத் தராததைச் சொன்னேன். அவரோ, "எல்லாமே சொல்லித் தரணுமா? நான் சொல்றேன் நீ பாராயணம் பண்ணணும் நல்லது நடக்கும்" என்று கூறினார். மேற்கொண்டு பேசும் முன் கனவு தடைபட்டு விட்டது.

அடுத்து, தொடர்ந்து நான்கைந்து நாட்கள், ஸுப்ரமண்ய புஜங்கம் பற்றியே என்னை உறவினர்களும் நண்பர்களும் கேட்டனர். அச்சமயம் குரு பெயர்ச்சியும் வர இருந்தது. சரி, இதெல்லாம் ஒரு Coincidence என இருந்தேன். வாரமுடிவில் திருச்சி சென்றேன். அங்கு, ஒரு ஆசிரியரை (சமஸ்கிருத ஆசிரியராக இருந்து செகண்டி கிரேட் ஆனவர்) அறிமுகம் செய்து வைத்தனர். அவர் உடனே தம் கைப்பையிலிருந்து ஒரு சிறு புத்தகத்தை கையில் வைத்து அழுத்த 'இதைப் பாராயணம் செய்யுங்கள், சிரேஷ்டமாயிருப்பீர்' என்றார். பிரித்துப் பார்த்தேன். 'ஸுப்ரமண்ய புஜங்கம்!'

நிதானமாக யோசித்தேன். 'ஏதோ ஒரு காரணத்தின் பொருட்டு நம்மைத் தொடர்ந்து வந்து குருவின் ஆணை செயல்படுத்துகிறது என உணர்ந்தேன். அடுத்துவந்த ஓரிரு தினங்களில் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்து, குரு த்யானம் செய்துவிட்டு, சாஸ்திரிகளிடம் கற்றது போல் சொல்லத் தொடங்கினேன். அன்றுமுதல் தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேலாக இன்றும் பாராயணம் செய்து வருகிறேன். சில நாட்களில் இரண்டு மூன்று தடவைகள் கூட சொல்வதுண்டு. நானும் என் குடும்பமும் எவ்வளவோ துன்பங்களினின்றும் நோய்களினின்றும் காப்பாற்றப் பட்டுள்ளோம். இது அனுபவபூர்வமான உண்மை.

ஓரிரு மாதங்களில் ஸுப்ரமண்ய புஜங்க ஸ்லோகங் களின் பொருளையும் தெரிந்து கொண்டேன். ஒரு நாள், 'அர்த்தஞானமில்லாமல் சப்தத்தை உச்சரித்தல் பலன்தராது நெருப்பில்லாத சாம்பலில் போடப்பட்ட அவிஸ் பிரகாசிக்காது' என்றும்,

'அறம் பொருள் இன்பம் வீடு என்ற புருஷார்த்தங் களை விரும்புபவர்கள் அர்த்தஞானம் உடையவர் களாகவும் இருக்கவேண்டும்' என்றும் ஒரு புத்தகத்தில் காணநேரிட்டது (வரிவஸ்யாரஹஸ்யம் 54,56)

இக்கருத்தை மனதிற் கொண்டு, குருவின் அருள் துணையுடனும், திருச்செந்தூர் ஸுப்ரமணியரின் அருளாலும், ஸுப்ரமண்யபுஜங்கத்திற்கு என்னால் இயன்ற ஒரு விளக்கவுரை எழுதியுள்ளேன். பொருளுணர்ந்து ஸுப்ரமண்ய புஜங்கத்தைப் பாராயணம் செய்ய இப்புத்தகம் உதவும் என நம்புகிறேன்.

இந்நூலினை ப்ரம்ம ஸ்ரீ வெங்கடேச சாஸ்திரிகள் அவர்களின் பாதகமலங்களில் சமர்ப்பிக்கிறேன்.

இப்படிக்கு
S. ஸௌந்தரராஜன்

ஸ்ரீ குருப்யோநம:

ஸ்ரீ ஸுப்ரமண்ய புஜங்கம்

ஆதிசங்கரர் காலடி க்ஷேத்ரத்தில் அவதரித்தவர். காலடி பூர்ணாநதிக் கரையில் அமைந்தது. சற்று தூரத்தில் ஓடிய ஆற்றைத் தன் தாயின் சௌகரியத்திற்காக வீட்டினருகில் ஓடச் செய்தார். இன்றும் காலடியில் பூர்ணாநதிக் கரையில் அவருடைய இல்லம் சிறப்பான மடமாக உள்ளது. அவருடைய தாயின் அதிஷ்டானமும் உள்ளது. நம் வாழ்நாளில் செந்தூர் முருகனை ஒரு தடவையாவது தரிசனம் செய்ய வேண்டும்.

நூல் வரலாறு

வடநாட்டு அபிநவகுப்தன் செய்த ஆபிசார வினையால் பாதிக்கப்பட்ட ஆதிசங்கரர், பரமேஸ்வரனை வேண்டினார். ஹரனோ, கனவில் 'சூரனை வென்ற வீரன் வாஸம் செய்யும் ஜயந்திபுரம் (திருச்செந்தூர்) சென்றால் நோய் நீங்கும்' என்றார்.

அஷ்டமாசித்தி கைவரப்பெற்ற ஆதிசங்கரர், அணுவாகமாறி வான்வழியே திருச்செந்தூர் அடைந்தார். குகைக்குள் ஓர் அற்புதக் காட்சியைக் கண்டார். ப்ரகாசிக்கும் குமரன்! பாலஸுப்ரமண்யன் பாதார விந்தங்களில் ஆதிசேஷன் பூஜித்துக் கொண்டிருக்கும் காட்சி! பரவசமானார். தன்னை மறந்தநிலை!

ஸம்ஸ்கிருதத்தில், 'புஜங்க விருத்தப்பா'வில் தான் கண்ட காட்சியையும், ஸுப்ரமண்யரைப் போற்றியும் துதித்தார். அவ்வாறு ஸுப்ரமண்யரை ஸ்தோத்தரித்த ஸ்துதிகளே 'ஸுப்ரமண்ய புஜங்கம்' ஆகும். பாம்பின் அசைவிற்கேற்றபடி விருத்தப்பாவில் பாடப்பட்டுள்ளது.

பன்னீர்மரத்து இலையில் வைத்து வழங்கப்படும் விபூதியை ஆதிசங்கரர் உட்கொண்டு நோய் நீக்கம் பெற்றார் (இலை விபூதி) (பாலஸுப்ரமண்யருக்கு எதிரில் மஹா மண்டபத்தில் உண்டியலுக்குத் தென்புறத்தூணில் ஆதிசங்கரரின் உருவம் உள்ளது.)

தமிழ் மொழிபெயர்ப்பு

பின்னாளில் ஸுப்ரமண்ய புஜங்கத்தை தமிழிலும் மொழிபெயர்த்துள்ளனர்.

கோட்டாற்று கணபதி ஆச்சாரி (1836—1901) என்பவர் முதலில் மேற்படி புஜங்கத்தைத் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை யுடன் தொடர்புடையவர். இந்த மொழி பெயர்ப்பை கவிமணி அவர்கள் படித்திருக்கிறார். (இது பற்றிய தகவல்களை 'தெய்வங்கள் முளைக்கும் நிலம்' என்ற நூலில் அதன் ஆசிரியர் திரு. அ.கா. பெருமாள் குறிப்பிட்டுள்ளார்)

1950—ல் திரு. கு. நடேசக்கவுண்டர் அவர்கள் புஜங்கத்தை மொழி பெயர்த்துள்ளார்.

அண்மைக் காலத்தில் திரு. கலாபாரதி, மற்றும் சிலரும் புஜங்கத்தைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர்.

செம்பொருள் தன்மை என்ற ஆத்மஸ்வரூப விமர்சத்தோடு கூடிய நிலையே செந்தில் என்பர் பெரியோர்.

அருணகிரிநாதரும் தம் திருப்புகழில்,

அந்திபகல் என்ற இரண்டையும் ஒழித்து
இந்திரிய சஞ்சலங்களையறுத்து
அம்புயப் பதங்களின் பெருமையைக் – கவிபாடிச்
செந்திலையுணர்ந்துணர்ந்து உணர்வறக்
கந்தனையறிந்த யறிந்த அறிவினிற்
சென்று செருகுந்தடம் தெளிதரத் – தணியாத
சிந்தையும் அவிழ்ந்தவிழ்ந் துரையொழித்து
என் செயல் அழிந்தழிந்தழிய மெய்ச்
சிந்தைவர என்று நின் தெரிசனைப் படுவேனோ'

என்று திருச்செந்தூர் தத்துவத்தைத் தெரிய வைக்கிறார்.

அத்தகைய க்ஷேத்திரத்தை அறிய விழைந்தார்.

ஸுப்ரமண்ய புஜங்கங்கள்

'புஜங்கம்' என்றால் பாம்பு, தோள் என்று பொருள். தோளால் ஊர்ந்து செல்லக் கூடியது என்பதாகும். வளைந்து வளைந்து ஊர்ந்து செல்லும் பாம்பின் அசைவிற்கு ஏற்றபடி விருத்தப்பாவில் தான் கண்ட இறைவனைப் போற்றித் துதித்ததே 'ஸுப்ரமண்ய புஜங்கம்'.

ஆதிசங்கரர், திருச்செந்தூர் ஸுப்ரமண்யரைத் தரிசித்தபின் ஏற்பட்ட மனோலயத்தாலோ என்னவோ, ஸ்ரீகணேச புஜங்கம், சிவபுஜங்கம், தேவீபுஜங்கம், சாரதா புஜங்கம், பவானி புஜங்கம், போன்றவைகளையும் நமக்கு அருளியுள்ளார். ஆதிசங்கரர் இயற்றிய ஒவ்வொரு ஸ்லோகமுமே ஒவ்வொரு மந்திரமாகும். உள்ளார்ந்த செறிவு ஒவ்வொரு ஸ்லோகத்திலும் காணப்படும்.

ஸுப்ரமண்ய புஜங்கங்கள் மூன்று உள்ளன. மூன்றுமே ஆதிசங்கரர் இயற்றியவைகளாக உள்ளன.

1. **'கணேசம் நமஸ்க்ருத்ய கௌரீகுமாரம்'** என்ற முதல் வரியைக் கொண்டு 31. ஸ்லோகங்கள் கொண்டது

2. **'பஜேஹம் குமாரம் பவானீகுமாரம்'** என்ற முதல் வரியைக் கொண்டு 23 ஸ்லோகங்கள் கொண்டது

3. **'ஸதா பாலரூபாபி விக்னாத்ரிஹந்த்ரீ'** என்ற முதல் வரியைக் கொண்டு 33 ஸ்லோகங்கள் கொண்டது.

1. கணேசம் நமஸ்க்ருத்ய கௌரீகுமாரம்... (தொடக்கம்)

இந்த தொடக்க வரியைக் கொண்ட புஜங்க ப்ரயாத விருத்தம் பலச்ருதியுடன் முப்பத்தொன்று ஸ்லோகங்கள் கொண்டது.

கணேசரை நமஸ்கரித்து, (ஸுப்ரமண்ய) புஜங்க ப்ரயாதத்தை சொல்லத் தொடங்குவதாக ஆரம்பிக்கிறார்.

கிரீட அழகு, முகம், கண்கள், புருவம், மூக்கு, உதரம், நாபி, கடி (இடை) கால், பாதம், கண்டம் ஆகிய அவரின் தேக அழகைப் போற்றுகிறார் ஸுகுக்கே புரஸ்தம்" என அவ்விடத்தில் இருப்பதாகப் பாடுகிறார். ஸுகுக்கேபுரம் என்பது கர்நாடகமாநிலத்தில் உள்ள 'குக்கே ஸுப்ரமண்யர் கோயிலைக் குறிக்கும். (கன்னியா மாவட்டம்— தாரா நதிக்கரை) 'குக்ஷி' எனில் வட மொழியில் குகை, என்றும் பொருள். இச்சொல்லே நாளடைவில் குக்கே என ஆகியதாம் இவ்வாலயத்தில் நிறைய லிங்கங்கள் உள்ளன. அவற்றைக் 'குக்கே லிங்கங்கள்' என அழைக்கின்றனர்.

இந்த புஜங்க ப்ரயாத வருத்தத்திலேயே 'த்ரிலோக ப்ரசஸ்தம் ஸுகுக்கேபுரஸ்தம்' (7) 'பவவ்யாதிபங்கம் பஜே குக்கலிங்கம்' (15) 'நம: குக்கலிங்காய தஸ்மை நமஸ்தே' (20) என்று குக்கேயையும், குக்கலிங்கத்தையும் குறிப்பிட்டு துதிக்கிறார்.

ஆதிசங்கரர் தம் திக் விஜயத்தின் போது, இந்த தலத்திற்கு வந்திருக்கிறார். ஸுப்ரமண்ய புஜங்கத்திலும் இதனைப் பாடியுள்ளார். ஸுகுக்கேபுரம் இதுவாகத் தானிருக்கவேண்டும் என்பது நிச்சயம்.

மேலும், குக்கே ஸுப்ரமண்யா ஆலயத்திற்கு அருகே 'ஆதிஸுப்ரமண்யர்' என பாம்பு புற்றே மூலவராக உள்ள ஆலயம் உள்ளது. புஜங்கம் (பாம்பு, ஆதிசேஷன்) என்ற சொல்லோடு தொடர்புடைய க்ஷேத்ரமுமாகிறது.

இங்கு ஸுப்ரமண்யர்,

த்ரிமூர்த்திஸ்வரூபம், த்ரயீஸத்கலாபம்
த்ரிலோகாதிநாதம் த்ரிநேத்ராத்மஜாதம் |
த்ரிசக்த்யா ப்ரயுக்தம் ஸுபுண்ய ப்ரசஸ்தம்
த்ரிகாலக்ருமிஷ்டார்த்ததம் தம் பஜேஹம் ||

என த்ரிமூர்த்தி ஸ்வரூபமாகப் போற்றப்படுகிறார்.

ஸுப்ரமண்யரின் பெயர்களில் ஸுகுக்கேபுரஸ்தன், பரப்ரம்ம ரூபம், பர்ஹியாநன் (மயில்வாஹனன்), மஹாஹீந்த்ரரூபன், த்ரிமூர்த்தி ஸ்வரூபன், தேவஸேநேசன், பூதேசன், சேஷஸ்வரூபன், அக்னிபூ:, மஹேசாத்மஜாதன், புஜங்கேசன் ப்ருங்கேசன், நீலகண்டாதிரூடன்— போன்றவை மற்ற புஜங்களினின்று சற்று வித்தியாச மானவை

சேஷஸ்வரூபம், த்ரிமூர்த்தி ஸ்வரூபம், புஜங்கேசன்— ஆகிய நாமங்கள் இந்த புஜங்கத்தில் குறிப்பிடப்பட வேண்டியவை.

நமஸ்கரித்து ஸ்தோத்திரத்திற்கு ஏற்ப, எட்டு ஸ்லோகங்கள் உள்ளது இந்த புஜங்க ப்ரயாதத்தின் சிறப்பு அம்சம்.

முடிவில் (31ல்) இந்ததுதி 'தாரகாரேர் குணஸ்தோத்ர ராஜம்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. பஜேஹம் குமாரம் பவாநீகுமாரம்.....(தொடக்கம்)

இந்த புஜங்க ப்ரயாதவ்ருத்த ஸ்தோத்திரம், பலச்ருதி உட்பட இருபத்து மூன்று ஸ்லோகங்கள் கொண்டது. கணபதி வந்தனம் என்று காணப்படவில்லை. ஒரு குறிப்பினால் கொள்ளலாம். ந்ருஸிம்ஹாவதாரம் என்பது இதில் உள்ள சிறப்பு வார்த்தை.

மஹாபர்ஹி வாஹனம் (மயில்) தேவஸேநேசன், சராரண்யஸம்பூதம், குக்குடாரூடகேது, மருத்ஸாரதி, சிகீந்த்ராதிருடன் போன்ற சொற்கள் உள்ளடங்கியவை.

'விரிஞ்சாய மந்த்ரோபதேசம் சகார' என பிரம்மனுக்கு உபதேசம் செய்த குறிப்பு இதிலுள்ளது.

'மஹாஸேந, காங்கேய, வல்லீஸஹாய' என காங்கேயன், வல்லீஸஹாயன் என்பன இந்த புஜங்கத்தில் காணப்படுகிறது. முந்தைய புஜங்கத்தில் 'தேவஸேனேசன்' என்ற குறிப்பு உள்ளது. இந்த புஜங்கத்தில் 'வள்ளி' குறிப்பிடப்படுகிறாள்.

'நமஸ்தே நமஸ்தே' என நமஸ்கரிக்கத்தக்க வகையில் இரண்டு ஸ்லோகங்கள் உள்ளன.

இந்த புஜங்க ப்ராயதவ்ருத்த ஸ்தோத்திரத்தில், பிரார்த்தனைகள் சற்று கூடுதலாகக் காணப்படுகின்றன.

முந்தைய புஜங்கப்ரயாதத்தைப் போலவே, பலச்ருதியில், 'குணஸ்தோஸ்த்ரமேதத் க்ருதம் தாரகாரே' எனக்காணப்படுகிறது.

இப்புஜங்கப்ரயாதவ்ருத்தத்தில் சிறப்பான ஒன்று, 'சிரீஷப்ரஸூநாபிராமம் பவந்தம் பஜே தேவஸேநா மஹத்புண்ய புஞ்ஜம் சிரீஷப்ரஸூநாபிராமம்' சிரீஷ மரத்தின் மொட்டின் வாஸனை என்ற குறிப்பு சற்று வித்தியாஸமான குறிப்பு.

3. ஸதா பாலரூபாபி என்று தொடங்கும் புஜங்காக்ய வ்ருத்த ஸ்தோத்ரம், வழக்கமான பாராயணத்தில் உள்ளது ஆகும்.

இதில் பலச்ருதி(நூற்பயன்)யுடன் முப்பத்துமூன்று ஸ்லோகங்கள் உள்ளன. முதல் ஸ்லோகம் விநாயகரைப் போற்றும், ஸுப்ரமண்ய உபாஸனை, வியாதிநிவர்த்தி, ஷடக்ஷரியின் சிறப்பு, குஹனின் அங்க வர்ணனைகள், முகவர்ணனை, பாதாரவிந்த மஹிமை, கடாக்ஷம், இலைவிபூதி விசேஷம், காருண்யம், வேலின் மஹிமை, ஆகியவைகள் இதிலுள்ள ஸ்லோகங்களின் தாத்பர்யம்

மஹா பெரியவாள் அருள்வாக்கு

மூன்று ஸுப்ரமண்ய புஜங்கங்கள் இருப்பதால் எது உண்மையானது: பாராயணம் செய்வதில் தவறு ஏற்பட்டு விடாதா? என்றெல்லாம் நம்மைக் குழப்பிக் கொள்ள வேண்டாம். மஹாபெரியவாள் இம்மாதிரியான சங்கடங் களுக்கு நமக்களிக்கும் அருள் வாக்கினைப் பாருங்கள்.

"ஆதிசங்கரர் ஸ்தாபித்த மடங்களிலெல்லாம் சங்கராசாரியார் என்று எத்தனையோ சுவாமிகள் இருப்பர். உஜ்வலசங்கரர், கிருபா சங்கரர், மூக சங்கரர், அபிநவசங்கரர் என இருந்திருக்கின்றனர். இவர்களிலும் ஸ்தோத்ரங்கள் செய்தவர்கள் இருந்திருக்கலாம். அப்படிப் பட்ட ஸ்லோகங்கள் மற்றும் ஸ்தோத்ரங்கள் நாளடைவில் சங்கரர், சங்கராசாரியார் என்பதால் ஆதிசங்கரர் செய்ததாகவே நம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம்.

"ஆசார்ய பீடத்தில் வந்தவர்கள் இயற்றித்தந்து எத்தனையோ காலமாக ஆசார்யாள் செய்ததாகவே நினைத்துப் பாராயணம் செய்யப்பட்டு பலனும் ஏற்பட்டிருக்கின்றன. அவருடைய இன்ஸ்பிரேஷனில் அவரே உள்ளே புகுந்து பண்ணியவை இவை! ரொம்பவும் ஆராய்ந்தால் பக்திபோய்விடும். அனுக்ரஹமே லக்ஷியம்; ஆராய்ச்சி அல்ல. ஆராய்ச்சிபூர்வமாக ஆதிசங்கரர் செய்தது வேறே, பிற்கால ஆசார்யாள் செய்தது வேறே என வேறுபடுத்திக் கொண்டாலும், அனுபவபூர்வமாக அவை யெல்லாம் ஒரே குருப்ரஸாதத்தால் உண்டானவைதான். அதனால் பேதப்படுத்தாமல் பாராயணம் பண்ணிப் பலன் அடைவோம் என்ற எண்ணம் இருப்பதுதான் நல்லது!"

(தெய்வத்தின் குரல்– 5ம் பகுதி பக் 830–831
ரா.கணபதி, வானதி பதிப்பகம், சென்னை, 1989)

மூன்றாவதாகக் குறிப்பிட்ட 'ஸதாபாலரூபாபி' எனத் தொடங்கும் ஸுப்ரமண்யபுஜங்கத்தின் பொருளை நாம் விரிவாகக் காண உள்ளோம்.

வள்ளலாரின் நண்பர் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள், 1879—ல் ஸ்ரீ சங்கர விஜயம் என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். சங்கர விஜய விலாசம், வியாசாசனீயம், பத்மபாதர் எழுதிய சரித்திரம், சங்கர விஜய காவியம் ஆகிய நூல்களில் கண்ட கதைகளைத் தழுவி சுருக்க தமிழில் எழுதப்பட்டதாகக் குறித்திருக்கிறார். அதில் சங்கரருக்கு ஏற்பட்ட நோய் பற்றிய குறிப்பு சற்று வித்தியாசமாயுள்ளது. ஆனால் சுப்ரமண்ய புஜங்கம் பற்றிய குறிப்பு இல்லை.

அபிநவகுப்தர் மந்த்ரசித்தி உடையவர். சங்கரருடனான வ்ாதத்தில் தோற்றுள்ளார். அதர்வணவேத முறைப்படி சங்கரர் மீது ஏவல் செய்திருந்தார். ஆனால் அது சங்கரரைத் தாக்கவில்லை

இருப்பினும் சங்கரரோ, ‘சபையில் புலவர்களை வென்றதால், அவர்கள் அவமானத்துடன் மனம் நோகச் செய்து விட்டதே பெருங்குற்றம்’ என்ற நூற் பிரமாணங் கட்கு உட்பட்டு உடன்பட்டார். ஏவலானது ஆசனத்தைப் பற்றி, ரத்தம் வெளிப்படும் மூலநோயாக ‘பகந்தரம்’ என்ற பெயரில் ஏற்பட்டது.

ஆடையைத் துவைக்கும் தோடகர் கண்டு விட்டார். சங்கரருக்குத் தேகாபிமானம் இல்லையென்றாலும் சீடர்கள் பொருட்டு பரிகாரம் வேண்டுமென்றார் அவர். மந்திர ஏவலால் இதுவந்ததென அறிந்து, கோபம் கொண்ட பத்மபாதர், குருதடுத்தும் ஏவலைத் திருப்பி அபிநவ குப்தனைத் தாக்கச் செய்தார். அவனை வியாதி பற்றி அழித்தது. மந்திரவாதிகளும் ஞானியர்வழி நாம் குறுக்கிடலாகாது என உணர்ந்தனர். இவ்வாறாகக் காணப்படுகிறது.

எது எவ்வாறாக இருப்பினும், காலங்காலமாகப் பெரியோர்களால் நம்பிக்கையுடனும், பக்தியுடனும் பாராயணம் செய்யப்பட்டு வரும் ‘சுப்ரமண்ய புஜங்க’த்தை நாம் தொடருவோம்.

1

கணேச வந்தனம்

கணபதி வழிபாடு

1. ஸதா பாலரூபாபி விக்னாத்ரி ஹந்த்ரீ
மஹாதந்தி–வக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா |
விதீந்த்ராதி ம்ருக்யா கணேசாபிதாமே
விதத்தாம் ச்ரியம் காபி கல்யாணமூர்த்தி: ||

பதவுரை

ஸதா — *எப்போதும்;* பாலரூபாபி — *பாலரூபத்தி லிருந்தாலும்;* விக்னாத்ரி ஹந்த்ரீ — *விக்னமலையை பிளக்கும்;* மஹாதந்தி வக்த்ரஅபி — *பெரிய யானை முகத்தை உடையவரும்;* பஞ்சாஸ்ய மான்யா — *சிங்கத்தால் (பரமேஸ்வரனால்) பூஜிக்கத்தக்கவரும்;* விதீந்த்ராதி ம்ருக்யா — *பிரம்மா, இந்திரன் முதலான தேவர்களால் தேடப்படுபவரும்;* கணேசாபிதா — *கணேசன் என்ற பெயருடைய;* காபி கல்யாணமூர்த்தி — *ஒப்புயர்வற்ற மங்களமூர்த்தி;* மே — *எனக்கு;* ச்ரியம் — *லக்ஷ்மியை (மோக்ஷத்தை);* விதத்தாம் — *அளிக்கட்டும்.*

விளக்கவுரை

ஸதாபாலரூபாபி

ஸதா — எப்போதும்

பாலரூபம் என்பது எல்லா உயிரினங்களுக்கும் உண்டு. பாலரூபம் என்னும் போது முருகனும்,

கண்ணனுமே நமக்கு நினைவுக்கு வருவர். கன்னிக்கும் பாலரூபம் உண்டு (பாலா)

நாமும் குழந்தைகளின் பாலரூபத்தை ரசிக்கிறோம்:

'களபோ பாலலீலாபிராம' என்பது ஒரு மங்கள ஸ்லோகத்தின் இறுதி வரி. இங்கு, கணேசரின் லீலை குறிப்பிடப்படுகிறது. 'குட்டியானை குழந்தை விளையாட்டில் களிக்கிறது' (பிள்ளையார்) என்று பொருள். குழந்தை விளையாட்டில் நம்மை மகிழ்விப்பவர்.

ஔவையாரும், விநாயகர் அகவலை 'சீதக்களப' என்று தொடங்குகிறார். 'பாலன்' எனில் என்றும் இளமையாக புதிதாகக் காட்சியளிப்பவன். 'பிரணவ ஸ்வரூபி நித்ய பரமானந்தமாய் ப்ரகாசிப்பவன்' என்றும் பொருள்.

விக்னாத்ரி–ஹந்த்ரீ

அருணாத்ரி, சோணாத்ரி, சேஷாத்ரி, நாகாத்ரி, வேங்கடாத்ரி— இவைகள் மலைகளைக்குறிக்கும்.

விக்னங்களே மலையாக (விக்னமலை) இருந்தாலும், விக்னங்கள் நீங்க தேவர்களாலும் வணங்கப் படுபவர் கணேசர்.

பிள்ளையாரோ, விக்னங்களைப் போக்கும் பெரிய வேலையைச் செய்துவிட்டு விளையாடும் பாலகனாகக் காட்சியளிப்பவர்.

'விக்னமாகிய இருட்டைப் போக்கும் சூரியனாகவும் விக்னமெனும் கடலுக்கு அகத்தியனாகவும் விக்னம் எனும் பாம்புக் கூட்டத்துக்கு கருடனாகவும், விக்னம் எனும் யானைக்கு சிங்கமாகவும் விக்னம் எனும் மலைக்கு வஜ்ராயுதமாகவும், விக்னமெனும் காட்டிற்கு அக்னியாகவும், விக்னமெனும் மேகத்திற்கு சண்டமாருதமாகவும் உள்ள விக்னேஸ்வரர் எங்களைக் காப்பாற்றவேண்டும்' என்ற பொருளில் ஒரு வடமொழி ஸ்லோகம் உள்ளது.

ஆதிசங்கரரே தம் விருப்பத்தை—நோய் நீக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள ஸுப்ரமண்யரை வேண்டும் முன்

விக்னாத்ரி ஹந்த்ரீ என விக்னேஸ்வரரை வேண்டிக் கொள்கிறார்.

மஹாதந்தி வக்த்ராபி

'மஹா' என்ற பதம் உயர்ந்த, பெரிய, சிறந்த என்ற பொருளைத் தரும். மஹாதேவன், மஹாவித்யா, மஹாவாக்யம், மஹாமாயா, மஹாகாலன், மஹாமேரு என்பவை சிறப்புமிக்க உதாரணங்கள்.

விக்னேசரோ 'மஹாதந்தி—வக்த்ரன் 'தந்தி' எனில் யானை எனப்பொருளாகும். திருவானைக்கா புராணத் திற்கு 'தந்தி வனப் புராணம்' என்ற பெயர் உண்டு. 'தந்நோ தந்தி ப்ரசோதயாத்' என்கிறது காயத்ரி மந்த்ரம்.

விநாயகரோ 'மஹாதந்தி வக்த்ரன்' பெரிய யானை முகத்தோன். தத்துவங்களின் திருவுருவம்.

பஞ்சாஸ்யமான்யா

'பஞ்சாஸ்ய' என்ற பதம் விரிந்தமுகமுடைய சிங்கத்தையும், ஐந்து முகத்தோன் என்ற பரமேஸ் வரனையும் குறிக்கும்.

ஆதிசங்கரரும் சிவானந்தலஹரியில், 'கர லக்ன ம்ருக' எனத் தொடங்கும் ஸ்லோகத்தில் (44) சிங்கத்திற்கும் சிவபெருமானுக்கும் சிலேடை புனைகிறார். சிவபெருமா னான சிங்கம் என் மனக் குகையிலிருக்க பயமேது என்கிறார். அதையும் இங்கு நோக்கத்தக்கது.

பரமேஸ்வரன், திரிபுராஸுரனுடனான போரில் மஹா கணபதியை தியானித்தபின்பே அசுரனை ஸம்ஹரித்தார். அதனால் பரமேஸ்வரனால் பூஜிக்கத் தக்கவர்.

பொதுவாக யானைகள் சிம்மத்தைக் கண்டு அஞ்சும். மஹாதந்தியான இந்த யானையோ சிம்மங்களால் பூஜிக்கப் படுகின்றன. 'மஹாகணபதி மந்த்ரம் சிம்மங்களையும் வசப்படுத்தும்' என்பது குறிப்பு. இதற்கான கதையொன்றும் கணேச புராணத்திலுள்ளது.

விதீந்த்ராதி ம்ருக்யா

விதி— ப்ரம்மா. ஸ்ருஷ்டித் தொழிலில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட ப்ரம்மாவுக்கு 'விதி' என்று பெயர்.

பொதுவாக, புராணங்களில் புராண தெய்வத்தைச் சிறப்பித்துக் கூறும் போது பிரம்மாதி இந்த்ராதி தேவர்கள் அத்தெய்வத்தை பூஜித்து வணங்குவதாகக் கூறுவது மரபு.

'ப்ரம்மோபேந்த்ர—மஹேந்த்ராதி—தேவஸம்ஸ்துத வைபவா' 'ஹரி ப்ரம்மேந்த்ர ஸேவிதா' என லலிதா ஸஹஸ்ரநாமம் கூறும்.

அவ்வாறே, பிரம்மனும் இந்த்ரனும் கணேசரை உணர்ந்து, தேடத்தக்கவராய் (ம்ருக்யா) பூஜிக்கின்றனர்.

கணேசாபிதாமே

ஆரம்பத்தில், 'கணானாம்த்வா' என்ற மந்த்ரத்திற்கு கணேச அவதாரம், நாம ரூபங்கள் ஆகியவையே சிறப்பாக இருந்தன.

பஞ்சபூதங்களாலான உலகத்துக்கு 'கணம்' என்று பெயர். இவற்றின் வடிவாகவும், இவற்றை நிர்வகிப்பவ ராகவும் உள்ளதால் கணேசர், கணேஸ்வரர் எனப்பட்டார்.

மே—எனக்கு (ஆதிசங்கரருக்கு)

விதத்தாம் ச்ரியம்

விதத்தாம்—அளிக்கட்டும், கொடுக்கட்டும். விதத்—பிரம்மா என்றும் பொருள். ப்ரம்மஞானத்தையும், மோக்ஷத்தையும் அனுக்ரஹிக்கவேண்டும் என்பதும் உட்கிடக்கை.

ச்ரியம் — ஐஸ்வர்யம்.

ஸ்ரீஸூக்தத்தில், 'ச்ரியே ஜாத ச்ரிய ஆநிர்யாய' என்ற ரிக் (வரிகள்) 'திருமகள் சேர்பவர்களுக்கு செல்வம் கிடைக்கும். ஐஸ்வர்யமும் நீண்ட ஆயுளும் கிடைக்கிறது. செல்வத்தில் திளைத்தபடி மரணமற்ற நிலையை அடைகிறார்கள்' என்று பொருள் தரும், லக்ஷ்மீ கடாக்ஷத்துடன் மோக்ஷஸாதன

ஹேதுவாகவும் இருக்கட்டும் என்பது ஆதிசங்கரரின் பிரார்த்தனை.

காபிகல்யாணமூர்த்தி:

மஹிமையுள்ள கணேசமூர்த்தி எப்போதும் மங்கள மூர்த்தியாக விளங்கவேண்டும். மங்களத்தைச் செய்ய வேண்டும் என வேண்டுகிறார்.

ஸ்ரீஸுப்ரமண்யரும் 'மங்களத்தைச் செய்பவர்' ஆவார். கல்யாணக்ருதர் என்ற ஒரு பெயரும் ஸஹஸ்ரநாமத்தி லுள்ளது. இவருக்கும் இளைய பிள்ளையார் என்று பெயர் உண்டு.

கருத்து

முதல் ஸ்லோகத்தில் ஸ்ரீமஹாகணபதியை துதிக்கிறார். நோய்நீக்கம் பெற ஸுப்ரமண்யரைத் துதிக்கும் முன் மஹாகணபதியை பிரார்த்திக்கிறார் ஆதிசங்கரர். காப்புச் செய்யுள் போன்ற ஸ்லோகமிது.

ஸுப்ரமண்ய புஜங்கப்ரயாதவ்ருத்தஸ்தோத்ரம் (1) கணேச ஸ்துதி கொண்டே துவங்குகிறது.

கணேசம் நமஸ்க்ருத்ய கௌரீகுமாரம்
கஜாஸ்யம் குஹஸ்யாக்ரஜாதம் கபீரம் |
ப்ரலம்போதரம் சூர்ப்பகர்ணம் த்ரிநேத்ரம்
ப்ரவக்ஷ்யே புஜங்கப்ரயாதம் குஹண்ய ||

குறிப்பு: *உச்சிஷ்ட கணபதி ஸஹஸ்ரநாமத்தில், ஸுப்ரஹ்மண்ய கணபதிவடிவமுடையவர்(404) அருணப் பொலிவு கொண்டமேனியழகுடையவர் (407) சேவல் விளங்கும் கரத்தினையுடையவர் (408) மயில்வாஹனத்தின் மீதமர்ந்தவர் (700) மயில் வாஹன முருகனால் பிரார்த் திக்கப்பட்டவர் (701) என்ற நாமங்களினால் கணபதி போற்றப்படுவதும் ஒரு சிறப்பு.*

2

ஆதிசங்கரரின் வினயம்

2. ந ஜானாமி ஶப்தம் ந ஜானாமி சார்த்தம்
ந ஜானாமி பத்யம் ந ஜானாமி கத்யம் |
சிதேஹா ஷடாஸ்யா ஹ்ருதித்யோததேமே
முகாந்நிஸ்ஸரந்தே கிரஸ்சாபி சித்ரம் ||

பதவுரை

ந ஜானாமி ஶப்தம் — *சொல் அறியேன்;* ந ஜானாமி ச அர்த்தம் — *பொருளையுமறியேன்;* ந ஜானாமி பத்யம் — *செய்யுளை அறியேன்;* ந ஜானாமி கத்யம் — *வசனநடை அறியேன்;* மே ஹ்ருதி — *என் உள்ளத்தில்;* சித் ஏகா ஷடாஸ்யா — *ஆறுமுகங்களுள்ள ஒரு சித் என்ற ஞான ஸ்வரூபம்;* த்யோததே — *பிரகாசிக்கிறது;* முகாத் — *முகத்தினின்று;* கிரஸ்சாபி — *வாக் பிரவாஹம் சுலோகங்களாக;* நிஸ்ஸரந்தே — *வெளிப்படுகின்றன;* சித்ரம் — *விசித்ரமாயுள்ளது.*

விளக்கவுரை

நஜானாமி ஶப்தம் ந ஜானாமி சார்த்தம்
ந ஜானாமி பத்யம் ந ஜானாமி கத்யம்

மஹா பண்டிதரான, அவதாரபுருஷனான ஆதிசங்கரர், ஒரு சாதாரண பாமரனைப் போல் (அடக்கத்தில்) தனக்கு சப்தம் (ஒலி), பொருள் என்ற ஏதும் தெரியாத நிலையில் இருப்பதாகக் கூறிக்கொள்கிறார்.

சப்தம் என்றால் 'ஒலி' என்ற பொருளைத் தந்தாலும் ஸம்ஸ்கிருத பாஷையில் வேற்றுமை உருபுகளை உள்ளிட்ட

(ராமசப்தம், குரு சப்தம்) சப்தங்கள் தெரியாது என்பதாகக் கொள்ளலாம். அதாவது இலக்கணம் அறியாதவன் என்பதாகும்.

சப்தங்களையறியாத நான் பதங்களின் பொருளை (அர்த்தத்தை) எப்படி அறிவேன்? தான், சப்தம் — அக்ஷரம் — பதம் — அர்த்தம் எதுவும் அறியாதவன் என்கிறார்.

யதேச்சையாக பத்யம் — கத்யம் என்ற வகையில் பாடித் துதிக்கலாம் என்றால், அதுவும் தெரியாது அதற்கும் வழியில்லை என்கிறார்.

ஒழுங்காகப் பிரியும் பதங்களைக் கொண்ட ஸ்லோகம் என்பதால், பாட்டுக்கு பத்யம் என்று பெயர் 'பதம்' என்ற கால்பகுதிகளாக இருப்பதால், நான்கு கால்பகுதிகளாக இருப்பதால் 'பத்யம்' எனப்படுகிறது.

'கத்' என்பது பேசுதல் பேச்சு, வசனம், இயல், இசை என்னும் சீரான கவிதையாக, சீரான பகுதிகளாக இருப்பதால் 'கத்யம்' எனப்படுகிறது.

தற்கால 'பாட்டு, படிப்பு, பள்ளிக்கூடம் அறியேன்' என்ற பாட்டு வரிகளுக்கு புஜங்க வரிகளே முன்னோடி.

ஒன்றுமே அறியாத நான் எப்படி ஸ்தோத்தரிக்க முடியும்? ஆயினும் ஸுப்ரமண்யன் கருணையிருந்தால் எப்படி வேண்டுமானாலும் துதிக்கலாம் என்பது குறிப்பு.

சித்ஏகா ஷடாஸ்யா ஹ்ருதி த்யோததே மே
முகாந் நிஸ்ஸரந்தே கிரஸ்சாபி சித்ரம்

சித் ஏகா — சித் ஒன்று

சித் — ஞானஸ்வரூபம், சைதன்யம் (ஒளி) ஒரு ஒளி என்னுள்ளத்தில் எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக் கிறது.

ஒப்புயர்வற்ற, நிகரில்லாத தேஜஸ் அது. அது ஆறுமுகங்களுடன் பிரகாசித்துக் கொண்டுள்ளது.

''அருவமும் உருவமாகி யனாதியாய்ப்
பலவானாயான்றைாய்ப்
பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர்
மேனியாகிக்

கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்
பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகமுய்ய''

என்ற பாடலும் இங்கு குறிப்பிடத்தகுந்ததே.

அமுத ஓட்டமென, பிரவாஹம் என வாக்குகள் சித்தி பெற்றவைகளாக என் முகத்தினின்று வெளிப்படுகின்றன.

அத்தகைய வாக்விலாசம் ஏற்படுகிறது ஆச்சரியமான விஷயம்தான்.

அருணகிரிநாதரும், இதே திருச்செந்தூர் திருப்புகழில்,

'இரவு பகல் மோகமே கொடு படியில் மடியாமல் யானுமுன்
இணையடிகள் பாடிவாழ என் நெஞ்சிற் செஞ்சொற்றருவாயே'

என வேண்டுகிறார். (இரவு பகலாக ஆசையெனும் பாசத்தில் மூழ்கி மடிந்து விடாமல், நான் உன் திருவடிகளைப் புகழ்ந்து பாடி உய்ய என் நெஞ்சில் சிறப்புமிகு சொற்கள் தோன்றும்படி அனுக்ரஹம் செய்ய வேண்டும்— என வேண்டி நிற்றலையும் காண்க.)

அதற்குக் காரணம், இதயகமலத்திலுள்ள குஹனின் அருளன்றி வேறென்ன இருக்க முடியும்? ஸுப்ரமண்ய மூர்த்தியே ஆதிசங்கரரின் இதயத்தினுள் பிரவேசித்து ஸ்தோத்திரம் இயற்ற செய்தார் என்பது நிதர்சனம்.

ஆக, ஸுப்ரமண்யரை உபாஸித்தால் கல்வியறிவு, புலமை ஏற்பட வழி ஏற்படுகிறது என்பது தெளிவு.

இதற்குச் சான்றுகளாக சில நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

1. பாலகனான குமரகுருபரர் திருச்செந்தூர் ஸுப்ரமண்யர் ஸந்நிதியில் வாக்சித்தி பெற்று 'கந்தர் கலிவெண்பாவை'ப் பாடினார். பின்னர் பிள்ளைத்தமிழ் பாடல்கள்பாடி பிரபந்த வகையினைச் சிறப்பித்துள்ளார்.

2. திருச்செந்தூர் ஸுப்ரமண்யருக்கு அமுது சமைத்து வந்தவர் வென்றிமாலை? எப்போதும் மனதில் ஸுப்ரமண்யரையே சிந்தித்துக் கொண்டிருப்பவர். ஒரு நாள் அமுது காலதாமதமாக வந்ததால் வேலைநீக்கம்

செய்துவிட்டனர். மனம் நொந்து கடலில் உயிர்விடச் சென்றவரை ஸுப்ரமண்யர் தடுத்து, செவலூர் கிருஷ்ண சாஸ்திரிகளைப் பார்க்கக் கட்டளையிட்டார்.

சாஸ்திரிகள் ஜெயந்திபுர மஹாத்மியத்தை வடமொழியில் எழுதியிருந்தார். வென்றிமாலையைக் கண்ட சாஸ்திரிகள், மஹாத்மியத்தைத் தமிழில் பாடச் சொன்னார். வென்றிமாலையோ, 'சமையல் சுவை அறியும் எனக்குத் தமிழ்ச் சுவை தெரியாதே' என்றார். 'செந்தில் முருகன் திருவருளை நினைந்துபாடு' என்றார் சாஸ்திரிகள்.

முருகனை நினைத்தார். ஆசிபெற்றார். வாக்கு வன்மை உண்டாகி 'திருச்செந்தூர் தலபுராணம்' பாடினார். கல்வியறிவில்லாத வென்றிமாலையைப் பெருங்கவிஞராக்கித் தலபுராணம் பாடவைத்தது திருச்செந்தூர் ஸுப்ரமண்யர் அருளே!

கருத்து

வேத, சாஸ்த்ர, புராண விற்பன்னரான ஆதிசங்கரர் தன்னையொரு வினயமுள்ள மனிதராகவே வெளிப்படுத்திக் கொள்கிறார். பாண்டித்யமும் யோகமும் கைவரப் பெற்றவரே தன் அடக்கத்தை அவ்வாறு காட்டிக் கொள்ள இயலும்.

இது போன்ற, ஏதுமறியாதவன் என்ற அடக்க சுபாவ க்ஷமாபனத்தை அவருடைய பல ஸ்துதிகளில் காண முடிகிறது.

ந ஜானாமி தானம் ந ச த்யான யோகம்
ந ஜானாமி தந்த்ரம் ந ச ஸ்தோத்ரமந்த்ரம் |
ந ஜானாமி பூஜாம் ....
ந ஜானாமி பக்திம் வரதம் வாபி மாத: |
கதிஸ்த்வம் .... த்வமேகா பவானி ||

(பவான்யஷ்டகம்)

இதுபோல தேவீ க்ஷமாபன, அபராத க்ஷமாபன ஸ்தோத்திரங்களிலும் துதிக்கிறார்.

3

ஸுப்ரமண்யரின் மஹிமைகள்

3. மயூராதிரூடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரி தேஹம் மஹச்சித்த கேஹம் |
மஹீ தேவதேவம் மஹாவேதபாவம்
மஹாதேவபாலம் பஜே லோகபாலம் ||

பதவுரை

மயூராதிரூடம் — *மயில்மீதுள்ளவரும்;* மஹாவாக்யகூடம் — *வேத மஹாவாக்யங்களாக இருப்பவரும்;* மனோஹாரி தேவம் — *அழகிய வடிவினரும்;* மஹச்சித்த கேஹம் — *மஹான்களின் உள்ளத்தைக் கோயிலாக உடையவரும்;* மஹீதேவதேவம் — *பூதலத்தில் தேவர்களுக்கும் தேவனும்;* மஹாவேதபாவம் — *வேதத்தின் உட்பொருளானவனும்;* மஹாதேவ பாலம் — *பரமேஸ்வரனின் குமாரனும் ஆன;* லோகபாலம் — *லோகத்தை ரக்ஷிப்பவனை (ஸுப்ரமண்யனை);* பஜே — *வழிபடுகிறேன்.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகம் ஸுப்ரமண்ய தெய்வத்தின் பெருமைகளைக் கூறி வழிபட வழிவகுக்கிறது.

மயூராதிரூடம்

மயில் மீதமர்ந்த மயில் வாஹனர். மயிலை ஊர்த்தியாகக் கொண்டவன் மயூராதிரூடன்.

ஸகல வேதங்களும் மயிற்பறவையாகி ஸுப்ரமண்யரின் வாஹனமாக ஆனது.

'வேதமே மயில்' என்பது புராணவாக்கியம்.

மயில் வாஹனத்தில் ஸுப்ரமண்யர் எப்போதும் ஆரோகணித்திருப்தால் 'மயூராதி ரூடன்' எனப்படுகிறார்.

ஞான மாவிஞ்சை முதுகின் ஏறி' என்பார் அருணாகிரிநாதர்.

சூரபத்மனுடனான போரில் இந்திரனே மயிலாக விளங்கினான். சூரபத்மனின் ஒரு கூறாகத் தோன்றியதும் மயில்தான். இந்த வேறுபாட்டால்தான், ஆலயங்களில் முருகப் பெருமானின் வாஹமான மயில் வடதிசை யையோ, தென்திசையையோ நோக்கியிருக்கின்றன.

மயிலேறும் பெருமாள், சிகிவாஹனன், மயில் வாஹனன், மயூரபதி என்ற பெயர்கள் ஸ்வாமிக்கு உண்டு.

மயில் எல்லா ஆற்றலும் கொண்டது. எங்கும் வியாபித்திருப்பது.

பிரணவஸ்வரூபமும், வேதமந்த்ரமயமானதும் ஞானஸ்வரூபம் ஆனது மயில்.

வேத மந்திரங்களை அங்கமாகவும், மந்திரக் கூறுகளை இறகுகளாகவும் கொண்டு விளங்குவதாக அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். (கந்தரலங்காரம்) மாயையின் மகன் (சூரபத்மன்) மயிலாகத் தவம் செய்த இடம் மயிலம் மயூராசலம் என்ற பெயரும் அத்தலத்துக்கு உண்டு.

நாமும் 'வேலும் மயிலும் துணை' என்றே பிரார்த்திப்போம்.

மஹாவாக்யகூடம்

'ஜீவனும் பிரம்மமும் ஒன்றே' என உபதேசிக்கும் வாக்கியமே 'மஹாவாக்யம்' எனப்படும். வேதங்களில், 1. ப்ரக்ஞானம் ப்ரஹ்ம, 2. அயமாத்மா ப்ரஹ்ம, 3. தத்வமஸி, 4. அஹம்ப்ரஹ்மாஸ்மி — என நான்கு மஹாவாக்கியங்கள் உள்ளன.

ப்ரக்ஞானம் ப்ரஹ்ம — ப்ரகாசமே (சித்) ப்ரம்மத்தின் ஸ்வரூபம்.

அயமாத்மா ப்ரஹ்ம — ஆத்மாவைக் காட்டிலும் ப்ரம்மம் வேறில்லை.

தத்வமஸி — ஜீவன் ப்ரம்மம்தான்.

அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற வாக்கியம், மோக்ஷாதனத்தை போதிக்கும் வாக்கியம்.

இந்த நான்கு மஹாவாக்கியங்களுக்கும் என்ன பொருளோ, அதுதான் அகண்ட பிரம்மம் என்பர் வேதாந்திகள். அந்த அகண்ட பிரம்மத்தை ஸுப்ரமண்ய ஸ்வாமியாகக் காண்கிறார் ஆதிசங்கரர். 'கூடம்' என்பது ரஹஸ்யம் என்பதாகும். ரஹஸ்யமாக ப்ரகாசிப்பவர், ஸூக்ஷ்மமானவர் ஸுப்ரமண்யர் என்பதாம்.

மனோஹாரிதேவம்

மனத்தை வசீகரிக்கும் ஸௌந்தர்ய தேஹத்தைக் கொண்டவன் மன்மதன்.

கோடி மன்மதர்களுக்கு ஒப்பான பேரழகுடன் கோடி ஸுர்ய ப்ரகாசத்துடன் விளங்குபவன் குகன். வடிவற்ற நிலையில் ஆனந்தம் என விளங்கக்கூடியது. ஓர் அழகிய வடிவம் கொள்ளும் போது 'குமரன்' என அழைக்கப்படும்.

இளமை, அழகு தெய்வீகம், மணம் ஆகியவை கொண்ட தேஹம். இளமையும் அழகும் சேர்ந்தால் மனோரம்யாக வசீகரிக்கும். அந்த மனோஹாரியே 'ஸுப்ரமண்யம்' இதற்குச் சரியான தமிழ்ப்பெயர் 'முருகன்' என்பதாம்.

இறையனார் என்ற சொல் இறைவனைக் குறிக்கும். 'இளையனார்' என்ற சொல் முருகனையே குறிக்கும்.

அருணகிரிநாதர் அருள்பெற்ற அருணைமா நகரில் இவ்விளையனாரைக் காணலாம்.

1. கம்பத்து இளையனார் (அருணகிரிக்குக் காட்சி தந்தவர்)

2. கோபுரத்து இளையனார் (அருணகிரியை தடுத்தாட் கொண்டவர்)

3. பிச்சை இளையனார் (கிளிகோபுர வடக்குப் பக்கம்)

மனிதன் தன்மனதை பிரம்மத்திடம் லயிக்கச் செய்ய முடியாது. முருகனைத் தரிசித்தால்தான் அவனது தேஹகாந்தியினால், *அழகினால் மனதை லயிக்க வழி* கிடைக்கிறது.

'காமுகம் காமதம் காந்தம்' என மன்மதனையே கவரும் ஒப்பற்ற அழகுடையவர்.

மஹ: சித்த கேஹம்

மஹான்கள், ரிஷிகள், ஞானிகள் ஸுப்ரமணியனைத் தம் மனத்திலிருத்தி ப்ரம்ம உபாஸனை செய்கின்றனர். அந்த அருந்தவத்தினர் மனங்களே ஸுப்ரமண்யனின் வீடாகும்.

தவசீலர்களின் ஞானப் பொருள் ஸுப்ரமண்யன் 'ஸோஹம் பாவனை' யாக ஸுப்ரமண்யனை தம் ஆத்மாவிலிருத்தி அனுபூதி பெறுவர்.

'மனமென்னும் தாமரை மலரை உனக்கு அர்ப்பணம் செய்து அசைவற்றிருக்க அறிந்தாரில்லை'. ஆதிசங்கரரே சிவானந்த லஹரியில் குறிப்பிடுகிறார்.

'உள்ளமெனும் பெருங்கோயில்' திருமூலர். மனமே இறைவன் வஸிக்கும் வீடாகக் (கோயிலாகக்) கண்டார் பூசலார்.

மஹீதேவ தேவம்

மஹி—பூமி. மஹீதலம்— பூமியின் மேற்பகுதி. மஹீபுத்ரீ, மஹீஸுதா—சீதையின் பெயர். மஹீ—மகத்வம் உடையது, உறுதியானது, உயர்ந்த ஆற்றல் படைத்தது என்று பொருள். எப்பொருளிடம் மேற்கூறிய குணங்கள் நிரம்பியுள்ளனவோ அது 'மஹி' யாகும் அதற்குத் தகுதி பூமிதான்.

தேவீ *மாஹாத்மியத்தில்,*

'ஆதாரபூதா ஜகதஸ்த்வமேகா
மஹீஸ்வரூபேண யத: ஸ்திதாஸி'

உன் மேனி பூமியின் வடிவத்தோடு இருப்பதால் உலகுக்கு ஆதாரமாகிறாய். 'உலகம் முழுவதையும் ஓங்கச் செய்கிறாய்' என அம்பிகை போற்றப்படுகிறாள்.

பஞ்சாயதன வழிபாட்டு முறையில் (ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும், கணநாதம் ச மஹேஸ்வரம்) ஸுப்ரமண்யஸ்வாமி இல்லை. விஸ்வாமித்ரர், நாரதர் போன்ற மஹான்கள் இதனைத் திருத்தியுள்ளனர். ஆதிசங்கரரும் அவ்வகையில் ஸுப்ரமண்யரின் முக்யத் துவத்தை நிலை நாட்டி, ஷண்மதம் என்று கூறினார். அதனால்தான் 'மஹீதேவதேவம்' என்கிறார். பிராமண ஜாதிக்கு இனியதைச் செய்யும் ஸ்வபாவமுள்ள தெய்வம் பிரம்மண்யம். அதிக நன்மையைத் தருவதால் 'ஸுப்ரமண்யன்' எனப்படுகிறார்.

மஹாவேத பாவம்

பெருமை பெற்ற வேதங்களின் தாத்பர்யமாய் விளங்குபவர் ஸுப்ரமண்யஸ்வாமி.

வேதம் சப்த (ஒலி) ப்ரமாணம் உடையது. அவ்வேதம் கூறும் பரம்பொருள் பரப்ரம்மம். உட்கிடக்கையான ப்ரம்மமே ஸுப்ரமண்யஸ்வாமி தான் என உணர வேண்டும். அதாவது வேதபாவம் என்பதாகும்.

'ஸ்வாமி' என்ற பதம் ஸுப்ரமண்யரைக் குறிக்கும். பரமேஸ்வரனையும் குறிப்பதுண்டு. ஒருவர் ஸுப்ரமண்ய ஸ்வாமி, மற்றவர் சிவஸ்வாமி.

ஸுப்ரமண்யர் ஒரு தனிப்பட்டநிலையில் விளங்கு வதால் வேதம் அவரை 'உத்க்ருஷ்டசக்தி' எனப் போற்றும். 'ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண் யோம்' என வேதம் மும்முறை கூறுகிறது.

வேதநெறிப்படி செய்யப்படும் யாகங்களின் வடிவாயும், திருப்தி செய்யப்படுபவராகவும் யாகப் பயனாகவும் விளங்குபவர் ஸுப்ரமண்ய ஸ்வாமி.

'யாகரக்ஷகமூர்த்தி', 'யாகமுனிவர்க்குரிய காவற் காரன்' என அருணகிரிநாதர் போற்றுவதையும் நினைவு கூறலாம்.

மஹாதேவ பாலம்

தேவர்கள், சூரனை வெல்ல ஒரு புத்திரனைத் தந்தருள மஹாதேவனிடம் முறையிட்டனர். அவர்களுக்கு அளித்த வாக்கின்படி ஐம்முகச் சிவனான அவர், அதோ முகத்துடன் ஆறுமுகனானார். ஆறு நெற்றிக் கண்களி னின்று ஆறு அருட்பொறிகளை வெளிப்படுத்தினார்.

அவ்வருட்பொறிகளைத் தாங்க இயலாது வாயு தேவனும் அக்கினியும் கங்காநதியில் சேர்த்தனர். கங்கை அதனை சரவணப்பொய்கையில் சேர்த்தாள். கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தனர். ஆறுகுழந்தைகளை உமையன்னை ஒன்றாக்கினாள் என்பது கந்தபுராணக்கதை. வாயுஸூநு, அக்னிபூ, காங்கேயன், கார்த்திகேயன் என்ற பெயர்கள் வரினும், ஆரம்பநிலைக் கர்த்தாவான ஈசனின் புத்ரன் என்பதே நிலையாகும். எனவே மஹாதேவபாலன் சிவபாலன் எனப்படுகிறார் ஸுப்ரமணியஸ்வாமி.

குமாரஸம்பவக் கதையையும் சற்று நோக்கலாம். இமயமலையின் மேற்குப்பகுதியில் மானஸரஸ் அச்சோத ஸரஸ் என இருதடாகங்கள். சோதஸரஸ் அருகே ஸுப்ரமண்யர் அவதாரத்தலம் உள்ளதாகத் தெரிகிறது. மஹாதேவர்க்கு கைலாசம் போல் ஸுப்ரமண்யருக்கு இங்கு கோயிலுள்ளதாம். இப்பகுதி வளமான காடுகளும், யானைகளும் மிகுதி காட்டுவாசிகளும் வேடர்களும் வசித்து வருகின்றனர். கிரௌஞ்சபர்வதமும் இங்கு உள்ளது. யோகிகள் தவம் செய்ய இயற்கையான குகைகள் நிறைந்த இடமுமாகும்.

ஸுப்ரமண்யன் பாலன் ஸ்தானத்திலும் குழந்தை ஸ்தானத்திலும் வைக்கப்பட்டு

'மஹாதேவபாலன்' எனப்படுகிறார். மஹாதேவனே ப்ரணவப் பொருளை ரஹஸ்யமாக அந்த பாலனிடம் அறிந்துகொண்டவர். இவ்விஷயத்தில் மஹாதேவன் பாலனாகவும், ஸுப்ரமண்யன் 'தகப்பன் ஸ்வாமி'யாகி விட்டார். தத்துவத்தைத் தெரிந்து கொள்ளாதவன் பாலன். இங்கு யார் பாலன் என்பதே வேடிக்கையாக உள்ளது.

பஜேலோகபாலம்

லோகத்தை (உலகத்தை) பரிபாலிப்பவர் லோகபாலர். பாலனம் — ரக்ஷித்தல், காப்பாற்றுதல், பாலனம் செய்பவர்கள் பாலகர். மஹீபாலன், துவாரபாலகர், க்ஷேத்ரபாலகர், திக்பாலகர், லோக பாலகர்— என உண்டு.

பொதுவாக, பைரவர்கள் க்ஷேத்ரபாலகர்களாக இருப்பர்.

காசி க்ஷேத்ர பாலகர்—பைரவர்—ஸுப்ரமண்யரும் லோகத்தை ரக்ஷிப்பதால் லோகபாலகர். 'வடுகர்' என்றாலும் பைரவர்தாம். வடுகபூஜையில் 'வடுக ஸுப்ரமண்யர்' என்ற பெயரும் உண்டு.

சஷ்டி கவசத்தில், 'அண்டர் நாயகனே அருமறைப் பொருளே' என்றும் 'பதினாலுலகத்திலும் பக்தர்மனத் திலும்' என்றும் போற்றப்படுகிறார்.

பெருமைகள் பெற்ற லோகபாலரான ஸுப்ரமண் யனை வழிபடுகிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

கருத்து

'மயூராதிரூடன், மஹாவாக்கியங்களின் உட்பொருள், அழகியதேஹம் — அருளுருவம், தவசீலர்களின் ஞானப் பொருள், பூமியிற் சிறந்த தெய்வம், வேதத்தின் தாத்பர்யம், மஹாதேவபாலன், லோகபாலன் ஆகிய பெருமைகளைப் பெற்ற ஸுப்ரமண்யஸ்வாமியை வழிபடுகிறேன்' என்கிறார் ஆதிசங்கரர்.

4

ஸமுத்ரக்கரையில் எழக்காரணம்

4. யதா ஸன்னிதாநம் கதா மாநவா மே
பவாம் போதிபாரம் கதாஸ்தே ததைவ |
இதி வ்யஞ்ஜயன் ஸிந்துதீரேய ஆஸ்தே
தமீடே பவித்ரம் பராஶக்தி புத்ரம் ||

பதவுரை

மாநவா — *மனிதர்கள்;* யதா மே ஸன்னிதானம் கதா — *எப்பொழுது என்னுடைய ஸன்னிதானத்தை அடைகிறார்களோ;* ததைவ (ததா ஏவ) — *அப்பொழுதே;* தே — *அவர்கள்;* பவாம் போதி பாரம் — *பவக்கடலாகிய பிறவிக்கடலின் மறுகரையை;* கதா இதி — *அடைகிறார்கள் என்று;* வ்யஞ்ஜயன் — *உணர்த்தும் வகையில்;* ய: ஸிந்து தீரே — *எந்தக்கடவுள் சமுத்திரக் கரையில்;* ஆஸ்தே — *இருக்கிறாரோ;* தம் பவித்ரம் — *அந்த பவித்ரமான (புனித);* பராஶக்தி புத்ரம் — *பராசக்தி மைந்தனை;* ஈடே — *துதிக்கிறேன்.*

விளக்கவுரை

திருச்செந்தூர் என்னும் ஜயந்திபுர ஸுப்ரமண்ய ஸ்வாமியின் சந்நிதியை அடைந்து வழிபடுபவர்களுக்குத் துன்பமில்லை என்பது விளக்கம்.

யதா ஸன்னிதானம் கதா மானவாமே

'எப்பொழுதெல்லாம் தர்மத்திற்கு பங்கம் வருகிறதோ அப்போதெல்லாம் அவதரிப்பேன்' எனக் கீதையில் கிருஷ்ண பகவான் கூறுவார்.

செந்தூர் முருகனோ, 'எப்பொழுது மனிதன் என் ஸன்னிதியை அடைகிறானோ, அப்பொழுதே ஸம்ஸாரக் கடலைக் கடந்து விடுகிறான்' என்கிறார்.

'ஸான்னித்யம்' நிரம்பிய இடம் 'ஸன்னிதானம்' ஸான்னித்யம்— அருட்சக்தி அதிகம் பொதிந்துள்ள பொருள். அதாவது முழுமுதற் பொருள் ஆகும்.

கைலாஸத்திற்கருகில் ஸ்கந்தகிரி என்ற பிரதேசம் உள்ளது. அவ்விடத்தை விட்டு ஜயந்தீபுர (செந்தூர்) கடற்கரையில் இருந்து கொண்டு பிரகாசிக்கிறார். 'சூரனை வென்ற வீரன்' என்று பெயர் பெற்றதனால் ஜயந்தீபுர வாஸமோ எனக் கருதவேண்டியுள்ளது.

திருச்செந்தூர் சென்று சமுத்ரக்கரை இறைவனின் ஸன்னிதானத்தை அடைந்து தரிசனம் செய்வது லக்ஷ்ய மாகிறது.

அதன் விளைவு, பயன்யாது எனில்

பவாம் போதி பாரம் கதாஸ்தே ததைவ

போதி—கடல். பவக்கடல் — பிறவிக்கடல், ஸம்ஸார ஸாகரம்.

என்னை தரிசித்தவர்கள். 'பிறப்பு, இறப்பு என்ற பிறவிக்கடலைத் தாண்டியவர்களாக ஆகி பரம சந்தோஷத்தை அடைந்தவர்களாக ஆகிறார்கள்' என்பதை உணர்த்தவே ஸமுத்திரக் கரையில் இருப்பதாகத் தெரிகிறது.

ஆதிசங்கரரின் சிஷ்யர் தோடகாசாரியார் தம் தோடகாஷ்டகத்தில் 'பவஸாகர துக்க விதூன க்ருதம்' எனப்பாடுகிறார். பிறவிக்கடலை கடக்க உதவுபவராக குருவை ஸ்தோத்தரிக்கிறார். குரு ஆதிசங்கரரோ செந்தூர் ஸுப்ரமண்யனை தரிசித்துப் பயன்பெற வழி காட்டுகிறார்.

ஜயந்தீபுர ஸமுத்ரக் கரையில் ஞானப் பேரொளியாய் விளங்குகிறார். பவக்கடலைத் தாண்ட, முக்தியைத்தர தவக்கோல, கடற்கரை ஆண்டியாக, ஜயந்தீபுர நாயகனாக முக்துபதியாக ஸமுத்ரக்கரையில் உள்ளார் போலுள்ளது.

சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்படும் குணங்களை யடைதலும் ஜயந்திநாதரின் தரிசனத்தால் விளையும் பயன்களாகலாம். இதுவும் பிறவித் துன்பத்தைத் தணிக்கும். தீயவைகளினின்று விலகியிருத்தல், முதுமையற்றிருத்தல்,

இறப்பற்றிருத்தல் துன்பங்களினின்று விடுபட்டிருத்தல், பசி தாகங்களினின்று நீங்கியிருத்தல், சத்தியத்தை நினைந்து கொண்டு சத்தியத்தை விரும்புதலும் ஆகியனவே அக்குணங்கள்.

இதிவ்யஞ்ஜயன் ஸிந்துதீரே ய ஆஸ்தே

வியஞ்ஜயன்—குறிப்பை அறிவித்துணர்த்தும் வகையில்.

குறிப்பு யாது?

'எப்போது மனிதர்கள் என் ஸன்னிதானத்தை அடைந்தனரோ, அப்போதே அவர்கள் பிறவிக் கடலைத் தாண்டி மறுபக்கம் அடைகிறார்கள்! (மறுபக்கம்—முக்தி பதம்) என்பதுவே அக்குறிப்பு.

'தானும் அவ்விதத்தில், ஒரு புண்ணியவசத்தில் ஜயந்தீபுர ஸுப்ரமண்யரைத் தரிசித்து விமுக்தன் ஆகி விட்டதாக ஆதிசங்கரர் கூறும் குறிப்பும் நினைக்கத் தக்கது.

தமீடே பவித்ரம்

தம் ஈடே—அந்தப் புண்ணியனை, பவித்ரமான வனை ஸ்தோத்தரிக்கிறேன் என்கிறார்.

தரிசனமாத்திரத்தாலேயே எளிதில் முக்தனாக ஆக முடிந்ததே என வியக்கிறார் ஆதிசங்கரர். வியந்து போற்று கிறார்.

எளிய இந்த தரிசனம் என்ற உபாயத்தை அருளிய ஸுப்ரமண்யருக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும்? ஸ்தோத்தரிப்பதுதான் ஒரே வழி.

'துதிப்போர்க்கு வல்வினைபோம்' என்பது போல, ஸ்தோத்திரம் செய்வதே நல்லமார்க்கமும் கைம்மாறும் ஆகும் எனத்தெளிந்த நிலையில் ஆதிசங்கரர் பாடுகிறார்.

ப்ரம்மண்யன், ஸுப்ரமண்யன் என்ற ஸுக்ஷ்மமான குறிப்புகளை உணர்த்த 'சக்தி புத்ரன்', 'பராசக்தி புத்ரன்' என ஸ்தோத்தரிக்கிறார். பராசக்தி, ப்ரம்மவித்யா ஸ்வரூபிணி ஆவாள். இவ்வார்த்தைகள் அருளின் வெளிப்பாடு எனலாம்.

பராசக்தி புத்ரம்

'அக்னிபோலும் அனந்தமீன்போலும்
தக்கபேரொளியாய் சராசரம் அனைத்தும்
புரந்தருள் அகண்டபூரணமாகிப்
பரந்த செஞ்சுடரைப் பரையெனக் கண்டேன்'

என்கிறார் சிற்றம்பல நாடிகள் தம் திருச்செந்தூர் அகவலில்.

கருணையின் ஒளிவெள்ளத்தினுள் அடங்கிப்போனது மனம் நெகிழ்ச்சியுடன் ஆனந்தக் கண்ணீர், மயிர் சிலிர்ப்பு ஏற்பட்டது. புன்சிரிப்பு, வலிமை, மூவகை சித்திகள் ஏற்பட்டன.

பக்திநெறி வழிபாட்டில் ஈடுபட்டேன்.

'ஓங்கும் பரைக்குள் உள்ளொளியாகி தேங்கும் ஆனந்தச் செழுஞ்சுடர் கண்டேன்'

'பராசக்தியின் ஒளிக்குள் உள்ளொளியாய் உள்ள செழுஞ்சுடரைக் கண்டேன். அவ்வொளியின் தன்மையைச் சொல்ல இயலவில்லை. அதைச் சிவம் என அறிந்தேன் ஞானக் கண் கொண்டு. இவை சிற்றம்பல நாடிகளின் கூற்றுகள்.

ஆதிசங்கரர். 'பராசக்தி புத்ரம்' என்று ஒரு வார்த்தைப் புகழ்ச்சியுடன் கூறுகிறார். சிற்றம்பல நாடிகளின் அனுபவங்கள் அவருக்கும் இருந்திருக்கும். ஆதிசங்கரர் காலத்தில் அவ்வாறு விரித்துரைக்கும் அவசியம் ஏற்பட்டிருக்காது.

பக்தி வழிபாடு ஒன்றேபோதும். அதுவே மேற்படி சாதனைக்கு வழிகாட்டக்கூடியது என அறிதல் வேண்டும்.

பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, குடிலாசக்தி—ஆகியவைகளும் ஆறுமுகத்தின் உண்மைகளை உணர்த்தும்.

கருத்து

சமுத்ரக்கரையில் ஸுப்ரமண்யன் வாஸம் செய்வதற்கான காரணமும், தர்சனம் செய்வதால் உண்டாகும் பலனும் சொல்லப்படுகிறது. பக்தி வழிப்பட்டு ஸ்தோத்தரித்தல் அவசியம். நம் வாழ்நாளில் செந்தூர் முருகனை ஒரு தடவையாவது தரிசனம் செய்ய வேண்டும்.

5

ஸமுத்ரக்கரையில் எழக்காரணம்

5. யதாப்தேஸ் தரங்கா லயம்யாந்தி துங்கா
தைவாபதஸ் ஸன்னிதிம் ஸேவமானே |
இதிவோர்மி பங்க்த்தீர் ந்ருணாம் தர்ஸயந்தம்
ஸதா பாவயே ஹ்ருத் ஸரோஜே குஹம் தம் ||

பதவுரை

யதா அப்தே: துங்காஸ்தரங்கா: — *எவ்வாறு சமுத்ரத்தின் பெரிய அலைகள்;* லயம் யாந்தி — *லயமாகின்றனவோ (மறைகின்றனவோ);* ததா ஸன்னிதிம் ஸேவமானே — *அவ்வாறு ஸன்னிதானத்து அடைந்ததும்;* ஆபத — *பக்தர்களின் துயரங்களும் (மறைந்துவிடுகின்றன);* இதீவ ந்ருணாம் — *என்று மக்களுக்கு;* வோர்மி பங்த்தீ — *அலைகளின் கூட்டத்தை;* தர்ஸயந்தம் — *காட்டுகின்ற;* தம் குஹம் — *அந்த குஹனை;* ஹ்ருத்ஸரோஜே — *(என்)* இதயத் *தாமரையில்;* ஸதா பாவயே — *எப்போதும் நினைந்து வழிபடுகிறேன்.*

விளக்கவுரை

ஸுப்ரமண்ய ஸ்வாமி ஸமுத்திரக்கரையில் வாஸம் செய்வதற்கான பிறிதொரு காரணமும் இங்கு விளக்கப் படுகிறது. ஸகல துன்பங்களும் நீங்கப்பெறும்

யதா அப்தே: தரங்கா லயம் யாந்தி துங்கா

தரங்கம் — அலை.

திருமுருகாற்றுப்படையில், திருச்சீரலைவாய் என்றும் நாமனூர் அலைவாய் என்றும் திருச்செந்தூர் அழைக்கப் படுகிறது. 'நாமம், அதாவது அச்சம்தரும், முருகன் அமைந்த அலைவாய் ஊர் 'நமனூர் அலைவாய்' என்கிறார் அறிஞர் பி.எல். சாமி.

ஆல்வாய் (அலைவாய்) என்ற கேரளா ஊரும், தரங்கம் பாடி என்ற ஊரும், அலை சார்ந்த ஊர்கள்.

ராமநாதபுரம் மீனவர்களிடையே 'அலைவாய்க்கரை' என்ற சொல்வழக்கு உண்டு. இது கடலலைகளால் அலைக் கழிக்கப்படும் கடற்கரைப்பகுதியைக் குறித்ததாகிறது.

ஸமுத்ரத்தின் அலைகள் பெரியதாகவும் பயங்கர மானதாகவும் உள்ளன.

செந்தூர்கடவுளின் சன்னிதியில், அலைகள் கரை வந்ததும், ஜலத்தோடு ஜலமாகி, லயமாகி மறைந்து விடுகின்றன. (அண்மையில் ஏற்பட்ட சுனாமிவேளையில், பயங்கரமான பெரிய அலைகள் உள்ளுக்குள்ளிழுத்துக் கொண்டு சென்றதை நாம் காணமுடிந்தது.)

தவைவ ஆபதஸ் ஸன்னிதிம் ஸேவமானே

'அலைகள் உன் ஸன்னிதியைத் தொட்டதும், லயமாகி மறைவதுபோல, உன் ஸன்னிதிக்கு வரும் ஜீவன்களுக்கு—மனிதர்களுக்கு—அத்யாத்மிக ஆதி தைவிக, ஆதிபௌதிக வியாதிகள் ஆபத்துக்கள், துன்பங்கள் உன்னைத் தரிசனம் செய்ததுமே நீங்கி விடுகின்றன' என்கிறார் ஆதிசங்கரர்.

அலைகள் லயமாவதைப் போல (மறைவதைப் போல) வியாதிகளும் துன்பங்களும் நாசமடைகின்றதைக் குறிப்பிடுகின்றார்.

ஸேவமானே— அடைந்தபோதே என்றாகும். அவ்விடத்தை அடைந்ததினாலேயே பலன் ஏற்படுவது சிறப்பன்றோ?

இதி ஊர்மி பங்க்தி ந்ருணாம் தர்ஸயந்தம்

'ஊர்மி' என்பதற்கு அலை, ஓட்டம், வேகம், வரிசை என்றெல்லாம் பொருள்கள்,

'ஊர்மி பங்க்தி' எனில் அலைகளின் கூட்டங்கள், அலைகளின் வரிசை, அலைகளின் ஓட்டம், அலைகளின் வேகம் என்று பொருள் கொள்ளலாம். இவ்வலைகளின் கூட்டங்கள் சுட்டிக்காட்டுவது யாரை? அலைகள் வரிசையாகவும் வேகமாகவும் வந்து யாரைத் தரிசிக்கின்றன? காட்டுகின்றன?

சாக்ஷாத் ஜெயந்திபுரநாயகனையே!

ஸதா பாவயே

ஸதா பாவயே— எந்நேரமும் வழிபடுகிறோம் பாவயே— நினைந்து வழிபடுதல். வழிபடுதல் என்பது ஒரு பாவனைச் சடங்காகும்.

பரம்பொருளை வழிபடும் முறை இங்கு குறிப்பிடப் படுகிறது.

'பாவயேத் குக்குடத்வஜம்', 'பாவயாமி ரகுராமம்' இவைகள் எண்ணி, நினைத்து, மனதிலிருத்தி வழிபடுக என்பதைக் குறிக்கும். அம்பிகை ஒரு 'பாவனாமாத்ர ஸந்துஷ்டா' ஆவார். பிராமணர்களின் ஸந்தியாவந்தனம் ஒரு பாவனைச் சடங்காகும்.

'ஸோஹம் பாவனை' என்பது ஒன்று. 'தானும் அதுவாகப் பாவித்தல் (ஸோஹம் பாவனை)' என்பதே அது. மனித நிலைக்கு அப்பாற்பட்ட செயல்களை இப் பாவனையால் செய்ய முடியும். விஸ்வாமித்ரர் வேறோர் உலகைப் படைத்ததும், அகத்தியர் கடலைக் குடித்ததும், கீதோபதேசம் போன்றவை இதனால்தான். இவ்வாறு 'ஸோஹம்பாவனை' செய்பவர்களுக்கு லக்ஷியப் பொருளாக விளங்குபவர் ஸுப்ரமண்யரே.

ஹ்ருத்ஸரோஜே குஹம் தம்

இதயத்தாமரையில் வீற்றிருக்கும் அந்த குஹனை வழிபடுகிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

ஆதிசங்கரர் சிவானந்தலஹரியிலும் 'ப்ரமராம்பிகைப் பதியான சிவபெருமான் என் மன இதயத்தாமரையில் ஸதா வீற்றிருந்து விளையாட வேண்டுகிறேன்' என்கிறார்.

'குஹ இவா ப்ரதிஹத சக்தி:' என்பது இதிஹாஸ வாக்யம். குஹன் பல இடங்களிலும், பல மூர்த்தங்களிலும் அபேதமாக விளங்குபவர்.

தம் ஆத்மாவில் லயமடைந்து தாமே ரமிப்பவர்கள் 'ஸ்வாத்மாராமர்கள்' எனப்படுவர். அத்தகைய யோகியர் களுக்கெல்லாம் நாயகன் குஹன்.

அருணகிரிநாதர் வள்ளியம்மையாரிடம் ஸ்பரிச தீக்ஷை பெற்றதாக வியந்து போற்றுகிறார். வள்ளியம்மை, தம் இதயத்தாமரையில் முருகனையே இருத்தி தியானித்து யோகநிலையிலிருந்த காரணத்தினால், இதயத்தாமரையே முருகனின் முகமாக ஆகிவிட்டதாம். கந்தரந்தாதியில் ஓரிடத்தில், 'வள்ளியின் இதயத்தாமரை போன்ற முகம்' என முருகனின் திருமுகத்துக்கு உவமை கூறுகிறார்.

கருத்து

கடலலைகள் கரையையடைந்ததும் மறைந்து விடுகின்றன. அதுபோல ஸுப்ரமண்யரின் ஸந்நிதியை அடைந்தவரின் துன்பங்களும் மறைந்து விடும். மஹிமை பொருந்திய அவரைத்தம் இதயத்தாமரையில் வழி படுவதாக ஆதிசங்கரர் கூறிடுகிறார்.



6

கந்தமாதன மலையில் அமர்ந்த காரணம்

6. கிரௌ மந்நிவாஸே நராயேதிரூடா:
ததா பர்வதே ராஜதே தேதிரூடா: |
இதீவ ப்ருவன் கந்தஶைலாதிரூடா:
ஸதேவோ முதேமே ஸதாஷண்முகோஸ்து ||

பதவுரை

யே நரா: — *எந்த மனிதர்கள்;* மந் நிவாஸே — *என்னுடைய வாஸஸ்தலமாகிய;* கிரௌ — *மலையின்மீது;* அதிரூடா: — *ஏறும்போது;* ததா தே — *அவர்கள் அப்பொழுதே;* ராஜதே பர்வதே — *கைலாஸமலையில்;* அதிரூடா — *ஏறிவிடுகிறார்கள்;* இதிப்ருவன்னிவ — *இந்த ரஹஸ்யத்தை உணரவோ என நினைக்க;* கந்தஶைலாதி ரூட: — *கந்தமாதன மலையின் மீது எழுந்தருளியிருக்கும்;* ஸ; தேவ; ஷண்முக: — *அந்த அறுமுகத்தெய்வம்;* மே முதே — *என் மகிழ்ச்சிக்காக;* ஸதா அஸ்து — *எப்போதும் இருக்கட்டும்.*

விளக்கவுரை

கந்தமாதன பர்வதத்தில் வஸிப்பதன் கருத்து இங்கு விளக்கமாகிறது.

கிரௌ மந்நிவாஸே நராயேதிரூடா:

கிரி, அசலம், பர்வதம், சிகரம்— என்பன மலைகளைக் குறித்தனவே.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனிருக்குமிடம். குன்றுதோறாடல் என்பது குமரனின் வாஸஸ்தலங்கள்.

அருணகிரிநாதர், 'ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே' எனப் போற்றுகிறார். அருணாசலமலையின் கண் முருகன் கோயில் இல்லையே என நினைக்கக் கூடாது. முருகனமர்ந்த பழம்பெரும் மலைகள், பதினான்கில் அருணாசலமும் ஒன்று. இதனை ஸ்வாமிகிரி மஹாத்மியம் கூறுகிறது. கைலாஸம், ஸ்கந்தகிரி (கைலாயமருகே), ஹிமாலயம், வேங்கடாத்ரி, ஹல்லகாத்ரி, அருணாசலம், சிராத்ரி ஸ்வாமிமலை, பரங்குன்று, ருஷபாசலம், த்ரிகூடமலை, சிதம்பரம், திருச்செந்தூர், ஸுப்ரமண்யா என்பனவே அந்த பதினான்கு மலைகள். இதையறிந்துதான் அருணகிரியார் பாடியுள்ளார். அண்ணாமலையில் 'ஸ்கந்தாஸ்ரமம்' என்று ஒன்று உள்ளது. இதன் ஆரம்ப மூல காரணத்தையும் அறிந்து தெளிய வேண்டும்.

நெருப்புமலையான ஈசன் அனலானவன். அனலின் செம்மைநிறம் செவ்வேள் பரமனின் நிறமன்றோ?

'எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை' எனப் போற்றுகின்றார் பாலன் தேவராயர் (பரங்குன்ற சஷ்டி கவசம்) பொதுவாக மலையேறிதான் முருகனைத் தரிசிக்க வேண்டும். அருணாசலத்தில் கிரியை ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

ததா பர்வதே ராஜதேதி ரூடா:

'ராஜதே பர்வதே' என்பது வெள்ளிமலை அதாவது கைலாயமலை.

ரஜதகிரி, பூர்ணகிரி, என்பது வெள்ளிமலை அதாவது கைலாயமலை.

ரஜதகிரி, பூர்ணகிரி, ப்ராஸாதகிரி, மாஹேந்திர கிரி, கபாடகிரி, நாதஸ்ரோதம், ரூபோத்பவகிரி மேருச்ருங்ககிரி, ஷாட்குண்யகிரி, கர்ப்பகிரி, பரபிந்துகிரி, வ்யோமகிரி— என மந்திரமயமான பன்னிரண்டு பெயர்களும் மஹாகைலாஸமலைக்கு இயல் பாகவே ஏற்பட்டுள்ளன.

'தன்னிருப்பிடமான மலையில் எவர் ஏறிவருகிறார் களோ, அவர்கள் கைலாயமலையையே ஏறிய புண்ணிய

பாக்யத்தைப் பெறுகிறார்கள்' என ஸுப்ரமண்யஸ்வாமி கூறுவதாக அமைகிறது.

இதீவ ப்ருவன் கந்தஶைலாதி ரூட:

திருச்செந்தூர் க்ஷேத்ரத்தில் 'கந்தமாதன பர்வதம்' என்ற மலையுண்டு குன்றுகளில் வசிக்கும் குமரன் அம்மலையில் வாஸம் செய்கிறார்.

'கந்தமாதன மலையில் ஏறி, தன்னை எவர் தரிசிக்கிறார்களோ, அவர்கள் கைலாஸமலையேறி பரமேஸ்வரனையே தரிசித்தவர்களாவர் என்ற உண்மையை எல்லோரும் உணர்ந்து தெளிய வேண்டும்' என்ற நோக்கத்துடன் கந்த மாதன பர்வதத்தில் வாஸம் செய்கிறார்.

கைலாஸபதி — ஐம்முகத்தான். கந்தமாதனவாஸி — அறுமுகத்தோன்.

கந்தமாதனமலை, திருச்செந்தூர் கோயிலினுள் உள்ளதாகும். அதனுள் உள்ள பெருமாள் கோயில் யொட்டி மணல் சிறுசிறு குன்றுகளானது போல அம்மலைப்பகுதி அமைந்துள்ளது. மலையையும் சேர்ந்து கட்டிடமாகியுள்ளது. கோயில் கட்டப்படுமுன். முருகன் சந்நிதியும் கந்தமாதனமலையுமே கடற்கரை மணற் பரப்பில் இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது இதை ஒரு வைப்புத்தலமாக தேவாரம் குறிப்பிடுகிறது.

கந்தமாதனம் கயிலைமலை கேதாரம்
இந்து சேகரன் உறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெட் நின்றேத்துவோமே (6–71–9)

(ராமேஸ்வரம் அருகேயுள்ள கந்தமாதன பர்வதம் வேறு.)

ஸதேவோ முதேமே ஷண்முகோஸ்து ||

உபநிஷத் காலத்திற்கு முன் ஷண்முகத்தெய்வம் பிரபலமாகியது என்பர். 'தந்ந: ஷண்முக ப்ரசோதயாத்' என காயத்ரி உள்ளது.

நான்கு திசைகளுக்கு நான்கு முகங்கள் கீழ், மேல் திசைகளுக்கு இரண்டு முகங்களென எல்லாத் திசைகளிலும் வியாபித்து நிறைந்த பரிபூரண பிரம்மமே ஸுப்ரமண்யனான ஷண்முகன்.

ஆன்றோர் இவரை 'அறுமுகச் சிவன்' என்றும் கூறுவர். பரமேஸ்வரர் ஐந்து முகங்களுடன் (சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம்) சக்தி முகமான அதோமுகமும் சேர்ந்து ஆறுமுகங்கள் கொண்ட ஷண்முகராக விளங்குகிறார்.

'நிஷ்களமாயும் சாந்தமாயும் விளங்கும் பரமசிவமே சிவ தத்துவங்களையும் தத்துவநாயகர்களையும் உள்ளடக்கி ஷண்முக வடிவம் கொண்டது' என்றும் தத்துவ விளக்க மாய்க் கூறுவர்.

கந்தபுராணம் ஆறுமுகனைப் போற்றுவதாவது 'மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் அளக் கொணாமல் நிமல மூர்த்தி அறுமுக உருவாய்த்தோன்றி அருளோடு சரவணத்தின் வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந்து அருளினானே. ஸனத்குமாரர், நாரதர், அகஸ்தியர், பிரம்மா, தேவேந்திரன், ஸரஸ்வதி ஆகிய அறுவரும் ஸுப்ரமண்யரைத் தரிசித்தனர். ஸுப்ரமண்ய தத்துவத்தை அறிய ஷடக்ஷரி மந்திரத்தை உபதேசம் பெற விரும்பினராம். ஆறு அக்ஷரங்கள் கொண்ட ஷடக்ஷரியின் தத்துவங்களை ஒரே நேரத்தில் அந்த ஆறுபேருக்கும் உபதேசிக்க ஆறுமுகம் (ஷண்முகம்) கொண்டார் என்பது சாஸ்திரங்களின் கூற்று.

'ச' காரத்தினால் ஐஸ்வர்யம், 'ர' காரத்தினால் வித்யை, 'வ' காரத்தால் போக மோக்ஷங்கள், 'ண' காரத்தி னால் சத்ருபாதை நீக்கம், 'ப' காரத்தினால் ம்ருத்யுஜயம், 'வ' காரத்தினால் நோயற்ற வாழ்வு ஆகியன கிடைக்கும்.

ஷண்முகரான ஸுப்ரமண்யரை தரிசிக்க இவை ஆறும் கிடைக்குமாதலால், 'எனக்கு எப்போதும் மகிழ்ச்சி யைத்தந்து ஷண்முகரான ஸுப்ரமண்யன் என்னைக் காப்பாற்றட்டும்' என ஆதிசங்கரர் பிரார்த்திக்கிறார்.

கருத்து

கந்தமாதன பர்வதம் ஏறி ஸுப்ரமண்யரைத் தரிசிப்பதே பாக்யம். உபநிஷத் காலத்துக்கு முன் ஷண்முக வடிவ தெய்வம் பிரபலமாகியது. ஷண்முக ஷடக்ஷரியின் பலனைக் கொண்டு, ஷண்முகர் தரிசனத்தின் அவசியம் சொல்லப்படுகிறது.

7

கந்தமாதன மலையில் வஸிக்கக் காரணம்

7. மஹாம்போதி தீரே மஹா பாபசோரே
முனீந்த்ரானுகூலே ஸுகந்தாக்ய ஶைலே |
குஹாயாம் வஸந்தம் ஸ்வபாஸா லஸந்தம்
ஜனார்த்திம் ஹரந்தம் ஸ்ரயாமோ குஹம்தம் ||

பதவுரை

மஹா பாபசோரே — *கொடிய பாவங்களைப் போக்கும்;* **மஹாம் போதி தீரே** — *பெரிய கடற்கரையில்;* **முனீந்த்ரானுகூலே** — *முனிபுங்கவர்களுக்கு அனுகூலமாய்;* **ஸுகந்தாக்ய ஶைலே** — *அழகிய கந்தமாதனமலை மீது உள்ள;* **குஹாயாம்** — *குஹையில்;* **வஸந்தம்** — *வாஸம் செய்பவரும்;* **ஸ்வபாஸா லஸந்தம்** — *ஸ்வயம்பிரகாசரும்;* **ஜனார்த்திம்** — *அடியவர்களின் துன்பத்தை;* **ஹரந்தம்** — *அழிப்பவருமான;* **தம் குஹம்** — *அந்த குஹப்பெருமானை;* **ஸ்ரயாம:** — *வழிபடுகின்றோம்.*

விளக்கவுரை

கந்தமாதன பர்வத குகையில் வாஸம் செய்யும் குஹனை வழிபடுவதைக் குறிப்பிடுகிறது.

மஹாம்போதி தீரே மஹாபாபசோரே

மஹாம்போதி — பெருங்கடல். அதாவது பாரத தேசத்தின் கிழக்கேயுள்ள (வங்காளப் பெருங்கடல்) ஸமுத்திரக் கரையில் ஓர் அழகான மலை உள்ளது.

அம்மலையோ தவம் செய்ய ஏற்றது. அதற்கேற்ப கந்தமூலங்கள், நீர் ஊற்றுகள் நிரம்பியதாக உள்ளது. முனி புங்கவர்களுக்கு அமைதியான இச்சூழலில் தவச் சாதனைபுரிய அனுகூலமானது.

பாபங்கள் என்னும் போது, சிறிய பாபங்கள், பெரிய பாபங்கள் என உண்டு. அல்ப பாதகங்கள், உபபாதகங்கள், மஹா பாதகங்கள் என வகைகள் உண்டு. இதில் பஞ்சமஹா பாதகங்கள் எனவும் உண்டு. இவை மஹாபாபங்கள். அம்மலைக்கு மனிதன் சென்று வர மஹாபாபங்கள் நசிந்துவிடும். அதாவது அவ்விடம் அவ்வளவு பவித்ரமான தாகும்.

முனீந்த்ரானுகூலே ஸுகந்தாக்ய ஶைலே

'குமாரம் முனிசார்தூல மாநஸ ஆனந்த கோசரம்' — குமரனும் முனிவர்களின் மனதில் ஆனந்த வடிவமாய்க் காட்சியளிப்பவர் என்பது பொருள்.

முனிவர்கள் எனில் முனிவர்களுக்குரிய குணங்கள் நிரம்பிய ஞானிகள் என்று பெயர்.

பிரபஞ்சத்தை விரும்பாத மனமுடைய அறிவுடைய மௌனி, முனி எனப்படுவான். இத்தகைய முனிவர்கள் தியானிக்கத்தக்க பொருள் குஹனே.

தவக்கோல காரணத்தால் (கடற்கரையாண்டி) குஹனையே ஒரு முனியாகக் கொள்ள முடியும்.

கடற்கரையோ மஹாபாபங்களையும் நீக்கக் கூடியது. மலையோ முனிவர்களுக்கு அனுகூலமானது.

'த்வமேகோ முநீநாம் ஹ்ருதப்ஜாதிவாஸ:'

– புஜங்க ப்ரயாதம் (2)

குஹாயாம் வஸந்தம்

பரேண நாகம் நிஹிதம் குஹாயாம்' என்ற வாக்கியம், ஸ்வர்க்கத்திற்கும் மேலான அறிவாளிகளின் புத்தியாகிய குகையில் வைக்கப்பட்டு ப்ரகாசிக்கும் பொருளை ஞானவாழ்க்கையில் முயன்று அடைகின்றனர் என்பதைக் குறிக்கின்றது.

இதய கமலத்தின் நடுவிலுள்ள சிறுவெளி சிற்றம்பலம் (தகராகாசம்) எனப்படும். எங்கும் நிறைந்துள்ள பரமாத்மா அங்கே விசேஷமாகப் பிரகாசிக்கிறார். அவரை உபாஸிக்க அது சிறந்த இடம் (இதனை தஹர வித்தை என்றும் பிறிதொரு இடத்தில் கூறுவர்)

பரம்பொருள் எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி உள்ளது (ஸ்வபாஸா லஸந்தம்)

இதயகுகையிலுள்ள பிரம்மதத்வம் ஒரு கோவிலின் கர்ப்பகிருஹத்திலுள்ள மூலவரைப் போன்றது.

'யோவேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமன் ப்ரதிஷ்டிதா' என்கிறது தைத்திரிய உபநிஷத். 'பரம வ்யோமம்' என்ற இதய குகையில் எது ப்ரகாசிக்கிறதோ அது ஆனந்தவடிவாயிருந்து கொண்டு உலகை மகிழ்வூட்டி, சூரிய ஒளிக்கும் நம் புத்திக்கும் காரணமாய் விளங்குகிறது. அதுவே 'ஸத்யம் ஞானம் அனந்தம்' என்ற ப்ரம்மம் (பரம் பொருள்).

ஸ்ரீ வித்யாகுரு, ஆத்மானந்த நாதர் தம் நிர்குண ஸுப்ரமண்யர் அஷ்டோத்ரத்தில், 'ஹ்ருதயாம்புஜ மத்யஸ்த விரஜவ்யோம நாயகாய நம:' எனப் போற்றுகிறார்.

பாரதியாரும் தம் 'முருகா முருகா முருகா' என்ற பாடலில்

'குருவே! பரமன் மகனே!
குகையில் வளரும் கனலே'

எனப் பாடுகிறார்.

குகையில் ப்ரகாசிக்கும் பொருளாக வசிக்கிறார்.

ஜனார்த்திம் ஹரந்தம் ஸ்ரயாமோ குஹம் தம்

ஜனங்களின் (அடியார்களின்) துன்பத்தை நீக்குபவர்.

உயிர்க் கூட்டங்களான நம்மேல் கருணை கொண்ட வள்ளல் ஊழ் வினையையே மாற்றி பேரின்பம் நல்கக் கூடியவர்.

நாம் வெளியில் காண்பது மஹாகாசம். கனவிலும் நனவிலும் மனத்துள் காண்பது சித்தாகாசம். மூன்றாவதாக 'பரமேவ்யோமன்' என்ற சிதாகாசம் (சிதம்பரம்).

குஹைக்குள் ஸ்வயம் ஜ்யோதிஸ்ஸாக பிரகாசமாக உள்ளது (ஸ்வயம்பிரகாசம்).

உள்ளுறையும் குகன் தன் திவ்ய தேஜஸ்ஸால், பிரகாசிப்பவர்.

'ஸ்வயம் ஜ்யோதிஷே நம: ஸுப்ரஸஹ' அப்படிப் பட்ட தன்மை கொண்ட குகனை வழிபடுவோம் என்கிறார் ஆதிசங்கரர்.

கருத்து

'எல்லா இடங்களிலும் நிறைந்துள்ள இறைவனே உன், இதயக் கோயிலிலும் (குஹை) உறைந்துள்ளான் என்பது சங்கரரின் கொள்கை. குகன் எனப்பெயர் பெற்ற அவன், நம் பாபங்களைப் போக்கி துன்பத்தை நசிக்கக் கூடியவர். அவனை நாம் வழிபடுவோம் என்கிறார் ஆசிரியர்.

8

பள்ளியறை, மஞ்ச வர்ணனை

8. லஸத் ஸ்வர்ண கேஹே ந்ருணாம் காமதோஹே
ஸுமஸ்தோம ஸஞ்சன்ன மாணிக்ய மஞ்சே |
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க்க துல்ய ப்ரகாஶம்
ஸதா பாவயே கார்த்திகேயம் ஸுரேஶம் ||

பதவுரை

லஸத் ஸ்வர்ண கேஹே — *பிரகாசமான தங்கமய வீட்டில் (கோயிலில்);* ந்ருணாம் காம தோஹே — *மக்களின் (பக்தர்களின் ஆசையை நிறைவேற்றும்);* ஸுமஸ்தோம ஸஞ்சந்ந — *வாஸனை புஷ்பங்களால் அழகு செய்யப்பட்ட;* மாணிக்ய மஞ்சே — *மாணிக்கக் கற்களாலான கட்டிலின் மீது;* ஸமுத்யத் ஸஹஸ்ரார்க்க துல்யப்ரகாஶம் — *ஒரே சமயத்தில் ஆயிரம் சூரியர்களால் ஏற்படும் பிரகாச முடையவரும்;* ஸுரேஶம் — *தேவர்களுக்குத் தலைவருமான;* கார்த்திகேயம் — *கார்த்திகேயனை;* ஸதா பாவயே — *எப்போதும் வழிபடுகின்றேன்.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில், தானே ஒளிரும் தன்னொளி யான் குகன் இருக்குமிடம், அவனது மஞ்சம் ஆகியன சொல்லப்படுகின்றன.

லஸத் ஸ்வர்ண கேஹே

பிரகாசிக்கும் தங்கமயமான வீடே அவனது இல்லம். அவ்வில்லமே அவன் திருக்கோயில்.

ஸ்ரீ ஆத்மாநந்த நாதரின் நிர்குண ஸுப்ரமண்ய அஷ்டோத்தரம்,

ஸ்வஸாம்ராஜ்ய, ஸுகாஸன ஸ்வயம்ஜ்யோதி:
ஸ்வரூபாய நம:

என அவரின் இருப்பிடத்தை விளக்குகிறது.

ஸுப்ரமண்யரோ ஸ்வர்ணவிக்ரஹம் போன்றவர். அவருடைய இல்லமோ தங்கமயமான கற்களாலானது. ப்ரகாசமான பொருள் பிரகாசத்தின் மத்தியில் பிரகாசிக்கிறது.

ந்ருணாம் காமதோஹே

மனிதர்களின் அதாவது அடியவர்களின் அவாவினைப் பூர்த்தி செய்யக்கூடியவர்.

குழந்தைகளுக்கு — குழந்தைச்சாமியான பாலனாக, இளைஞர்களுக்கு — குமரனாக, பாலசுப்ரமணியனாக, வித்வான்களுக்கு — ஷண்முகனாக, வீரர்களுக்கு — ஸேனானியாக, ஆன்மீக அன்பர்களுக்கு — ஸ்வாமி நாதனாக, ஞானிகளுக்கு— ஞானதண்டபாணியாக குஹனாக, கிரகஸ்தர்களுக்கு— வள்ளி தெய்வானையோடு விளங்கும் ஸுப்ரமண்யனாக இருந்து இஷ்டங்களைப் பூர்த்தி செய்வார்.

பொதுவாக, வள்ளி தெய்வானையுடனான ஷண்முகரை வணங்கினால் எல்லா நலன்களும் பெறலாம் என்பது நியதி.

'இஹபரமதற்கிறையோனே' — திருப்புகழ், அடியார்களில் இகபலன் வேண்டுபவருண்டு. பரபலன் வேண்டுபவருமுண்டு. இவ்விருவர்களுக்கும் அருளுபவர் ஸுப்ரமண்யர்.

ஸுமஸ்தோம ஸஞ்சன்ன மாணிக்ய மஞ்சே

மாணிக்கம் (பதுமராகம்) மரகதம், புஷ்பராகம், வைரம், வைடூர்யம், நீலம், கோமேதகம் ஆகியவை நிலத்திற்பிறந்த ஏழுமணிகள்.

முத்தும் பவளமும் நீரிற்பிறக்கும். மொத்தம் நவமணிகள். மணிகளும் நிறமும் இயற்கையை ஒத்தவை.

மாணிக்கம் தாமரைமலர் நிறத்திலிருப்பதால் பத்மராகம் (பதுமராகம்) எனப்படும்.

மாணிக்கத்திலும் வகைகளுண்டு என நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். மாணிக்கங்களுக்கு பன்னிரண்டு குணங்கள் உண்டென்பர்

'ஸுமஸ்தோம ஸஞ்சன்ன' எனில் வாஸனை மிகுந்த புஷ்பங்களால் அழகு செய்யப்பட்ட மஞ்சத்தின்மீது.

மஞ்சம் எப்படிப்பட்டது?

மாணிக்கங்கள் பலநிறங்களுடன் மஞ்சத்தில் பரிக்கப்பட்டு இழையோடியுள்ளன. புஷ்பங்களோ தேவலோக புஷ்பங்கள்; நல்ல காந்தியும் வாஸனையு முள்ளவை.

ஸமுத்யத் ஸஹஸ்ரார்க்க துல்ய ப்ரகாஶம்

ஒரே சமயத்தில் ஆயிரம் சூர்யன்கள் உதயமானால் எவ்வளவு பிரகாசம் ஏற்படுமோ அதுபோல் பிரகாசிப்பவ ராய் — மஹாதேவனை, 'நமோ ஹிரண்ய பாஹவே, ஹிரண்யவர்ணாய, ஹிரண்யரூபாய, ஹிரண்யபதயே அம்பிகாபதயே, உமாபதயே, பசுபதயே' என வேதம் போற்றுகிறது. அவரின் தேஜஸ்ஸான ஸுப்ரமண்யரும் அப்படிப்பட்டவரல்லவா? இவரும்,

'ஹிரண்யகுண்டலம் வந்தே குமாரம் புஷ்கரஸ்ரஜம்' எனப்படுவார்.

'விகாச பதயே நமோநம' குமாரஸ்தவம் 'விகாசம்' என்பதற்கு 'பேரொளி' என்று பொருள். ஜ்யோதிகளுக் கெல்லாம் ஜ்யோதி. ஆதிசங்கரர் மீனாக்ஷி பஞ்சரத்னத்தில், 'உத்யத்பானு ஸஹஸ்ரகோடி ஸத்ருசாம்; கேயூர ஹாரோஜ்வலாம்' என மீனாக்ஷியை துதிக்கிறார்.

'உத்யத்பானு ஸஹஸ்ராபா' — லலிதாஸஹ. இங்கு ஸுப்ரமண்யபுஜங்கத்தில், 'ஸஹஸ்ர அர்க்க துல்ய ப்ரகாசம்' எனப்போற்றுகிறார். கந்தர்கலிவெண்பாவில் குமரகுருபரர், 'சோதி இளம் பரிதி நூறாயிரம் கோடிபோல வளந்தரு தெய்வீக வடிவும்' எனத் துதிக்கிறார்.

பொதுவாக, கடவுளைப் போற்றும் போது ஆயிரம் சூரிய ப்ரகாசமுடையவராகக் கூறுவது மரபு. ஆயினும் ஸுப்ரமண்யர், நெருப்புப் பொறிகளின்று உண்டானவர்.

(அக்னிபூ:, அக்னி ஜாதன்) அக்னி ஆராதனத்தை மையமாகக் கொண்டது வேதம். வேதத்தால் விசேஷிக்கப் படுகிறவராகிறார் ஸுப்ரமண்யர்.

ஸதா பாவயே கார்த்திகேயம் ஸுரேஶம்

ஸுரர்களின் ஈசன்— தேவர்களின் தலைவர் ஸுரேசன்.

'ஸுரபதி பதயே நமோநம:' குமாரஸ்தவம். 'ஸ்ரீசாதி தேவகண பூஜித பாதபத்ம'— ஸுப்ரமண்ய கராவலம்பம்.

அசுரர்களை மாய்த்து ஸுரலோகத்தை (தேவ லோகத்தை) காத்து ரக்ஷித்ததால் ஸுரர்களுக்கு ஈசன்— தலைவன்.

அருணகிரியாரும் திருப்புகழில், 'தேவச் சொர்க்கச் சக்கரவர்த்தி' என்கிறார்.

ஆத்மஞானிகளும் 'ஸுரர்' எனப்படுவர், அவர் களுக்கு அனுபூதி எய்த உதவும் நாயகன் 'ஸுரேசன்'தான்.

வட பாரதத்தில் ஸுப்ரமண்யரைக் கார்த்திகேயன் என்று கூறுவர். அங்கு அவர் பிரம்மசாரி. பூனாவுக்கருகில் ஒரு குன்றில் கார்த்திகேயர் உள்ளார். பொதுவாகக் கார்த்திகேயர் கோயிலுக்குப் பெண்கள் அனுமதிக்கப்படுவ தில்லை.

நேத்ராக்னியே அப்பா, சரவணப் பொய்கையே அம்பிகை, சிவதேஜஸ் குழந்தைரூபம் கொண்டது. கிருத்திகா நக்ஷத்ரத்தின் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அக்குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்தனர். அதனால் குழந்தைக்கு 'கார்த்திகேயன்' என்று பெயர் ஏற்பட்டது.

'க்ருத்திகா ஸுநவே நம: ஷாண் மாதுராய நம:' என்ற நாமாவளிகள் கார்த்திகைப் பெண்களைத் தாய்களாகப் பெற்றமையைத் தெரிவிக்கிறது.

பழனி— சஷ்டி கவசத்தில் பாலன் தேவராயர்,

'கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவன் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனேகுகனே

என விவரிக்கிறார்.

வால்மீகி ராமாயணத்தில், விஸ்வாமித்ரர் ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களுக்கு, ஸுப்ரமண்ய அவதார வர்ணனைகளை விவரித்து, 'ராமா! பூலோகத்தில் எந்த மனிதன் கார்த்திகேயனிடம் பக்தி பூண்டுள்ளானோ அவன் தீர்க்காயுளுடன், புத்ரபௌத்ராதிகளுடன் இவ்வுலகில் சகல சுகங்களையும் அடைவான். உடல் நீத்தபின் ஸ்கந்தலோகம் சென்று இன்பமெய்துவான்; என்கிறார்.

கார்த்திகேயன் சிவதேஜஸ்ஸினின்று வெளிப்பட்டவன் என்பதால், தலையில் பில்வம் தரித்தவராகவும், த்ரிநேத்ரராகவும் இருப்பார்.

ஞானம் அடைய கார்த்திகேயனை வழிபடுவதாக ஒரு கவி கூறுகின்றார். கவிகள் பலரும் கார்த்திகேய தெய்வத்தையே போற்றியுள்ளனர்.

மெய்ஞானக் கொள்கைகளிலொன்று 'பாவனாதீதம்' பாவனைமுறையில் சடங்குகள் மூலமாகவும், கிரியைகள் மூலமாகவும் சிறப்புடன் தெய்வத்தை வழிபட்டு பேறுபெறலாம். இருப்பினும், அன்புடன் உருகியும், அழுதும், மனம் நெகிழ்ந்தும், பேறு பெறுவதும் உண்டு. இதனைப் 'பாவனாதீதம்' என்பர். முருகன் அடியார்கள் பலர் இவ்வழியைப் பின்பற்றி பேறு பெற்றுள்ளனர்.

ஆதிசங்கரர் நேரில் கண்டது, ஆதிசேஷனின் வழிபாடு முதல்வகை. ஆதிசங்கரர், தாமே உளம் நெகிழ்ந்து, ஆனந்தத்துடன் ஸுப்ரமணியரின் அழகு, வீரம், நாம விசேஷங்கள் ஆகியவற்றைப்பாடுவது இரண்டாம் வகை என்றும், ஞானியர் வழி என்றும் கொள்ள முடியும்.

மேற்கூறிய பெருமைகளையுடைய கார்த்திகேயனை எப்பொழுதும் எண்ணி வழிபடுவோம் எனத்துதிக்கிறார் ஆதிசங்கரர்.

கருத்து

ஸுப்ரமண்யன் உறையும் பொன்மயமான கோயிலில் அலங்கரிக்கப்பட்ட மாணிக்கக்கட்டிலில் அநேக சூர்ய ப்ரகாசம் கொண்ட ஸுரேசனான கார்த்திகேயனை எப்போதும் நினைந்து வழிபடுவோம் என்று துதிக்கிறார் ஆதிசங்கரர்.

9

திருவடி மஹிமை

9. ரணத்தம்ஸகே மஞ்ஜுலேऽத்யந்த ஶோணே
மனோஹாரி லாவண்ய பீயூஷ பூர்ணே |
மனஷ்ஷட்பதோ மே பவக்லேஶதப்த:
ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே ||

பதவுரை

ரணத்தம் ஸகே — *சப்திக்கும் அன்னப்பறவைகளை உடையதும் (ஒலியெழுப்பும் பாதசரங்களை உடையதும்);* **மஞ்ஜுலே அத்யந்த ஶோணே** — *மிக அழகிய, சிவந்த* **மனோஹாரி லாவண்ய; பீயூஷ பூர்ணே** — *மனதைக் கவர்ந்திழுக்கும் அமுதம் பூர்ணமாக உள்ள;* **தே பாதபத்மே** — *தங்கள் திருவடித்தாமரையில்;* **ஸ்கந்த** — *கந்தப் பெருமானே;* **பவக்லேஶ தப்த:** — *பிறவித்துன்பத்தால் கஷ்டப் படும்;* **மே மன: ஷட்பத** — *எனது மனமாகிய வண்டு;* **ஸதா மோததாம்** — *எப்போதும் ஸந்தோஷத்தை அடையக்கடவது.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் ஸுப்ரமண்யரின் பாதாரவிந்த மஹிமை போற்றப்படுகிறது. மனமாகிய வண்டு, திருவடித் தாமரையில் லயித்திருக்க வேண்டப்படுகிறது.

ரணத்தம் ஸகே மஞ்ஜுலேத்யந்த ஶோணே

எப்போதும் விதவிதமான சப்தங்களை ஏற்படுத்திக் கொண்டு செந்தாமரை மலரில் ஹம்ஸ பக்ஷிகள் உலாவும். அந்த திவ்ய சப்தங்கள் மனதிற்கு மகிழ்ச்சியைத்தரும்.

மிகவும் அழகான (மஞ்ஜுலே) என்பது இங்கு முழு அவயவங்களும் அழகின் சாட்சியாக விளங்குகிறது என்பதைக் குறிக்கிறது.

ஸுப்ரமண்யரை தியானிக்கையில், அவரது சிவந்த ஒளியே தியானிக்கப்படுகிறது. (ஸிந்தூராருணமிந்து பத்ம ஜயிபி: ஷட்பிரமுகை: பாஸிதம்)

மஞ்ஜுளம் — நீரோடை என்றும் பொருள். இங்கு ஆனந்தப் பெருக்கே நீரோடையாம். நீரோடை போன்ற இடங்களில் கன்னிமார்களும் இருப்பர். அவர்களுக்கும் துணையாயிருப்பார்.

மந்திரசாஸ்திரத்தில் 'மஞ்சு' என்பது பதினைந்து என்ற எண்ணைக் குறிக்கும். ஸுப்ரமண்யரின் பஞ்ச தசாக்ஷரி மந்திரத்தையும் குறிக்கலாம். (மந்திரங்களைக் குருமூலம் அறிக)

மனோஹாரி லாவண்ய பீயூஷ பூர்ணே

மனோஹாரி — மனதைக் கவரும் மனதைக் கவர்பவன் மன்மதன். ஆயிரங்கோடி மன்மதர்கள் வந்தாலும் நம் கந்தனின் பாதங்களின் அழகுக்கு ஈடாகமாட்டார்கள்.

> அநேகார்க்ககோடி ப்ரபாஸஜ்வலந்தம் மனோஹாரி
> மாணிக்ய பூஷோஜ்ஜவலந்தம் —புஜங்க ப்ரயாதம் (2)

ஆயிரங்கோடி காமர் அழகெலாம் திரண்டொன்றாகி குமியினவெனினும் செவ்வேள் விமலமாம் சரணந்தன்னில் தூய நல்லெழிலுக்கு ஆற்றாது..... —எனக் கந்தபுராணம் கூறும்.

லாவண்யம் — வசீகரிக்கும் அழகு.

'பீயூஷ' மென்பது அமுதமாகும். அதாவது மனதை வசீகரிக்கும் அழகாகிய அமிர்தம் நிறைந்த என்பதாம். 'முக்த பீயூஷ வர்ஷை:' —விஷ்ணுஸஹ 'சிவானந்த பீயூஷ ரத்னா கரஸ்தாம்'— யோக மீனாக்ஷி ஸ்தோத்ரம்— அகஸ்தியர்.

மன: ஷட்பதோ மே

மே — எனக்கு (ஆதிசங்கரர் கூற்று) பக்தி முற்றிய நிலையில் ஆத்மாபிவிருத்திக்காக பிரார்த்திக்கும் நிலை வரும். சாதாரண காமனைக்களுக்கு பிரார்த்திக்காமல், உண்மையான தூயபக்தி அத்வைதத்துடன் சேர்ந்திருந்தால் பூரணத்வம் பெறும் என்பது ஆதிசங்கரர் கொள்கை.

இக்கருத்தினடிப்படையில்தான் மஹாவிஷ்ணு மீது உயர்வான அமுத வாக்கு கொண்ட 'ஷட்பதீ' ஸ்தோத்ரத்தை ஆதிசங்கரர் அருளியுள்ளார். இது ஆறு ஸ்லோகங்கள் கொண்டது. ஷட்—ஆறு, பதம்—கால் (ஆறுகால்—வண்டு) 'பதம்' என்பதற்கு வார்த்தை என்றும் பொருள் உண்டு. (ஷட்பதானந்தா என்ற தீக்ஷா நாமமும் உண்டு).

சித்த சுத்தி அவசியமான ஒன்று. இதுஞான உதயத்துக்கான தொடக்கம்.

'நாராயண, கருணாமய, சரணம், கரவாணி, தாவகௌ, சரணௌ என்று ஆறுவார்த்தைகள் (ஷட்பதங்கள்) உள்ளன. கருணாமயமான நாராயணா உன் இணையடியில் சரண்புகுகிறேன். என்பதே இந்த ஆறுவார்த்தைகளின் பொருள். ஸௌந்தர்யலஹரியிலும், ஸுப்ரமண்ய புஜங்கத்திலும் 'ஷட்பதி' என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்.

ஸௌந்தர்யலஹரியில், 'பஞ்ச இந்திரியங்கள்' மனது எனும் ஆறாவது கரணத்தோடு கூடியதால் ஆறுகால் வண்டு போல என் ஜீவன் உன் பாதபத்மத்தில் புதைந்து கிடக்கட்டும் என அம்பிகையை ஸ்தோத்தரிக்கிறார்.

ஆதிசங்கரர் தன் மனதை ஒரு வண்டாக பாவிக்கிறார். வண்டுகளுக்கு ஆறுகால்கள் உள்ளதுபோல் மனதுக்கும் சமம், தமம், திதிக்ஷை, உபாதி, சிரத்தா, ஸமாதானம் என்று ஆறு குணங்கள் உள்ளன.

பவக்லேஶ தப்த:

க்லேசம் என்ற துக்கம் பலவகைத்து. பவக்லேசம், மனக்லேசம், காயக்லேசம் போன்றவை சில.

பவக்லேசம், பவார்ணவம், பவஸாகரம் என ஸம்ஸாராதிகளால் ஏற்படுவது ஒரு வகை. ஆதிசங்கரரின் சிஷ்யர் தோடகாசார்யார், தோடகாஷ்டத்தில்.

'கருணாவருணாலய பாலயமாம் பவஸாகர துக்க விதூனக்ருதம்.... பவ சங்கர தேசிகமே சரணம்' என தம் குருவின் சரணாரவிந்தங்களைப் போற்றுகிறார்.

மனதாகிய வண்டு ஸம்ஸாரார்ணவத்தால் (ஒரு பெருந்தீயினால்) எப்போதும் தபிக்கும்படியாக செய்யப் பட்டதாக உள்ளது. அம்மனமாகிய வண்டிற்கு உன் பாதாரவிந்தங்களின் தேனைப் பருகியதால் தாபத்திற்கு சாந்தி ஏற்படுகிறது.

ஸதா மோததாம்

மோத: மகிழ்ச்சி, களிப்பு, சந்தோஷம். எப்போதும் மனம் ஸந்தோஷத்தை அடையட்டும் எப்படி? எங்கு? எனில் (கந்தன் திருவடியில்!)

ஸ்கந்த

'ஸ்கந்த' என்பது ஒரு மந்திரச்சொல் (ஸ்) கந்தர் சஷ்டி கவசம், ஸ்கந்த ஷட்கம், ஸ்கந்தலஹரீ, (ஸ்)கந்தர் கலிவெண்பா, (ஸ்)கந்தரனுபூதி — போன்ற பாராயண நூல்கள் புனிதம் பெற்றவை.

கலியில் கண்கண்ட தெய்வம் ஸ்கந்தன். ஸ்கந்தனின், வரலாற்றைக் கூறும் நூல் 'ஸ்காந்தம்' எனும் பழம்புராணம் — அதையொட்டி கச்சியப்பசிவாசாரியார், தமிழில் கந்தபுராணம் படைத்துள்ளார்.

'தப்தசாமீ கரப்ரக்யம் சக்திபாணிம் ஷடானனம் மயூரவாஹனாரூடம் ஸ்கந்தரூபம் சிவம் ஸ்மரேத்' என ஆதிசங்கரர் ஸ்கந்தரூபத்தில் சிவனை வணங்குவதாகக் கூறுகிறார்.

ஸ்கந்தனை தியானிப்பது சிவசக்தியைத் தியானிப்பது ஆகும். சிவன் வேறல்ல, ஸ்கந்தன் வேறல்ல. 'ஸ்கந்தர்' என்பது ஸுப்ரமண்யரின் ஒரு சிறப்புப் பெயர்.

'ஸ்கந்த' என்ற அடிச்சொல்லுக்கு 'வெளிப்படுவது' என்று பொருள். மேகங்களிடமிருந்து மின்னல் வெளிப் படுவதுபோல, சிவதேஜஸிலிருந்து ஆறு பொறிகள் வெளிப்பட்டதால் 'ஸ்கந்த' என்ற பெயர் உண்டாயிற்று.

தே பாத பத்மே

ஆதிசங்கரர் இறைவனின் திருவடித்தாமரைகளை ஆனந்தலஹரியில் பல இடங்களில் பாடியுள்ளார். 'பவதமல பாதாப்ஜயுகளம்' (17) எனத் 'தூய திருவடித் தாமரைகளை எப்படிப்பார்ப்பேன்' என்கிறார்.

'த்வத் பாதாம்புஜம் அர்ச்சயாமி' (29)—உனது திருவடித்தாமரையை பூஜிக்கிறேன் என்கிறார். 'தே பாதபத்மம் உத்வஹந்தி தேக்ருதார்த்தா:' உன்னுடைய பாதபத்மம் ஆகிய புதையலை எவர்கள் இப்பிறப்பில் அடைகின்றனரோ அவர்கள் பிறவிப்பயனையடையும் பாக்யசாலிகள் என்கிறார். (72) 'பாதாம்புஜ பக்தியையே அருள்வீராக' (87).

'யோகியர்களின் சித்தமான இதயத் தாமரைப் புஷ்பத்தில் வீற்றிருக்க, உமது திருவடிகளை மனம் சிந்திக்கட்டும். திருவடிக்காட்சியைத் தருக' என்கிறார். (79)

இவ்வாறு பாதபத்மங்களை ஆதிசங்கரர் பலமுறை பாடியுள்ளார்.

ஸுப்ரமண்ய புஜங்கத்தில் 'தே பாத பத்மே' எனச் சுருக்கமாகக் கூறியுள்ளார் ஒரு தடவைமட்டும். ஆனந்த லஹரியில் ஆனந்தக் களிப்பில் பல இடங்களிலும், புஜங்கத்தில் நோயின் தாக்கத்தால் ஒரு தடவை மட்டுமோ என எண்ண இடம் தருகிறது.

கருத்து

ஸுப்ரமண்ய புஜங்கம் பாடித்துதிக்கையில், சிவந்த, மனதை ஈர்க்கும், அமுதம் நிறைந்த பாதமலர்களில், க்லேசமுற்ற அவருடைய மனமாகிய வண்டு ஸதா சந்தோஷமடைந்து கொண்டிருக்கட்டும் என்கிறார் ஆதிசங்கரர்.

'ஸ்புரச்சாரு திவ்யோரு ஜங்கா ஸுகுல்பம் விகஸ்வத்
பதாப்ஜம் நகேந்து ப்ரபாட்யம்' — புஜங்க ப்ரயாதம் (1)

10

இடைப்பிரதேச வர்ணனை

---

10. ஸுவர்ணாப திவ்யாம்பரோத் பாஸமானாம்
க்வணத் கிங்கிணீ மேகலா ஶோப மானாம் |
லஸத் தேம பட்டேன வித்யோதமாநாம்
கடிம்பாவயே ஸ்கந்த! தே தீப்யமானாம் ||

பதவுரை

ஸுவர்ணாப திவ்யாம் பரோத்பாஸமானாம் — *பொன் எனப் பிரகாசிக்கும் உயர்ந்த பீதாம்பரத்தை உடையதும்;* க்வணத் கிங்கிணீ மேகலா ஶோபமானாம் — *ஒலிக்கும் உட்டியாணத்தால் சோபிக்கும்;* லஸத்தேம பட்டேன வித்யோதமானாம் — *ஒளிரும் அழகிய தங்கப்பட்டத்தால் பிரகாசிக்கும்;* தீப்ய மானாம் — *இயற்கையாகவே ஒளிரும் தன்மையுள்ள;* தே கடிம் — *தங்களுடைய இடையை;* பாவயே — *தியானிக்கிறேன்;* ஸ்கந்த — *ஸ்கந்த தெய்வமே.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில், ஸ்கந்தரின் இடைப் பிரதேசம் வர்ணிக்கப்படுகிறது. இடுப்புப் பிரதேசமும் ஜீவன்களுக்கு புருஷார்த்தங்களைத் தரத்தக்கது என்கிறார் ஆதிசங்கரர்.

ஸுவர்ணாப திவ்யாம் பரோத் பாஸமானாம்

'திவ்யாம்பரைர் பாஸமானாம்' என்று பாடபேதம் உண்டு.

திவ்யம் — உன்னத, உயர்ந்த, அதீத

திவ்யநாமம், திவ்யநாரி, திவ்யகானம், திவ்யஞானம் திவ்யசரிதம், திவ்யரத்னம், திவ்ய வஸ்த்ரம் — என தெய்வத்தன்மை பொருந்தியவைகளைக் குறிப்பிடுவது வழக்கம். அதுபோல், ஸ்கந்தரின் 'திவ்யாம்பரம்' மஹிமை பொருந்தியது. பொன்போல் பிரகாசிக்கும் பீதாம்பரத்தை உடையவராய் உள்ளார் ஸ்கந்தர்.

தங்கமயமான ஜரிகையால் அலங்கரிக்கப்பட்ட பீதாம்பரமாகையால் இடை மிகவும் ஒளிர்கிறது. ஸ்கந்தனே அழகு. அந்த அழகுத்திருமேனியின் இடையும் அழகு. இடையில் மேலும் பிரகாசிக்கின்ற வகையிலுள்ளது பீதாம்பரம்!

க்வணத் கிங்கிணீ மேகலா ஶோபமானாம்

'ரணத் கிங்கிணீ மேகலாயை நம:' என லலிதா ஸஹஸ்ரநாமம் (312) தேவியைப் போற்றும். இதற்கு 'சலங்கைகள் ஒலிக்கும் ஒட்டியாணமணிந்தவள்' என்பது பொருள்.

'க்வணத் காஞ்சீதாமா' என்கிறது ஸௌந்தர்ய லஹரீ (7).

'மேகலை' என்பது இடுப்பில் அணியும் ஆபரணம் 'மஹீ ஸாகர மேகலா' என்பர். 'பூமியைக் கடல் ஆபரணம் போன்று சூழ்ந்துள்ளது' என்பது பொருள்.

நான்கு வர்ணத்தவர்களில் முதல் மூன்றுவர்ணத்த வர்கள் அணிந்து வந்த, ஒன்றாயிணைந்த மூன்று வளையங்களுக்கு 'மேகலை' என்று பெயர்.

ப்ரம்மசாரிகளுக்கு தண்டம், மான்தோல், முஞ்சி என்ற மூன்றில், முஞ்சி என்று இடுப்புக் கயிறுக்கு 'மேகலா' என்று பெயர். இதையணிய மந்திரமும் உண்டு. ஸ்கந்தன் பிரம்மசாரி என்பதால் இந்த வார்த்தை சொல்லப் பட்டிருக்கக்கூடும்.

க்வணத் — மெல்லிய சிறு ஒலியெழுப்புவது.

கிங்கிணீ— சிறு (ஒலியெழுப்பும்) மணி. ஆடை ஆபரணங்களில் அலங்கரிப்பது.

'க்வணத் கிங்கிணீ' என்பது பொதுவாகக் கூறும் வாக்கியம். மெல்லிய சிறு ஒலியெழுப்பும் மணிகளை யுடைய ஆபரணம் என்றாகிறது. அவ்வாறான ஒன்று மேகலை— ஒட்டியாணம்.

இந்த்ராக்ஷீ கவசம் 'மெல்லிய ஒலியெழுப்பும் மாணிக்கக் கற்கள் உள்ள சிலம்பையணிந்தவன்' 'க்வணன் மாணிக்ய நூபுரா' எனப் போற்றும்.

திருச்செந்தூர் திருப்புகழில் அருணகிரிநாதரும் 'அந்தகன் வரும் தினம் பிறகிட' எனத் தொடங்கும், 'குன்று இடிய அம்பொனின் திருவரைக் கிண் கிணி கிணின் கிணின் கிணீனெனக்' எனப் பாடுகிறார். திருவரையிலுள்ள சதங்கையானது கிணின் கிணின் என்று இனிய ஒலி எழுப்பவும் என்பதாகப் பாடுகிறார்.

ஆதிசங்கரரரே பவானீ புஜங்கத்தில், க்வணத்கிங்கிணீ நூபுரோத்பாஸி..... பாதாப்ஜயுக்மம்' என்கிறார். 'மெல்லிய ஒலிதரும் மணிகள் கொண்ட காற்சிலம்பு ஒளிரும்' என்று வர்ணிக்கிறார்.

சோபை— ப்ரகாசம்

சோபமானம்— ப்ரகாசிக்கக்கூடிய அதாவது, 'ஒலியெழுப்பும் சிறுமணிகள் கொண்ட இடுப்பு வளையம்' (மேகலை) சோபிக்கக்கூடியதாய் என்று விளங்குகிறது.

லஸந்முத்ரிகாரத்னராஜத் கராக்ரம் க்வணத் கிங்கிண
ரம்யகாஞ்சீ கலாபம் —புஜங்கப்ரயாதம் (1)

லஸத்தேம பட்டேன வித்யோதமானாம்

மேகலைக்கு மேல்பாகத்தில் தங்கத்தினாலான பட்டம் ஒன்றும் போடப்பட்டுள்ளது. அதனால் அதனழகு எல்லையில்லாததாகிறது.

அழகுக்கு விலையில்லை. அழகினால் இன்பம் பெருகும். கண்கள் மட்டும் அழகைப் பருகுவதில்லை. கருத்தும் மகிழ்வெய்தும். உள்ளம் உவகை பொங்கும். அத்தகைய அழகுத் திருமேனியை அகக்கண்ணில்

காண்பது போல, ஆதிசங்கரர் நேரில் கண்ட பரவசத்தில் வியந்து துதிக்கிறார்.

'தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந்தளிர்சேர் பொற்பீதாம்பரமும்
சந்திரகாந்தச் சரிகை தொங்கலும்
மந்திரவாளும் வங்கிச் சரிகையும்
அருணோதயம் போல் அவிர்வன் கச்சையும்
....
இருகோடி சந்திரன் எழிலொட்டியாணமும்
....
நாபிக்கமலமும் நவரோம பந்தியும்
....
அருணோதயமெனச் சிவந்தமேனியும்'

என்று பாலன் தேவராயர் சஷ்டிகவசத்தில் (குன்று தோறாடல் கவசம்) ஆதிசங்கரர் கண்டுகளித்த இடையழகை இவரும் அகக் கண்ணில் கண்டு பாடுகிறார்.

கடிம் பாவயே ஸ்கந்த தே தீப்யமானம்

மேற்கூறிய ஆபரணங்களும். அலங்காரங்களும் இல்லாமலேயே, அவரின் இடுப்புப் பகுதி ப்ரகாசமாக இயற்கையாகவே உள்ளதன்றோ?

கடி—இடுப்புப் பிரதேசம். இடுப்பின் கட்டக் கூடிய ஆபரணம் 'கடிஸுத்ரம்' எனப்படும்.

'நமஸ்தே நமஸ்தே கடின்யஸ்தபாணே' என பிறிதொரு ஸுப்ரமண்ய புஜங்கம் போற்றும்.

சாந்தோக்ய ச்ருதி விராட்புருஷனை வர்ணிக்கையில், விஸ்வரூப அமைப்பில் இடுப்புப்ரதேசத்தை எங்கும் பரவியுள்ள ஆகாயத்திற்கு ஒப்பிடுகிறது. இவ்விடைப் பிரதேசத்தை ஸுப்ரமண்யரின் ஆகாயத்தத்துவமாக பாவிக்கலாம். ஆகாயம் நமக்கு நன்மைகள் தருவதுபோல் ஸ்கந்தனின் இடுப்புப் பிரதேசமும் நமக்கு நலம் பயக்கக் கூடியது ஆகும்.

'ஸ்கந்த: என்ற பதத்திற்கு 'தன்னை தரிசிக்கும் அன்பர்களின்— பக்தர்களின்— பாவங்களை நசித்து மோக்ஷமளிக்கக் கூடியவர்' என்று பொருள்.

'ஸேநாநீம் அஹம் ஸ்கந்த'— கீதையில் கண்ணன் வாக்கு.

தே—தங்களின் (ஸ்கந்தனின்) தீப்யமானாம் — இயற்கையாக ப்ரகாசிக்கும் (இடையைக் குறிப்பிடும்).

பாவயே — எண்ணி வழிபடுகிறேன், தியானிக்கிறேன்.

'ஸதா பாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம் தம்' (ஸ்லோ.5)

'ஸதா பாவயே கார்த்திகேயம் ஸுரேசம்' (ஸ்லோ.8)

தற்போது,

'கடிம் பாவயே ஸ்கந்த தே தீப்யமானம்' (ஸ்லோ.10)

ஸதா ஸர்வகாலமும் ஸுப்ரமண்யரை எண்ணி நினைந்துருக வேண்டும், தியானிக்க வேண்டும். ஸுப்ரமண்யரின் சிந்தனை மனதைவிட்டு நீங்காவண்ணம் இருக்கவே 'பாவயே' என்று அடிக்கடி கூறுகிறார்.

புஜங்கப்ரயாத வ்ருத்தம் (1)ல் ஸுப்ரமண்யரின் மேனியழகில் இதையொத்தனவாகவே வர்ணிக்கிறார்.

'விசாலோதரம் விஸ்புரத்பூர்ண குக்ஷிம்
கடெளஸ்வர்ண ஸூத்ரம் தடித்வர்ண காத்ரம் |
ஸுலாவண்ய நாபீ ஸரஸ்தீர ராஜத்
ஸுசைவால ரோமாவளீ ரோசமாநாம் ||

கருத்து

அலங்காரமான இடுப்புப் பிரதேசம் இயற்கையாகவே அழகு பிரகாசிக்கும் அந்த இடுப்புபிரதேசத்தை தியானித்தாலும், தரிசித்தாலும் நமக்கு நன்மை விளையும் என்பது கருத்து.

11

மார்பு பிரதேச வர்ணனை

11. புலிந்தேசா கன்யா கனாபோக துங்க:
ஸ்தனாலிங்கனாஸக்த காஸ்மீரராகம் |
நமஸ்யாம்யஹம் தாரகாரே! தவோர:
ஸ்வபக்தாவனே ஸர்வதா ஸானுராகம் ||

பதவுரை

புலிந்தேசா கன்யா — வேடர்தலைவனின் பெண்ணாகிய வள்ளியின்; கனாபோகதுங்க ஸ்தன — பருத்த தனங்களை; ஆலிங்கனா ஸக்த — ஆலிங்கனம் செய்து கொண்டதால் ஒட்டிக்கொண்ட; காச்மீர ராகம் — குங்குமச் (சிவப்பு) சாயத்தை உடையதும்; ஸர்வதா ஸ்வபக்தாவனே — எப்போதும் தன்னுடைய பக்தர்களை ரக்ஷிப்பதில்; ஸானுராகம் — அவாவுடையவருமான; தவ உர: — தங்களுடைய மார்பை; நமஸ்யாமி அஹம் — நான் நமஸ்கரிக்கிறேன், தாரகாரே! — தாரகாசுரனை வென்றவரே!

விளக்கவுரை

ஸுப்ரமண்யரின் பாதத்தாமரைகள், இடைப்பகுதி ஆகியன முந்தைய ஸ்லோகங்களில் தியானித்து வணங்கப்பட்டது. இந்த ஸ்லோகத்தில் அவரது மார்புப் பகுதி வர்ணிக்கப்பட்டு வணங்கப்படுகிறது. இதனை 'வக்ஷஸ்தலம்' என்பர். பக்தர்களை ரக்ஷிப்பதில் கருத்தாயுள்ளவர் என்பதும் இங்கு உள்ளடக்கம்.

**புலிந்தேஶ கன்யா கனாபோக துங்க
ஸ்தனாலிங்கனாஸக்த காச்மீர ராகம் |**

புராதன ஐம்பத்தாறு தேசங்களுள் அடங்கிய துணை தேசங்களும் பல இருந்தன. (மஹாபாரதம்—பீஷ்ம பர்வம்) அவற்றில் புலிந்த தேசமும் ஒன்று. வரலாற்றின்படி புலிந்தர், சபரர் போன்ற பழங்குடிகள் இருந்ததை, நாமறிவோம். இவர்களின் தெய்வம் 'புளிந்தினி' கதிர்காமத்தில் புளிந்தினி என்ற தெய்வஸந்நிதி இன்று உள்ளது.

அன்னையின் நாமங்களிலொன்று 'புளிந்தின்யை நம:' முருகனின் நாமங்களிலொன்று.

'புளிந்த கன்யா பர்த்ரே நம:' புளிந்தினி என்ற பெயர் வள்ளியையும் குறிக்கும்.

புலிந்த தேச ஈசன் (தலைவன்) புலிந்தேசன். புலிந்தேசன் கன்னி— வேடர்தலைவன் மகள். பாமரர் கூற்றுப்படி, வள்ளியை ஸுப்ரமண்யஸ்வாமி வலிந்து மணம் முடித்தார். புராணத்தின்படி, வள்ளி உபேந்திரனின் (மஹாவிஷ்ணுவின் அவதாரம்) மகள்.

வேடன் மகளான வள்ளியோடு பள்ளியறையில் தழுவி சுகம் பெறுகையில் இருவரின் மார்புகளும் சேர்கின்றன. வள்ளியின் பருத்த ஸ்தனங்களைத் தழுவியதால் அலங்கரித்த குங்குமம் ஸ்வாமியின் மார்பில் சிவப்பாகக் காணப்படுகிறது.

**'கர்பூராகரு குங்குமாங்கிதகுசாம்
கர்பூர வர்ணஸ்திதாம்' (பிரமராம்பாஷ்டகம்)**

எனவே குசங்களுக்கு வாஸனையாகப் பூசுவதுண்டு.

'காச்மீர ராகம்' என்பதற்கு குங்குமச்சாயம் என்று பொருள். ஆப்பிள் பழம் சிவப்பானது. அதனை காச்மீரபலம் என்பர். அப்பகுதியில் கிடைக்கும் சிவப்புநிறப் பொருளுக்கு குங்குமப்பூ என்று பெயர். குங்குமப்பூ சிவப்பு குங்குமம் ஆகியன நிறத்தை யொட்டி தொடர்புடையவையே.

துர்வாஸர் தம் சக்திமஹிம்ன ஸ்தோத்திரத்தில் ஸ்தனங்களின் தியானத்தைப் பற்றிக் கூறுகிறார். 'தாயே!

குங்குமப்பூ, கஸ்தூரி பச்சைக்கற்பூரம் இவற்றின் தூளோடு வாசனைமிக்க சந்தனம் பூசப்பெற்று ஆபரணங்களாலும் பிரகாசிக்கும், மால் அரி அயனால் பருகப்பெற்ற ஒளி பொருந்திய இரு குசங்களான பொற்கலசங்களை தியானிக் கிறேன்' (36) என்கிறார் ஸ்தனங்களுக்கு சிவப்பு நிற வாஸனைக் கலவை பூசுவது வழக்கத்திலிருந்திருக்கிறது.

'கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் பைம்பொன்
புரிநூலும் கண்டிகையும்..........

என மார்பினழகை கந்தர் கலிவெண்பா போற்றுகிறது.

நமஸ்யாமி அஹம் தாரகாரே தவோர:

அஹம் நமஸ்யாமி—நான் நமஸ்கரிக்கிறேன் என ஆதிசங்கரர் கூறுகிறார்.

'அஹமித்யேவ விபாவயே பவானீம்' பவானியை 'அஹம்' என்னும் பொருளாகவே தியானிக்கிறேன்.

ஐந்து கோசங்களால் மறைக்கப்பட்டிருப்பது 'அஹம்' என்னும் சொல்லின் பொருளாக விளங்கும் பிரத்யேக ஆத்மா.

துர்வாஸர், சக்தி மஹிம்ன ஸ்தோத்திரத்தில்,

'விஸ்வம் வ்யாப்ய சிதாத்மனா
அஹம் அஹம் இதி உஜ்ரும் பஸே மாத்ருகே'

என, 'உலகை வியாபித்து அறிவு வடிவான உமது ஸ்வரூபத் தால் 'நான்' 'நான்' என விளங்கிக் கொண்டிருக்கிறாய் தாயே' என்கிறார்.

மேலும், துர்வாசர், 'சச்சிதாநந்த சைதன்யமே மனதில் பிரதிபிம்பித்த உண்மைப் பொருள்;

அதுவே, நான் என்ற தியானமே லலிதை. 'எப்பொழுதும் ஆனந்த பரிபூரணமாயிருக்கும், தன் ஆத்மஸ்வரூபமே பரதேவதை' என்கிறார்.

இந்த நிலையிலேயே, ஆதிசங்கரரும் தன் ஆத்ம ஸ்வரூபத்தில் ஸுப்ரமண்ய ஸ்வாமியை தியானித்த நிலையில் 'நான்' என்று குறிப்பிடுகிறார். என்பது தெளிவு.

தாரகாரே

இமயமலையின்கண் பரமேஸ்வரன் தவம் செய்கையில், பார்வதி, பணிவிடை செய்கின்றாள்.

தாரகாசுரன் தேவர்களைக் கடும் தொல்லைக்கு உள்ளாக்குகிறான். பரமனோ தவத்திலுள்ளார். தேவர்கள் பிரம்மாவையணுகி தொல்லைகள் நீங்க வழிகேட்டனர். அவரோ, 'பார்வதி— பரமேஸ்வரனின் மகனால் மட்டுமே தாரகன் மாய்வான்' என்றார்.

பார்வதி—பரமேஸ்வரன் திருமணத்திற்கு மன்மதனின் உதவி தேவைப்பட்டது. அவன் தன் காமபாணங்களை எய்தினான். பயனில்லை. தாமாகக் கண் விழித்த பரமன், பார்வதியின் மலர்மாலையை ஏற்கச் சித்தமானார். இந்நிலையில் மன்மதன் அம்பெய்த, பரமன் நெற்றிக் கண்ணைத் திறந்திட பஸ்மமானான். பார்வதி— பரமேஸ்வரன் திருமணத்தில் உயிர்த்தெழுவான் என்றது அசரீரி.

பார்வதியும் தவம் மேற்கொண்டாள். ஈசனின் அருட்காட்சியால் உணர்வு பெற்றாள். திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இவ்வாறு காளிதாசர் விவரிக்கிறார்.

குமாரஸம்பவத்தில், குமரன் பரமேஸ்வரனிடமிருந்து தன்னிச்சையாக, சுயமாக வெளிப்பட்டான் எனக் கூறப்படுகிறது. பார்வதி—பரமேஸ்வரன் திருமணமே தாரகனை வதைத்தல் என்பதற்காக நடத்தப்பட்ட ஒன்று. லௌகிகமாகத் தோன்றினாலும் பொது நோக்கத்திற்காக நடந்தது ஆகும். காளிதாசனின் வாக் விலாஸம் ஓங்கி நிற்கிறது.

தாரகாசுரனை வதைத்த கந்தன் 'தாரகாரி' எனப்படுவான்.

தவோர:—தவ உர: எனப் பிரித்தால் உன்னுடைய மார்பு, வக்ஷஸ்தவம் என்று பொருள்படும். மார்பு எனும் வக்ஷஸ்தலத்தை நமஸ்கரிக்கிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

விசாலமான மார்பும், தோள்வலிமையும் கொண்டவராதலால் தாரகனை மாய்த்து 'தாரகாரி' எனப் பெயர் பெறுகிறார்.

ஸ்வபக்தாவனே ஸர்வதா ஸானுராகம்

ஸர்வதா — எப்போதும், ஸ்வபக்தாவனே — தம் பக்தர்களைக் காக்கவேண்டும் என்ற அபிலாஷை காரணமாகவும் விளங்குகிறார் என்பதாலும் ஆதிசங்கரர் நமஸ்கரிக்கிறார்.

'அனுராகம்' என்பதற்கு அபிலாஷை என்ற பொருளுண்டு. ஸ்வாமிக்கு என்ன அபிலாஷை? எப்போதும் பக்தர்களைக் காக்க வேண்டுமென்பதே. அனுராகம் என்பதற்கு சிவப்புநிறம் என்ற பொருளும் உண்டாம்.

கருத்து

வள்ளியின் தனங்களின் குங்குமப்பூ சாயத்தை யுடைய, தம் பக்தர்களை எப்போதும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணமுடைய தாரகாரியின் மார்பை போற்றி தியானிக்கிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

12

திருக்கரங்களின் மஹிமை

12. விதௌ க்லுப்த தண்டான் ஸ்வலீலாத்ருதாண்டான்
நிரஸ்தேப ஶுண்டான் த்விஷாம் காலதண்டான் |
ஹதேந்த்ராரிஷண்டான் ஜகத்ராண ஶௌண்டான்
ஸதா தே ப்ரசண்டான் ஶ்ரயே பாஹுதண்டான் ||

பதவுரை

விதௌ க்லுப்த தண்டான் — *பிரம்மாவை தண்டித்ததும்;* ஸ்வலீலா த்ருதாண்டான் — *அண்டங்களை விளையாட்டாக ஏந்துகின்றனவும்;* நிரஸ்தேப ஶுண்டான் — *யானையின் மதத்தை அடக்கும் சக்தியுடையனவும்;* த்விஷாம் காலதண்டான் — *பகைவர்களுக்கு காலனின் தண்டாயுதம் போன்றும்;* ஹதேந்த்ராரிஷண்டான் — *அசுரர்களை அழித்தனவாகவும்;* ஜகத்ராண ஶௌண்டான் — *ஜகத்தை ரக்ஷிப்பதில் சிறந்தனவாகவும்;* ப்ரசண்டான் — *பெரியவைகளுமான;* தே பாஹுதண்டான் — *தங்களின் தடக்கைகளை;* ஸதா ஶ்ரயே — *எப்போதும் ஆச்ரயிக்கிறேன்.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் ஸுப்ரமண்யரின் புஜபல பராக்ரமம் போற்றப்படுகிறது. கை கொடுத்து ரக்ஷிக்க வேண்டுமென பிரார்த்திக்கிறார் என்பது குறிப்பு.

விதௌ க்லுப்த தண்டான்

'விதி' என அழைக்கப்படும் பிரம்மதேவர், ஸுப்ரமண்ய ஸ்வாமியைச் சிறுவன் தானே என அலக்ஷ்யம் செய்து கைலாஸத்தினுள் சென்றார்.

ஸுப்ரமண்யருக்கோ தன்னைக் கேட்காமல் உள்ளே சென்றாரே எனக் கோபம். பரமேஸ்வரனைப் பார்த்து விட்டுத் திரும்பும்போது ப்ரம்மாவைப் பிடித்துக் கொண்டார்.

குமரன்: உத்திரவில்லாமல் ஏன் உள்ளே சென்றீர்?

ப்ரம்மா: நீ யார் என்னைக் கேட்க? நீயோ சிறுவன்.

குமரன்: நீர் பெரியவரானால், பிரணவத்தின் பொருளை என்னவென்றறிவீரா?

பிரம்மா கலங்கினார். பொருள் சரிவரத் தெரியாததால், வீரபாஹு மூலம் ப்ரம்மாவை சிறையில் அடைத்தார். பின்னர் பரமேஸ்வரன் வந்து ப்ரணவப் பொருளை ரஹஸ்யமாக அறிந்து கொண்டார். குமரனும் சிவனின் குருவானார் (சிவகுரு) இந் நிகழ்ச்சியின் படி, ஸுப்ரமண்யர் பிரம்மாவைத் தண்டித்த கைகளை யுடையவரானார்.

ஸ்வலீலா த்ருதாண்டான்

ஸுப்ரமண்யஸ்வாமி ஒரு மஹா பராக்ரமசாலி. ப்ரம்மாண்டத்தையும் அதற்கப்பாலுள்ள லோகங்களையும் விளையாட்டாக பரிபாலிக்கிறார். அதுவே அவருக்கு லீலையாகிறது. அவருக்கு உதவியாக இருப்பவை, அவருடைய ஆற்றல் மிகுந்த கரங்கள்.

கை கொடுத்து வாழவைக்கும் தெய்வம் ஸுப்ரமண்யன் என்பதால் 'கராவலம்பன ஸ்தோத்திரங்கள்' அவரைப் போற்றுகின்றன.

நிரஸ்தேப ஶுண்டான்

ஸுப்ரமண்யரின் கைகளுக்கு மதயானையை அடக்கும் வல்லமை இயற்கையாகவே இருந்தது.

வள்ளியை மணக்க, யானைமுக அண்ணனின் உதவி தேவைப்பட்டது. கணபதியும் உன்மத்தம் கொண்ட யானையாகத் தோன்றி வள்ளியின் மனத்தில் பயத்தை உண்டு பண்ணினார். இச்சமயம் வள்ளியும் பயந்து ஸுப்ரமண்யரை ஆலிங்கனம் செய்து கொள்ள நேர்ந்தது.

கணபதி உண்மையிலேயே உன்மத்தராகி லோகத்திற்குத் துன்பம் ஏற்பட்டு விடப் போகிறதே என்று எண்ணி, ஸுப்ரமண்யரும் தம் கைகளால் தும்பிக்கையைப் பிடித்து மதத்தையடக்கினார். பின்னர் வள்ளியையும் முறையாகக் கைப்பிடித்தார் என்பது வரலாறு. அதைக்குறித்ததாகவே 'நிரஸ்தேப சுண்டான்' என்றபதம் ஏற்பட்டது.

மேலும், ஸுப்ரமண்யரின் கைகளின் வலிமைக் குறிப்பை உணர, சூரபத்மாதிகளுடனான போரில் யானைகளின் துதிக்கைகளைத் துண்டித்த கைகள் எனவும் கொள்ளலாம்.

ஸ்கந்தன் அழகுமிக்கவன். அழகான யானைகளின் துதிக்கைகளுக்கு ஒப்பான வலிமை மிக்க கைகள் எனவும் போற்றலாம்.

த்விஷாம் காலதண்டான்

'த்விஷத் காலதண்டான்' என்பது பாடபேதம். பகைவர்களுக்குக் காலனின் தண்டம் போன்றவனாவான். புராணங்களில், தெய்வங்களுக்குத் தொடர்புடைய தெய்வத்தின் ஆற்றல்களை ஏற்றிக் கூறுவதுண்டு. பரமேஸ்வரன்தான் காலனை வென்றவன். இது மார்க்கண்டேய புராண விஷயம். ஸ்கந்தபுராணமோ, ஸுப்ரமண்யர் மூலமாகக் காலனை ஜெயித்தார் எனக் குறிப்பிடும். இதனை தத்வார்த்த ரீதியில் பார்க்கவேண்டும். அதனால்தான் 'த்விஷான் காலதண்டான்' எனக் குறிப்பிடப்படுகிறார்.

ஹதேந்த்ராதி ஷண்டான்

காலனையே தண்டித்ததினால் நமக்கு யமபயம் இல்லை என்றாகிறது.

இந்த்ரன் முதலான தேவர்களுக்கு எப்போதும் சத்ருக்களாக இருப்பவர்கள் அசுரர்கள். அசுரர்களின் வதமும், அவதார நிகழ்ச்சிகளுமே புராண விஷயங்கள். ஸுப்ரமண்யர் அவதார நோக்கில், தேவர்களின் சத்ருக்கள் சூரபத்மன், தாரகன், சிங்கமுகாசுரன் ஆகியோர்.

அவர்களை, ஸுப்ரமண்யர் திருச்செந்தூரில் அழித்த வரலாறு சிறப்பான ஒன்று

ஒரு கை வேலாயுதம் ஒரு கை சூலாயுதம்
ஒரு கை நிறைசங்கு ஒரு கை சக்ராயுதம்
ஒரு கை நிறைவில்லு ஒரு கை நிறையம்பு
ஒரு கை மந்திரவாள் ஒரு கை மாமழு
ஒரு கை மேற்குடை ஒரு கை தண்டாயுதம்
ஒரு கை சந்த்ராயுதம் ஒரு கை வில்லாயுதம்
அங்கையிற் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமல பன்னிருதோளும்
முருக்கம் சிறக்கும் முருகா.....

எனப் பன்னிரு கைகளின் அஸ்திர சஸ்திரங்களைப் பாலன் தேவராயர் தம் (குன்றுதோறாடல்) சஷ்டிகவசத்தில் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர்,

'தேவர்க்கு உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்— ஓவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையள்
சேர அணிந்த திருக்கரமும் – மார்பகத்தில்
வைத்த கர திலமும், வாமமருங்கிற் கரமும்
உய்த்த குறங்கில் ஒரு கரமும் – மொய்த்த
சிறு தொடி சேர், கையும் மணி சேர்ந்த தடங்கையும்
கருவு சமர் அங்குசம் சேர்கையும்— தெறுபோர்
அதிர் கேடகம் சுழற்றும் அங்கைத்தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்

எனக் கைகளின் செயல்களைக் கூறுகிறார்.

ஜகத்த்ராண பௌண்டான்

உலகைப் பரிபாலனம் செய்ய வலிமைமிக்க தலைவனாக இருத்தல் வேண்டும். வெற்றிகளுக்கு அடிப்படை ஸாமர்த்யம். புஜபலபராக்ரமத்துடன் பரிபாலனம் செய்வதும் வேண்டும். ஸுப்ரமண்யர் லோக ரக்ஷணத்தைத் திறம்பட நடத்தி நம்மை காப்பாற்றுகிறார்.

ப்ரசண்டான்

வலிமைமிக்கவன், எதையும் சாதிக்கும் ஆற்றல் பெற்றவன், ப்ரசண்டன் எனப்படுபவன் ஸுப்ரமண்யரோ கை கொடுத்துத் தூக்கி விடுபவர், ரக்ஷிக்கக் கூடியவர் அதற்கான பெரிய நீண்டகைகளையுடையவர்.

தே பாஹுதண்டான் ஸதா ஸ்ரயே

தங்களின் புஜதண்டங்கள் பராக்ரமம் உடையவை. அவற்றை எப்போதும் நம்பி சார்ந்திருக்கிறேன். ஆச்ரயிக்கிறேன். என்னை ரக்ஷிக்க வேண்டியது உன் பொறுப்பு என்கிறார். ஆதிசங்கரரின் புஜங்கப்ரயாத விருத்தம் (1)ல், இதே கருத்துள்ள ஸ்லோகமும் குறிப்பிடத்தக்கது:

த்விஷத் பாஹுதண்டாக்ரதே தீப்யமானம்
க்வணத் கங்கணாலங்க்ருதோ தார ஹஸ்தம் |
லஸந்முத்ரிகா ரத்னராஜத் கராக்ரம்
க்வணத் கிங்கிணீ ரம்ய காஞ்சீ கலாபம் ||

'ஸ்புரச்சாருகண்டம் த்விஷட் பாஹுதண்டம்
ஸ்ரிதாமர்த்ய ஷண்டம் ஸுஸம்பத் கரண்டம் |
த்விஷத்வம் ஸ கண்டம் ஸதா தாநஸௌண்டம்
பவப்ரேமபிண்டம் பஜே ஸுப்ரசண்டம் ||

கருத்து

இந்த ஸ்லோகத்தில், ஸுப்ரமண்ய ஸ்வாமியின் தோள் வலிமை உயர்வாகப் போற்றப்படுகிறது. 'வீரமும் காதலும்' விழுமிய பொருள்களென்பர். அவ்வாறே காணப்படுகிறது. வலிமை, அருள், கருணை ஆகியவைகள் காக்கும் நேர்த்திகளாகச் சொல்லப்பட்டுள்ளன. அருள், அபயம் காட்ட கைகள்; வீரத்தை வெளிப்படுத்த புஜங்கள்.

13

திருமுகங்களின் அழகு

13. ஸதா ஶாரதா: ஷண்ம்ருகாங்கா யதிஸ்யு:
ஸமுத்யந்த ஏவஸ்திதாஸ்சேத் ஸமன்தாத் |
ஸதா பூர்ணபிம்பா: கலங்கைஶ்ச ஹீனா:
ததா த்வன்முகானாம் ப்ருவே ஸ்கந்த ஸாம்யம் ||

பதவுரை

ஸதா — *எப்போதும்;* ஶாரதா: ஷட்ம்ருகாங்கா: — *சரத்கால ஆறு சந்திர பிம்பங்கள்;* பூர்ண பிம்பா: — *பூரணமாக;* கலங்கைஶ்ச ஹீனா — *களங்கமின்றி;* யதிஸ்யு: — *இருக்குமேயானால்;* ஸமுத்யந்த ஏவ ஸமந்தாத் ஸ்திதாஸ்சேத் — *நான்கு திசைகளிலும் உதயமானவைகளாகவும் இருக்குமேயானால்;* ததா — *அப்போது;* ஸ்கந்த த்வன்முகானாம் — *ஸ்கந்தரே! தங்களுடைய முகங்களுக்கு;* ஸாம்யம் ப்ருவே — *(எவ்வாறு) ஒப்புமை கூறுவேன்.*

விளக்கவுரை

ஸுப்ரமண்யரின் ஆறு திருமுகங்களுக்கும் எப்படி உவமை கூறுவது என யோசிக்கிறார் ஆதிசங்கரர் திருமுகங்கள் ஒப்பற்றவை என்பது இங்கு குறிப்பு

சரக்காலத்துக்குரிய சந்திரன் மிகவும் பிரகாசமானது. அதுபோல் ஆறு சந்திரன்களிருந்தால், பிரகாசம் எப்படிப் பட்டதாக இருக்கும்?

'முகசந்த்ர களங்காப— ம்ருகநாபி விசேஷகா' என்கிறது லலிதா ஸஹஸ்ரநாமம். சந்திரனிடம் தோன்றும்

களங்கம் போன்று முகமண்டலத்தில் விளங்கும் கஸ்தூரிப் பொட்டுடையவள்'.

ஆதிசங்கரரே, ஸ்ரீமீனாக்ஷிபஞ்சரத்னத்தில், 'பூர்ணேந்து வக்த்ரப்ரபாம்' என்றும், பவானீ புஜங்கத்தில், 'சரத்பூர்ண சந்த்ர ப்ரபா பூர்ணபிம்பா தரஸ்மேர வக்த்ரா' என அம்பாளைப் போற்றுகிறார்.

மூககவியும் தம்மூக பஞ்சசதியின் (ஸ்துதி சதகம்) 'ராகாசந்த்ர ஸமான காந்திவதனா நாகாதிராஜஸ்துதா,' எனப்போற்றுகிறார்.

ஆதிசங்கரரும் அருணாசலாஷ்டகத்தில், 'ராகா சந்த்ர ஸமான காந்திவதனம்' என சந்திர பிம்பத்தின் முக காந்தியையுடையவராக அருணாசலேஸ்வரரைப் போற்றுகிறார்.

ஸுப்ரமண்யஸ்வாமியின் ஆறு திருமுகங்களும் திலகங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். 'ஸுகஸ்தூரிகா பிந்து பாஸ்வல்லலாடம்' 'சரத்பூர்ணசந்த்ராஸ்ய ஷட்காந்தி காந்தம்' என ஆதிசங்கரர் புஜங்கப்ரயாத வ்ருத்தத்தில் (2) ஸ்தோத்தரிக்கிறார்.

ஸுப்ரமண்யருக்கு 'திலகஸ்வாமி' என்ற பெயரும் உண்டு. யாக்ஞவல்க்ய ஸ்மிருதி இதைத் தெரிவிக்கிறது

திலகத்தை வைத்து சந்திரன் களங்கம் உள்ளது எனக் கொண்டால், ஆறு சந்திரர்கள் இருக்க வாய்ப்பில்லை. ஸுப்ரமண்யரின் ஆறுமுகங்களுக்கு ஒப்புமை கூற இயலாது.

திலகம் இல்லாதபோது ஆறுதிருமுகங்களைப் பார்க்கையில், களங்கமில்லாச் சந்திரனுக்கு ஒப்பக் கூறலாம். உலகில் களங்கமில்லாத சந்திரனுமில்லை. ஆறு சந்திரர்களுமில்லை. பின் எவ்வாறு அவருடைய ஆறுதிருமுகங்களுக்கு உதாரணம் கூற இயலும்?

அருளும் ஆற்றலினாலேயே அறுமுகவடிவமேற்றான். அப்போது எல்லாதிசைகளிலும் பிரகாசிக்கும்; எல்லா திசைகளிலும் ஒளி நிறைந்திருக்கும் கூடவே ஆறு திருக்கழுத்துக்கள்; ஒளிரும் ஆபரணங்கள்; ஒளிரும் கிரீடங்கள்.

கந்தபுராணமோ, 'முழுமதியன்ன ஆறுமுகங்களும்' என்கிறது.

அருணகிரியும், 'எழுதரிய ஆறுமுகம்' என்கிறார். ஆறுமுகனின் காட்சி எத்தகையது என்பதைத் தம் திருப்புகழில்,

'செந்தமிழ் போன்ற ஞானமலையின் மேல் வசந்தகாலத்து ஆறு சந்திரன்கள் தோன்றினால் எப்படியிருக்குமோ அதுபோலிருக்கும்' என்கிறார். இக் கருத்து ஆதிசங்கரரின் இந்த சுலோகக் கருத்தோடு ஓரளவு உடன்படுகிறது.

'சுடரனைய திருமேனியுடையழகு
முதுஞான சொருபகிரியிடமேவு
முகம் ஆறும்'
— திருப்புகழ்

'......................மின்னுருவம்
தோய்ந்த நவரத்னச் சுடர்மணியால் செய்த பைம்பொன்
வாய்ந்த கிரணமுடியும்– தேய்ந்த பிறைத்
துண்டம் இருமூன்று நிரை தோன்ற பதித்தனைய
புண்டரம் பூத்த நுதல் பொட்டழகும்'

—எனக் கந்தர் கலிவெண்பா போற்றுகிறது.

செந்தூர் ஷண்முகர் மீதான ஸ்தோத்திரத்தில்,

'பூர்ண சந்த்ர பிம்பகோடி துல்ய வக்த்ர பங்கஜம்'

என முழுமதிமுகத்தைத் துதிக்கிறார் ஆதிசங்கரர். சாரதா— ஸாமர்த்யம் உள்ளவன். சாரதாதேவியானவள் பாண்டித்யம், பதவி, நாவன்மை, குழந்தைச்செல்வம், மனநிம்மதி முதலியவற்றை அருளுபவள்.

எனவே, கவித்வத்தில் முகங்களைச் சந்திரனுக்கும், சந்திர பிம்பத்துக்கும் ஒப்புமை கூறுவதுண்டு இறைவனுக்கும், இறைவிக்கும் அல்லது தம் அபிமான தெய்வத்தை ஸ்தோத்தரிக்கையில் மன ஈடுபாட்டுடன் எவ்வாறு துதிப்பர் என்பதற்குப் பலவகை ஸ்தோத்திரங்களே சான்று.

ஸ்கந்தோபநிஷத் கூறுவதாவது :

'அவனே மஹாதேவன்; அவனே மஹாஹரியும் அவனே ஜ்யோதிக்கெல்லாம் ஜ்யோதியானவன்; அவனே பரமேஸ்வரன்; அவனே பரப்ரம்மம் பரப்ரம்மமே என்பதில் ஸம்சயமில்லை'.

இப்படிப்பட்ட ஸ்கந்தனின் திருமுகங்களுக்குச் சமமாக எதை, யாரை ஒப்பிட்டுக் கூறுவேன் என ஆதிசங்கரர் வியக்கிறார்.

கருத்து

திருச்செந்தூர் பாலசுப்ரமண்யனின் முகமே நம்மை வசீகரிக்கும். ஆறுமுகங்களின் அழகு ஒப்பற்றது. ஒப்புமை கூற இயலாது. திருமுகங்களைப் போற்றித் துதித்தலே தகும். நமக்கு ஆனந்தத்தைத் தரும். தியானம் செய்ய ஏற்றவை என்பது அனுபவபூர்வ உண்மை என்பதை நேரில் தரிசித்தால் உணரமுடியும்.

14

திருமுகங்களின் பெருமை

14. ஸ்புரன்மந்தஹாஸை: ஸஹம்ஸானி சஞ்சத்
கடாக்ஷாவலீ ப்ருங்க ஸங்கோஜ்வலானி |
ஸுதாஸ்யந்தி பிம்பாதராணீஶ ஸூனோ
தவாலோகயே ஷண்முகாம்போருஹாணி ||

பதவுரை

ஸ்புரன் மந்தஹாஸை: — *பிரகாசிக்கும் புன்சிரிப்புகள் அன்னபக்ஷிகளாகவும்;* சஞ்சத் கடாக்ஷாவலீ ப்ருங்க ஸங்கோஜ்வலானி — *அசையாமல் நிற்கும் கடைக்கண்கள் வண்டுகளாகவும்;* ஸுதாஸ்யந்தி பிம்பாதராணீஶ — *அமிர்தம் சொட்டும் சந்திர பிம்பம் போன்று சிவந்த இதழ்களாகவும் உள்ள;* தவ ஷண்முகாம்போருஹாணி — *தங்களின் ஆறு திரு முகங்களாகிய தாமரைப் பூக்களை;* ஆலோகயே — *தரிசிக்கிறேன்.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் ஆறுமுக ஸுப்ரமண்யரின் முகாரவிந்தங்கள் வர்ணிக்கப்படுகின்றன.

ஸ்புரன் மந்தஹாஸை: ஸஹம்ஸானி சஞ்சத்

முந்தைய ஸ்லோகத்தில், எதை ஆறுமுகங்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவது என்றிருந்த ஆதிசங்கரர் இப்போது தாமரைப் பூக்களை த்ருஷ்டாந்தமாகவுள்ளதைக் குறிப்பிடுகிறார்.

ஆறுமுகங்களுக்கு ஆறுதாமரைப் புஷ்பங்களை உதாரணமாகச் சொல்லலாம் என்கிறார்.

முகத்தில் பிரகாசிக்கும் புன்முறுவல்கள் எப்படி யுள்ளது எனில் தாமரையில் ஸஞ்சரிக்கும் ஹம்ஸப் பறவைகளைப் போன்றுள்ளதாம்.

கடாக்ஷவலீ ப்ருங்க ஸங்கோஜ்வலாணி

கடாக்ஷ வீக்ஷணங்கள் (கடைக்கண் பார்வைகள்) தாமரையிலுள்ள தேனையுண்ண வந்த வண்டுகள் போலுள்ளனவாம்.

ஸுதாஸ்யந்தி பிம்பாதராணி

ஸுதாஸ்யந்தி— அமிர்தம் சொட்டும், அமிர்த மொழுகும், சந்திரபிம்பங்களைத் தோற்கடித்து முகங்கள் உயர்ந்த நிலை பெறுவனவாகவும் உள்ளன. அதரங்கள் தேனைச் சொரியும் இதழ்களாகக் கொண்டு விளங்குகிறார் ஸுப்ரமண்யனாகிய சிவபாலன்.

ஈசஸூனு

ஈசஸூனு— ஈசன்மகன்.

ஈசபுத்ராய நம: — ஸுப்ர—ஸஹஸ்ரநாமம்.

த்யாயேத் ஈப்ஸித ஸித்திதம் சிவஸுதம்' — த்யான ஸ்லோகங்களிலொன்று.

பரமேஸ்வரனின் கண்களினின்று ஆறுபொறிகள் வெளிவந்து, சரவணப்பொய்கையில் தங்கி, ஆறுமுகனாக வெளிப்பட்டது. ஈசபுத்ரன், ஈசஸூனு எனப் பெயர் பெற்றார். சிவஸுதன், சிவபாலன், சிவாத்மஜன் என்ற பெயர்களும் அவ்வாறே.

தவ ஆலோகயே ஷண்முகாம்போருஹாணி

உன்னுடைய, ஆறுமுகங்களாகிய தாமரைப் பூக்களை தரிசிக்கிறேன்.

மூககவியானவர், தம் மூகபஞ்சசதி (ஆர்யா சதகம்)யில் 'சிரிப்பு முகமுடையதும், காஞ்சி மாநகரை அடைகின்றதும், கருணை ஸ்வரூபமாக உள்ள ஒரு தேவதா விசேஷத்தைப் பலமுறை தரிசித்து, யாம் ஆனந்த— அம்ருத— ஸாகரத்தில் மூழ்கியிருக்கின்றோம்' எனப் போற்றித் துதிக்கிறார். (29)

'கோவைக்கனிபோன்று சிவந்த நிறமுடைய உதடுகளில் பரவும் புன்சிரிப்போடு கூடிய முகத்தினை

யுடைய ஸ்ரீகாமாக்ஷியன்னை என் மனத்தின் அஞ்ஞான அந்தகாரத்தை அழிப்பவளாக உள்ளிருக்கும்போது மற்றவர்களால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை' என்கிறார் மூககவி (69).

'ஆர்யாதேவியின் கடைக்கண் பார்வையால் ஸதா அமிர்த வெள்ளமாக வாக் வன்மை சிறந்து பெருகும்' என்கிறார்.

அத்தகைய நிலையைப் பெற்றவராக ஆதிசங்கரர் உள்ளார் என்பது இந்த ஸ்லோகத்தின் மூலம் தெரியலாகிறது.

ஸௌந்தர்ய லஹரியில் ஆதிசங்கரர், 'தாயே, இயற்கையான சுருண்டமுடியால் சூழப்பட்ட உன் நெற்றி, வண்டுகளால் சூழப்பட்ட தாமரை மலரைத் தோற்கடிப்பதாக உள்ளது. புன்சிரிப்பில், பல்வரிசைகளின் மூலமான ஒளியில் இதழ்கள் மற்றும் முகாரவிந்தங்களால் பரமேஸ்வரனின் கண்களான தேனீக்கள் மயங்கியுள்ளன' (45) எனத்துதித்துப் போற்றுகிறார்.

'ஸுபாலம் ஸுநாஸாபுடம் மஞ்ஜுஹாஸம்
ச்ரியாச்லிஷ்ட நேத்ரம் பஜே கார்த்திகேயம்

– ஸுப்ர. புஜங்கப்ரயாதம் (2)

'சரத் பூர்ணசந்த்ர ப்ரபாசாருவக்த்ரம்
விராஜல்லலாடம் க்ருபாபூர்ண நேத்ரம் |
லஸத் ப்ரூஸுநாஸாபுடம் வித்ருமோஷ்ட்டம்
ஸுதந்தாவணிம் ஸுஸ்மிதம் ப்ரேம பூர்ணம் ||

– ஸுப்ர. புஜங்கப்ரயாதம் (1)

கருத்து

புன்சிரிப்போடு கூடியதும், கடைக்கண் பார்வையால் ரக்ஷிப்பதும், அழகிய தேனொழுகும் அதரங்களுடன் கூடிய தாமரைப்பூக்கள் போன்ற திருமுகங்களைத் தரிசிக்கிறேன்' என்று கூறுகிறார்.

அந்த முக அரவிந்தங்களைத் தியானிப்பவர்களுக்கு நிறைவேறாத விருப்பங்களில்லை. அந்த தியானம் மோக்ஷ காரணமாகி ஜன்மம் கடைத்தேறுவர் என்பது தெரிகிறது.

15

கருணைக் கடாக்ஷ விசேஷம்

15. விசாலேஷு கர்ணாந்த தீர்கேஷ்வஜஸ்ரம்
தயாஸ்யந்திஷு த்வாதஶ ஸ்வீக்ஷ ணேஷு |
மயீஷத் கடாக்ஷ: ஸக்ருத் பாதிதஶ்சேத்
பவேத் தே தயாஶீல காநாம ஹானி ||

பதவுரை

விஶாலேஷு கர்ணாந்த தீர்க்கேஷு — *விசாலமான காதுவரை நீண்ட;* தயாஸ்யந்திஷு — *கருணைபெருகும்;* த்வாதச ஈக்ஷணேஷு — *பன்னிரண்டு கண்களில் விளங்கும்;* கடாக்ஷ — *கடைக்கண்பார்வை;* ஸக்ருத் ஈஷத் — *ஒரு தடவையாவது சிறிது;* மயி பாதித: சேத் — *என்மீது காட்டப்பட்டால்;* தயாஶீல — *கருணை நிறைந்தவரே;* தே — *தங்களுக்கு;* கா நாம ஹானி — *என்ன குறை வந்து விடப் போகிறது?*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் ஸுப்ரமண்யரின் கருணை பொழியும் கடைக்கண் வீச்சின் பெருமை விவரிக்கப் படுகிறது.

ஸுப்ரமண்யரின் கண்கள் எப்படிப்பட்டவை? விசாலமானது. காதுவரை நீண்டிருப்பவை கருணை பொழிபவை கண்கள் பன்னிரண்டும் கருணை ப்ரகாசமும் கருணைப்ரவாஹமும் கொண்டவை

கண்கள் ஈராறுடைக் கந்தா நமோ நமோ

எனப் போற்றுகிறது கந்தர் ஷஷ்டி கவசம் (திருப்பரங் குன்றம்).

'பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக'

செந்தூர் சஷ்டிகவசம் 'விசாலமான கண்களை'க் குறிப்பிடும்.

'ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாச்சரப் பொருனே' (பழனி—சஷ்டிகவசம்)

'கருணை பொழியும் கடாட்ச வீட்சணமும்
(குன்றுதோறாடல் சஷ்டி கவசம்)

'அருணகிரிக் கருளிய தமிழ் போல்
கருணையால் எனக்குக் கடாட்சித்தருள்வாய்'
(பழமுதிர் சோலை— சஷ்டி கவசம்)

இங்கு பாலன்தேவராயர் தம் சஷ்டி கவசங்களில் விசாலமான, கருணை பொழியும் கடாட்ச வீக்ஷணம் கொண்ட பன்னிரெண்டு கண்களைப் போற்றுகிறார்.

'பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியும் கண்மலர் ஈராறும்

— என கந்தர்கலிவெண்பாவில் குமரகுருபரர் போற்று கிறார்.

'காருண்ய ஸம்பூர்ண நேத்ரம்' — ஸுப்ரமண்ய ஷட்கம்

பன்னிரண்டு கண்களின் காடக்ஷத்தை, மஹா பாரதத்தில் குறிப்பிட்ட பிராமணர்களுக்கான விரதங் களைப் பெரியோர்கள் கடாக்ஷவீக்ஷண்யங்களாகக் குறிப்பிடுவர்.

தர்மம் ச ஸத்யம் ச தப: ச்ருதம் ச
நிர்மாத்ஸர்யம் ஹ்ரீ: திதிக்ஷா நஸூயா ।
தானம் ச யக்ஞம் ச தம: சமஸ்ச
குணாஹ்யேதே த்வாதச ப்ராஹ்மணஸ்ய ॥

தர்மம், ஸத்யம், தபம் — விரதம் — த்யானம், சாஸ்திர ஞானம், பொறாமையின்மை, தகாத கார்யம் செய்வதில்

வெட்கப்படுதல், பொறுமை, பிறரைக் குற்றம் கூறாமை, தானம், யக்ஞம், மனக்கட்டுப்பாடு, புறப்புலன்களை யடக்குதல் என்பன ப்ராம்மணர்களுக்கான குணங்கள். பொதுவாக இக்குணங்களை தன் அடியார் மாட்டு, பக்தர் களிடம் காட்டும் மஹிமையுள்ளவை அப்பன்னிரண்டு கண்கள்.

'லலிதா த்ரிசதி'க்கு, 'சார்' சிதாநந்தர் (அருட்கவி ந.சுப்ரமண்ய அய்யர்) அவர்கள் சந்திரிகை என்னும் தமிழ் விருத்தியுரை எழுதியுள்ளார். அதில்,

'கடாக்ஷஸ்யந்தி கருணா' என்ற அன்னையின் நாமாவுக்கு, சிறப்பான விளக்கமளித்துள்ளார் "எல்லா தேவதைகளுக்கும் தீனர்களை ரக்ஷிக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டு. இதற்குக் கருணை என்றுபெயர். இந்த கருணை என்பது நவரஸங்களிளொன்று கண்ணுக்குத் தென்படாது. ஆனால் அனுபவத்தாலறியலாம். எவ்வாறெனில், புன்சிரிப்பு, ஹிதமான வார்த்தை, கடைக்கண்நோக்கும் சந்தோஷத்துடனான முகம் ஆகியவற்றால் அறியலாம். கருணையும் திரவப் பொருளாகக் கொள்ளப்படுவது வழக்கம்.

ஸ்யந்தி கருணா வெள்ளம் போல் பெருகும் கடாக்ஷ— கடைக்கண்பார்வையுடையவன் என்பதாகும்" என்கிறார். அதுபோல, இச்சுலோகத்தில், ஆதிசங்கரர், 'தயாஸ்யந்திஷு த்வாதச ஸ்வீக்ஷணேஷு' என்கிறார். இவ்விடத்தில், நாம், 'ஸ்யந்தி தயா— வெள்ள மெனப் பெருகும் தயா (தயை) எனக் கொள்ளலாம். அதிலும் ஸுப்ரமண்யருக்குப் பன்னிரெண்டு கண்களினின்று வெளிப்படும் கருணை வெள்ளம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென நாம் வியக்கத்தான் வேண்டும்.

ஸுப்ரமண்யரின் கடாக்ஷ வீக்ஷணம் எப்படி பட்டது எனில், மங்களகரமான குணங்களைத் தம் அடியார்களிடத் திலும், பக்தர்களிடத்திலும் வர்ஷிக்கும் தன்மையானது.

அதில் ஒரு துளியேனும், கொஞ்சமேனும், ஒரு தடவையாவது என்மீதுபட்டால் உங்களுக்கு என்ன குறை வந்து விடப் போகிறது என ஆதிசங்கரர் தம் ஏக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறார்.

'தயை' என்பது ஒரு சிறந்த குணம், அக்குணம் அதிகம் நிரம்பியவர் இறைவன்.

தயாசீலன், தயாளு, தயாபரன், தயைபுரிபவனே, தயைகாட்டுபவன் என அழைக்கப்படுவார்.

ஆதிசங்கரரும், 'தயாளுவே! உன் காருண்ய வீக்ஷணத்தால் என் ஸகல ரோகங்களும் நீங்கிவிடும். சிறிது கருணை காட்டு' என நோய் நீக்கம் செய்து தன்னைக் காப்பாற்ற வேண்டுகிறார்.

ஏற்கனவே. பரமேஸ்வரனை சிவானந்த லஹரியில் ஆதிசங்கரர் வேண்டிப் பாடியுள்ளதை இங்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

'கதா வாமத ரக்ஷாம் வஹஸி கருணாபூரிதத்ருசா (18) அன்பனைத் தயவினால் நிரம்பிய கடைக்கண் பார்வையால் எப்போது பார்த்து ரக்ஷிப்பாய்,' எனக் கேட்கிறார். மேலும், 'வீக்ஷாம் மே திச சாக்ஷுஷீம் ஸகருணாம்' (29) 'தேவர்களால் விரும்பப்படும் தங்கள் (அருட்பார்வையை) கடைக்கண் பார்வையைத் தந்து எனக்கு நலம் தாருங்கள்' என்கிறார்.

உமது கடைக்கண் பார்வைகளால் பாவங்கள், துர்ப்பாக்கியம், துக்கங்கள் ஆகியவை நீங்குகின்றன (92).

ஸுப்ரபுஜங்கப்ரயாத வ்ருத்தங்களிலேயே, 'புரோல்லஸத் த்வாதசாக்ஷம்,' 'கடாக்ஷே தி சாந்தி' 'விஸ்வநேத்ரே,' 'க்ருபாவாரி, கல்லோல பாஸ்வத் கடாக்ஷம்,' 'தயாபூர்ண த்ருஷ்டி,' 'நேத்ர காருண்ய பூர' என ஸ்தோத்தரிக்கின்றார்.

கருத்து

பன்னிரண்டு கண்களிலிருந்து பெருகும் கருணை ப்ரவாஹத்தில் சிறிது காட்டப்பட்டாலும் தன் ரோகங்கள் நீங்கி விடுமே அவ்வாறு செய்வதால் தங்களுக்கு என்ன குறை ஏற்பட்டு விடப்போகிறது என ஸுப்ரமண்யரை ஆதிசங்கரர் ஏக்கத்துடன் கேட்கிறார்.

16

சிரஸ்களின் பெருமை

16. ஸுதாங்காத் பவோமேஸி ஜீவேதி ஷட்தா
ஜபன்மந்த்ரமீஸோ முதா ஜிக்ரதே யான் |
ஜகத் பாரப்ருத்ப்யோ ஜகந்நாத தேப்ய:
கிரீடோஜ்ஜ்வலேப்யோ நமோ மஸ்தகேப்ய: ||

பதவுரை

ஸுத — *மகனே!;* மே அங்காத் — *என்னுடைய அங்கத்தினின்று;* பவ: அஸி — *தோன்றியுள்ளாய்;* ஜீவ இதி மந்த்ரம் — *ஜீவித்திருப்பாய் என்று ஆசி கூறும் மந்திரத்தை;* ஈச: ஷட்தா ஜபன் — *பரமேஸ்வரன் ஆறுதடவை ஜபிக்கின்றவராக;* முதா யான் ஜிக்ரதே — *சந்தோஷமாக எவைகளை முகர்கின்றாரோ;* ஜகத்பார ப்ருத்ப்ய: — *உலகை தாங்குகின்ற;* ஜகன்னாத — *உலகத்தின் தலைவனே!;* கிரீடோ ஜ்வலேப்ய: — *கிரீடங்களினால் பிரகாசிக்கும்;* தேப்ய: மஸ்தகேப்ய: நம: — *தங்களுடைய அத்தகைய சிரசுகளை நமஸ்கரிக்கிறேன்.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் ஸுப்ரமண்ய ஸ்வாமியின் 'மஸ்தகம்' எனும் சிரஸ்களுக்கு நமஸ்காரம் செய்து ஸ்தோத்தரிக்கிறார்.

ஸுத — ஸுதன் என்பதன் விளி. ஹரஸுதன், சிவஸுதன், கங்காஸுதன், ஹரிஹரஸுதன் என்ற பெயர்கள் இதனை விளக்கும். ஸுதன் என்பதற்கு மகன் என்று பொருளாகும். ஸுதன், புத்ரன் ஆத்மஜன், ஸூனு என்பன 'மகன்' என்ற ஒரு பொருள் குறித்தவை.

சிவாத்மஜன், கங்காஸுதன், அக்னி ஸுனு ஆகியவை ஸுப்ரமண்யரைக் குறிக்கும்.

ஸுதாங்காத் பவோமேஸி ஜீவேதி

குழந்தை பிறந்ததும். நாம் செய்யும் ஜாதகர்மாவில், 'அங்காதங்காத் ஸம்பவஸி.... ஸஜீவ சரத: சதம்' என்ற வேதமந்திரத்தை ஜபித்து, உச்சி முகந்து, வலது காதில் பிறந்த நக்ஷத்ரத்தையொட்டி பெயரை ஓதுவோம். பிள்ளை தந்தையின் சரீர அவயவங்களினின்று உண்டாகிறான். ஆத்மாவேபிள்ளை வடிவில் வந்துள்ளான். தீர்க்காயுசுடன் ஜீவிக்க வேண்டும்' என்பது பொருள்.

ஷட்தா ஜபன் மந்த்ரம் ஈசோ முதா ஜிக்ரதேயான்

மேற்படி மந்திரத்தை திரும்பத்திரும்ப ஆறுதடவை சொல்கிறார். ஆறு சிரஸ்களிலும் உச்சி முகர வேண்டும். வலது காதுகளில் நக்ஷத்ர நாமத்தைக் கூற வேண்டுமாத லால் ஆறுதடவை செய்கிறாராம்.

ஒன்றையே திரும்பத் திரும்ப சொல்வது மந்திரம், மந்திரத்தையே மீண்டும் மீண்டும் தியானித்துக் கூறுவது ஜபம்.

கடவுளே குழந்தையானாலும் கர்மஸம்ஸ்காரங் களுக்கு உட்படுகிறது. இதையொட்டியே பரமேஸ்வரன் தம் மடிமீதமர்த்தியபடி, ஒவ்வொரு முகத்தையும் பார்த்தவாறு தனது கடாக்ஷ வீக்ஷண்யத்தைத் தருகிறார் போலும். 'ஸ்கந்தரூபம் சிவம் ஸ்மரேத்' என்றபடி சிவனே ஸ்கந்த ரூபத்திலுள்ளவராக ஆகிறார்.

இச் செயலை மகிழ்ச்சியுடன் (முதா) செய்கிறாராம். ஆறுமுகங்களையும் உச்சி முகந்ததில், பரமேஸ்வரரின் அனுக்ரஹம் பெற்று சக்திவாய்ந்தவைகளாக ஆகின.

பேரறிவு (ஸர்வக்ஞத்வம்), வரம்பிலின்பம் (நித்ய திருப்தித்வம்) இயல்புபாச நீக்கம் (அனாதி போதம்) தன்வயம் (ஸ்வதந்திரம்), பேரருள் உடைமை (அலுப்தசக்தி), முடிவில்லா ஆற்றல் (அனந்த சக்தி) ஆகியன ஆறுமுகங் களாயின என்ற கருத்தும் பொருந்துகிறது.

ஜகத் பாரப்ருத்ப்யோ ஜகந்நாத தேப்ய:

ஜகத்தைத்தாங்கி (உலக பாரத்தைத்தாங்கி ஜகந்நாத ராக (உலக நாயகனாக) இருப்பவர் ஸுப்ரமண்ய ஸ்வாமி.

ஆதிசேஷன் ஸுப்ரமண்யரை பூஜிப்பதைக் கண்ட காட்சியினால், ஆதிசங்கரரின் ஸுப்ரமண்ய புஜங்கம் பக்தி பிரவாஹமென வெளிப்பட்டது என அறிவோம்.

ஜகத்பாரத்தைத் தாங்குபவர் ஆதிசேஷன். ஜகந்நாதன்—ஸுப்ரமண்யன். ஆதிசேஷன் ஸ்வாமியைப் பூஜிக்கிறார் என்பதை இவ்வரிகள் ஸூசமாகச் சொல்வது போலும் உள்ளது.

ஸ்வாமியே சேஷரூபமானவராகவும் கொள்ளப் படுவதும் ஒன்று. கர்நாடகா மற்றும் ஆந்திராவில் ஸுப்ரமண்யரைப் புற்றுவடிவில் வழிபடுகிறார்கள். 'சுப்ரமண்யா' தலத்தில், குகையிலுள்ள லிங்கத்தை பாம்புவடிவில் ஸுப்ரமண்யரே வழிபட்டாராம். திருச் செந்தூரிலும் ஸுப்ரமண்யர் லிங்கத்தை பூஜிக்கிறார்.

பாம்பிற்கும் ஸுப்ரமண்யனுக்கும் பொதுவான பெயர் 'சுப்பராயலு' என்பதாகும். மயிலம் முருகனுக்கும் 'சுப்பராயன்' என்ற பெயர் உண்டு.

'நமோ நம சேஷரூபாய துப்யம்' ஸுப்ர. புஜங்கப்ரயாதம் (1)

கிரீடோஜ்வலேப்ய: நமோ மஸ்தகேப்ய:

ஸுப்ரமண்யரின் சிரசுகள் மீதான கிரீடங்கள் ரத்தினக் கற்களால் பிரகாசிப்பவைகளாக உள்ளன. ஜகத்தை பரிபாலிக்கும் அரசராக, ஷண்முக ராஜாவாக உள்ளார்.

ஆதிசங்கரரே ஸௌந்தர்யலஹரியில்,

கதைர் மாணிக்யத்வம் ககன மணிபி: ஸாந்த்ர கடிதும்
கிரீடம் தே ஹேமம் ஹிமகிரிஸுதே கீர்த்தயதி ய: (42)

என வானில் பிரகாசிக்கும் பொருள்கள் தேவியின் முடியில் பதிக்கப்பட்டதோ? என்கிறார். குருவிந்த மணிகள் வரிசையாய் பதிக்கப் பெற்று ஒளிவீசும் கிரீடத்தை அணிந்தவள் (குருவிந்த மணிச்ரேணி கனத் கோடீர

மண்டிதா) என்று லலிதாஸஹஸ்ரநாமம் தேவியைப் போற்றும்.

துர்வாஸர், சக்தி மஹிம்ன ஸ்தோத்திரத்தில் 'அம்மா! வரிசையான பல வகை ரத்தினங்களுடன் உள்ளதும் முத்து தங்கச் சலங்கைகளின் கோர்வையுடன் ஒளிவீசும் வைரம் முதலியவற்றுடன் அசையும் சந்த்ர கலாபத்தால் அலங்காரத்துடன் தேவ கற்பக மலர்களால் ஆன மாலையுடன் கூடிய கிரீடத்தை அணிந்துள்ள உனது சிரஸை தியானிக்கிறேன்' (42) என்கிறார்.

'மஸ்தகம்' என்றால் தலை. இருப்பினும் பொதுவாக, மஸ்தகம் என்பதும் யானையின் மஸ்தகம்தான் நினைவுக்கு வரும்.

லக்ஷ்மி வாஸம் செய்யுமிடங்களிலொன்று யானையின் மஸ்தகம். ஸுப்ரமண்யரின் கிரீடங்களுடனான சிரசுகளை தியானித்து வழிபட ஐஸ்வர்ய கடாக்ஷம் ஏற்படும் என்பதும் உள்ளடக்கம்.

ஆதிசங்கரர், திருச்செந்தூர் ஷண்முக ஸ்தோத்திரத்தில்,

'சம்பகாப்ஜ மாலதீ ஸுமாதி மாஸ்ய பூஷிதம் திவ்ய
ஷட் கிரீடஹார குண்டலாத்யலங்க்ருதம் |

என கடற்கரையில் வஸிக்கும் ஷண்முகனைப் போற்றித் துதிக்கிறார்.

ப்ருதக் ஷட்கிரீட ஸ்புரத் திவ்ய ரத்ன
ப்ரபாக்ஷிப்த மார்த்தாண்ட கோடி ப்ரகாசம் |'

—ஸுப்ர. புஜங்கப்ரயாதம் (1)

'ரவீந்தூல்லஸத் ரத்ன ராஜத் கிரீடம்

—ஸுப்ர. புஜங்கப்ரயாதம் (2)

கருத்து

கிரீடங்கள் எனும் போது சிரசுகள் உடன் சேர்ந்ததாகவே காணக்கிடக்கும். ஆறு சிரஸ்களின் மீதான கிரீடங்களின் சிறப்பும், அத்தகைய கிரீடங்கள் அமையப் பெற்ற சிரஸ்களை வணங்குகிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

17

ஆடை ஆபரண அழகு வர்ணனை

17. ஸ்புரத் ரத்ன கேயூர ஹாராபிராம:
சலத்குண்டலஸ்ரீ லஸத்கண்டபாக: |
கடௌபீத வாஸா: கரேசாரு சக்தி:
புரஸ்தான் மமாஸ்தாம் புராரேஸ்தனூஜ: ||

பதவுரை

ஸ்புரத் ரத்ன கேயூர ஹாராபிராம: — அழகிய ரத்னங்களையுடைய தோள்வளை, முத்துமாலை ஆகியவற்றால் மனதை ஈர்ப்பவரும்; சலத்குண்டலஸ்ரீலஸத் கண்ட பாக: — அசைகின்ற ஒளியால் பிரகாசிக்கும் கன்னங்களை உடையவரும்; கடௌ பீதவாஸா: — இடையில் பீதாம்பரத்தை உடையவரும்; கரே சாரு சக்தி: — கையில் அழகிய வேல் ஏந்தியவரும்; புராரேஸ்தனூஜ: — பரமேஸ்வரனின் மகனுமாகிய ஸுப்ரமண்யன்; மம ஆஸ்தாம் புரஸ்தாத் — என்முன்னே காட்சி தரட்டும்.

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் ஸுப்ரமண்யர் ஆடை, ஆபரணங்களுடன் ப்ரத்யக்ஷமாகக் காட்சியளிக்க வேண்டுகிறார் ஆதிசங்கரர்.

கேயூரம் — முழங்கைக்கு மேல் அணிவிக்கப்படும் ஆபரணம்.

ஸ்ரீ ஸுப்ரமண்ய கராவலம்ப ஸ்தோத்திரத்திலும் ஆதி சங்கரர்,

'ஹீராதி ரத்ன கணயுக்த கிரீடஹார
கேயூர குண்டல லஸத் கவசாபிராம |'

— எனப் போற்றுகிறார். ஸுப்ரமண்யஸ்வாமி ஸர்வாபரண பூஷணனாக விளங்குகிறார் எனத் தெரிகிறது.

இங்கும், அழகிய ரத்னங்கள் பதித்த தோள்வளை முத்துமாலை ஆகியவைகளை அணிந்தவராய் நம் மனதை கவர்கிறார்.

பாலன் தேவராயர் தம் சஷ்டி கவசத்தில்,

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும்தரித்து
நன்மணிபூண்ட நவரத்னமாலையும்
முப்புரி நூலும் முத்தணிமார்பும்

என இதையே வர்ணிக்கிறார்.

சலத் குண்டலஶ்ரீலஸத் கண்டபாக:

அசையும் ஒளியால் பிரகாசிக்கும் கன்னங்களை யுடையவர் என்பது இவ்வரிகளின் கருத்து. காதில் அணிந்துள்ள ரத்தினகுண்டலங்களின் அசைவினால் இரு கன்னப் பிரதேசங்கள் பிரகாசமடைகின்றன.

ஸ்புரத்கண்டாபோக — ப்ரதிபலித — தாடங்கயுகளம் என்று பளபளக்கும் கன்னப்பிரதேசத்தை ஆதிசங்கரர்தம் ஸௌந்தர்ய லஹரியில் குறிப்பிட்டிருப்பதையும் இங்கு ஒப்பிடத்தக்கது.

'இரு காது குண்டலங்களின் அசைவில் அவற்றின் அசைவினாலுண்டாகும் பிரதிபலிப்பு அன்னையின் பள பளப்பான கன்னங்களில் ஒளிர்கின்றன. (59)' என்கிறார். மேலும் இதை 'மன்மதனின் ரதம் பரமனின் இதயத்தை ஊடுருவிச் சென்றது போலிருந்தது' என்கிறார்.

சஷ்டி கவசத்தில் (குன்றுதோறாடல்) பாலன் தேவ ராயர்,

சீர்தரும் வள்ளி தெய்வநாயகியாள்
பார்த்தழகென்னப் பரிந்த கபோலமும்'

— என்கிறார். (கபோலம்—கன்னப்பிரதேசம்)

கடௌ பீதவாஸா:

இடையில் பீதாம்பரம் அணிந்திருப்பதைக் குறிப்பிடுகிறார். (ஏற்கனவே ஸ்லோகம். 10ல் இடைப் பிரதேச வர்ணனையைக் கண்டு மகிழ்ந்துள்ளோம்)

லலிதா ஸஹஸ்ரநாமத்தில், அன்னையின் இடை விசேஷத்தைச் சொல்லும் போது, 'அருணாருண கௌசும்ப வஸ்த்ர பாஸ்வத் கடீதடீ எனவும், 'ரத்ன கிங்கிணிகா—ரம்ய—ரஸனாதாம பூஷிதா' எனவும் வர்ணிக்கப்படுகிறாள்.

துர்வாசரும் தம் சக்தி மஹிம்னத்தில் 'அம்பிகையே! நற்சிவப்பு வண்ணமுடன் லேசான பட்டுவஸ்திரம், பலவித ரத்னங்கள் இழைத்த பிரகாசமான முத்துக்கள் கூடியதும் இனிய ஒலியெழுப்பும் தங்கச் சலங்கைகள் இணைக்கப் பெற்ற அரைஞாண்களாலும் பிரகாசிக்கும் உந்தன் இடுப்புப் பிரதேசத்தை பூஜிக்கிறேன்' என்கிறார் (35)

'செப்பழகுடைய திருவயிறுந்தியும்
துவண்டமருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்' — சஷ்டி கவசம்

கடௌ ஸ்வர்ண ஸூத்ரம் தடித் வர்ணகாத்ரம்
—ஸுப்ர. புஜங்கப்ரயாதம் (1)

கரே சாரு சக்தி:

ஸுப்ரமண்யரின் கையில் ஒளிரும் அழகிய வேல் உள்ளது. அது ஸர்வமந்த்ரமயமானது; தேவமயமானது; ஸர்வ அஸ்த்ரமயமானது.

கையில் அழகிய வேல் உடையவர். வேல் ஞானத்தின் அடையாளம்

சக்திதரன், ஞானசக்திதரன், சக்தி ஹஸ்தன், சக்திபாணி, சக்தித்வயசமன்விதன், சக்திபுத்ரன், என்ற பெயர்கள் ஸுப்ரமண்யருக்கு உண்டு.

புரஸ்தான் மம ஆஸ்தாம் புராரேஸ் தனூஜ:

திரிபுராசுரர்களைப் பரமேஸ்வரன் அழித்ததால், அவர் 'புராரி' என அழைக்கப்பட்டார். அந்தப் புராரியின் மகன் (தனூஜன்) புராரீஸ்தனூஜன் — ஸுப்ரமண்யன்

ஸுப்ரமண்யன், ஈசனின் மகன் என்பதைப் புஜங்கஸ்தோத்திரங்களிலும் குறிப்பிடப்படுகிறது.

புரம் — சரீரம் ஸ்தூல— ஸூக்ஷ்ம— காரண சரீரங்களே முப்புரங்கள். சரீரத்தை யொழிக்க தத்துவஞானம் தேவை. தத்துவஞானமே சிவஞானம். சிவஞானமே த்ரிபுராரி.

அந்த த்ரிபுராரியின் (புராரியின்) மகன், ஸுப்ரமண்யன். 'மம ஆஸ்தாம் புரஸ்தாத்' — என் முன்னே வரட்டும் என்கிறார் ஆதிசங்கரர். ஸுப்ரமண்யர் என் முன்னே வரட்டும் எனில் நேரில் எழுந்தருளட்டும். 'எனக்கு ப்ரத்யக்ஷமாகட்டும்' எனப் போற்றித்துதிக்கிறார் ஆதிசங்கரர்.

கருத்து

'பிரகாசிக்கும் ரத்தினங்கள் கொண்டதோள்வளை, முத்துமாலை, குண்டலங்கள் இவைகளுடன் இடையில் பீதாம்பரமும், கையில் வேலாயுதமும் ஏந்தி, மனதை ஈர்க்கும் வகையிலுள்ள புராரியின் மகன் எனக்கு ப்ரத்யக்ஷமாகட்டும்' என ஆதிசங்கரர் வேண்டுகிறார்.

குறிப்பு

ஆதிசங்கரர் உருவவழிபாட்டையோ, ஆகமங்களையோ, அங்கீகரிக்கவில்லை. அவருக்கு வேண்டியது அத்வைதக் கொள்கை ஒன்றுதான். குணமற்ற அருவநிலை தியானத்தை உயர்ந்தே ஞானிகள் மட்டுமே செய்யமுடியும். பாமரர்களுக்கு பக்தியை உள்ளடக்கிய உருவவழிபாடுதான் ஏற்றதாக இருக்கும் என எண்ணினார். பக்தியை

அத்வைதம் கலந்ததாக வெளிப்படுத்தினால் அத்வைதக் கொள்கையும் நீடித்து நினைக்கப் பெறும் என முடிவு செய்தார். எனவே, தன் வழியினின்று சற்று இறங்கி உருவ வழிபாட்டுக்கு இடமளித்துப் பல ஸ்தோத்திரங்களைப் பாடினார். மாணவன் புரிந்து கொள்ளும் வகையில், அவனுக்கேற்றபடி ஆசிரியர் தாழ்ந்து வருவது போலாகும்.

அதன்படி, உருவவழிபாட்டுக்கு எதிரானவரே ஸுப்ரமண்ய புஜங்கத்தைப்பாடி, முதலில் விக்னத்தை நீக்க கணபதியைத் துதிக்கிறார். ஸுப்ரமணியரின் பள்ளியறை வர்ணனை, பாதார விந்தங்களின் மஹிமை, இடைப் பகுதியின் அழகு, மார்பினழகு, பாஹு பராக்கிரமம், ஆறுமுகங்களின் அழகு தன்மை, கடைக்கண் மஹிமை, ஆபரணங்கள் என ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஸ்லோகத்தில் வர்ணிக்கிறார். முடிவில், அந்த ஸுப்ரமண்யர் தன் எதிரில் ப்ரத்யக்ஷமாகவேண்டும் என்கிறார்! அதுவும் எப்படி?

'களே ரத்னபூஷம் கடௌ பீதவஸ்த்ரம்
கரே ஞானசக்திம் தரஸ்மேரமாஸ்யே |'

என ஸுப்ர. புஜங்க ப்ரயாதம் (2)ல் உள்ளவாறு கழுத்தில் ரத்னபூஷணங்களும், இடுப்பில் பட்டாடை உடுத்தியும், கையில் சக்தி (வேல்) ஆயுதம் ஏந்தியும் நேரில் காட்சியளிக்க வேண்டுமென்கிறார்!

18

சோமஸ்கந்த ப்ரபாவம்

18. இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தான் ப்ரஸார்யா
ஹ்வயத்யாதராச் சங்கரே மாதுரங்காத் |
ஸமுத்பத்ய தாதம் ப்ரயந்தம் குமாரம்
ஹராச்லிஷ்டகாத்ரம் பஜே பாலமூர்த்திம் ||

பதவுரை

இஹ ஆயாஹி வத்ஸ இதி — 'இங்கு வா (குழந்தாய்) மகனே' என; ஆதராத் ஹஸ்தான் ப்ரஸார்ய — அன்போடு கைகளை நீட்டி; சங்கரே ஆஹ்வயதி — சங்கரர் கூப்பிடும் போது; மாது: அங்காத் ஸமுத்பத்ய — தாயின் மடியிலிருந்து இறங்கி குதித்தவாறு; தாதம் ப்ரயந்தம் — தந்தையிடம் செல்பவரும்; ஹராச்லிஷ்ட காத்ரம் — ஹரனால் அணைக்கப்பட்ட மேனியை உடையவரும்; பாலமூர்த்திம் — பால உருவத்தினான; குமாரம் பஜே — குமரனை வழிபடுகின்றேன்.

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் சிவ, சக்திகளுடனான ஸ்கந்தரின் ஐக்யம் விசேஷமாகச் சொல்லப்படுகிறது.

இஹாயாஹி வத்ஸேதி......... ஹராச்லிஷ்ட காத்ரம்

வத்ஸ— குழந்தை, கன்று என்று பொருள்.

'நவ நிதிகளுக்கும் இருப்பிடமாக உள்ளவன் ஸுப்ரமண்யன், இவர் ஒப்பற்ற பேரானந்த நிதியாகத் திகழ்பவன் இந்தப் பேரானந்த நிதியான பாலஸுப்ர

மண்யக் குழந்தையை ஸ்பரிசித்து பரமேஸ்வரன் அமுதக் கடற்பிரவாஹத்திலேயே மூழ்கினார் என்கிறது ஸ்காந்தம்.

ஸுப்ரமண்யஸ்வாமி குழந்தையாக, அன்னையின் மடியில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தார். அதை ரஸித்த பரமேஸ்வரன், 'குழந்தாய், இங்கு வா' எனத் தன் கைகளிரண்டையும் நீட்டி ஆதரவோடு அன்புடன் அழைத்தார்.

குழந்தை ஸ்வாமியும் தாயின் மடியிலிருந்து துள்ளிக்குதித்தோடி தந்தையின் மடியிலமர்ந்தார். தந்தை ஹரனும் குழந்தை ஸ்வாமியைக் கட்டியணைத்தபடி உச்சி முகர்ந்து பார்த்து சீராட்டி பாராட்டி விளையாடினார்.

'ஆனந்தவடிவினரான சிவபெருமானும் குமரனைத் தன் தோளில் வைத்துக் கொண்டு பேரானந்தத்தில் மூழ்கினார்' என ஸ்காந்தம் (ஸம்பவகாண்டம்) கூறுகிறது பார்வதி—பரமேஸ்வரனுடனான குமரனை ஆதிசங்கரர் வணங்குகிறார்.

இது போன்றதொரு காட்சியைக் கந்தபுராணத்திலும் சரவணப்படலத்தில் காணமுடிகிறது. (1041)

'விடையுற்றிடு பரமற்கும் அவ்விமலைக்கும் விறல் சேய்
இடையுற்றது கண்டார் அயன் மகவான் முதல் இமையோர்'

ரிஷபவாஹனரான பரமேஸ்வரனுக்கும், உமா தேவிக்கும் இடையே வலிய குழந்தை கந்தன் வீற்றிருக்கும் தன்மையை, பிரம்மாதி தேவர்கள் கண்டனர். தேவர்கள் கந்தனை நெருங்கி முன்னும் பின்னும் புகழ்ந்தனராம்.

பாலன் தேவராயரும் தம் சஷ்டி கவசத்தில் இக் காட்சியைக் கண்டு களிப்புடன் பாடுகிறார்.

எண்ணிலா அழகாய் இலங்கு பல்வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதென
. . . . .
ஈச்வரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈச்வரன் வடிவை மிகக் கண்டனுதினம்
கையால் எடுத்து கனமார் (பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று

மார்பிலும் தோளிலும் மடியிலும் வைத்துக்
கார்த்திகேயா எனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட்டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூர!

(குன்றுதோறாடல் கவசம்)

காட்சியை நம் கண்முன் நிறுத்துகிறார்.

'சிவாங்கம் ஸமாருஹ்ய ஸத்பீடகல்பம்' எனக் கூறுகிறார் ஆதிசங்கரர் (ஸுப்ர. புஜங்க ப்ரயாதம்) (2)

ஸத்— ஈச்வரன், சித்— அம்பிகை, நாம் இதை உணரும்போது பேரானந்தம் உண்டாகிறது. இந்த ஆனந்தமே 'ஸுப்ரமண்யம்' என்பதாகும்.

இந்த ஸத்—சித்—ஆனந்தமே (ஸச்சிதானந்தமே) ஸோமாஸ்கந்தர் (ஸ: உமா ஸ்கந்தர்) உமா, ஸ்கந்தர் ஆகிய இருவருடன் கூட இருப்பவர் ஸோமாஸ்கந்தர் ஆவார்.

பரமேச்வரன், உமை இவர்களிடையேயோ, அல்லது, இருவரும் அமர்ந்துள்ளபோது ஒருவர் மடியிலோ ஸ்கந்தன் உள்ளவாறு, ஸுப்ரமண்ய ஸ்வாமியை தியானிப்பதும் வழிபடுவதும் சிறப்பானது. சில தலங்களில் இறைவன் கோயில், இறைவிகோயில் ஆகிய இரண்டுக்குமிடையே குமரன் கோயில் அல்லது ஒரே கோயிலில் இருவரின் ஸந்நிதிகளுக்கிடையே குமரன் ஸந்நிதியும் இருந்தால் 'ஸோமஸ்கந்தமூர்த்தி' கோல அமைப்பாகும் சிவாலயங் களில் பெரும்பாலும் பிரம்மோற்சவங்களில் உலாவரும் மேனி ஸோமாஸ்கந்தர் உருவமே. ஆலயவழிபாட்டில், தமிழகத்தில் வழிபடப்பட்டு போற்றப்படும் திருமேனி இதுவே.

ஸுப்ரமண்யரின் ஷடக்ஷரிமந்த்ரஜபம் செய்பவர் களுக்கும் இத்தத்துவம் உரியது. முதலிரண்டு அக்ஷரங்கள் சக்திகண்டம், நடு இரண்டு அக்ஷரங்கள் குமரக்கண்டம், இறுதி இரு அக்ஷரங்கள் சிவகண்டம் எனப்பிரித்துக்கூறுவர். சிவ—சக்தியுடனான குமரனின் இந்த ஷடக்ஷரீ மந்திரம் ஸகல ஸௌபாக்யங்களையுமளிக்கும்.

குமாரம்

குழந்தை என்பதை வைத்து 'குமார' என்பர். குமாரஸ்வாமி என்றும் அழைப்பர். தமிழில் 'குமரன்' என்று கூறுவர்.

காளிதாசர், ஸுப்ரமண்ய அவதாரத்தைக் 'குமார ஸம்பவம்' என்ற காவியமாகப் படைத்தார் விஸ்வாமித்ர ரும் வால்மீகி ராமாயணத்தில், ராமலக்ஷ்மணர்களுக்கு குமாரஸம்பவக் கதையை விவரிக்கிறார்.

'சத்'துக்கும் (சிவத்துக்கும்) 'சித்'துக்கும் (சக்திக்கும்) குமரனாக விளங்குவதால் குமாரன் ஆவான்.

க்ருஷ்ணயஜுர்வேதம், அக்னியிலிருந்து குமாரன் தோன்றியதாகச் சொல்கிறது.

சதபத ப்ராம்மணம், குமரனின் பிறப்பை விவரித்து, அவன் ருத்ரனுக்கு இணையானவன் என்கிறது.

பஜே பாலமூர்த்திம்

உமையும், மஹேஸ்வரனும் ஸுப்ரமண்ய ஸ்வாமியைக் குழந்தையாகக் கண்டு பேரானந்தம் அடைந்ததைக் கண்டோம். அக்காட்சியைக் கண்ட ஆதிசங்கரரும் 'பஜே பாலமூர்த்திம்' என ஸ்வாமியை குழந்தையாக ஸ்மரித்து நமஸ்கரிக்கிறார்.

சஷ்டிகவச வரிகளும் பாலனாகவே துதிப்பதைக் காண்போம்.

தேராச்சூரரைத் துண்டதுண்டங்களாய்
வேலாயுதத்தால் வீசி அறுத்த
பாலாபோற்றி பழனியின் கோவே (திருவேரக கவசம்)

பழனிப்பதிவாழ் பாலகுமாரா (செந்தூர் கவசம்)

சின்னக் குழந்தை சேவடி போற்றி (செந்தூர் கவசம்)

சரவணை சண்முகா சதாசிவன் பாலா
பரமேஸ்வரிக்குபாலா தயாபரா (பழனிக்கவசம்)

பாவலர்க்கருள் சிவபாலனே வருக (குன்றுதோறாடல்)

ஸ்வாமியின் குழந்தைவடிவங்களாவன: காங்கேயன், ஸ்கந்தன், கார்த்திகேயன், சரவணபவன், பாலசுப்ரமண்யர் (குழந்தைவேலன், பால முருகன்) ஆகியன.

இப்படி நாமங்கள் பெற்ற பாலஸ்வாமியாகிய பாலமூர்த்தியை நான் வணங்குகிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

கருத்து

ஸோமாஸ்கந்தர் திருமேனி தத்துவம், குமாரவடிவம், பாலமூர்த்தி ஸ்வரூபம் ஆகியவைகள் விளக்கப்படுகின்றன. ஷடக்ஷரீ மந்த்ர ஸ்வரூபமும் விளக்கம் பெறுகின்றன.



19

ஸுப்ரமண்யரின் நாம விசேஷங்கள்

19. குமாரேஶ ஸூனோ குஹ ஸ்கந்த ஸேனா
பதே ஶக்திபாணே மயூராதிரூட |
புளிந்தாத்மஜாகாந்தா பக்தார்த்திஹாரின்
ப்ரபோ தாரகாரே ரக்ஷமாம் த்வம் ||

பதவுரை

குமார — *குமாரனே!;* ஈசஸூனோ — *ஈசன் மகனே!;* குஹ — *குஹனே!;* ஸ்கந்த — *கந்தனே!;* ஸேனாபதே — *ஸேனாபதியே!;* ஶக்திபாணே — *சக்தி எனும் வேல் ஏந்தியவனே!;* மயூராதிரூட — *மயில்வாஹனனே!* புளிந்தாத்மஜாகாந்த — *வள்ளிமணாளனே!;* பக்தார்த்தி ஹாரின் — *பக்தர் துயர் துடைப்பவனே!;* ப்ரபோ — *ப்ரபுவே!;* தாரகாரே — *தாரகாசுரனை வதைத்தவரே!;* த்வம் ஸதா ரக்ஷமாம் — *தாங்கள் என்னை எப்போதும் காப்பாற்றுங்கள்.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் ஸுப்ரமண்யரின் விசேஷமான பதினோறு நாமாக்கள் சொல்லப்பட்டு. அவற்றின் ரஹஸ்யங்களை அறியச் செய்கிறார் ஆதிசங்கரர்.

குமார!

'குமார' எனில் இளம்பிராயத்தினன் எப்போதும் பிரம்மசாரி. அருவருப்பை நாசம் செய்பவன் (ஆன்மாக்களின் மும்மலங்களை நாசம் செய்பவன்).

உலகமாயையைப் போக்கடிப்பவன்.

மன்மதனையொத்த அழகன் — என்றெல்லாம் பொருள்.

'ஓம் நம: சிவாய' என்பதுபோல் 'ஓம் நம: குமாராய' என்பதும் ஒரு சிறப்பான மந்திரம். பூமியில் ஐஸ்வர்யத்தை வழங்கக்கூடியது (மந்திரங்களை எப்போதும் குருமூலம் உபதேசம் பெற வேண்டியது அவசியம்)

குமரன் வழிபாட்டை விளக்கும் நூல் 'குமாரதந்திரம் ஆகும்.

'குமரோபநிஷத்' மந்திரங்களடங்கியதாகும்.

குமாரர் வடிவம் ஒருமுகம் நான்கு கரங்கள் கரண்டமகுடம் தரித்தவர்.

வலது கரங்களில் — சக்தி (வேல்), அபயம்

இடது கரங்களில் — வஜ்ரம், வரதம்

தாமர மலர்மாலை; பால உருவம்

காமிகாகமப்படி, கிராமம் செழிக்க பிரதிஷ்டை செய்வர். ஒரு முகம் இருகரங்கள். இடது கரம் — தாமரைமலர்; வலது கரம்—கீழே தொங்கவிடப்பட்டநிலை.

மற்றுமோர் உருவம் உண்டு. இரு கரங்களிலும் தாமரை மலர்களுடன் அமைகிறது. சூர்யப்ரகாசத்துடன் அந்தணர்களுக்கு ஹிதமானவராக உள்ளார்.

ஈசஸூநோ!

ஈசஸூநு (ஈசன்மகன்) என்ற பதம் ஏற்கனவே 'ஸுதாஸ்யந்தி பிம்பாதராணி ஈசஸூனோ' (14) எனப் போற்றப்பட்டுள்ளார்.

'ஈச சக்த்யைக ரத்னம்' எனவும் மஹான்கள் போற்றுகின்றனர்.

ஈசனின் ஆறு குணங்களின் வடிவத்தோற்றம், பிரணவமும் பஞ்சாக்ஷரமும் சேர்ந்து ஆறுமுகங்கள், போன்ற தத்துவக் கருத்துக்களால் 'ஈசஸூநு' என்ற பெயர் பொருத்தமாகிறது.

'ஸ்வயம் ஸ்கந்தோ மஹாதேவ:' என்கிறது வராஹ புராணம்

குஹ!

'குஹன்' என்ற பெயரை ஸுப்ரமண்ய புஜங்கத்தில் ஆதிசங்கரர் ஏழு இடங்களில் கூறுகிறார்.

'ஸதா பாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம் தம்' (5)

'ஜனார்த்திம் ஹரந்தம் ஸ்ரயாமோ குஹம் தம் (7)

'குமாரேசஸூனோ குஹஸ்கந்த ஸேனாபதே' (19)

'த்ருதம் மே தயாளோ ! பவாக்ரே குஹத்வம் (20)

'குஹே ஸந்து லீனா மமாசேஷ பாவா:' (26)

'குஹாத் தைவ மன்யந் நஜானே நஜானே' (27)

'படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய' (33)

ஆன்மாக்களின் இதயகுகையிலிருப்பவன் குஹன்.

ஞானஸ்வரூபமாக, ப்ரம்மமாக, பரமான்வாக விளங்குபவன் குஹன்.

குஹனின் திருமேனி—ஒருமுகம், நான்கு கரங்கள் உடையவர். முக்கண் உடையவர்.

பொன் வேய்ந்த ரத்னகிரீடம் தரித்தவர். சூலம், வஜ்ரம், வரதம், அபயம். வெள்ளை வஸ்திரம் தரிப்பவர். கருநிறத்தவர். ஸாதுரக்ஷகர்.

குஹேதி தஹராகாசோ வேதாந்தேஷுஹி பட்யதே |
தந் நிஷ்டோயம் குஹ: ப்ரோக்த: ஸர்வ ஹ்ருத் கமலாஸன: ||

வேதாந்தங்களிலே தஹராகாசமானது 'குகை' என்று கூறப்படும். இதய கமலங்களாகிய அக்குகையில் வசிப்பவன் நின்மலன். அவனே 'குஹன்' எனப்படுவான்.

ஸ்கந்த !

ஆதிசங்கரர், இந்த ஸுப்ரமண்ய புஜங்கத்தில் பல இடங்களில் ஸுப்ரமண்யரை 'ஸ்கந்த' நாமம் கொண்டு பல இடங்களில் வணங்குகிறார்.

'ஸ்தாமோததாம் ஸ்கந்த ! தே பாத பத்ம' (9)
'கடிம் பாவயே ஸ்கந்த ! தே தீப்யமானம் (10)
'ததா த்வன் முகானாம் ப்ருவே ஸ்கந்த ஸாம்யம் (13)
'குமாரேச ஸுனோ குஹ ஸ்கந்த ஸேனாபதே (19)
'புன: ஸ்கந்த மூர்த்தே ! நமஸ்தே நமோஸ்து (31)

மலைகள், காடுகள் போன்றவற்றிற்கு, ஸ்கந்தர் தெய்வமாதலால், ராமர் காடு சென்றபோது அவரை ரக்ஷித்துக் காப்பாற்றவேண்டுமென கௌசல்யை ஸ்கந்தனை வேண்டியதாக ராமாயணம் தெரிவிக்கிறது.

தனுர் வேதமே ஸ்கந்தனின் தேஹத்திற்குள் உட்செல்கிறதாம். இதனால் ஸ்கந்தன் மஹா பலம் பொருந்திய யோகீஸ்வரனாக ஆனதை புராணம் கூறுகிறது.

இறையாற்றல், இயற்கை ஆற்றலுடன் இணைய வீர்யம் (அக்னி) வெளிப்படும். இதனால் ஞானமய ஸ்கந்தன் உதித்தான் என்பது கருத்து.

ஸ்கந்தன் திருமேனியை, 'ஒருமுகம், இருகைகள், நின்றகோலம், இடையில் கோவணம், இடது கை இடுப்பில் ஊன்ற, வலது கையில் தண்டம் ஏந்திய நிலை, குடுமியில் புஷ்பமாலை, நவரத்னஹாரமும் உண்டென்பர் என குமாரதந்திரம் கூறுகிறது.

கல்பத்ருமம் ப்ரணமதாம் கமலாருணாபம்
ஸ்கந்தம் புஜத்வயம் அனாமயம் ஏகவஸ்த்ரம்
காத்யாயனீ ஸுதமஹம் கடிபத்த ஹஸ்தம்
கௌபீன தண்டதரம் தக்ஷிணஹஸ்தமீடே (குமாரதந்திரம்)

ஸேனாபதே !

ஸ்கந்தனின் புகழ் ஓங்க, இந்திரன் பொறாமை கொண்டு அவனோடு யுத்தம் செய்கிறான். வஜ்ராயுதத்தால் ஸ்கந்தனை அடிக்கிறான். இதன் விளைவாக ஸ்கந்தனின்

உடலிலிருந்து 'விசாகன்' என்ற கடவுள் தோன்றுகிறான். (ஸ்கந்த—விசாகன் என்ற இருதேவதைகள் ஒரு காலத்தில் வழிபடப்பட்டனர்) இந்திரன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு, அரசபதவியை ஏற்க ஸ்கந்தனை வேண்டினான். ஸ்கந்தனோ அதை மறுத்து, தேவர்களின் ஸேனாதிபதியாக (படைத்தலைவனாக) இருக்க சம்மதிக்கிறார். இதனால் ஸ்கந்தனின் பெருமையும் பெருந்தன்மையும் தெரிய வருகிறது.

தாரகாசுரனை ஸ்கந்தன் மாய்த்ததும், ஸரஸ்வதி நதிக்கரையில் ஸ்கந்தனுக்கு தேவஸேனாதிபதியாக பட்டம் சூட்டுகின்றனர் (சல்ய பருவம் — மஹாபாரதம்) அப்போது ஸ்கந்தனின் பிறப்புடன் தொடர்புடைய ஈஸ்வரன், பார்வதி, அக்னி, கங்கை உட்பட தேவர்கள் வந்திருந்தன ராம் தன் தோற்றத்துக்குக் (பிறப்புக்குக்) காரணமான ஈஸ்வரன் முன்பு ஸ்கந்தனாகவும், பார்வதிக்கு விசாக னாகவும், அக்னிதேவனுக்கு சகனாகவும், கங்கைக்கு நைகமேசனாகவும் தோன்றி வணங்கினாராம். ஸ்கந்தன் யாருடைய மகன் என ஆச்சரியப்பட்டனராம்.

சக்திபாணி

ஆயுதங்களை ஏந்திய நிலையில், ஆயுதங்களில் காட்டும் வல்லமையைப் பொறுத்து, தெய்வங்களுக்கு பெயர் வழங்குவது மரபு. தந்தபாணி (விநாயகர்) தண்டபாணி (ஸ்கந்தர்) சக்ரபாணி, சங்கபாணி (விஷ்ணு), சூலபாணி, பினாகபாணி (சிவன்) வஜ்ரபாணி (இந்திரன்) என்ற வரிசையில் 'சக்திபாணி' எனப்பெயர் பெற்றவர் ஸுப்ரமண்யர். சக்தி என்பது வேல் ஆகும் (புஜங்கத்தின் 31வது ஸ்லோகம் சக்தி. மயில், ஆடு, கோழிக்கொடி ஆகியவைகளைப் பற்றி விரிவாகப் போற்றும்).

சக்தியை ஏந்தியவர் சக்திதரர். இவரின் திருமேனிக் கோலத்தைப் பற்றி குமாரதந்திரம், காமிகாகமம், ஆகியவை குறிப்பிடுகின்றன. சக்திதரர் ஒருமுகமும், இருகைகளும் உடையவர் வலது கையில் சக்தியும் (வேல்) இடது கையில் வஜ்ரமும் அமையும்

'ஞானசக்திதரன்' என்ற வடிவமுண்டு. ஞானத்தையே ஆற்றலாகக் கொண்டவனாவான் ஒரு முகம், இரண்டு கைகள் உண்டு. வலது கையில் முச்சக்திகளை (இச்சா—ஞான—கிரியா) மூன்றிலைகளாக கொண்ட சக்தியை (வேல்) ஏந்தியும், இடது கையை இடுப்பில் வைத்துக் கொண்டு நிற்கும் திருமேனியே ஆகும்.

'கரே ஞானசக்திம் தரஸ்மேர மான்யே'

'நமஸ்தே நமஸ்தே மஹாசக்தி பாணே
நமஸ்தே நமஸ்தே கடின்யஸ்தபாணே'

'நமஸ்தே நமஸ்தே ஸதாசக்திதாரின்'

என ஸுப்ர. புஜங்கப்ரயாதம் (2) போற்றுகிறது.

மயூராதிரூட!

ஆதிசங்கரர், ஸுப்ரமண்ய புஜங்கம் பாடத் தொடங்கியதும், முதலில் விக்னேஸ்வரனைத் துதித்தார். அடுத்து, ஒன்றுமறியாத தன் உள்ளத்தினின்று வாக்குப் பிரவாஹமெடுத்து வருவதைக் கூறுகிறார்.

ஸுப்ரமண்யரைத் துதிக்க மயூராதிரூடம் என்று தான் ஆரம்பிக்கிறார்.

எல்லா மந்த்ரங்களின் ஸ்வரூபமாக விளங்கும் மயிலைத் தன் வாகனமாகக் கொண்டவர் ஸுப்ரமண்யர்.

சூரபத்மனை அழித்த பிறகே மயில் வாகனம். கோழிக் கொடி அல்லது இந்திரன் போரில் மயிலாக உதவினான் என்றோ எண்ணவேண்டாம். ஆனந்த பிரம்மம் குஹன். அவனுக்கு மயில் என்றும் வாகனமாக உள்ளதே.

சாகத்தீவு மன்னனின் பிள்ளைகளான சூரன், பத்மன் என்ற இருவர் அகத்தியரின் அறிவுரைப்படி குஹனின் மயூரவாஹனமாகவும், கோழிக் கொடியாகவும் தாங்கள் ஆக வேண்டும் என்ற குறிக்கோளில் தவத்தில் ஈடுபட்டனர். இத்தகவலை, ஸ்காந்தம்— உபதேசகாண்டத்தில் காண முடிகிறது.

திருவருள் எண்ணப்படி 'சூரபத்மன்' என்ற ஒரே வடிவாய் வந்து மயிலும் கோழியுமானான். எனவே,

முன்னமேயே குகனுக்கு மயில்வாஹனமும், கோழிக் கொடியுமுண்டு எனத் தெளியலாம்.

சிறையிலிருந்த ஜெயந்தன் கனவிலும் மயில் வாஹனனாக ஐயன் காட்சிதந்து தேற்றியுள்ளான்.

பிரபஞ்சம் முழுதையுமே தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் ஸுப்ரமண்யர் என்பதே மயில் வாஹனம். மயிலின் தத்துவத்தைப் பாம்பன் சுவாமிகள் தம் 'சுப்ரமண்யவியாச'த்தில் அழகாக ஆழ்ந்து விவரிக்கிறார்.

மயில்வாஹனர் — திருமேனி வடிவம் கீழ்க்கண்டவாறு.

ஒருமுகம், நான்கு கரம்;

அபயம், வேல் — வலது கரங்களில்

வரதம், குலிசம் — இடது கரங்களில்

மயில்வாஹனம் — ஓங்காரரூபம்

செந்தாமரை போன்ற நிறம்.

பதினான்கு மலைகளில் வாஸம் செய்கிறார் மயில்வாஹனர். ஸ்வாமிகிரி மஹாத்மியம் கூறும் 14 மலைகளாவன:

1. கைலாசம், 2. ஸ்கந்தகிரி (இமயம் சார்ந்தது), 3. இமாலயம், 4. வேங்கடாத்ரி, 5. ஹல்லகாத்ரி, 6. அருணாசலம், 7. சிராத்ரி, 8. ஸ்வாமிமலை, 9. பரங்குன்று, 10. ருஷபாசலம், 11. திரிகூடமலை, 12. சிதம்பரம், 13. திருச்செந்தூர், 14. ஸுப்ரஹ்மண்யா.

இதன்படிதான் அருணகிரிநாதர், 'ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே' எனப் பாடியுள்ளார் போலும்.

புளிந்தாத்மஜா காந்தா

ஸுப்ரமண்யன், ஸ்கந்தன், அக்னிபூ: பாலஸுப்ர மண்யர், குஹன், பிரம்மசாரி ஸுப்ரமண்யன், தேசிக ஸுப்ரமண்யர், ஞான ஸ்கந்தர் என்ற வேத வடிவினனாக அந்தணர்களுக்கும்,

சேனாபதி, கார்த்திகேயன், ஆறுமுகன், தாரகாரி கிரௌஞ்சபேதனர் என்ற போர்க் கோல வடிவினனாக க்ஷத்திரியர்களுக்கும்

உபாஸிக்கத்தக்க வகையில் கந்தன் உள்ளார்.

குமாரர், குஹன், பிரம்மசாஸ்தா, வள்ளிகல்யாண சுந்தரர் — ஆகிய வடிவங்கள் வேடர்களுக்கும் சபரர்களுக்கும் காக்கும் தெய்வமான (ஸ்) கந்தனின் வடிவங்கள்.

புளிந்தாத்மஜா காந்தன் — வேடன் மகள் மணாளன் வள்ளி மணாளன்.

முன்னதாகவே வேடர்தலைவன் மகள் வள்ளியுடனான ஆலிங்கத்தினால் சிவந்த மார்பையுடைய ஸுப்ரமண்யரைத் தியானிக்கிறேன் என ஆதிசங்கரர் துதித்ததைப் பார்த்தோம். (ஸ்லோகம் 11— புளிந்தேச கன்யா......)

வள்ளி கல்யாண சுந்தரர் திருமேனியின் அமைப்பாவது. ஒரு முகம், நான்கு கைகளுடைய வடிவமாகும். திருமேனியின் வலப்புறம் வள்ளி அமைவாள். திருமால் தாரைவார்த்துக் கொடுக்கும் நிலையில் அமைவார். ஸுப்ரமண்யரின் வலது கரங்களில் அபயம், ருத்ராக்ஷ மாலை; இடது கரங்களில் கமண்டலு, முஞ்சிக்கயிறு (திருமணத்தில் மணப்பெண்ணின் இடுப்பில் கட்ட)

பக்தார்த்திஹாரின் !

முந்தைய ஒரு ஸ்லோகத்தில் (7) 'ஜனார்த்திம் ஹரந்தம்' அன்பர்களின் துக்கத்தைப் போக்குபவர் ஸுப்ரமண்யர் என ஆதிசங்கரர் துதித்ததைப் பார்த்தோம்.

இவ்விடத்தில், 'பக்தார்த்திஹாரின்' என்று துதிக்கிறார். 'ஆர்த்தி' என்பதற்கு துன்பம், நோய், குறை, அழிவு எனப் பொருள்களுண்டு.

'ஆர்த்த த்ராண பராயண: ஸ பகவான் நாராயணோ மே கதி:' என்ற ஸ்லோக வரியில், 'வருத்தும் நோய் (அ) துக்கத்தினின்று காப்பாற்றுபவர் (த்ராண) பகவான் நாராயணரே கதி' என்பதாகும்.

அதுபோலவே, அப்பய்ய தீக்ஷிதரும் கங்காதராஷ்டகத்தில், 'ஆர்த்த த்ராண பராயண ஸ பகவான் கங்காதரோ மே கதி:' என்று பாடியுள்ளார். துயரமுற்றவனைக் காப்பதையே தன் லக்ஷ்யமாகக் கொண்ட கங்காதரரே எனக்கு, புகலிடம் என்கிறார்.

ஆதிசங்கரரும் சிவாஷ்டகத்தில்,

'லோகத்ரயார்த்தி ஹரணாய நம: சிவாய' எனப் போற்றுகிறார்.

'ஆர்த்திஹர ஸ்தோத்ரம்' எல்லாவித கஷ்டங்களையும் போக்கக் கூடியது. இதை இயற்றித்துதித்தவர் திருவிசலூர் ஸ்ரீதரஅய்யாவாள்அவர்கள்ஆவர்.

'ஆர்த்தானாம் ஆர்த்திஹந்தாரம்' என நோய்களை, துக்கங்களை அழிப்பவர் பகவான் எனவும் ஸ்தோத்தரிக்கிறோம்.

கடவுளுக்கு 'பக்த ஆரத்தி பஞ்ஜனன்' என்ற பெயருமுண்டு.

ஆதிசங்கரரும் அவ்வழியிலேயே, நோய்நீக்கம் ஏற்பட திருச்செந்தூர் ஸுப்ரமண்யரைத் துதிப்பதால் பக்தார்த்தி ஹாரின் என அழைக்கிறார். பெயரும் பொருத்தமானதே.

ப்ரபோ!

'ப்ரபு' என்ற வார்த்தைக்கு, வலிமையானவன், உறுதியானவன், சாதிக்கத் தகுந்தவன் என்று பொருள் தன்னிகரில்லாத்தலைவன், உரிமையாளன் என்ற பொருள்களுமுண்டு சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன் போன்ற தேவர்களுக்கும் இப்பெயருண்டு. 'விஸ்வம் விஷ்ணுர்.... ப்ரபு:' என்கிறது விஷ்ணு ஸஹஸ்ரநாமம். 'ப்ரபவே நம:' என்ற நாமாவளி பொதுவாகவே தேவர்களுக்கு உண்டு.

ஸுப்ரமண்யரும் ஒரு தன்னிகரில்லா அழகு, இளமை, பராக்ரமம், காருண்யம் கொண்டவர். எனவே, ப்ரபு என்ற பெயர் அவருக்குச் சிறப்பானதாக ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார்.

தாரகாரே !

தாரகன் சூரபத்மனின் தம்பி. அசுர குணம் மேலோங்கியவன் கொடுமைகள் பல புரிந்தவன். திருமாலை வென்று, அவரது சக்கரப்படையை மார்பில் அணிந்தவன். இவனை வென்றால் சூரனை வெல்வது எளிது என்பதொரு கருத்து இருந்தது. தாரகன் மாயையில் வல்லவன். போரில், தாரகனுக்குக் கருணையுடன் தரிசனம் தந்துள்ளார். இருப்பினும், முடிவிலவனை மாய்த்தார். இதனாலேயே ஸுப்ரமண்யர் தாரகாரி, தாரகஜித், தாரகாந்தகன் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டார்.

இந்த பதினொன்று நாமாக்களைக் கூறிப் போற்று கிறார். முடிவில் ஸதா ரக்ஷமாம் த்வம் *'எப்போதும் என்னை நீ காப்பாற்று' எனப் பிரார்த்திக்கிறார்.*

பின்குறிப்பு

ஆதிசங்கரர், நக்ஷத்ரமாலிகாஸ்துதியில், 'நாம தக்தபாப தே நம: சிவாய' என்கிறார். பகவன் நாமாவைக் கூறினாலேயே பாபம் நசிந்து விடும் என்பதே அது. அதுபோல, ஸுப்ரமண்யரின் நாமாக்களைக் கூறி ஜபித்தல் சிறப்பென, ஸ்காந்தம், அமரம், தந்திரங்கள் நாமாக்களின் பட்டியல்களைத் தருகின்றன.

அமரகோசம் பதினேழு *(17) நாமாக்களைத் தருகிறது.*

கார்த்திகேயோ மஹாஸேன: சரஜன்மா ஷடானன:
பார்வதீநந்தன: ஸ்கந்த: ஸேனானீ அக்னிபூர் குஹ: |
பாஹுலேயஸ் தாரகஜித் விசாக: சிகிவாஹன:
ஷாண்மாதுர: சக்திதர: குமார கிரௌஞ்சதாரண: ||

ஸ்காந்தம் *இருபத்தேழு (27) நாமாக்களைக் குறிப்பிடுகிறது. பிறர் செய்யும் தீவினைகளிலிருந்து நம்மை, இவை காப்பாற்றும்.*

ஸுப்ரஹ்மண்யஸ்ய ஸேனானீ குஹ ஸ்கந்தஸ்ச வாமன: |
மஹாஸேனோ த்வாதசாக்ஷ: விச்வபூஷ் ஷண்முக: சிவ: |
சம்புபுத்ரஸ்ச வல்லீச: தேவஸேனாபதிப் ப்ரபு : |
சரோத்பவஸ் சக்திபுத்ர : ப்ரம்மபூ: அம்பிகாஸுத: |

பூதேச: பாவகி ஸ்ரீமான் விசாக: சிகிவாஹன: |
காங்கேயஸ்ச கஜாரூட: சத்ருஹந்தா ஷடானன: ||

ருத்ரயாமளத்திலுள்ள கார்த்திகேய ஸ்தோத்திரத்தில் ஸ்கந்தனே தனது விசேஷ நாமாக்களைக் (28) கூறுவதாக அமைந்துள்ளது.

ஸ்கந்த உவாச—
யோகீஸ்வரோ மஹாஸேன: கார்த்திகேயோSக்னி நந்தன: |
ஸ்கந்தக்குமார: ஸேனானீ ஸ்வாமி சங்கர சம்பவ: |
காங்கேய: தாம்ரசூடஸ்ச ப்ரம்மசாரி சிகித்வஜ: |
தாரகாரீர் உமாபுத்ர: க்ரௌஞ்ஸ்ச ஷடானன: |
சப்தப்ரம்ம ஸமுத்ரஸ்ச ஸித்த: ஸாரஸ்வதோ குஹா: |
ஸனத்குமாரோ பகவான் போகமோக்ஷபலப்ரத: |
சரஜன்மா கணாதீச பூர்வஜோ முக்திமார்கக்ருத் |
ஸர்வாகமப்ரணேதா ச வாஞ்சிதார்த்தப்ரதாயக: |
அஷ்டாவிம்சதி நாமானி மதீயாநீதி ய : படேத்
ப்ரத்யூஷே ச்ரத்தயாயுக்தோ மூகீ வாசஸ்பதிர் பவேத் |
மஹாமந்த்ர மயாநிதி மம நாமானு கீர்த்தனம் |
மஹாப்ரக்ஞாமவாப்னோதி நாத்ரகார்ய விசாரணா ||

ஷோடச நாம ஸ்தோத்ரம் *(16) வழக்கத்திலுள்ளது.*

ஞானசக்திதரஸ் ஸ்கந்த: தேவஸேனபதிஸ்த்தா |
ஸுப்ரஹ்மண்யோ கஜாரூட: சரகாநநஸம்பவ: |
கார்த்திகேய: குமாரஸ்ச ஷண்முகஸ்தாரகாந்தக: |
ஸேனானீர் ப்ரஹ்மசாஸ்தாச வல்லீகல்யாண ஸுந்தர: |
பாலஸ்ச க்ரௌஞ்சபேதாச சிகிவாஹன ஏவ ச |
ஏதானி ஸ்வாமி நாமானி ஷோடச ப்ரத்யஹம் நர: |
ய: படேத் ஸர்வபாபேப்ய: ஸமுச்யேத மஹாமுனே ||

உண்மை ஸ்வரூப தத்துவம்

புராணங்களில், தேச கால விவகாரங்களுக்குச் சம்பந்தப்படுத்தி குமாரன், ஈச்ஸுனன், குஹன், ஸ்கந்தன், ஸேனாபதி, சக்திபாணி, மயூராதிரூடன், வள்ளீகாந்தன், பக்தார்த்திஹாரின், ப்ரபு, தாரகாரி— என ஸ்ரீ ஸுப்ரமண்யரின் உண்மை ஸ்வரூபத்தை விளக்கவந்தவை

இவ்வடிவங்கள். இதுபற்றி, ஸ்ரீவித்யா ஸம்ப்ரதாயத்தை தென்னாட்டில் மேலோங்கச் செய்தவரும், ஸுப்ரஹ்மண்யோபாஸனை (ப்ரம்மண்யம்) செய்தவரும். வேதாந்த வழியிலும் அத்வைத பரமாகவும் தத்துவார்த்தங்களை விளக்கியவரும் 'சார்' 'சிதாநந்தர்' எனப் பெயருடன் விளங்கிய அருட்கவி ந.சுப்ரமண்ய அய்யர் அவர்கள் 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய தத்துவம்' என்ற நூலை இயற்றியுள்ளார். அதில் அவர் தரும் தத்துவங்களையும் சற்று நோக்குவோம்.

ஞானிகள், யோகிகள் மற்றும் உபாஸனை செய்பவர்கள் தியானிக்கவும் பூஜிக்கவும் பரப்ரம்மத்தின் ஒரு வடிவைக் கொள்கின்றனர். தேச கால வியவகாரங்களுடனான ஸகுண பிரம்மோபாஸனையால் (உருவம்) தான் ஸ்வரூப லக்ஷணம் கொண்ட நிர்குண பிரம்மத்தை அறிய முடியும் என்பது நியதி. இவ்வடிவங்களின் அத்யாத்ம தத்துவத்தை ஆராய்ந்தால், உண்மை ஸ்வரூபத்தை உணரலாம் என்ற அடிப்படை கருத்திலேயே மேற்படி நூலை அவர் இயற்றினார்.

'ஸுப்ரமண்ய நாமங்களின் தத்துவம்' என்றே ஒரு தலைப்பில் அந்நூலில் விமர்சிக்கிறார்.

குமாரன்

காமம், குரோதம் முதலிய அசுத்த வாஸனா வடிவங்கள் — அசுரர்கள். இவர்களை ஸம்ஹரிப்பவன். இஹலோகத்தில் ஜீவன்முக்தியைத் தரக்கூடியவன் என்பதாம். இதுவும் ஒரு அருளிச் செயல். மும்மலங்களை யொழிப்பவன் என்றும் கொள்ளலாம்.

ஈசஸூனு

'சார்' அவர்கள் 'ஹரஸூனு' என்ற பதத்தை விளக்குவார். 'ஹரன் — ஈசன்' பரமசிவன் அல்லவா? ஸம்ஹரிப்பவன் என்பதும் பொருள். உணர்தற்கு அரிய அத்விதீய சிவன், சிவயோக அனுபவத்தில் வெளிப்படுவதால் ஆனந்தஸ்வரூப ஸுப்ரஹ்மண்யராய் விளங்குகிறார். இதனால் ஹரஸூநு ஈசஸூனு எனப்படுகிறார்.

குஹன்

இதயத்தாமரை சிதாகாசத்தில் வெளிப்படக் கூடியவன். அந்தர்யாமியென விரவியிருப்பவன் என்றா கிறது. தஹரத்தில் (இதயத்தாமரையில்) உபாஸிக்கத் தக்கவன் குஹன் ஒருவனே.

ஸ்கந்தன்

காமக்ரோதாதி அகச்சத்துருக்களை அழிப்பவன்.

'சேய் அவன் வடிவம் ஆறும் நீ ஒன்றாய்ச் செய்தாய், ஆயதனாலே கந்தனெனும் நாமம் பெற்றான்' எனப் பார்வதி ஆறு சேய்களை ஒன்று சேர்த்து அணைக்க, வந்த வடிவமே (ஸ்) கந்தன்.

ஸேனாபதி

ஸேனானி, மஹாஸேனன், தேவஸேனாபதி என்ற நாமங்களும் இதையே குறிக்கும்.

தேவஸேனை என்பது ஆத்மகோசர விருத்திகளாகும். அது எப்படிப்பட்டது எனில் சுத்தஸத்வப் பிரதான அகண்டாகார வடிவமானது. ஞானம், சத்தியம், தமம், சிரவணம், எல்லா பிராணிகளிடத்தும் இனிமையா யிருத்தல், லஜ்ஜை, திதிக்ஷை, வெறுப்பின்மை, பூஜை, ஜபம், தியானம், மனோ வாக் காய ஞான யக்ஞங்களைச் செய்தல், பாத்திரமறிந்து பிச்சையிடல், சாந்தி முதலியவைகளான ஸத்வகுணங்களைத் தேவஸேனைகள் என்று பெரியோர் களால் குறிப்பிடப்படும். அதாவது, இக்குணங்களால் அடையக்கூடிய மஹிமை பொருந்தியவர் என்கிறார்.

சுகஸம்பந்தமான சித்த விருத்தியானது இந்திரிய விஷயங்களில் செல்வதை யானைக்கு ஒப்பிடுவர். அவற்றின் உபாதிகளை ஒழித்து, மிஞ்சும் ஞானம் 'ஞானவேழம்' (தெய்வயானை) எனப்படும்.

அருணகிரிநாதர் 'ஞானவேழ வகுப்'பில் கூறுவதையும் இங்கு நோக்குவது சிறப்பு.

பிரபஞ்சமனைத்தும் பிரகாசிக்க ஆதாரமான பிரபஞ்ச ஐஸ்வர்ய ஸர்வாதார சைதன்யலக்ஷணமாயுள்ள

சக்தியே தெய்வயானையாம். இச்சக்தியால் அலங்கரிக்கப் பட்டவன் தெய்வயானை காந்தன் (தேவஸேனாபதி) என்றும் கூறுவாராம் ஸ்ரீகோடகநல்லூர் சுந்தரஸ்வாமிகள். (இவர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்களின் குருவாவார்)

சக்திபாணி

'சக்திதரன்' என்றும் பொருள்படும் வேலை ஆயுதமாகக் கொண்டவன்.

சூலம் — பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமான ஜடசக்தி யாகும் மாயையின் கூறுகளாகும். (இச்சை ஞானம், கிரியை வடிவங்களாகும்).

வேல் — நிஷ்பிரபஞ்ச மோக்ஷ ஸாம்ராஜ்யத்திற்குக் காரணமான பிரம்மவித்யா ஸ்வரூபமானது. சித்சக்தியின் ஞானசக்தி யாகுமென்பர் பெரியோர். (சித்சக்தியின் கிரியாசக்திக் கூறு— தெய்வானை. சித்சக்தியின் இச்சாசக்திக் கூறு— வள்ளி)

வேல், அகண்டாகார விருத்தியாகும். அருணகிரியாரும் 'வேல் விடு தேசிகனே' என்கிறார். மேலும் 'என் புண்ணிய பாவ இருவினைகள் ஒழியும்படி, வீசும் ஒளியுடைய உன் வேலாயுதத்தை மறவேன்' என்கிறார்.

மயூராதிரூட

மயில் என்பது அதோ மாயை என்பர். இது ஆவரணசக்தியோடு கூடியது. இதற்கு அதிஷ்டானமாய் விளங்குபவன்.

புளிந்தாத்மஜாகாந்த

புளிந்தன் (வேடர்கள்) கர்மேந்திரிய, ஞானேந்திரி யங்கள்.

வள்ளிமலை — ஆக்ஞாஸ்தானம்

வள்ளி — ஜீவசக்தி (குண்டலினி ஸ்வரூபம்)

வேடர் தலைவன் — ஜீவன்

குகன் வேடரூபம் கொண்டது. ஸகுணஸாகார வடிவம்.

வள்ளி மனம் என்பது ஒரு ஜீவன், தன் ஆத்ம ஸ்வரூபத்தையறிந்து, பிரம்மத்தோடு அபேதப்பட்டு பரமானந்த வடிவ மோக்ஷத்தையடைவதே என்பர்.

தாரகாரி

அவித்தை வடிவ தாரகன் மூட இருள் வடிவ யானை முகத்தோடு கூடியவன். காமம், வெகுளி மயக்கங்களுக்குக் காரணமானது அவித்தை. மும்மலங்களில் தாரகன் — மாயாமலம்; மயக்கம் வேலால் தாரகன் கொல்லப் படுகிறான். வேல் — ஸ்வயம் பிரகாச அகண்டஞானம். குஹன் ஸச்சிதானந்த பரப்ரம்மம்.

இவ்வாறான சரீர வடிவங்களை ஏற்று, பல அரிய செயல்களைச் செய்வதாகப் புராணங்கள் பேசும். இதற்குக் காரணம் அன்பர்க்கு அருள் புரியவே, அவரது உண்மை ஸ்வரூபம் ஸுப்ரஹ்மண்யன் (குஹப்பிரமம் எனவும் அழைப்பர்) எத்தகையது?

ஓலமறைகள் அறைகின்ற வொன்றது
மேலை வெளியில் ஒளிரும் பரஞ்சுடர்
ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவர் – எவராலும்

ஓத அரிய துரியங் கடந்தது
போத அருவ சொரூபம் பிரபஞ்சமும்
ஊனுமுயிரு முழுதுங்கலந்தது – சிவஞானம்

சால உடையதவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றியன்பர் சொ னவியோமம்

சாரு மனுப வரமைந்த மைந்த மெய்
வீடு பரம ஸுகஸிந்து ஷண்முக
பால குமர குஹகந்த புங்கவன் வடிவோனே.

மனதிற்கும் இந்திரியங்களுக்கும் அதிஷ்டான் தேவதை 'ஷண்முகன்' ஷண்முகனின் பதினாறு நாமாக் களைக் கூறி ஜபம் செய்வது சிறப்பாகும். அதுவே தவம்.

அதற்கேற்ப, குமாராய நம:, ஈசஸூனவே நம:, குஹாய நம:, ஸ்கந்தாய நம:, ஸேனாபதயே நம:, சக்திபாணே நம:, மயூராதிரூடாய நம:, புளிந்தாத்மஜா காந்தாய நம:, ப்ரபவே நம:, தாரகாரிணே நம: என ஜபித்தல் ஒரு ரஹஸ்யம் என்பர் பெரியோர்.

கருத்து

இறைவனின் உண்மை ஸ்வரூபத்தையறிய, குணங்கள் பெருமைகளுடான வடிவங்களை தியானித்து வழிபட வேண்டும். அவ்வாறான தியானவழிபாட்டுவடிவங்களே அவை. ஸுப்ரமண்யரின் விசேஷமான இந்த பதினோரு நாமாக்களை ஜபிப்பது அல்லது நாமாக்களுடைய இச்சுலோகத்தை பாராயணம் செய்வதால் இஹபரசுகங் களை யடையமுடியும் என்பது ஆதிசங்கரரின் கருத்து ஆகும்.

ப்ராசீன ஸ்லோகம் ஒன்று

காங்கேயம் வஹ்னிகர்பம் சரவணஜனிதம்
ஞானசக்திம் குமாரம்
ப்ரஹ்மண்யம் ஸ்கந்ததேவம் குஹம் அசலஸுதம்
ருத்ரதேஜஸ்வரூபம் |
ஸேனான்யம் தாரகக்னம் குரும் அசலபதிம்
கார்த்திகேயம் ஷடாஸ்யம்
ஸுப்ரஹ்மண்யம் மயூரத்வ ஸஹிதம் தேவதேவம் நமாமி |

சிற்றம்பல நாடிகளின் நாமங்கள்

திருச்செந்தூர் அகவலில் சிற்றபலநாடிகள் உபாஸனா மூர்த்தி வணக்கத்தின் நாம வணக்கத்தைக் கூறுவதும் நோக்கத்தக்கது.

முருகன் குமரன் மூவிருமுகன் மால்
மருகன் சிவனருள் மைந்தன் கந்தன்
மலைமகள் பாலன் வயங்கிளர் வேலன்
கலைமயில் புலவன் கார்த்திகேயன்
வளையொரு மருப்பு வாரணமுகற்(கு)

இளையவன் குகன் மயிலேறும் பெருமாள்
சூரசங்காரன் சுப்பிரமணியன்
வீரருள் வீரன் விரைகமழ் கடம்பன்
சேந்தன் வள்ளி தெய்வானை
காந்தன் செவ்வேள் காங்கேயன் சிலம்பன்
ஆயிரம் நாமத்(து) ஐயன் துய்யன்
சேயருட்கோமான் சேவல்துவசன்

என இருபத்தேழு நாமாக்களைக் கூறுகிறார் (இதை நான்கு முறை ஜபித்தால் (27x4) 108 ஆகும் என்பர் (சிலம்பன் — மலைகளுக்குத் தலைவன்).

அருணகிரிநாதர்

'முருகன் குமரன் குகன்' என்று மொழிந்
துருகுஞ் செயல்தந்துணர் வென்றருள்வாய்

என அருணகிரிநாதர், கந்தரனுபூதியின் 'முருகன் குமரன் குகன்' என்ற மூன்று நாமாக்கள் சிறந்தவை என்கிறார்.

ஸ்கந்தோ குஹோ குமார:

என்பது இதிஹாஸ புராணாதிகள்படி மூன்று முக்கிய நாமங்களாகவும் உள்ளன என்பதும் நினைவு கொள்ளத் தக்கது.

20

அநாதரக்ஷகன்

20. ப்ரஶாந்தேந்த்ரியே நஷ்டஸம்க்ஞே விசேஷ்டே
கபோத்காரிவக்த்ரே பயோத்கம்பிகாத்ரே |
ப்ரயானோன்முகே மய்யனாதே ததானீம்
த்ருதம்மே தயாளோ பவாக்ரே குஹ !த்வம் ||

பதவுரை

ப்ரஶாந்தேந்த்ரியே நஷ்டஸம்க்ஞே — *என்னுடைய இந்திரியங்கள் எல்லாம் ஒடுங்கி, நினைவும் கெட்டுப் போய்;* விசேஷ்டே — *ஆற்றாமையில்;* கபோத்காரி வக்த்ரே — *கோழைகள் வழியும் முகத்தையும்;* பயோத் கம்பி காத்ரே — *பயத்தால் நடுங்கும் சரீரத்தையுடையவனான;* ப்ரயாணன்முகே — *கடைசி பயணத்தில் (மரணநேரத்தில்) ஆளின்றி;* மை அநாதே — *அநாதையாக ஆவேனோ;* ததானீம் தயாளோ த்வம் — *அப்போது தயாளுவான தாங்கள்;* த்ருதம் மே பவ அக்ரே — *விரைவில் எனது எதிரில் எழுந்தருள வேண்டுகிறேன்.*

விளக்கவுரை

ப்ரஶாந்தேந்த்ரியே நஷ்டஸம்க்ஞே விசேஷ்டே
கபோத்காரி வக்த்ரே பயோத்கம்பி காத்ரே

அமைதியாக இருந்த என்னுடைய இந்திரியங்கள் தம் செயலை இழந்த நேரத்தில், மெய் (உடல்) தள்ளாட்டம் கண்டு, நடுங்கித் தடுமாறி, வாய் தெளிவாகப்பேச இயலாது, நாக்குக் குழற, உணவு விழுங்க இயலாது, கண் தன் பார்வையையிழந்து, மூக்கு தன் ஸ்வாசத்தை சரிவர

உட்செலுத்தி வெளியேற்ற இயலாது, முகரும் சக்தி குறைந்து, செவிகள் கேட்டும்திறனை இழந்து எனப் பஞ்ச இந்திரியங்களும் செயல் தன்மைகளை இழக்கும் வேளையில்,

நினைவாற்றலும் நஷ்டமென ஆகி(குறைந்து) நினைவு தடுமாறிக் கெட்டு,

கோழை (கபம்) மிகுதியாகி முகத்தில் வழிந்து வெளிப்பட

பயத்தினால், பலகீனத்தாலும் மனபீதியினாலும் உடல் நடுக்கமேற்பட்டு,

ப்ரயாணோன்முகே மைய்யநாதே ததானீம்

ப்ரயாண உன்முகே, பயணமாகிய மரணமென்னும் கடைசிப் பயணம் ஆரம்பிக்கும் வேளையில், எனக்கு யாரும் உதவமுடியாமல், காப்பாற்ற இயலாதபடி தனியாக அனாதை போலாவேன் அப்போது,

த்ருதம் மே தயானோ பவாக்ரே குஹத்வம்

மரணகாலத்தில் பரமனை நினைத்து ஸ்தோத் தரிக்கையில் அல்லது பெயரை கூறி அழைத்தாலும் மோக்ஷம் உண்டாகும் என்பது ஒரு நம்பிக்கை. அதற்கு உதவியாக இருக்கவே இறைவன்—இறைவி பெயர்களைக் குழந்தைகளுக்கு வைத்துக் கூப்பிடுவது வழக்கம்.

இந்திரியங்கள் அடங்கும் நிலையில், இந்திரியங் களுக்கு அதிதேவதை எனக்குறிப்பிடப்பட்ட ஸுப்ரமண்ய ஸ்வாமியே அவைகளுக்கு சக்தியைக் கொடுப்பவரன்றோ?

தன் நிலையிழக்த நிலையில், அதாவது அந்திம காலத்தில் ஓங்காரப் பொருளான ஸுப்ரமண்யனை நினைக்க வேண்டும் 'கந்தா: குமரா! ஸுப்ரமண்யா! எனக் கூறுவதற்கும் சக்தியைத் தருவது அந்த ஸுப்ரமண்யனே!

'அந்நேரம், கருணை மிகுந்தவனே! தயாளுவே, நைந்த நிலையிலுள்ள என்முன் உற்ற துணையென எழுந்தருள வேண்டும்' எனப் பிரார்த்திக்கிறார் ஆதிசங்கரர்.

எங்கே நினைப்பினும் அங்கேயென் முன் வந்தெதிர் நிற்பனே' என கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் கூறுகிறார்.

கணக்கற்ற உயிர்களில் குகன் ஒருவரே ஊடுருவியுள்ளான். அது எதைப் போல் எனில் மணிகள் கோர்த்த மாலையின் நூல் உள்ளதைப் போன்றதாகும்.

அருணகிரியாகும் தம் திருப்புகழில்,

பவ சாகரத்தில் அழுந்தி எழுதுளம்
ஆறெழுத்தை நினைந்து 'குகா குகா' எனும்
வகை வராதோ

குகனின் அருள் நினைந்து பாடுகிறார்.

கருத்து

அநாதரக்ஷகன், ஆபத்பாந்தவன் ஸுப்ரமணியன் என்பது இந்த ஸ்லோகத்தால் வெளிப்படுத்தப்படுகிறது. மரணகாலத்தில் கை கொடுக்கும் தெய்வமாகும்.

21

ஆந்திமகாலத்து ரக்ஷகன்

21. க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபாத்
தஹச்சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு |
மயூரம் ஸமாருஹ்ய மா பீரிதித்வம்
புரஸ்ஸக்திபாணிர் மமாயாஹி சீக்ரம் ||

பதவுரை

க்ருதாத்ந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபாத் — கொடிய பயங்கரமான யமதூதர்கள் கோபத்தினால்; தஹ சிக்தி பிக்தி இதி மாம் தர்ஜயத்ஸு — கொளுத்து, வெட்டு குத்து என என்னைப் பயமுறுத்தும் போது; த்வம் — தாங்கள்; மயூரம் ஸமாருஹ்ய — மயில்மீது ஏறி; மாபீ: இதி — 'அஞ்சேல்' என; சக்தி பாணி: — வேல் ஆயுதத்தைத் தாங்கியவராக; மம புர: — என் முன்னே; ஆயாஹி சீக்ரம் — சீக்கிரம் வரட்டும்.

விளக்கவுரை

க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு கோபாத்
தஹச்சிந்தி பிந்தீதி மாம் தர்ஜயத் ஸு |

எமன் பாசக்கயிற்றை வீசும்போது ஆறுமுகனே நம்மைக் காப்பாற்றுவர். யமன் என்னிடம் வந்தால் விரைவாக மயில் மீது என்முன்னே வர வேண்டுமென வேண்டுகிறார்.

மரணம் தவிர்க்கமுடியாதது. மனிதனின் மிகப் பெரிய பயம் மரணபயமாகும். மரணமில்லாப் பெருவாழ்வு நமக்குத் தேவை

யமன் தருமதேவதை, யமகிங்கரர்கள் கொடும் சுபாவமுள்ளவர்கள். உயிர்களை அதட்டி எரி (கொளுத்து) வெட்டு, குத்து எனத் துன்பம் செய்வார்கள்.

'சமநாந்தகம்' என யமனையடக்கியவராக சந்த்ரசேகர ஸ்வாமி போற்றப்படுகிறார். யமனைக் கண்டு பயந்த மார்க்கண்டேயர் சிவனைக் கட்டிக் கொண்டு சந்திர சேகராஷ்டகம் பாடினார். யாதொரு பயமுமின்றி விளங்கிட அச்சுலோகங்கள் உதவும் எனப் புராணங்கள் போற்றும்.

அதிபீஷண கடுபாஷண யமகிங்கர படலீ
த்ருத தாடன பரிபீடன மரணாகத ஸமயே |
சிவசங்கர சிவசங்கர ஹரமே துரிதம் |

என்று யமகிங்கரர்களின் உபாதைகள் குறிப்பிடப் படுகின்றன.

பூத ப்ரேத பிசாசங்களுக்கு எதிராக நம்மைக் காப்பாற்றுபவர் சங்கரன். பூதப்படைகளையுமுடைய சங்கரன் மகன் நம்மைக் காப்பாற்றுபவன் என்ற கருத்தினாலேயே ஆதிசங்கரர் இந்த ஸ்லோகத்தில் குறிப்பிடுகிறார்.

அத்தகைய யமதூதர்கள் வெட்டு, குத்து என பய முறுத்தும் வேளையில், நமக்குப் புகலிடம் ஸுப்ரமணி யனே! 'யாமிருக்க பயமேன்' எனக் கூறி ரக்ஷிக்கிறார் அபயமளிக்கிறார்.

பாலன்தேவராயரோ,

கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

எனச் சஷ்டி கவசத்தில் வேண்டுகிறார்.

அருணகிரியாரும் கந்தரலங்காரத்தில்,

ஆவிக்கு மோசம் வருமாறறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றிலேன் வினை தீர்த்தருளாய்

எனக் கெஞ்சுகிறார். அதே கந்தரலங்காரத்தில் பிறிதொரு இடத்தில்,

எமராசன் விட்ட கடையேடு வந்தினியென் செயுமே

என்கிறார். ஸுப்ரமண்யரை உபாசிப்பதால் ஏற்படும் தைரியத்தில் அருணகிரியாரும் பாலன் தேவராயரும் போற்றிப் பாடுகின்றனர்.

சண்முககவசத்தில் பாம்பன் ஸ்வாமிகள்,

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்க
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரியமேனி எமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தாரகாரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க

என எமதூதர் வந்தாலும் முருகன்கை வேல் காக்க என்று போற்றுகிறார்.

மயூரம் ஸமாருஹ்ய மாபீ இதி த்வம்

மயில் வாஹனத்தில் ஏறிக் கொண்டும் சக்தி (வேல்) ஆயுதத்தை ஏந்திக் கொண்டு தான் சக்திபாணியாகவும், 'மாபை:' என்று கூறி தன் முன் வரவேண்டுகிறார்.

வேதமே மயிலாகி ஸுப்ரமண்யரின் வாஹனமானது என்பது தாத்பர்யம்.

மயிலின் மீது வேலாயுதத்துடன் வந்து ரக்ஷிக்கிறார்.

'மாபை:' என்பது ஒரு உபநிஷத் வாக்யம். இதனைச் சிறப்பித்துக் கூறுவார் தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்திரிகள்.

அபயம் என்பது மோக்ஷத்தையும் குறிக்கும். மோக்ஷமானாலும் ஞானமே ஸாதனமாகிறது. எனவே, ஸுப்ரமண்யஸ்வாமியின் தரிசனமே யம வாதனையைத் தவிர்த்து மோக்ஷ ஸாதனத்திற்கு வழி காட்டுகிறது என்பது தெளிவு.

'அஞ்சேல்', 'யாமிருக்க பயமேன்' என்றெல்லாம் முருகனைப் படங்களிலெழுதுவதன் குறிப்பே இக்கருத்துக்களினால்தான்.

புர: சக்திபாணி: மமாயாஹி சீக்ரம்

ஞானம் (ப்ரம்மவித்யையான பராசக்தி) சக்தி ஆயுதமாக ஏந்தப்பட்டுள்ளது. ஞானத்தால் தான் மோக்ஷம்.

சக்திபாணியான ஸுப்ரமண்யரை உபாஸிப்பதாலேயே நாம் எல்லா நலன்களையும் அடையலாம்.

என்முன் விரைவாக வந்தருளவேண்டுமென முடிவில் ஆதிசங்கரர் கூறுகிறார்.

ஆதிசங்கரரின் இந்த கருத்தையே அருணகிரிநாதர், கந்தரனுபூதியிலும் திருச்செந்தூர் திருப்புகழிலும் பிரதிபலிக்கிறார்.

கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்மாமிசை வந்தெதிர்ப்படுவாய்

எனக் கரிய எருமையின் மீது காலன் வரும்போது, அழகிய தோகைமயில் வாஹனத்தில், எழுந்தருளி என்னெதிரே வந்து தரிசனம் தருக என்கிறார்.

அருணகிரிநாதர் தம் திருப்புகழ்ப் பாடல்களில், குறிப்பாக திருச்செந்தூர் பாடல்களிலேயே மேற்படி கருத்தைத் தெரிவித்துப் பாடுகிறார்.

பங்கவாள் முக முடுகிய நெடுகிய திரிசூலம்
பந்த பாசமும் மருவிய கரதல
மிஞ்சி நீடிய கருமுகில் உருவொடு
பண்பு இலாது ஒரு பகடு அது முதுகில் யமராஜன்
அஞ்சவே வரும் அவதரமதில் ஒரு
தஞ்சம் ஆகியே வழிவழி அருள்பெறும்
. . . .
அந்த மோகன மயிலினில் இயலுடன் வரவேணும்

('பஞ்சபாதக உறுபிறை எயிறு எரி' என்ற பாடல்) வலிய நீண்ட சூலமும், பாசக்கயிறும் ஏந்தி, கரிய நிற எருமையின் மீதமர்ந்த கோரரூப எமன் வரும் சமயத்தில் ஒப்பற்றதுணையாக உக்ரமயில்வாஹனத்தில் அமர்ந்து வந்து எனக்கருள்புரிய வேண்டும் என வேண்டுகிறார்.

'தந்த பசிதனை அறிந்து' எனத்துவங்கும் திருச்செந்தூர் திருப்புகழில்

மயங்க மகிடமிசை ஏறி
அந்தகன் எனை அடர்ந்து வருகையில்
அஞ்சல் என வலிய மயில்மேல் நீ
அந்த மறலியொடு உகந்த மனிதன் நமது
அன்பன் என மொழிய வருவாயே

எனப் பாடுகிறார். 'ஒப்புமையற்ற எருமைக்கடாவின் மீதேறி கூற்றுவன் என்னுயிரைப் பறிக்க வரும்போது, அஞ்சேல், எனக்குபயமளித்து, அக் கூற்றுவனிடம் என்னை உன் நண்பன் எனக்கூறியருள மயில்மீது அமர்ந்து வரவேண்டும்' என்கிறார்.

'தொந்திசரிய' எனத்துவங்கும் திருச்செந்தூர் திருப்புகழில்,

மங்கை அழுது விழவே யமபடர்கள்
நின்று சருவமலம் ஒழுக உயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்

எனப்பாடுகிறார்.

யமதூதர்கள் என்னுயிரைப் பற்ற நெருங்குகையில், மலம் நீர்போலொழுகவும் என் உயிர் மங்கும்போது, விரைவாக மயில்வாகனத்தின்மீது வந்து அருள்புரிய வேண்டிப்பாடுகிறார்.

சுவாமிமலை, கதிர்காமத் திருப்புகழ்களிலும் இத்தகைய கருத்துடைய பாடல்கள் உள்ளன.

ஸுப்ரமண்ய புஜங்க ப்ரயாதம் (1)ல்

நம: காலகண்டப்ரரூடாய தஸ்மை
நமோ நீலகண்டாதிரூடாய தஸ்மை

என்கிறார் ஆதிசங்கரர்.

கருத்து

அந்திமகாலத்தில் ஸுப்ரமண்யரின் தரிசனம்தான் கடைத்தேற வழிவகுக்கும் என்பது தெளிவு.

ஆதிசங்கரர் குறிப்பிட்ட சில நோய்களையே குறிப்பிட்டுள்ளார். அருணகிரிநாதரோ, பல திருப்புகழ்ப்பாடல்களில் பல நோய்களைக் குறிப்பிட்டு, அவை தம்மை அணுகாவண்ணம் காக்க வேண்டுகிறார். அவற்றைச் சற்று காண்போம்.

திருத்தணித்தலத் திருப்புகழில்

இருமலும் ரோக முயலகன் வாதம்
எரிகுண நாசிவிடமே நீ
நீரிழிவு விடாத தலைவலி சோகை
எழுகளமாலை இவையோடே
பெருவயிறு ஈளை எரிகுலை சூலை
பெருவலி வேறும் உள நோய்கள்
பிறவிகள் தோறும் எனை நலியாத
படி உனதாள்கள் அருள்வாயே

எனப் பிரார்த்திக்கிறார்.

சுவாமிமலைத் திருப்புகழில்

வாதமொடு சூலை கண்டமாலை குலை நோவு கந்து
மாவலி விலாதி குன்மமொடு காசம்
வாயுவுடனே பரந்த தாமரைகள் பீனிசம் பின்
மாதர்தரு பூஷணங்கள் என ஆகும்
பாதக வியாதி புண்கள் ஆனது உடனே தொடர்ந்து
. . . .
ஈர அருள் கூர வந்து ஆள்வாய்

என வேண்டுகிறார்.

பழனித்தல திருப்புகழில்,

வாதம் பித்த மிடாவயிறு ஈளைகள்
சீதம் பல்சனி சூலை மகோதரம்
மாசு அம் கண் பெருமூல வியாதிகள் குளிர்காசம்
மாறும் கக்கலோடே சில நோய்ப் பிணியோடும்
. . . . மூடனை
தூஅம் சுத்த அடியார் அடிசேர நின் அருள்தாராய்

எனவே இறைஞ்சுகின்றார்.

மற்றுமோர் பாடல் பழனித்திருப்புகழில்

தலைவலி மருத்தீடு காமாலை சோகை சுரம்
விழிவலி வறல் சூலை காயாசுவாசம் வெகுசலம்
மிகுவிஷப்பாகம் மாயா விகாரப் பிணி அணுகாதே!

என அருள்புரிய வேண்டுகிறார்.

மற்றுமோர் சுவாமிமலைத் திருப்புகழில்,

சுற்றிய நரம்புகள் எலும்பு உறு தசைகுடல் ஒடு
அப்பு நிணம் சளி வலிப்பு உடன் இரத்த குகை
சுக்கிலம் விளை புழுவொடு அக்கையும்
அழுக்கு சங்கு மூளை
துக்கம் விளைவித்த பிணையல் கறைமுளை பெருகு
குட்டம் ஒடு விப்புருதி புற்று எழுதல் முட்டு வலி
துச்சி பிளவை பொருமல் பித்தமொடு உறக்கம் மிக
அங்கம் ஊடே
. . . . மயக்கம் ஊறல்

— என பட்டியலிட்டு அவற்றினின்று விலகியிருக்க அருள் செய்ய வேண்டுகிறார்.

22

கராவலம்பனம்

22. ப்ரணம்யாஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா
ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயேऽநேகவாரம் |
நவக்தும் க்ஷமோஹம் ததானீம் க்ருபாப்தே
நகார்யாந்தகாலே மனாகப்யுபேக்ஷா ||

பதவுரை

ப்ரணம்ய அஸக்ருத் — *பலமுறை நமஸ்கரித்து;* பாதயோ: தே பதித்வா — *உமது பாதங்களில் வீழ்ந்து;* ப்ரஸாத்ய — *சந்தோஷமாக;* ப்ரார்த்தயே அநேக வாரம் — *பல தடவைகள் பிரார்த்திக்கிறேன்;* அந்தகாலே — *மரண வேளையில்;* நவக்தும் க்ஷம: அஹம் — *நான் பேச சக்தியற்றவனாக;* ததானீம் — *அப்போது இருப்பேன்;* க்ருபாப்தே — *கருணைக் கடலே!* மனாக் அபி உபேக்ஷா — *சிறிதும் கைவிடுதல்;* ந கார்யா — *செய்யலாகாது.*

விளக்கவுரை

மரண வேளை நெருங்கும் போது எதிரில் காட்சிதர வேண்டினார் (ஸ்.20) யமகிங்கரர்கள் பயமுறுத்தும் போது வேல் ஏந்தி மயில்வாஹனனாய் எழுந்தருள வேண்டினார் (ஸ் 21) தற்போது, பல தடவை பிரார்த்திக்கும் தன்னைக் கைவிடலாகாது என்கிறார்.

ப்ரணம்யாஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா
ப்ரஸாத்யப்ரபோ ப்ரார்த்தயேSநேகவாரம் |

முந்தைய ஸ்லோகத்தில், மரண நெருக்கத்தின் ஸுப்ரமண்யக்கடவுளை தரிசிக்கவேண்டும் என்று ஆதிசங்கரர் வேண்டினார்.

ஸுப்ரமண்யரின் பாதகமலங்களே கதியென பக்தியுடன் நமஸ்கரிக்கிறார். மீண்டும் மீண்டும் பலதடவை நமஸ்கரிக்கிறார். உள்ளத்தில் மகிழ்ச்சி ததும்பும். ஆனால் உடல் ஒத்துழைக்கவேண்டுமே இருந்தும் நமஸ்கரிக்கிறார்.

இவ்வாறு மீண்டும் மீண்டும், ஆதிசங்கரர் நமஸ்கரிப்பதை ஸுப்ர. புஜங்க ப்ரயாதம் (1)ல் காணமுடிகிறது.

நம: ப்ரோல்லஸச் சாருசூடாய தஸ்மை
நமோ திவ்யரூபாய சாந்தாய தஸ்மை ||

நமஸ்தே பார்வதி நந்தனாய
ஸ்புரச்சித்ர பர்ஹீக்ருதஸ்யந்த நாய |
நமச்சர்சிதாங்கோஜ் ஜ்வலச் சந்தனாய
ப்ரவிச்சேதித ப்ராணப்ருத் பந்தநாய ||

'நமஸ்தே நமஸ்தே ஜகத்பாவ நாந்த
ஸ்வரூபாய தஸ்மை ஜகஜ் ஜீவனாய |
நமஸ்தே நமஸ்தே ஜகத்வந்திதாய
ஹ்ரியரூபாய தஸ்மை ஜகந்மோஹ நாய ||

'நமஸ்தே நமஸ்தே நம: க்ரௌஞ்சபேத்ரே
நமஸ்தே நமஸ்தே நமோ விஸ்வகர்த்ரே
நமஸ்தே நமஸ்தே நமோ விஸ்வகோப்த்ரே

'நமஸ்தே நமஸ்தே நமோ விஸ்வபர்த்ரே
நமஸ்தே நமஸ்தே நமோ விஸ்வதாத்ரே |
நமஸ்தே நமஸ்தே நமோ விஸ்வநேத்ரே
நமஸ்தே நமஸ்தே நமோ விஸ்வசாஸ்த்ரே

ஸுப்ர. புஜங்கப்ரயாதம் (2) ல்

'நமஸ்தே நமஸ்தே மஹாசக்திபாணே
நமஸ்தே நமஸ்தே நமத்வஜ்ர பாணே |

நமஸ்தே நமஸ்தே கடின்யஸ்த பாணே
நமஸ்தே நமஸ்தே ஸதாபீஷ்டதாத்ரே ||

'நமஸ்தே நமஸ்தே ஸதாசக்தி தாரின்
நமஸ்தே ஸுராணாம் மஹாஸௌக்யதாயின்
நமஸ்தே ஸதா குக்குடேசாங்ககேதோ
ஸமஸ்தாபராதம் விபோமே க்ஷமஸ்வ

என நமஸ்கரிக்கிறார் பலதடவை.

பிறப்புக்கள் தீர ஸுப்ரமண்யரின் பாதாரவிந்தங்களே கதி நான், எனது என்ற எண்ணங்களிலிருந்து விடுபட வேண்டும். அதற்கு ஸுப்ரமண்யனை ஆராதித்து அவரது அனுக்ரஹத்திற்கும் பாத்திரராக வேண்டும். அநுகூலமாக நமஸ்காரங்களைச் செய்து கொண்டு தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

நவக்தும் க்ஷமோஹம் ததானீம் க்ருபாப்தே
ந கார்யாந்தகாலே மனாகப்யுபேக்ஷா ||

'பேசவும் சக்தியற்ற நிலையில் இருக்கும் என்னைக் கைவிடலாகாது' எனக் கூறி வேண்டுகிறார்.

அவலம்பனம் — சார்ந்துள்ளவாறு, பற்றுக்கோடு

அவலம் பனம் — உதவி

ஸுப்ரமண்யஸ்வாமியே கதியென கராவலம் பாஷ்டகம் பாடப்பட்டுள்ளது. பாராயணமும் செய்யப் பட்டு வருகிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஸ்ரீவல்லீஸநாத ! மம தேஹி கராவலம்பம்

என அடிக்கடி ப்ரார்த்திக்கப்படும் ஸுப்ரமண்யர் கை கொடுத்து உதவவேண்டும்; கைவிடலாகாது என்று பிரார்த்திக்கப்படுகிறது.

ஸனத்குமார ஸம்ஹிதையில், 'உலகில் ஒரே சாஸ்திரம் ஸ்காந்தம்; ஒரே தெய்வம் ஈசபுத்ரனான ஷண்முகன்; ஒரே மோக்ஷம்தான் உள்ளது — அது ஸ்கந்த ஸாலோக்யம்; ஸுப்ரமணியனை வழிபடுவதன்றி வேறுவழியில்லை' எனக் கூறப்படுகிறது.

கலியில் கண்கண்ட தெய்வம் அவரே இத் தெய்வத்தை உபாஸிப்பவனே பாக்யசாலி, யோகியும் ஞானியும் கூட.

அப்படிப்பட்ட ஸுப்ரமண்யர் எப்படிப்பட்டவர் என்பதை 'க்ருபாப்தே' என அழைத்து ஆதிசங்கரர் விளக்குகிறார். க்ருபா— கருணை

க்ருபாஸமுத்ரம் ஸுமுகம் த்ரிநேத்ரம் ஜடாதரம்

என நடனராஜர் துதிக்கப்படுகிறார்.

கருணைக்கடல், கருணைவாரிதி, கருணைமாரி என்றெல்லாம் இறைவனும் இறைவியும் போற்றப்படுவர்.

மூககவி அவர்கள் ஸ்ரீமூகபஞ்சசதீயில், க்ருபையைத் தன் உருவமாகக் கொண்டு ஒரு பரம் பொருள் (காமாட்சி அன்னை) காஞ்சியில் ஒளிர்கிறது என்கிறார்.

மேலும் மூககவி, 'க்ருபாசாகரத்தையே தன் திருமேனியாகக் கொண்ட நதியொன்று' எனக் கூறி காமாட்சி அன்னை என்னும் நதி எனக் குறிப்பிடுகிறார்.

அவ்விதத்தில் ஆதிசங்கரரும் ஸுப்ரமண்ய ஸ்வாமியை 'க்ருபாப்தே' கருணைக்கடல் என அழைக்கிறார்.

எனவே அந்த ஸுப்ரமண்யனை தரிசித்து, வழிபட்டு யம வாதனை நீங்கப் பெற்று, மோக்ஷமடைதல் வேண்டும்.

அவர் என்னை கைவிட்டு விடாதே! என வேண்டுகிறார்.

கருத்து

தொடர்ந்து மூன்று ஸ்லோகங்களில், இந்திரியங்களில் அடங்கிய நிலை, மரணாவஸ்தை, பிரார்த்திக்க சக்தியற்ற நிலை ஆகியவற்றைக் குறிப்பிட்டுப் புலம்புகிறார். ஒரு முறையேனும், காட்சிதந்து கை கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் எனக் கருணைக் கடலான ஸுப்ரமண்யரை ஆதிசங்கரர் வேண்டுகிறார். அவருடைய நோயின் பாதிப்புகளை இவ்வாறு வார்த்தைகளால் வெளிப்படுத்தி நம்மை உணரவைக்கிறார்.

23

மனக்லேசம் நீக்குபவன்

23. ஸஹஸ்ராண்டபோக்தா த்வயா சூரநாமா
ஹதஸ்தாரக: ஸிம்ஹ வக்த்ரஸ்ச தைத்ய: |
மமாந்தர் ஹ்ருதிஸ்தம் மனக்லேச மேகம்
நஹம்ஸி ப்ரபோ ! கிம் கரோமி க்வயாமி ||

பதவுரை

ஸஹஸ்ராண்ட போக்தா — *ஆயிரம் அண்டங்களையும் ஆண்டு வந்த;* சூரநாமா — *சூரபத்மன் என்ற பெயருடைய;* தைத்ய: — *அசுரன்;* தாரக: ஸிம்ஹ வக்த்ரஸ்ச — *தாரகன், ஸிம்ஹவக்த்ரன் என்ற அசுரர்களும்;* ஹத: — *கொல்லப் பட்டார்கள்;* மம அந்தர் ஹ்ருதிஸ்தம் மன: க்லேசம் ஏகம் நஹம்ஸி — *என் உள்ளத்திலுள்ள ஒரே ஒரு மனக்லேசத்தை மட்டும் கொல்லாமல் இருக்கிறீர்;* ப்ரபோ — *ப்ரபுவே!;* அஹம் கிம் கரோமி க்வயாமி — *நான் என்ன செய்வேன்? எங்கு செல்வேன்?*

விளக்கவுரை

மனோவ்யாதிகளின் நிவர்த்திக்கும் ஸுப்ரமண்யனே தெய்வம் என்பது இந்த ஸ்லோகத்தால் தெரிகிறது.

**ஸஹஸ்ராண்ட போக்தா த்வயா சூரநாமா
ஹதஸ்தாரக: சிம்ஹவக்த்ரஸ்ச தைத்ய: |**

வீரமஹேந்திரபுரியில் சூரபத்மன் என்ற அசுரன் ஆண்டு வந்தான். அவனுக்குத் தாரகாசுரன், சிம்மவக்த்ரன் என்ற இரு சகோதரர்கள், மூவரும் தவம் செய்து

பரமேஸ்வரனிடமிருந்து வரங்களைப் பெற்றனர். ஆயிரம் அண்டங்களையும் தன் வசப்படுத்தி ஆண்டு வந்தனர். மஹாமாயாவியாகவும் விளங்கினர். இந்த்ரன் முதலான எல்லா தேவர்களும் தம் லோகங்களை இழந்து, அவனிடம் துன்பப்பட்டனர். எல்லாவற்றையும் அவர்கள் இழந்து மலைகளிலும், காடுகளிலும் மறைந்து வாழ்ந்தனர். இவர்களின் கஷ்டங்களைப் போக்க வந்தவரே ஸுப்ரமண்ய ஸ்வாமி.

தாரகாசுரன் மாயையில் வல்லவனாவான். ஸுப்ரமண்யர் போன்ற பரம்பொருளே மாயையை வெல்லமுடியுமன்றோ?

சிம்ஹவக்த்ரன் — சிங்கமுக அசுரன் சிங்கமுகாசுரன் சூரபத்மனின் மற்றொரு தம்பி. இவன் ஆயிரம் தலைகளும் இரண்டாயிரம் கைகளும் உடையவன். சூரபத்மனுடைய தீய குணங்கள் இவனுக்குக் கிடையாது. நீதிமான்; அண்ணனுக்குப் பல நீதிகள் கூறிப் பலனின்றி, போர்க்களம் புகுந்தவன். ஸுப்ரமண்யக் கடவுளின் பரம் பொருட் தன்மையை உணர்ந்தவன். தேவர்களும் சிங்கமுகாசுரனின் பலத்தையுணர்ந்தவர்கள். வீரபாகுவே முதலில் போருக் கனுப்பப்பட்டான். போர் யாருக்கும் சாதகமுமில்லாமல் நடந்தது. ஆயினும் சிங்கமுகாசுரன் தன் தாய் அளித்த மாயா பாசத்தை ஏவினான். பேரிருள் தோன்றி வீரபாகுவையும், பூதப் படையினரையும் மயக்கி உதயகிரியில் கிடக்கச் செய்தான்.

சிங்காமுகாசுரனின் தலைகளும் கைகளும் ஈஸ்வரன் தந்த வரத்தால் மீண்டும் மீண்டும் வளர்ந்தன. அவனைக் குலிசாயுதத்தால் ஸுப்ரமண்யர் கொன்றார்.

சூரபத்மன் வீரமாஹேந்திரபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அசுரன் இவன் தேவர்களைத் தொல்லைக்குட்படுத்தினான். தொல்லை மிகவே, தேவர்களைக் காக்க ஸுப்ரமண்யர் அவதாரம் ஏற்பட்டது. இலக்கியங்கள் சூரபன்மாவை, சூரன், சூர் என்றெல்லாம் குறிப்பிடும்.

தாரகனும், சிங்கமுகனும் அழிந்த பின்னர் சூரபத்மன் போருக்கு வந்தான். போர் மும்முரமாக நடந்தது. முடிவில் தாரகாசுரன், கந்தனையழிக்கச் சக்கரப்படையை ஏவினான். கந்தன் அதனைத் தம் கையிலேந்தினார். சூரன் விடுத்த அம்பைத் திரும்ப அவன்மீதே ஏவினான். அவனுடைய மாயைகள் ஒழிந்தன. தம் சிங்கவாஹனத்தில் ஏறிக் கொண்டு மாயைகள் சிலவற்றைக் காட்டினான். ஸுப்ரமண்யர் தம் பேருருவைக் (விஸ்வரூபம்) காட்டினார். அதனைக் கண்டதும் சூரனின் அறிவு தெளிந்தது.

கடல் நடுவில் மாமரமாக ஒளிந்திருந்த சூரனை ஸுப்ரமண்யர் வேலால் அழிக்கிறார். சூரபத்மாவின் உடல் இரு கூறுகளாகி சேவலும் மயிலுமாயின.

அவனுக்கு அருள் செய்யும் நோக்கில் சேவல் கொடியும், மயில் வாஹனமுமாயின.

சூருடை முழுமுதறடிந்த பேரிகைக்
கடுஞ்சின விறல் வேள்

என பதிற்றுப்பத்து இதனைக் குறிப்பிடும்.

வெண்திரைப் பரப்பிற் கடுஞ்சூர்க் கொன்ற
பெம்பூண் சே எய்

எனப் பெரும்பாணாற்றுப்படை கூறும்.

விரத அசுர சூர விபாடணனே

என்பார் அருணகிரிநாதர் (அனுபூதி)

கரங்கள் பன்னிரண்டில் கதிரும் ஆயுதத்தால்
தரங்குலைந்து ஓடத் தாரகாசுரன் முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர் திருச்செந்தூர் தேவசேனாதிப —சஷ்டிகவசம் (திருவேரகம்)

சிங்கமுகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானுகோபனும்
சூரனோடொத்த துட்டர்களோடு
கோரமே செய்யும் கொடிய ராக்கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்

ஆறிடச் செய்தவவ் வமரர்கள் தமக்குச்
சேனபதியாய் தெய்வீகபட்டமும்

—சஷ்டிகவசம் (பழமுதிர்ச்சோலை)

வீரமயிலேறி வெற்றிவேல் எடுத்து
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகாசுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள

—சஷ்டி கவசம் (குன்றுதோறாடல்)

ஆகிய தேவராயரின் வரிகள், ஸுப்ரமண்யரின் ஆற்றல் களைப் போற்றுவனவாக உள்ளன.

மமாந்தர் ஹ்ருதிஸ்தம் மன: க்லேசமேகம்
நஹம்ஸி ப்ரபோ! கிம் கரோமி க்வயாமி |

நம் உள்ளிருக்கும் காமம், க்ரோதம், லோபம் என்ற மூன்று சத்ருக்களே மேற்கூறிய சூரன், தாரகன், ஸிம்மவக்த்ரன் ஆகியோர் எனக் கூறுவதுண்டு.

காமக்ரோதாதிகளை ஸுப்ரமண்யரின் துணை கொண்டு வெற்றி கொண்டால் மோக்ஷஸாம்ராஜ்யம் உறுதி என்பதாகும். இந்த அக சத்ருக்களை நாசம் செய்யும் ஸுப்ரமண்யன் ரோகத்தையும் நீக்கும் தன்மையுடையவன்.

கிலேசங்கள் ஐந்தென்பர். அவை அவித்தை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம் என்பனவாகும். அவித்தை — அஞ்ஞானம்; அஸ்மிதை— தானெனும் மயக்கவுணர்வு; ராகம்— ஆசை; துவேஷம்— வெறுப்பு; அபிநிவேசம் — தனக்கும் சரீரத்திற்கும் உள்ள சம்பந்த நீக்கத்திலேற்படும் பயம். இவ்விடம் கூறப்படுவது மனக்லேசம்.

மனக்லேசம் என்ற வியாதிமட்டும் தன் மனதிற்குள் இருப்பதாகவும் அதையழிக்கவில்லையே என்கிறார். ஒரு ஞானியான அவர், பாமர ஜனங்களின் பொருட்டுப் பாமரனாக ஸுப்ரமண்யரை வேண்டுகிறார்.

சிந்தாகுலம் (சிந்தை ஆகுலம்) என்பார் அருணகிரியார். அவர் அனுபூதியில்,

சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வேலவனே

என்கிறார்.

அத்வைத கீர்த்தனானந்த லஹரியில் அச்சுத தாசர் பாடுவதையும் ஒப்பிட்டு நோக்கலாம்.

தெளியேன் மனக்கவலை நீங்கித்
தெளியும் யோசனை
அருளேயிதற்கு என் செய்குவன் (21)
தீராய் எந்தன் சிந்தாகுலம் தேவ (44)

துன்பமானது உடலுக்கு உள்ளத்துக்கு என இருவகைத்தாகும் உடலுக்கு வரும் துன்பத்தை நாமே தீர்த்துந் கொள்ள வழியுண்டு. மனக்கவலையை அறிவுமுதிர்ச்சி அனுபவத்தாலும், இறைவனாலும் மட்டுமே போக்கமுடியும். அத்தகைய மனக்லேச வியாதியை செந்தூர் ஸுப்ரமண்யன் மட்டுமே நிவர்த்தி செய்யமுடியும் என்பதை ஆதிசங்கரர் உணர்ந்தார். உணர்ந்து, நமக்கும் தெரியப்படுத்தி வழிகாட்டுகிறார்.

ப்ரபுவே!! எனக் குரலெழுப்பி நான் என்ன செய்யவேன்? எங்கு செல்வேன் என அரற்றுகிறார்.

கருத்து

மனக்லேச வியாதிக்கு மருந்து திருச்செந்தூர் ஸுப்ரமண்யஸ்வாமியே என்பதை நாம் அறியச் செய்கிறார். தீர்க்கமுடியாத வியாதிகளுக்கும் மனோ வியாதிகளுக்கும் ஸுப்ரமண்ய ஸ்வாமியே வைத்தியர் என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறார்.

24

மனக்கவலைகளை அழிக்க வேண்டல்

24. அஹம் ஸர்வதா து:கபாராவஸன்னோ
பவான் தீனபந்துஸ்த்வதன்யம் ந யாசே |
பவத் பக்திரோதம் ஸதா க்லுப்தபாதம்
மமாதிம் த்ருதம் நாஶயோமாஸுதத்வம் ||

பதவுரை

அஹம் — நான்; ஸர்வதா து: க பாரா வஸன்ன: — எப்போதும் துக்கபாரத்தினால் சோர்ந்திருப்பவன்; பவான் தீனபந்து: — தாங்களோ தீனர்களுக்கு உறைவிடமானவர்; த்வத் அன்யம் நயாசே — தங்களைத்தவிர வேறுயாரிடமும் யாசிக்கமாட்டேன்; பவத் பக்தி ரோதம் — தங்களிடத்தி லுள்ள பக்தியை கெடுக்கக் கூடிய; ஸதா க்லுப்தபாதம் — எப்போதும் துன்பத்தையே செய்கின்ற; மம ஆதீம் — என்னுடைய மனக்கவலையை; உமாஸுத த்வம் — உமையின் மைந்தனே! தாங்கள்; த்ருதம் நாசய — விரைவில் அழிக்க வேண்டும்.

விளக்கவுரை

முந்தைய ஸ்லோகத்தில் மனக்லேசத்தைக் குறிப்பிட்டு அதற்கான மருந்து செந்தூர் ஸுப்ரமண்யனே என்றார் இந்த ஸ்லோகத்தில் மனக்கவலையை விரைவில் அழிக்க வேண்டுகிறார்.

அஹம் ஸர்வதா துக்க பாராவஸன்னோ
பவான் தீனபந்துஸ்த்வதன்யம் நயாசே |

ஸம்ஸார ஸாகரத்தில், ஆதிதைவிகம், ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம் என்ற மூன்றினால் நல்வினைகள், தீவினைகளேற்படும்.

ஆதி தைவிகம் —தெய்வத்தால் வரும் இன்ப துன்பங்கள்

ஆத்யாத்மிகம் — உயிர்களால் வரும் இன்ப துன்பங்கள்

ஆதிபௌதிகம் — பஞ்சபூதங்களால் வரும் இன்ப துன்பங்கள்

ஸம்ஸாரதுக்கத்தை நீக்க வேண்டுமானால், மனம் கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மனம் கெடாம லிருக்க இறைவனான ஸுப்ரமண்யனை நினைத்திருப்பதே யாகும்.

உலகவாழ்க்கை எனும் போது ஆரம்பமுதல் இறுதி வரை துன்பந்தான். ஞானநெறி என்றால் ஆரம்பமுதல் இறுதிவரை இன்பமயமே.

துன்பம் எவ்வழியிலேனும் நமக்கு வரும் ஞான மின்மை, மக்கள், ஊர், நோய், ஆசை போன்றவை துன்பத்திற்கான வழிகள். துன்பங்கள் அதிகமாகி, துக்கச்சுமையைத் தாங்கியிருப்பதால் சோர்ந்திருப்போம்.

ஸுப்ரமண்யர் எப்படிப்பட்டவர்?

தீனபந்து, தயாசீலன் (15) தயாளு (20) கருணைக்கு இருப்பிடமான கருணாகரன், கருணைக்கடல். தீனர்களின் நண்பன் ஆவார். இரப்பவர்க்கு இஷ்டமுடன் வழங்கு பவன். அவரை விட்டால் எனக்கு யார் உள்ளார்' எனக் கேட்கிறார். அவரைத் தவிர வேறுயாரிடம் போய் கேட்கமுடியும்?' என்கிறார்.

துக்கத்தின் விளைவாக மனக்கவலை ஏற்படும். மனக்கவலையே நமக்கு முதல் எதிரி இதையொழிக்க ஸுப்ரமண்யரை வழிபடுவதைத் தவிரவும் வேறு வழியில்லை.

ஸுப்ரமண்யரின் காலடியே கதி எனப் பற்றிக் கொண்டால் பாபங்கள் ஒழியும். துக்க பாரம் மனக்கவலை (இதுவும் ஒருவித நோய் தான்) ஆகியவற்றிலிருந்தும் விடுபடலாம்.

ஸுப்ர. புஜங்க ப்ரயாதம் (2) ல், ஸுப்ரமண்யரிடம் பக்தி செலுத்துவதில் கெடுக்கக் கூடிய வகையிலிருந்ததாக குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

தயாஹீனசித்தம் பரத்ரோஹவ்ருத்தம்
ஸதாபாபரக்தம் குரௌ பக்திஹீனம் |
பவந்நேத்ரகாருண்யபூரணே மாம் போ
பவித்ரம் குரு த்வம் மஹாதேவஸூநோ ||

ஆதிசங்கரர், தம் ஆத்மபோதத்தில் முதல் ஸ்லோகத்திலேயே 'தவம், மனவடக்கம், அமைதி பெறுதல், பாபங்களான கெட்ட எண்ணங்களை விடுதல், தம் குற்றங்களை விட்டொழித்தல் ஆகியவைகளைக் கைக்கொண்டவர்களுக்காக எழுதுகிறேன்' என்கிறார். இவ்வழியில் செல்பவர்களுக்கு துக்கமுமில்லை, மனக் கவலையுமில்லையே!

பவத்பக்திரோதம் ஸதாக்லுப்தபாதம்

பவத் — 'தாங்கள்' எனச் சொன்னாலும், மேன்மை தங்கிய, கீர்த்திபெற்ற, உன்னத, பெருமைமிகு தேவரீர் போன்ற உயர்ந்த நிலைவுள்ளவரைக் குறித்ததாகும்.

பவத் பக்தி ரோதம் ஸ்வாமியிடம் பக்தி செய்வதைத் தடுக்கின்ற, தடைசெய்வதும் எப்போதும் (பாதகங்களை துன்பங்களைத் தருவதுமான என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். மம— என்னுடைய (ஆதிசங்கரருடைய), 'ஆதி' என்ற என் மனக்கவலையை விரைவாக நாசம் செய்யவேண்டும்.

உமாஸுதனே, உமாபுத்ரனே, உமாதேவியின் மகனே! தாங்கள் என் மனக்கவலையை விரைவாக நீக்கவேண்டும்.

புஜங்கஸ்தோத்திரத்தில் ஆதிசங்கரர், பராசக்தி புத்ரன், உமாஸுதன் என ஸுப்ரமண்யரைக் குறிப்பிடு கிறார். இதனால் ஸுப்ரமண்யரை உபாஸிப்பதால்,

ப்ரம்மவித்யாஸ்வரூபிணியான அம்பாளின் கடாக்ஷத்திற்குப் பாத்திரராக முடியும் என்பது நிதர்சனம்.

முத்துஸ்வாமி தீக்ஷிதர், திருத்தணி ஸுப்ரமண்யரின் அருள்பெற்று, அம்பாள் கிருதிகளையும் நவாவர்ண கீர்த்தனைகளையும் பாடினார்.

'சார்' 'சிதாந்தர்' எனப் பெயர் பெற்றுப் பெருமையுடன் விளங்கிய அருட்கவி ந.சுப்ரமண்ய அய்யர் அவர்கள். திருத்தணி ஸுப்ரமண்ய ஸ்வாமியை உபாஸித்து பெயர் பெற்ற ஸ்ரீ வித்யா உபாஸகரனார். தமிழ் நாட்டில் ஸ்ரீ வித்யை பிரபலமாக இவரே காரணம்.

கருத்து

துக்கபாரம், மனக்கவலை ஆகியவைகளைக் கொண்ட மனிதன், ஸுப்ரமண்யரை உபாஸித்துத் தன்னை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தெளிவு.

25

இலை விபூதி மஹிமை

25. அபஸ்மாரகுஷ்ட க்ஷயார்ஸ: ப்ரமேஹ
ஜ்வரோன்மாத குல்மாதி ரோகா மஹாந்த: |
பிஸாசாஸ்ச ஸர்வே பவத்பத்ரபூதிம்
விலோக்ய க்ஷணாத்தாரகாரே த்ரவந்தே ||

பதவுரை

அபஸ்மாரகுஷ்ட க்ஷயார்ச ப்ரமேஹ ஜ்வர உன்மாத குல்மாதி — *அபஸ்மாரம் குஷ்டம், ஷயரோகம், ப்ரமேகம், ஜ்வரம், பைத்தியம், குன்மம் முதலிய;* மஹாந்த: ரோகா: — *கொடிய நோய்களும்;* ஸர்வே பிஸாசாஸ்ச — *எல்லாவகையான பேய்களும்;* பவத் பத்ரபூதிம் — *தங்களுடைய இலை விபூதியை;* விலோக்ய — *பார்த்துவிட்டு,* தாரகாரியே — *தாரகனை வென்றவரே!;* க்ஷணாத் த்ரவந்தே — *அக்கணமே அகன்றுவிடுகின்றன.*

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில் இலைவிபூதி (பத்ரபூதி)யின் மஹிமை சொல்லப்படுகிறது.

அபஸ்மார குஷ்ட க்ஷயார்ச: ப்ரமேஹ
ஜ்வர உன்மாத குல்மாதிரோகா மஹாந்த: |

அபஸ்மாரம் என்பது காக்கைவலி, முயல் வலி போன்ற மூளை, நரம்பு சம்பந்தமான வியாதிகள், குஷ்டம், க்ஷயரோகம், ப்ரமேஹம், ஜ்வரம், உன்மாதம் எனப்படும் பைத்தியம், குன்மம் என்ற வயிறு சம்பந்தப்பட்ட வலி போன்றவை மஹாரோகங்கள் எனவும், கொடியவை

எனவும் ஆதிசங்கரர் குறிப்பிட்டுள்ளார். வேறு பிற நோய்களும் இதில் அடங்கக்கூடியதே.

ஆதிசங்கரர், மேற்கூறிய நோய்களை மட்டும் குறிப்பிட்டார். ஆனால், பாலன் தேவராயர் தம் சஷ்டி கவசத்தில், நோய்களின் பட்டியலைப் பெருக்கி, அவற்றினின்று காக்க வேண்டுகிறார்.

ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலைநோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை, சயம் குன்மம் சொக்கு சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப்பிரிதி
பக்கப்பிளவை படர் தொடைவாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரையாப்பும்
எல்லாப்பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கருள்வாய் (சஷ்டிகவசம்– செந்தூர்)

மண்டைவலியோடு வாதமும் குன்மமும்
சூலை காமாலை சொக்கலும் சயமும்
மூலரோகங்கள் முடக்குள் வலிப்பு
. . . .
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக்காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிட (சஷ்டிகவசம்– திருவேரகம்)

பாம்பன் சுவாமிகள் தம் சண்முககவசத்தில்

சுமவிழிநோய்கள் தந்த சூலையாக் கிராண ரோகம்
திமிர்கழல வாதஞ் சோகை சிரமடி கர்ணரோகம்
எமையணுகாமலே பன்னிரு புயன் சயவேல் காக்க (16)

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி கண்டமாலை
குமறுவிப்புருதி குன்மம் குடல்வலி ஈழை காசம்
நிமிரொணாதிருத்தும் வெட்டை நீர் பிரமேகம் எல்லாம்
எமையடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க (17)

(குமறுவிப்புருதி — உதடு வீங்கித் தொங்கும் நோய்)

இணக்கமில்லா பித்த எரிவு மாசுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டமூல வெண்முளதீ மந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலமென்றறையும் இந்த
பிணிக்குலம் எனையாளாமல் பெருஞ்சக்தி வடிவேல்
காக்க (18)

தவனமாரோகம் வாதஞ் சயித்தியம் அரோசகம் மெய்
சுவறவே செய்யும் மூலச்சூடு இளைப்புடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோயண்ட வாதங்கள் சூலை
எவையுமேன்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல்
காக்க (19)

நமைப்புறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்
அமர்ந்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் காக்க
இமைக்குமுன்னுறு வலிப் போடெழு புடைப் பகந்தராதி
இமைப்பொழுதேனும் என்னை யெய்தாமல் அருள்வேல்
காக்க (20)

மேற்கூறியவாறு பல நோய்களைக் குறிப்பிட்டு 'முருகன் கை வேல் காக்க' எனப்பாடுகிறார்.

'ஞானிகள் விவகாரம் உலக உபசாரம்' என்பது வழக்கு. அதற்கேற்ப, பாலன் தேவராயர், அருணகிரிநாதர், பாம்பன் ஸ்வாமிகள் போன்றோர் ஆதிசங்கரரைப் போன்றே இன்னல்கள் நீங்க முருகனைத் துதித்தனர். நோய்நீக்கம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆதிசங்கரர் திருச்செந்தூர் ஸுப்ரமண்யரைத் துதித்தார். தேவராயர் அறுபடை வீட்டு முருகனையும் துதித்து சஷ்டிகவசங்கள் பாடியுள்ளார். பாம்பன் ஸ்வாமிகள் ராமேஸ்வரம் மேலக் கோபுர வாயில் முருகனைத் துதித்து சண்முக கவசம் பாடினார்.

ஸுப்ரமண்யஸ்வாமியை ரோக நிவர்த்தி செய்யும் தெய்வமாகவே எல்லோரும் துதித்துள்ளனர். துதிகளும் அவ்வாறே பாடப்பட்டுள்ளன.

'மாம் பாஹி ரோகாதகோராத்,' 'காமரோகாதி ஸம்ஹாரி', எனவும், ரோகான் ஸதா ஸம்ஹரந்தம் எனவும் ஸ்ரீ ஸ்வாமிநாத ஷட்கம் போற்றுகிறது,

'நித்யான்னதான நிரதாகில ரோகஹாரின்'

'காமாதி ரோக கலுஷீக்ருத துஷ்டசித்தம்'

எனவும் ஸ்ரீ ஸ்வாமிநாத கராவலம்பம் போற்றுகிறது.

'ஸர்வசத்ரு க்ஷயகரம் ஸர்வரோக நிவாரணம்'

என ஸ்ரீ ஸுப்ரமண்ய மூலமந்த்ர ஸ்தவம் போற்றும். 'பக்த லோக ரோகதுக்க பாபஸங்க பஞ்ஜனம்' என ஆதிசங்கரர் திருச்செந்தூர் ஷண்முகர் மீதான ஸ்தோத்திரத்தில் துதிக்கிறார். ரோக ஹாரியாக (வியாதியை நிவர்த்திப் பவராக) ஸ்தோத்தரித்திருக்கிறார்.

பிஶாசாஶ்ச ஸர்வே

ஆதிசங்கரர், 'எல்லா பிசாசங்களும்' என ஒரே வார்த்தையில் கூறுகிறார். அதாவது 'பூத ப்ரேத பிசாசங்கள்' என்பதையே அவ்வாறும் குறிப்பிட்டுள்ளார்.

இவரின் அடியையொட்டியே, பின்வந்த அருணகிரி நாதர், பாலன் தேவராயர், பாம்பன் ஸ்வாமிகள் போன்றோர் சற்று விஸ்தாரமாகவே அவற்றை விளக்கி விரிவாகக் கூறுகின்றனர்.

பாலன் தேவராயர் தம் சஷ்டி கவசத்தில்,

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதங்கள் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராக்கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பசேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரும் மிகுபலப் பேய்களும்

. . . .

ஆனை அடியினில் அரும் பாவைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற்புதைத்த வஞ்சனைதனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட!
(சஷ்டிகவசம்– திருச்செந்தூர்)

துட்டதேவதையும் துட்டபிசாசும்
வெட்டுண்டபேயும் விரிசடைப்பூதமும்
வேதாளம் கூளி விடும் பில்லி வஞ்சனை,
பேதாளம் துர்கை பிடாரி நடுநடுங்க (சஷ்டிகவசம் – பழனி)

பில்லி வல்வினையும் பீனிசமேகம்
வல்லபூதங்கள் மாயமாய்ப் பறக்க

குட்டிச் சாத்தான் குணமிலாமாடன்
தட்டிலா இருளன் சண்டிபேதாளம்
சண்டமாமுனியும் தக்கராக்கதரும் (சஷ்டிகவசம்– திருவேரகம்)

இத்தனை பிசாசங்கள், பேய்கள், செய்வினைத் தெய்வங்களென விரிவாகத் தருகிறார்.

பாம்பன் ஸ்வாமிகள் சண்முக கவசத்தில்,

ஒலியெழ உரத்த சத்தத்தொடு வருபூதப்பேரதம்
பலிகொள் இராக்கதப் பேய் பலகணத்தெவையானாலும்
கிலி கொள எனை வேல் காக்க கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில் வேல்
காக்க (10)

— என வேண்டுகிறார்.

பவத் பத்ரபூதிம்

முந்தைய ஸ்லோகத்தில் 'பவத்' என்பதன் பொருளை யறிந்தோம். அங்கு 'பவத் பக்தி' என்றும், இங்கு, 'பவத்

பத்ரபூதி' என்றும் காண்கிறோம். இங்கும் உன்னதமான உயர்வான, வியத்தகு என்ற பொருளிலேயே அமைகிறது.

'பூதி' என்ற சொல்லுக்கு விபூதி, ஐஸ்வர்யம், திருவருள், உன்னதவடிவம், தனித்தன்மை, உடைமை, பிரபுத்வம் என்று பொருள்களுண்டு.

ஈசனின் முகங்களின்று வெளிப்படும் விபூதி, பஸிதம், பஸ்மம், க்ஷாரம், ரக்ஷை ஆகியவை 'பூதி' பெயராலேயே குறிக்கப்படும். ஐஸ்வர்யம் அளிப்பது, பிரகாசிப்பது, தீவினைகளையழிப்பது, ஆபத்துக்களை விலக்குவது, பூத— ப்ரேத— பிசாச உபத்ரவங்களால் ஏற்படும் அச்சத்தைப் போக்குவது ஆகிய தன்மைகளைக் கொண்டுள்ளதால் மேற்படி பெயர்கள் அமைந்துள்ளன.

ஆதிசங்கரர், 'பூதி' என்ற பதத்திற்கு இங்கு 'விபூதி' என்று பொருள் கொண்டே ஸ்தோத்தரிக்கிறார்.

'விபூதிர் பூதிரைஸ்வர்யாத்' என்ற உபநிஷத்வாக்யம் விபூதியின் மஹிமையை விளக்கும்.

வெற்றிவீரனாக ஸிம்மாசனத்தில் வீற்றிருக்கும் ஸுப்ரமண்யரின் திருவடிகளை வேதங்கள் வாஸனை மலர்களால் பூஜித்து வழிபடுகின்றன. ஸுப்ரமண்யரின் பரதத்துவத்தை நிரூபிக்கும் வகையில் வேதங்கள் பன்னீர்மரங்களாக ஸ்வாமியின் சந்நிதியில் ப்ரகாசமாய் ஜ்வலிக்கின்றனவாம் அம்மரங்களின் இலைகள் யாவும் மந்திரங்களாகக் கருதப்படுவதால், அவற்றில் வைத்து வழங்கப்படும் விபூதி (பத்ரபூதி) மஹிமை வாய்ந்ததாகவே சொல்லப்படுகிறது.

பன்னீர்மர இலைகளில் பன்னிரண்டு நரம்புகள் உள்ளன. முருகன். பன்னிருகைகளால் அருளுவதாகக் கொண்டு, அதனுள் விபூதியை (திருநீற்றை) வைத்து வழங்குவது 'இலைவிபூதி' எனப்படும் ஆதிசங்கரர் இந்த இலை விபூதியையே 'பத்ரபூதி' என்கிறார்.

பன்னீர் மர இலைகளில் விபூதிவைத்து பிரஸாதமாக, திருச்செந்தூர் ஸுப்ரமண்ய ஸ்வாமி ஸந்நிதியில் வழங்கப்படும். இதுவே 'பத்ரபூதி' (இலை விபூதி, இலை நீறு) எனப்படும் இந்த பத்ரபூதியை இலையுடன் அப்படியே உண்ண வேண்டும் ஆதிசங்கரர், இத்தகைய பத்ரபூதியை உட்கொண்டு அதன் மஹிமையால் நோய்நீக்கம் பெறுகிறார்.

விஸ்வாமித்ரர், ராமாயணத்தில் தாடகை வதத்திற்குக் காரணமானவர். பெண்ணை வதைக்க ராமர் தயங்கிய போது, விஸ்வாமித்ரர் தாடகையை வதைக்க ஏவினார். 'பெண் என்பவள் எவ்வளவு கெட்டவளாயினும் அவளுக்கு தண்டனையளிக்கலாமே யொழிய வதம் செய்யக் கூடாது' என்பது சாஸ்திரம். அதன்படி ராமருக்கு சீதையின் பிரிவு ஏற்பட்டது. விஸ்வாமித்ரரர் குன்ம ரோகத்தால் பீடிக்கப் பட்டார். அச்வினி தேவர்களும் அவருடைய வியாதியை நிவர்த்தி செய்யமுடியவில்லை. ஒரு நாளிரவு ஸ்வப்னத்தில் ஸ்ரீராமரே தரிசனம் தந்து திருச்செந்தூர் ஸுப்ரமண்யரை நாற்பத்தெட்டு நாட்கள் வழிபடக் கூறினார். மகரிஷியும் திருச்செந்தூர் சென்று தம் வழிபாட்டை நியமத்துடன் செய்து வந்தார். ஒருநாள் விடியற்காலை, ஸுப்ரமண்ய ஸ்வாமியே விருத்தபிராமண உருவில், பன்னீர் இலை விபூதியை அவருக்குத் தந்து, 'இந்த விபூதியை தரித்துக் கொண்டு உள்ளுக்குச் சாப்பிடு' என்றார். மகரிஷியும், விபூதியை நெற்றி சிரஸ் மார்பில் இட்டுக் கொண்டு உள்ளுக்கும் சாப்பிட்டார். அவருடைய குல்மாதி ரோகங்கள் மறைந்துவிட்டன. ஆச்சரியமடைந்த விஸ்வா மித்ரர், எதிரில் ஸுப்ரமண்யரே உள்ளார் என்றுணர்ந்து, நமஸ்கரித்துத்துதித்தார். உடனே ஸுப்ரமண்ய ஸ்வாமியிடம் 'ரோகங்களால் பீடிக்கப் பட்டவர்கள் உன் சந்நிதியில் தங்கி, பன்னீர் இலை விபூதியை இட்டுக் கொண்டு உள்ளுக்குச் சாப்பிட நோய்கள் நீங்கி பேரின்பம் பெறவேண்டும்' என ப்ரார்த்தித்தார். ஸ்வாமியும், 'அப்படியே ஆகட்டும்' எனக் கூறி மறைந்தார். இக்கதை பத்ரவிபூதியின் மஹிமையை உணர்த்துகிறது.

திரிசிரபுரம் மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் 'இல்லை' என்ற சொல்லின் இடைக் குறையே 'இலை' எனக்கூறி, இதனைச் சார்பவர்க்கு நோய் இல்லை என ஒரு வெண்பா பாடியுள்ளார்.

இலையயில் குமரவேள்முன் வணங்குவார்க்கு என்றும்
துன்பம்
இலை அடுபகை சற்றேனும் இலை படுபிணி நிரப்பும்
இலை அளற்று உழன்று வீழ்தல் இலை பல பவத்துச் சார்பும்
இலை என 'இலைவிபூதி' எடுத்து எடுத்து உதவல் கண்டார்.

சஷ்டி கவசத்தில் பாலன் தேவராயர்,

'தந்திரம் மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதியுடனே ஜபித்து
கந்தன் தோத்திரம் கவசமாய்க்காக்க' (சஷ்டிகவசம்— பழனி)

'ஒருநாள் முப்பத்தாறு உருக்கொண்டு,
ஓதியே செபித்து உகந்து நீறணிய' (சஷ்டிகவசம்—செந்தூர்)

—என விபூதியின் பலனைக் கூறுகிறார்.

அருணகிரிநாதரும் தம் திருப்புகழில் ஸுப்ரமண்யரின் திருநீற்றின் பெருமையைப் பாடிப் போற்றுகிறார்.

பழனித் திருப்புகழில்,

'ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் எனுபூதி
ஆகம் அணி மாதவர்கள் பாதமலர்கள் சூடும்
அடியார்கள்....................

என்கிறார்.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் என்று உன் திருநாமத்தை ஆறுமுறை கூறி திருநீற்றை உடம்பில் தரித்துக் கொள்ளும் பெரும் தவத்தினரின் பாதமலர்களைத் தலையிற் சூடிக் கொள்ளும் அடியார்கள்.......... என்கிறார்

(ஸ்லோகம்—16ல் ஸுதாங்காத் பவோமேஸி ஜீவேதி ஷட்தா ஜபன் மந்த்ரம் ஈச: எனப் பார்த்தோம். ஈசனும் மந்திரஜபத்தை ஆறுதடவை கூறியதை இங்கு ஒப்ப நோக்கலாம்)

மற்றோரு பழனித் திருப்புகழில், (ஒருவரை ஒருவர் தேறி அறிகிலர் என்ற பாடலில்)

மருவிய பரமஞான சிவகதி பெறுக
நீறுவடிவு உற அருளி பாதம் அருள்வாயே

எனப்போற்றுகிறார்.

திருவருள் பொருந்திய உயர்ந்த ஞானமயமான சிவசக்தியைப் பெற, ஞான வடிவத்தையுடைய திருநீற்றினை அடியேனுக்குத்தந்து, உமது திருவடியைத்தந்து அருள்புரிவீராக என்கிறார்.

ஆதிசங்கரர், திருச்செந்தூர் ஸுப்ரமண்ய ஸ்வாமியின் ஸந்நிதியில் தரப்படும் 'இலை விபூதி'யின் மஹிமையால் ஸகல வியாதிகளும் நீங்குவதைச் சொல்கிறார். மனக்லேசம், மனக்கஷ்டம், வியாதி வலி, பொறாமை, பிரச்னைகள்— இவையெல்லாம் 'ஆர்த்தி' எனப்படும். இங்கே ஆர்த்திக்காக, ஆதிசங்கரரே பக்தி செய்து காட்டுகிறார்.

தாரகாரே

தாரகாசுரனை ஸம்ஹரித்த ஸுப்ரமண்யரே!

விலோக்ய க்ஷணாத் த்ரவந்தே

சைதன்யமாக விளங்கும் 'பத்ரபூதி'யை இலைத் திருநீற்றினைக் கண்டதும், ரோகங்களும் பிசாசங்களும், உடனே வெகுதூரம் ஓடிவிடுகின்றன என ஆதிசங்கரர் போற்றுகிறார்.

சுஸ்ருதர் சிறந்த மருத்துவஞானி. தம் நூலில் பேய்கள், தீய ஆவிகளை விரட்டுவதிலும் மனநோய் நீக்கத்திற்கும் உண்டான விளக்கங்களில் ஸ்கந்தனைப் போற்றுகிறார்.

மஹாபாரதமும், தீயசக்திகள் நம்மை விட்டு நீங்க, ஸ்கந்தனை வணங்கி வழிபடுதல் நலம் என்கிறது.

கருத்து

ஆதிசங்கரர், இந்த ஸ்லோகத்தில் கொடிய வியாதிகளும் எல்லாவகைப்பேய்களும் ஸுப்ரமண்யர் ஸந்நிதியின் 'இலைவிபூதி'யைக் கண்டவுடன் நீங்கிவிடும் என்று பத்ரபூதியின் மஹிமையை விளக்குகிறார்.

மூன்று புஜங்கங்களில், இந்த புஜங்கத்தில் மட்டும் தான் ரோக நிவர்த்திக்காக ஸுப்ரமண்ய ஸ்வாமியைத் துதிப்பதையும் பத்ரபூதியின் மஹிமையையும் உணர்த்துகிறார்.

26

இந்திரியங்களின் கடமை

26. த்ருஶி ஸ்கந்தமூர்த்தி: ஶ்ருதௌஸ்கந்தகீர்த்தி:
முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம் |
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீனா: மமாஶேஷபாவா: ||

பதவுரை

மே த்ருசி — என்னுடைய கண்களில்; ஸ்கந்தமூர்த்தி — ஸ்கந்த மூர்த்தியும்; ச்ருதௌ — காதுகளில்; ஸ்கந்த கீர்த்தி — ஸ்கந்தனின் கீர்த்திகளும் பெருமைகளும்; முகே (மே) — முகத்தில்; ஸதா பவித்ரம் — எப்போதும் புனிதமான பவித்ரமான; தச் சரித்ரம் — அவருடைய சரித்திரமும் அவரைப்போற்றும் மந்திரங்களும்; கரே தஸ்யக்ருத்யம் — உடலில் அவருக்கான ஊழியமும் பணிவிடையும்; மம அசேஷ பாவா: — எனது மீதமில்லா அனைத்தும்; குஹேலீனா: ஸந்து — குஹனிடத்தில் லயித்து இருக்கட்டும் என வேண்டுகிறேன்.

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில், ஆதிசங்கரர் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஸுப்ரமண்யரிடத்தில் ஒப்படைக்கிறார். ஸுப்ரமண்யரிடம் லயம் அடைந்திருக்கும் நிலையை வேண்டுகிறார்.

த்ருசி ஸ்கந்தமூர்த்தி

இந்த்ரியங்கள் செய்யவேண்டிய வேலைகளைக் கூறுவதாக இந்த ஸ்லோகம் அமைகிறது.

கண்களால் ஸ்கந்தமூர்த்தியின் அழகைக் காண வேண்டுமென்கிறார். ஸ்கந்தனின் அழகை இதுவரை முந்தைய ஸ்லோகங்களில் ரசித்துப் பாடியுள்ளதை இங்கு நினைவு கூற வேண்டும்.

'மனோஹாரி தேவம்' (3) என அழகிய சரீரத்தை உடையவராகக் காண்கிறார். மன்மதனையும் மிஞ்சும் அழகைக் கண்டு ரசிக்கிறார்.

'லஸத் ஸ்வர்ண கேஹே' (8) எனப் பொன்மய க்ருஹத்தில் புஷ்பமஞ்சத்தில் ப்ரகாசிக்கும். ஸுப்ரமண்யனைக் காண்கிறார்.

'மஞ்சுளே அத்யந்த சோணே மனோஹாரி லாவண்ய பீயூஷ பூர்ணே' (9) என அழகிய சிவந்த அமுதத் திருவடித்தாமரைகளைக் கண்டு மனம் சந்தோஷிக்கிறார்.

பொற்பீதாம்பரம், மேகலை ஆகியவற்றுடனான ப்ரகாசம் பொருந்திய இடையை தரிசித்து, கண்மூடி தியானிக்கிறார் (10)

வள்ளியைத் தழுவியதால் ஏற்பட்ட குங்குமச் சாயத்துடனான மார்பைக் கண்டு நமஸ்கரிக்கிறார். (11)

வலிமையான, அழகான, பராக்ரம புஜங்களைய கரங்களையும் தரிசித்து ரசிக்கிறார். (12)

புண்முறுவல் பூத்த விசாலமான நீண்ட கண்களுடன் கருணை நிறைந்த திருக்கண்கள், ஜ்வலிக்கும் கிரீடங்கள், ரத்னங்கள் பதித்த தோள்வளை, பீதாம்பரம், வேலாயுதம், குழந்தைத் திருமேனி ஆகியவற்றையெல்லாம் கண்டு ரசித்து மகிழ்ந்து, நமக்கும் ரஸனையைத் தோற்றுவிக்கிறார்.

எல்லோரும் இத்தகைய பேறு பெற வேண்டுமென 'த்ருசி ஸ்கந்தமூர்த்தி:' என்கிறார்.

ச்ருதௌ ஸ்கந்தகீர்த்தி:

நாம் காதால் கேட்கும் விஷயங்கள் கந்தனின் பெருமைகளைப் பற்றியதாக இருத்தல் வேண்டும். காதுகளை நாம் பெற்றதற்கான பயன் அதுவே.

ஸ்கந்தனின் கீர்த்திகளையறியவே, ஸ்கந்தனின் புகழைக் கூறும் ஸ்தோத்திரங்கள், திருப்புகழ்

கந்தரலங்காரம், போன்ற பனுவல்கள் அவனருளாலேயே வெளிப்பட்டுள்ளன.

திருப்புகழை ஒரு தேவதாசி பாடக்கேட்டு, முருகனின் பெருமையையுணர்ந்து, திருப்புகழைக் கற்று, எல்லோரும் கேட்டு, கற்றுப் பாடவைத்தவர் வள்ளிமலை சச்சிதானந்த அவர்கள், இதுஒரு உதாரணமாகும்.

பெரும்பாலானோர், சஷ்டிகவசம் போன்றவற்றை மற்றவர்கள் பாடக் கேட்டு (நவீன ஒலி சாதனங்கள் மூலமும் கேட்டு) தாம் கற்றவராகி கந்தனைப் பாடு கின்றனர். இதுவே காதுகள் படைத்த பயன்.

முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம்

வடமொழிக்கு 'வாய்' இல்லை; தமிழுக்கு 'முகம்' இல்லை என்பது வழக்கு. அதாவது ஸம்ஸ்கிருதத்தில் வாய் என்பதற்கான சொல்லும், தமிழில் முகம் என்பதற்கான சொல்லும் கிடையாது. எனவே, இங்கு முகம் என்பதற்கு வாய் எனப் பொருள் கொள்ள வேண்டும்.

வாயால் அவருடைய சரித்திரத்தைச் சொல்லுவதால் பரிசுத்தமடைந்து புனிதமடைகிறோம் அவருடைய சரித்ரம் எனும் போது, அவருடைய வரலாறு என்றும், அவருக்கான மந்திரங்கள் எனவும் இருபொருள்களுண்டு.

விரிவான சரித்திரம் என்னும் போது, ஸ்காந்த புராணம் (வடமொழி) மற்றும் கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தபுராணம் நம் கண்முன் நிற்கின்றன. ஸ்கந்தனின் சரிதத்தையும் பெருமைகளையும் கூறுவது இப்புராணங்கள்.

குமரகுருபரரின் கந்தர்கலிவெண்பாவிலும் முருகனின் பிறப்பு வரலாறு காணப்படுகிறது. அதுபோல, பாம்பன் ஸ்வாமிகளின் 'முதல்வன் புராண முடிப்பு'ம் குறிப்பிடத்தக்கது. சஷ்டி கவச பாராயணத்திற்குப் பின் இப்புராண முடிப்பைப் படிப்பது சிறப்பு என ஆன்றோர் கூறுவர்.

அருணகிரியாரின் திருப்புகழ்ப்பாடல்களும் கந்தனின் சரித நிகழ்ச்சிகளை ஆங்காங்கே குறிப்பிடத் தவறவில்லை.

*பவித்ரமான ஸுப்ரமண்ய மந்திரங்களை ஜபம் செய்வதும் சிறந்தது. இது சற்று உயர்ந்த நிலை ஸுப்ரமண்ய காயத்ரி, ஸ்கந்த காயத்ரி, ஸுப்ரமண்ய பஞ்சதசாக்ஷரி, ஷடாக்ஷரி, மாலாமந்த்ரம், போன்றவற்றை ஜபம் செய்யலாம் (*மேற்குறித்த மந்திரங்களை குருவின் உபதேசம் பெற்றே ஜபம் செய்யவேண்டும். அதுதான் சிறந்த பலனைத்தரும்)*

சஷ்டிகவசம், குமாரஸ்தவம், சண்முககவசம், ஸுப்ரமண்ய ஸ்தோத்திரங்கள், ஸுப்ரமண்ய ஸஹஸ்ர நாமம் ஆகியவற்றைப் பாராயணம் செய்தலும் சிறப்பாகும்.

கரே தஸ்யக்ருத்யம் வபு: தஸ்ய ப்ருத்யம்

கைகளால் கந்தனின் பூஜை நடைமுறைகளை மேற் கொண்டும், சரீரத்தால் அவனுக்குத் தொண்டு செய்தும் உய்ய வேண்டும்.

கைகளால் அவரை அபிஷேகிக்கலாம் மலர் தொடுத்து அணிவிக்கலாம். மூர்த்தங்களை (திருமேனி களை) பவனிவரச் செய்யலாம்; காவடி எடுக்கலாம். ஸ்கந்தர் திருமேனிகளை உலாவரத் தாங்கி வரலாம். தேரில்வர வடம் இழுத்து, காட்சிகளையும் கந்தனையும் கண்குளிர ரசிக்கலாம்.

சரீரத்தால் அவனுக்கான பணிகளைச் செய்யலாம். சஷ்டி, கிருத்திகை, விசாக நாட்களில் விரதமிருந்து நம்மை உயர்த்திக் கொள்ளலாம். உடல் வலிமையைப் பொறுத்தும், மனத்திண்மை பொறுத்தும் பக்தியுடன் அலகு குத்திக் கொள்ளலாம். தேரிழுக்கலாம். மலையேறி ஸுப்ரமண் யரை தரிசித்தல், சூரஸம்ஹார வைபவங்களை நடத்துதல், பங்கு கொண்டு பெறும் பேறு செய்யலாம்.

குஹே ஸந்து லீனா மமாசேஷபாவா:

கண்கள், காதுகள், முகம் (வாய்), கரங்கள், சரீரம் என அங்கங்களின் உதவியுடன் நாம் பிறந்த ஜன்மத்தை தூயதாக்க வேண்டும். இந்திரியங்கள், எண்ணங்கள்,

செய்கைகள் யாவும் குஹப் பெருமானிடம் லயமடைந் திருக்கட்டும் என்கிறார்.

மலைக்குகைகளில் உள்ளதால் குஹன் எனப்படுவார். அருணகிரிநாதரும் ஸுப்ரமண்ய ஸ்வாமியை மலைக்கு நாயகன் என்பார்.

பரமஹம்ஸஞானிகளுக்கு நாயகப்பிரம்மமாக விளங்குபவர் குஹன்.

தூயநெறிகளில் நிற்போரை உயர்நிலை எய்த உதவுபவர் குகன்.

அப்படிப்பட்ட குகனிடம் தம்மை முழுமையாக ஒப்படைக்கிறார். அந்த குகனிடம் எல்லாம் லயமாகி இருக்கட்டும் என்றநிலையை எய்த வேண்டுகிறார்.

அப்போது ஸ்கந்தன் நமக்கு அமுதமாகிப் பெருகுவார்.

ஆதிசங்கரர், ஆனந்தலஹரியில் 'உமா மஹேஸ்வரனே! எவன் தன் மனோ வாக்காயங்களால் தரிசித்தல், சரித்ர சிரவணம், பூசித்தல், வாக்கால் துதித்தல், தியானித்தல், நமஸ்கரித்தல் முதலியவற்றைச் செய்து தன் காலத்தை சந்தோஷத்துடன் கழிக்கிறானோ, அவன் ஜீவதசையிலேயே ஜீவன் முக்தனாக விளங்குகிறான். (81) எனப் போற்றித் துதிப்பது இங்கு ஒப்பிடத்தக்கது.

மற்றொரு ஸ்லோகத்தில் 'சம்புவே! வசனத்தால் உமது சரித்திரத்தைச் சொல்லுகிறேன்; மனத்தால் உமது உருவத்தை சேவித்து மகிழ்கிறேன். தலையினால் ஸதாசிவமாகிய உம்மை எப்போதும் வணங்குகிறேன்'. (90) எனத் துதிக்கிறார்.

மேலும்,

ஸா ரஸனா தே நயனே
தாவேவ கரௌ ஸ ஏவ க்ருதக்ருத்ய: |
யா யே யௌ யோ பர்க்கம் வததி
ஈக்ஷேத ஸதா அர்ச்சத: ஸ்மரதி || (94)

ஆதிசங்கரரின் மேற்படி ஸ்லோகங்களின் கருத்துக்கள் யாவும், ஸுப்ரமண்ய புஜங்கத்தின் இந்த ஸ்லோகத்துடன் ஒத்துள்ளனவாகயிருக்கின்றதையறியலாம்.

கருத்து

எது ஸுப்ரமண்ய ஸ்வாமியின் திருநாமங்களைப் போற்றித் துதிக்கிறதோ அதுவே நாக்கு. அவரைத் தரிசித்து மகிழும் கண்களே கண்கள். எவை அவரை பூஜிக்கின்றனவோ அவையே கரங்கள். எவன் அவரை நினைந்து தியானிக்கிறானோ அவன் உயர்ந்தவன் என்கிறார். இச் செயல்களைச் செய்யாத இந்திரியங்கள் பயனற்றதாகிறது. என்பதே இந்த ஸ்லோகம் மூலம் அறியலாம்.

27

ஏழைப்பங்காளன் - ஸுப்ரமண்யன்

27. முனீனாமுதாஹோ ந்ருணாம் பக்திபாஜாம்
அபீஷ்டப்ரதாஸ் ஸந்தி ஸர்வத்ர தேவா: |
ந்ருணாமந்த்யஜானாமபி ஸ்வார்த்ததானே
குஹாத்தைவமன்யந் நஜானே நஜானே ||

பதவுரை

முனீனாம் — *முனிவர்களுக்கும்;* உதா பக்திபாஜாம் ந்ருணாம் — *அதுபோல பக்தியுள்ள மனிதர்களுக்கும்;* அபீஷ்ட ப்ரதா: தேவா — *அபீஷ்டங்களை (விரும்பியதை) அளிக்கும் தேவர்கள்;* ஸர்வத்ர ஸந்தி — *எங்கும் இருக்கின்றார்கள்;* ந்ருணாம் அந்த்ய ஜானாம் அபி ஸ்வார்த்த தானே — *கீழ் நிலை (ஜாதி) மனிதர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதில்;* குஹாத் தைவம் அன்யம் ந ஜானே ந ஜானே — *குஹனைத்தவிர வேறு தெய்வத்தை நான் அறியேன்.*

விளக்கவுரை

பிறப்பில் கீழானவர்களையும் ரக்ஷித்துக் கடைத் தேற்றக் கூடிய தெய்வம் ஸுப்ரமண்யர். அவரைக் காட்டிலும் மேலான தெய்வமில்லையென ஆசாரியர் தெளிவாகத் தெரிவிக்கிறார்.

முனீனாமுதாஹோ ந்ருணாம் பக்திபாஜாம்
அபீஷ்டப்ரதா: ஸந்தி ஸர்வத்ர தேவா: |

'முனீந்த்ரானுகூலே ஸுகந்தாக்யசைலே' (7) என முனீந்த்ரர்களின் காமனைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவர் ஸுப்ரமண்ய ஸ்வாமி எனப் பார்த்தோம். அவர்களுக்கு அனுகூலமாய் கந்தமாதன பர்வதத்தின் குஹையில் வாஸம் செய்வதாகவும் பார்த்தோம். எனவே முனிவர்களுக்கு ஹிதமானவர்.

பக்தி பாஜாம் ந்ருணாம்— 'பக்திபாஜாம்' எனில் பக்திபூர்வமாக உறுதியான நம்பிக்கையுடன் ஸ்வாமியைச் சார்ந்த மனிதர்கள் என்பதாம். அத்தகைய பக்திமான் களுக்கும் ஹிதமானவர்.

இவர்களனைவரும் (முனிவர்கள், பக்திமான்கள்) தாம் விரும்பும் அபீஷ்டங்களைத் தரும் தேவர்களை உபாஸிப் பார்கள். அதாவது, அவர்களின் கர்ம வினைகளைப் பூர்த்தி செய்யும் தேவர்களை வழிபடுவர். அதற்கேற்ப தேவதை களும் நிரம்ப இருக்கிறார்கள். அவரவர்கள் எண்ணப்படி அவரவர் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள இஷ்டதெய்வங்களாகக் கொண்டு வழிபடுவார்கள்.

ந்ருணாமந்த்ய ஜானாமபி ஸ்வார்த்ததானே
குஹாத்தைவமன்யந் நஜானே நஜானே ||

கீழ்ஜாதியில் பிறந்தவனுக்கும் அபீஷ்டங்களை நல்கி ரக்ஷிப்பவர் ஸுப்ரமண்யஸ்வாமி என்று ஜயந்திபுர (திருச்செந்தூர்) க்ஷேத்ர மஹாத்மியம் மூலம் அறிய முடிகிறது.

திருச்செந்தூரருகே ஆற்றூர் (ஆத்தூர்) என்ற கிராமம். தாமிரபரணியும் கடலும் சங்கமிக்கும் இடம். வேலன் என்பவன் சண்டாள ஜாதியிற் பிறந்து வாழ்ந்து வந்தான். மூன்று வேளைகள் ஸ்னானம் செய்வான் 'முருகா முருகா' என அடிக்கடி கூறுவான். சாத்வீக ஆகாரமும், நதிஜலமும் உண்டு வாழ்ந்தான். தன் கூட்டத்தினரை விட்டு விலகி வாழ்ந்தான். பக்தர்கள் கூட்டத்தைப் பார்த்துவிட்டுத் தான்

திருச்செந்தூர் முருகனை தரிசிக்க முடியவில்லையே என ஏங்கினான். அதோடு தரிசிக்க முடியாதபடி தாழ்ந்த ஜாதியிற் பிறந்ததை எண்ணியும் கவலை கொண்டான்.

ஒரு நாள் வழக்கம் போல ஸ்னானம் செய்து விட்டு, 'முருகா முருகா' என்று கூறிக் கொண்டிருந்தான். அப்போது, ஸ்னானம் செய்யவந்த வயதான பிராம்மணக் கிழவர் மடுவில் அகப்பட்டுக் கொண்டார். மூழ்கும் நிலையில் வேலனைப் பார்த்து 'அப்பா என்னைத் தூக்கி விடு' எனக் கூக்குரலிட்டார். வேலனும் இவரைத் தொடத் தயங்கினான். அப்போது அக்கிழவர், 'ஆபத்துக்குப் பாவ மில்லை தவறாகாது. நீயோ ஷண்முகனின் திருநாமங்களை உச்சரிக்கிறாய். நீ தூயவனே, என்னைத் தூக்கிக்காப்பாற்று என்றார். அவனும் முருகன் மேல் பாரத்தை போட்டு, நாமங்களைக் கூறிக்கொண்டே அவரைத் தூக்கிக் கரையேற்றினான்.

அவர் சிரமபரிகாரம் செய்துகொண்டதும், கிழவரை பிரதக்ஷணம் செய்து நமஸ்கரித்து எழும்போது பிராமணரைக் காணவில்லை. அவ்விடத்தில், வள்ளி, தெய்வானையுடன் வேல் ஏந்தி மயில் வாஹனத்தில் ஸுப்ரமண்யரே தரிசனம் தந்தார். அவனிடம், 'நீ இனி என் சந்நிதிக்கு எப்போது வேண்டுமானாலும் வந்து தரிசனம் செய்யலாம்' எனக்கூறி அனுக்ரஹித்தார். அவனும் அதுபோல தரிசனம் செய்து வந்தான்.

அங்குள்ள அர்ச்சகர்களுக்கு இது பிடிக்காமல் அவனை விரட்ட எத்தனித்தபோது, கர்ப்பகிருஹத்தி லிருந்து உயர் குரலில் பிரணவம், ஒலித்தது. பிம்பத்தினின்று உதித்து ஜனங்களை நோக்கி, 'வேலன் சண்டாளனல்ல. பூர்வத்தில் நாரதராக இருந்தார். பிரணவப்பொருள் பற்றிய சர்ச்சையில், நான் பிரம்மாவைத் தண்டித்தபோது, தன் தகப்பனாரைத் தண்டித்தேன் என்பதற்காக விஷ்ணுபட்ச மாகப் பேசி சைவ நிந்தனை செய்தார். அந்ய தேவதா நிந்தை என்ற பாபத்தினால் சண்டாளனாகப் பிறந்தார். பக்தியினால் இந்த க்ஷேத்ரமஹிமையின்படி உயர்வு பெற்றார் எனக்கூறி வேலனுக்கு ஸாயுஜ்ய பதவி அளித்து மறைந்தார்.

நம்மிடம் காணப்படும் தகாராகாசம் (தகராலயம் என்றும் கூறுவர்) சிற்றம்பலமாகும். அண்டவழியானது பேரம்பலம் ஆகும். இரண்டும் ஒன்றே. இந்த தகராலயத்தில் என்றும் இளைஞனாக குகன் உள்ளான். நம் உடலசைவு அவன் உள்ளிருந்து அசைவதால்தான் நடைபெறுகிறது.

'நெறிகள் குகனின் அருள்மயமாகவே இருக்கும்' என்பார் பாம்பன் ஸ்வாமிகள்.

மேற்கூறிய வேலன் கதையினின்று குகனின் இயக்கமும் அருளுமே எல்லோருடைய வாழ்வின் நிகழ்வுகள் அமைகின்றன என்றாகிறது.

கீழ் ஜாதியில் பிறந்தவனையும் கூட, ரக்ஷித்துக் கடைத்தேற்றும் தெய்வம் ஸுப்ரமண்யரைக் காட்டிலும் வேறு இல்லை.

ஆதிசங்கரர், ஸுப்ர. புஜங்க ப்ரயாதம் (1)

'புஜே சௌர்யதைர்யம் கரே தாநதர்ம:
கடாக்ஷேதி சாந்தி: ஷடாஸ்யே ஸுஹாஸ்யம்
ஹ்ருதப்ஜே தயா யஸ்ய தம் தேவமந்யம்
குமாராந்ந ஜாநே நஜாநே நஜாநே || (18)

எனப் போற்றித் துதிக்கிறார்.

ஸுப்ர. புஜங்க ப்ரயாதம் (2)ல்

'களே ரத்னபூஷம் கடௌ பீதவஸ்த்ரம்
கரே ஞானசக்திம் தரஸ்மேரமாஸ்யே |
கடிந்யஸ்தபாணிம் சிகிஸ்தம் குமாரம்
பஜேஹம் குஹாத் அந்ய தைவம் ந மன்யே || (13)

—எனவும் துதிப்பதைக் காணலாம்.

கருத்து

கீழ் ஜாதியில் பிறந்தவனிடத்திலும் கருணை காட்டி ரக்ஷிக்கும் தெய்வம் ஸுப்ரமண்யர் ஒருவரே' என இந்த ஸ்லோகத்தில் ஆதிசங்கரர் சுட்டிக் காட்டுகிறார்.

28

வழிவழி அடியவராக வேண்டுதல்

28. களத்ரம் ஸுதா பந்துவர்க: பசுர்வா
நரோ வாத நாரீ க்ருஹே யே மதீயா: |
யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்
ஸ்மரந்தஶ்ச தே ஸந்து ஸர்வே குமார ||

பதவுரை

க்ருஹே — *க்ருஹத்தில் (வீட்டில்);* யே மதீயா: — *என்னைச் சார்ந்தவர்கள் எவரோ;* களத்ரம் ஸுதா பந்துவர்க: பசுர்வா நரோவா அதநாரீ — *மனைவி, புத்திரர்கள், உறவினர்கள் அல்லது உயிரினங்கள் (பசு) அல்லது ஆண் பெண் ஆகியவர்கள்;* குமார — *குமரக் கடவுளே;* யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம் — *(தங்களை) பூஜிக்கின்றவர்களாகவும் நமஸ்கரிப்பவர்களாகவும் துதிக்கின்றவர்களாகவும்;* தே ஸர்வே — *அவர்கள் அனைவரும்;* ஸ்மரந்தஸ்ச ஸந்து — *(தங்களை) நினைப்பவர்களாகவுமிருக்கட்டும்.*

விளக்கவுரை

தன் குடும்பஜனங்கள், உற்றார், உறவினர், அனைவரும் குமரனையே தெய்வமாகக் கொண்டு, பக்தி செலுத்தி உய்ய வேண்டும் என ஆதிசங்கரர் பிரார்த்திக்கிறார்.

களத்ரம் ஸுதா பந்துவர்க: பசுர்வா
நரோ வாத நாரீ க்ருஹேயே மதீயா: |

மனைவி, மகள், உற்றார், உறவினர் மற்றும் பசுவோ, மனிதர்களில் ஆணோ பெண்ணோ யாராகிலும் என்னைச் சேர்ந்தவர்கள் எவரோ;

'பசு' என்ற சொல் பசுவையும் குறிக்கும் மிருகத்தையும் குறிக்கும். (பசு ராஜன்— சிங்கராஜன் என்று பொருள்) வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்கள் எனக் கொள்வது சிறப்பு. ஏனெனில், 'க்ருஹேயே மதீயா: என வீட்டையும் சார்ந்தவர்களையும் குறிப்பிடுகிறார்.

ஸுப்ரமண்யர் குல தெய்வம்போன்றும், குடும்ப தெய்வம் போன்றும், அடுத்த நிலையில் சமூகத்தில் வணங்கத்தக்க— வணங்கப்படும் தெய்வம் என்றவாறு போற்றப்படுவதை ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார்.

யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்

உறவினர்கள் எவரோ அவர்கள் ஸுப்ரமண்யரை பூஜிக்கிறவர்களாக, துதிப்பவர்களாக, வணங்குபவர்களாக இருக்கட்டும் குமரனே என்று அருள்புரியும் படி ஆதிசங்கரர் வேண்டுகிறார்.

'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' எனத் துதிக்கின்றவர்களாக இருக்க அருணகிரிநாதர் வேண்டு கிறார்.

பசு— ஐந்தறிவுப் பிராணி, மனைவி, மகள், உறவினர், ஆண்— பெண் மனிதர்கள் ஆகியவர்கள் ஆறறிவினர். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதம் என்ற ஐம்மலங்களால் கட்டுண்டவை. இவற்றை நீக்க குருவின் வழிப்படி இறைவனை (குமரனை) பூஜித்து, வாழ்த்தித் துதித்து வணங்கிபதம் பெறவேண்டும் என்பது விளக்கம். அதற்கான வழிகளே அர்ச்சித்தல், துதித்தல், வணங்குதல், வாழ்த்துதல் முதலியன.

கால் நடையாக (பசு) நடக்கும். மனைவி முதலியவர்கள் நா தழுதழுக்கக் குமரக் கடவுளைப் பாடி

துதிக்க வேண்டும். மனிதர்களாக ஆகவேண்டுமென்பதே பிரார்த்தனை. குமரன் அவர்களுக்கு அருட்செல்வத்தை அளிக்க வேண்டுமென்பது ஆசாரியரின் பிரார்த்தனை.

ஸ்மரந்தஸ்ச தே ஸந்து ஸர்வே குமர!

உற்றார், உறவினர் என்னாது ஆன்மாக்கள் அனைத்துக்கும் நாயகன் குமரன்.

கு— உலகமாயையை மர— போக்கச் செய்பவர் குமரன்.

ஆன்மாக்களின் மலத்தை நாசம் செய்பவன் குமரன்.

ஸ்மரணம்— நடக்கும்போதும், படுக்கும்போதும் உட்கார்ந்தபோதும் அதாவது எப்போதும் மனதில் செய்யக் கூடிய மந்திர ஆவிருத்தி.

அக்குமரனை நாடி, அவர்கள் எல்லோரும் குமரனை ஸ்மரணம் செய்யுமாறு அருள்புரிய வேண்டுகிறார் ஆதிசங்கரர்.

கருத்து

அனைவரும் குமரனைத் துதித்துப் போற்றி பக்தி செலுத்தி, அவருடன் ஒன்று கலந்து பேரின்பம் பெற விழைய வேண்டும் என்ற ஆதிசங்கரரின் நோக்கமே பிரார்த்தனையாகப் புலப்படுகிறது.

29

பகை நீக்கி அருள வேண்டுதல்

29. ம்ருகா: பக்ஷிணோ தம்ஶகா யே ச துஷ்டா:
ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே |
பவச்சக்தி தீக்ஷ்ணாக்ரபின்னா: ஸுதூரே
வினஶ்யந்து தே சூர்ணித க்ரௌஞ்சஶைல ||

பதவுரை

துஷ்டா — *கொடிய;* யே ம்ருகா: பக்ஷிண: தம்ஶகா ச — *மிருகங்கள், பறவைகள், காட்டு ஈ எவைகளோ;* ததா வ்யாதய: பாதகா யே மதங்கே — *அவ்வாறே என்னுடைய உடலை வருத்தி பாதிக்கும் நோய்கள் எவைகளோ,* தே — *அவைகளெல்லாம்;* பவச் சக்தி தீக்ஷ்ணாக்ர பின்னா: — *தங்களின் கூர்மையான (தீக்ஷ்ணமான) முனையால் பின்னப்படுத்தப்பட்டு;* ஸுதூரே — *வெகுதூரத்திலேயே;* வினஶ்யந்து — *நாசமடையட்டும்;* சூர்ணித க்ரௌஞ்சஶைல — *கிரௌஞ்சமலையைப் பொடியாக்கிய ஐயனே!*

விளக்கவுரை

சரீரத்தை பாதிக்கும் உயிரினங்கள், வியாதிகள் ஆகியவற்றை வேல் என்ற சக்தி ஆயுதம் முன்வந்து தடுத்து நம்மைக் காப்பாற்றும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

ம்ருகா: பக்ஷிணோ தம்ஶகா யே ச துஷ்டா:

மிருகங்கள், பறவைகள், காட்டு ஈக்கள் ஆகியவற்றில் கொடியவை உண்டு. தம்சகா எனில் கொட்டும் தன்மையுள்ள என்று பொருள். கடி, கடிபட்டஇடம் என்பதையும் குறிக்கும். தம்சக என்பது பாம்புதீண்டுதல்,

காட்டு ஈ, நாய், ஈ என்பவைகளைக் குறிக்கும். கடிக்கும் பண்பையும் கொட்டும் பண்பையும் வைத்து இவைகள் குறிப்பிடப்படுகின்றன. இவைகள் கடிப்பதாலோ கொட்டுவதாலோ நமக்குத் துன்பம் ஏற்படுவதால் கொடிய (துஷ்டா) எனப்படுகிறது.

பாம்பன் ஸ்வாமிகள் சண்முக கவசத்தில், கடுமையான விஷப்பாம்புகள், சிங்கம், கரடி, நாய், புலி, பூனைகள், நரிகள் முதலான இயங்கும் பிராணிகள் எதனாலேனும் நான் துன்புறாவண்ணம் விரைந்து வந்து வடிவேல் காப்பதாக' *(13)*

'கொடியபறவை, எலி, தேள், நண்டு, செய்யான், விஷப்பல்லி, கூரிய நகமுடைய ஓணான், பூரான், ஜலமண்டலம், சிலந்தி ஆகியவைகளால் துன்பமேற் படாமல் ஐவேல்காப்பதாக் *(14)*.

'நீரில் வாழும் முதலை, கொம்புடைய திருக்கைமீன், மற்றும் நீர்வாழ் நிலவாழ் துன்பம் தரக் கூடிய ஜந்துக்கள் துன்புறுத்தாதவாறு வேல் காக்க *(15)* என துன்பம் தரும் உயிரினங்களின் பட்டியலை விரிவாக எழுதுகிறார்.

பாலன் தேவராயர் சஷ்டி கவசத்தில்,

'புலியும் நரியும் போத்தோடு நாயும்
எலியும் கரடியும் இனித் தொடாதோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க

என உயிரினங்களில் துன்பம் தருவனவற்றைக் குறிப்பிடுகிறார்.

ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே

அவ்வாறே வியாதிகள் நம் உடலைப் பாதித்து நம்மை வருத்தும்

வியாதிகள் பற்றி ஏற்கனவே 'இலை விபூதியின் மஹிமையைக் கூறும் போது, 'அபஸ்மாரம்

குஷ்டம்—க்ஷயம்—ஜ்வரம்—ப்ரமேஹம், உன்மாதம் குல்மம்' என குறிப்பிடப்பட்டுள்ளது அதனை நினைவுகூறலாம்.

நோய்களின் தன்மை உடலை வருத்துவது என்பது தெரியும் அவை வராமல் தடுப்பது எப்படி?

துன்பம் தரும் மிருகங்கள், பறவைகள், ஈக்கள் எவையோ, துன்பம் தந்து வருத்தும் வியாதிகள் எவையோ அவையெல்லாம் கூர்மையான வேலின் நுனியால் பிளக்கப்படும்.

சூர்ணித க்ரௌஞ்சசைல

'க்ரௌஞ்ச மலையைப் பொடியாக்கிய அண்ணலே!' என அழைக்கிறார்.

தாரகனின் மாயாபுரியில் ஒரு அரக்கன் கிரௌஞ்சன். முனிவர்கள் செல்லும் வழியில், மாயா சக்தியால் மலைவடிவாகி, மலைக்குள் செல்ல வழிகாட்டுவான். அவ்வழியாகச் செல்லும் முனிவர்களை மயக்கிக் கொன்று தின்பான்.

அகத்தியரின் தென்திசைப்பயணத்தின் போதும், அவ்வாறு செய்து உட்செல்ல வழிவிட்டான் சிறிது தூரம் சென்றதும் வழி தடைபட்டது மயங்கினார். ஞானத்தால் அசுரமாயை என்றறிந்தார். கைத் தண்டத்தால் குத்தி வெளியே வந்து 'மலைவடிவாகவே இருந்து, ஸுப்ரமண்யஸ்வாமியின் வேலால் அழியக்கடவாய்' என்று சபித்தார். அவ்வாறே மலைவடிவாக இருந்து வந்தான்.

தாரகாசுரனும் குமரனும் போர் புரிகையில், வீரபாகு போன்றோரை மலைக்குள் வரச்செய்து மயக்கினான். குமரன் வேலாயுதத்தால் கிரௌஞ்சமலையைப் பிளந்து அழித்தார்.

(மாயையை அழித்தார் என்பது குறிப்பு)

பவச்சக்தி தீக்ஷ்ணாக்ர பின்னா ஸுதூரே
வினச்யந்து தே

தீக்ஷ்ணம் — கூர்மை.

தங்களின் கூரிய முனையையுடைய சக்தி ஆயுதத்தால் (வேலாயுதத்தால்) அவைகள் துன்பம் தரும் மிருகங்கள், பறவைகள், காட்டு ஈக்கள் மற்றும் வருத்தும் வியாதிகள் சிதைக்கப்பட்டு நாசமடையட்டும்.

ஸுப்ரமண்யன் வேறு வேல்வேறு என்றில்லை. சக்திதரன், சக்திவேல், சக்திமுருகன், சக்திபாணி என்றெல்லாம் அழைக்கப்படுவார். ஞானத்தின் அடையாளம் சக்தி (வேல்)

'பட்சத்துடனே பராசக்தி வேலதாய்'

'வேலாயுதமுடன் விளங்கிடும்குகனை (சஷ்டி கவசம் – பழனி)

என சஷ்டிகவசம் கூறும்.

திருச்செந்தூர் சஷ்டி கவசத்தில் பாலன் தேவராயர் காப்பதில் (ரக்ஷிப்பதில்) சக்தி என்ற வேலின் ரக்ஷகத்தன்மையை வைத்து அழகுவேல் காக்க, புனித வேல் காக்க, பெருவேல்காக்க, முனைவேல் காக்க, செவ்வேல் காக்க, கதிர்வேல் காக்க, வடிவேல் காக்க, அருள்வேல் காக்க, பருவேல் காக்க, நல்வேல் காக்க, அயில்வேல் காக்க, வல்வேல் காக்க, கருணைவேல் காக்க, கனகவேல் காக்க, வஜ்ரவேல் காக்க, என அதன் பெருமையையும், மேன்மையையும் குறிப்பிட்டு கவசமாய் காக்க' எனத் துதிப்பதை இங்கு நினைவு கூர்தல் வேண்டும்.

பாம்பன் சுவாமிகள் தேவராயரைப்போலவே, சண்முககவசத்தின் பெரும்பகுதி பாடலின் முடிவில்— 'வேல் காக்க' என்றே வேண்டுகிறார்.

கந்தர் கலிவெண்பாவின் குமரகுருபரரும் இத்தகையதொரு கருத்தைத் தருகிறார்.

பல்கோடி விக்னமும் பல்பிணியும் – பல்கோடி

காதகமும் செய்வினையும் பாம்பும் பிசாசும் அடல்
பூதமும் தீ நீரும் பொருபடையும் – தீது அகலா

வெவ்விடமும் துட்டமிருகமுதலாம் எவையும்
எவ்விடம் வந்து எம்மை எதிர்த்தாலும் அவ்விடத்தில்

பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில் வேலும் (228)

துன்பந்தரும் மிருகங்கள், பறவைகள், ஈக்கள் எவையோ, வருத்தும் வியாதிகள் எவையோ அவையெல்லாம் தங்களுடைய கூர்வேலான சக்தி ஆயுதத்தால் சிதைக்கப்பட்டு நாசமடையட்டும் என் வேண்டுகிறார்.

கருத்து

ஸுப்ரமண்ய பக்தர்களின் துன்பங்களும், வியாதிகளும், கொடிய உயிரினங்களாலுண்டாகும் துன்பங்களும் அழிவது நிச்சயம் என்பதை அறியலாம்.

30

பிழை பொறுத்து அருள வேண்டல்

30. ஜனித்ரீ பிதா ச ஸ்வபுத்ராபராதம்
ஸஹேதே ந கிம் தேவஸேனாதி நாத |
அஹம் சாதிபாலோ பவான் லோகதாத:
க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேஶ ||

பதவுரை

ஜனித்ரீ பிதா ச — *தாயும் தந்தையும்;* ஸ்வபுத்ரா பராதம் — *தம் பிள்ளையின் குற்றத்தை;* ஸஹேதே ந கிம் — *ஸஹித்துக் கொள்கிறார்கள் (பொறுத்துக் கொள்கிறார்கள்) இல்லையா?;* தேவஸேனாதிநாத மஹேச — *தேவர்களின் ஸேனாதிபதியாகிய மஹேசனே!;* அஹம் ச அதி பால: — *நானோ சிறுகுழந்தை;* பவான் லோக தாத: — *தாங்களோ உலகின் தந்தை;* அபராதம் ஸமஸ்தம் — *(ஆகையால்) குற்றங்கள் அனைத்தையும்;* க்ஷமஸ்வ — *பொறுத்துக் கொள்ளவேண்டும்.*

விளக்கவுரை

ஸுப்ரமண்யர் உலகின் தந்தை. ஆதிசங்கரர் தான் ஒரு சிறுபாலன். பிழைகளைப் பொறுத்தருள வேண்டுமென்கிறார்.

ஜனித்ரீ பிதா ச ஸ்வபுத்ராபராதம்
ஸஹேதே ந கிம் தேவஸேனாதிநாத |

உலகில் ஜனிக்கச் செய்பவள்— ஜனித்ரி, ஜனனி தாய்.

தாயும் தந்தையும் தம் பிள்ளையின் (குழந்தையின்) குற்றங்களைப் பொறுத்துக் கொள்கிறார்கள். இவ்வாறு செய்வது குழந்தைகளைத் திருத்தும் நோக்குடன் தான்.

தாயும் தந்தையுமாக இருப்பவர் ஸுப்ரமண்யர். ஜீவராசிகட்கு குமரன் தாயாக உள்ளார். அருள் நெறியில் நின்றவர்க்குத் தந்தையாக இருப்பார்.

உண்மையை உணர்ந்தவர்க்கும், திருவடிகளைச் சார்ந்து கருணையை வேண்டி நிற்பவர்களுக்கும் தந்தையாகவே இருப்பார்.

அருணகிரிநாதர் தம் கந்தரனுபூதியில்,

எந்தாயும் எனக்கருள் தந்தையுநீ
சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள்
மைந்தா குமரா மறை நாயகனே (46)

எனப் போற்றுகிறார்.

இந்நிலையைத்தான் அச்சுததாசர் அத்வைத கீர்த்தனானந்தலஹரியில் பாடுகிறார்.

அன்னை தந்தையாகி நீயென
உன்னியுளத்தே நிற்றலை
நின்னருட்காணா தல்லவே
இன்னமதையான் சொல்லவே
சேயின் பிழை பொறுப்பதீன்ற
தாயினருட் சீரல்லவே
நீயெனை வேறாகின் மெய்யா
மாயை வசமா வேளையா' (29)

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலமானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே (46)

எனப் போற்றுகிறார்.

எவ்வுயிர்க்கும் கந்தன், அம்மையும் அப்பனுமாக இருந்து அருள்புரிபவன். மனக்கவலையை மாற்றியருள வேண்டுகிறார்.

தேவஸேனாதி நாத!— தேவஸேனைகளின் தலைவன் என ஆதிசங்கரர் அழைத்து தன் கோரிக்கையை முறையிடுகிறார்.

ஆறுமுகங்களும், பன்னிருகரங்களும் கொண்டு ஆயுதங்கள் ஏந்தி, சூரபத்மனை எதிர்க்கும் தேவர் படைக்குத் தலைமை தாங்கிய வடிவம் 'தேவஸேனாதிபதி' யாகும்.

வெளிப்படையை விட உட்பகைகளான காமம், குரோதம், லோபம், மோகம், மதம் மாத்ஸர்யம் ஆகியவற்றை அழிப்பவன் கந்தன்.

அஹம் சாதி பாலன் பவான் லோக தாத: க்ஷமஸ்வாபராதம்

'நானோ சிறிய பாலன் (ஆதிசங்கரர்) தாங்களோ (ஸுப்ரமண்யர்) உலகின் தந்தை என் பிழை பொறுத்தருள வேண்டும்' என பிரார்த்திக்கிறார்.

ஆதிசங்கரர் முதலில் விநாயகரை பாலரூபன் என்றார். அடுத்து ஸுப்ரமண்யக் கடவுளையே மஹாதேவபாலம் (3) இஹாயாஹி வத்ஸ (18) பாலமூர்த்திம் (18) குமார (18) என்றெல்லாம் போற்றினார். தன்னை 'அஹம் ச அதிபாலன்' தான் மிகச்சிறிய பாலன் எனக் கூறிக் கொள்கிறார்.

ஸுப்ர. புஜங்க ப்ரயாதம் (1) ல்

'விபோமே பராதம் க்ஷமஸ்வாகிலேச'

என வேண்டுகிறார்.

ஸுப்ர. புஜங்க ப்ரயாதம் (2) ல்,

குக்குடேசாங்ககேதோ
ஸமஸ்தாபராதம் விபோமே க்ஷமஸ்வ

என கோழிக் கொடியேனே என் அனைத்துப் பிழைகளையும் பொறுத்தருள்க, என வேண்டுகிறார்.

பாலன் தேவராயர் தம் சஷ்டிகவசத்தில்,

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்

என்கிறார். ஸுப்ரமண்ய புஜங்கத்தின் அடியொற்றியே அமைந்துள்ளது.

தாயென நின்னிருதாள் பணிந்தேன் எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமாமுகனே

என்று கூறுகிறது சஷ்டிகவசம் (பரங்குன்றம்)

ஸமஸ்தம் மஹேச

'ஸமஸ்தம்' என்பதற்கு ஒன்றாக்கிய, எல்லாவற்றிலும் ஊடுருவியுள்ள, எல்லாம், முழுவதும், அனைத்தும் என்று பொருள்.

ஆதிசங்கரர் தம்மாலியற்றப்பட்ட ஸ்லோகங்களில் அநேக இடங்களில் 'ஸமஸ்த' 'ஸமஸ்தம்' என்ற பதத்தைக் கூறியுள்ளார்.

'முதாகராத்த மோதகம்' எனத் தொடங்கும் கணேச பஞ்சரத்னத்தில்,

ஸமஸ்த லோக சங்கரம் நிரஸ்த தைத்ய குஞ்சரம்

எனத் துதிப்பதைக் காண்கிறோம்.

தசஸ்லோகியில், அருணாசலேஸ்வரர் பற்றிய ஸ்லோகத்தில் (ஸௌரிம் ஸத்யகிரம்—8) .... 'ஸமஸ்த ஜகதாம் நாதம் சிரோதர்சனே' என்கிறார்.

'மாதுஸ் ஸமஸ்த ஜகதாம் மஹனீயமூர்த்தி:' கனகதாரா ஸ்தவம்.

சிவபுஜங்கத்தில்,

மஹாதேவ சம்போ கிரீச த்ரிசூலிம்
ஸ்த்வயீதம் ஸமஸ்தம் விபாதீதி யஸ்மாத் |

என்கிறார் ஆசார்யர்.

'ஸமஸ்தம்' என்ற பதத்தை எல்லாவிதமான அனைத்துக்குற்றங்களையும் பொறுத்தருள்க, என்பதனை குறிப்பிடப் பயன்படுத்துகிறார். அதே சமயம், எல்லாவற்றிலும் நிரம்பியுள்ளவர் என்பதனைக் குறிப்பிட சூசமாகவும் உள்ளதன்றோ?

'ஈச:' என்பதற்கு வீரம் மிக்க, பராக்ரமம் மிக்க உன்னதத்தலைவன் என்று பொருள். மேலும் கணவன், பதினொன்று என்ற எண், சிவன் எனவும் பொருள்தரும்.

ஒரு ஸமஸ்கிருத ஸ்லோகம் உண்டு.

ஸ்வயம் மஹேச: ஸ்வதரோ நகேச:
ஸகா தனேச: தனயோ கணேச: |

ஈச: என்பதற்குத் தலைவன், ராஜா, அதிபதி என்றவாறு தானோ (பரமேஸ்வரன்) மஹாராஜா; மாமனாரோ மலைகளின் ராஜா; நண்பனோ தனங்களின் அதிபதி (குபேரன்); பிள்ளையோ கணங்களின் ராஜா; (மனைவியோ அன்னபூரணி) ஆனால் சம்புவோ பிக்ஷாடனா! ஈச்வரின் இச்சை இப்படியோ! என வேடிக்கையாகக் கூறுவர்.

மஹா ஈச: — மஹேச: அதாவது பெருந்தலைவன், மஹாராஜன் என்பதாம். பொதுவாக சிவனின் நாமம் (மஹேசன்)

மஹாதேஜஸ், மஹாசக்தி, மஹாஸேனன் என்பவை கார்த்திகேயனின் பெயர்கள். 'ஸ்கந்தரூபம் சிவம் ஸ்மரேத்' என்று ஆதிசங்கரரே போற்றுவதால் 'மஹேச' என்ற சொல் இவ்விடத்தில் ஸுப்ரமண்யரைக் குறிக்கும்.

கருத்து

'க்ஷமாபனம்' என்பதொரு சரணாகதித்தத்துவ நடைமுறை. ஆதிசங்கரரும், சிவாபராத க்ஷமாபண ஸ்தோத்ரம், தேவீ அபராதக்ஷமாபணம் எனத் துதித்துள்ளார். சில ஸ்தோத்திரங்களில் க்ஷமாபணத்தை ஓரிரு ஸ்லோகங்களிலும் கூறியுள்ளார். ஸுப்ரமண்ய புஜங்கத்தில் அவ்வகையை இந்த ஸ்லோகத்தில் காணமுடிகிறது. பிழைபொறுத்தருளுமாறு ஸுப்ரமண்யரை ஆசாரியான் பிரார்த்திக்கிறார்.

31

வணங்குதல்

31. நம: கேகினே ஸக்தயே சாபி துப்யம்
நமஸ்சாக துப்யம் நம: குக்குடாய |
நமஸ்ஸிந்தவே ஸிந்துதேசாய துப்யம்
புன:ஸ்கந்தமூர்த்தே! நமஸ்தே நமோஸ்து ||

பதவுரை

கேகினே நம: — மயிலுக்கு நமஸ்காரம் (வாகனம்); ஸக்தயே சாபி துப்யம் (நம): — வேலாயுதத்திற்கும் நமஸ்காரம் (ஆயுதம்); சாக நம: — ஆட்டிற்கு நமஸ்காரம் (வாகனம்); துப்யம் நம: குக்குடாய — சேவற்கொடிக்கும் நமஸ்காரம் (ஆயுதவகை); ஸிந்தவே நம: — சமுத்திரத்திற்கு நமஸ்காரம்; ஸிந்துதேசாய துப்யம் (நம:) — (ஸுப்ரமண்யர் வாஸம் செய்யும்) சமுத்ரகரைக்கு நமஸ்காரம்; ஸ்கந்தமூர்த்தே — ஸ்கந்தமூர்த்தியே! தே புன: நம: அஸ்து நம: அஸ்து — மீண்டும் மீண்டும் உமக்கு என் நமஸ்காரங்கள்.

விளக்கவுரை

இந்த ஸ்லோகத்தில், ஸுப்ரமண்யஸ்வாமியின் வாகனங்கள், ஆயுதங்கள், ஸாந்நித்யம் விசேஷம் பெற்ற தீர்த்தம், இடம், உபாஸிக்கும் அடியார்கள் ஆகியவர்களையும் ஸுப்ரமண்ய ஸ்வாமியாக பாவித்து பூஜித்தல் அவசியம் என்ற மரபையொட்டி சொல்லப்பட்டுள்ளது.

கேகினே நம:

கேகின் — மயில்.

மயில், யானை, ஆடு ஆகியவை ஸுப்ரமண்யரின் வாஹனங்களாகும். ஆனால் மயில்வாஹனம் முதன்மை பெற்றுள்ளது.

'வேத ஏவ மயூரஸ்யாத்' என்ற ஸ்காந்த புராண வசனப்படி, வேதமே மயிலாக ஆகி ஸுப்ரமண்யருக்கு வாஹனமாக விளங்கி வருகிறது.

ஸகல வேதங்களும் தம் தபோமஹிமையால் மயிற்பறவையாக உருக்கொண்டு, ஸுப்ரமண்யரின் வாஹனமாகி தம் மனோரதத்தை பூர்த்தி செய்து கொண்டதாக ஸ்கந்தோபநிஷத் போன்றவற்றில் சொல்லப்பட்டுள்ளது.

மயூரபாவம் நிகமா: தபஸா ப்ராப்ய ஷண்முகம்

ஸ்கந்தன் — பரபிரம்ம வடிவ ஸுப்ரமண்யன்

மயில் — சப்த (ஒலி) ரூப வேதம்.

காளிதாசன் கூறுவதாவது: 'அக்னியில் ஜனித்த தெய்வம் மயில் வாஹனனாகக் காட்சியானான்.' இது ஸுப்ரமண்யரைக் குறிக்கிறது.

புறநானூற்றுப்பாடல்படி, மயில் முதலில் கொடியாகத் தானிருந்தது. பின்னர் வாஹனமானது.

மாமரமாகிக் கடலில் ஒளிந்த சூரனை, இருகூறு களாகப் பிளந்தார் ஸுப்ரமண்யர். ஒருபாகம் சேவலாக மாறி வாஹனமானது என்பது புராணக் குறிப்பாகும்.

மயிலின் ஆற்றல் அளவில்லாதது. அதன் தோகை அசைவின் காற்றுப்பட்டதிலிருந்தே, மேருகிரி அசைந்ததாம்; குலாசலங்கள் துகளாயினவாம்.

சூரபத்மனுடனான போரின்போது இந்திரனே மயில் வாகனமாக கந்தனுக்கு உதவினான். சூரனின் ஒரு கூறும் மயிலாகியது.

குகனின் ஸம்ப்ரதாய வழிபாட்டில் மூன்றாம் ஆவரணத்தில் மேற்குத்திசையில் மயில் பூஜிக்கப்படும்.

மயில் இயல்பாகவே ஆடும் இயல்புகொண்டது 'நீலகண்ட மஹாபாக ஸுப்ரஹ்மண்ய ஸுவாஹன'

எனப்போற்றப்படுவது மயில். அருணகிரிநாதரும் 'நீலக்ரீவ ரத்னகால மயிலே' என்பார்.

'ஒய்யாரமயில் மேல் உகந்தாய் நமோ நமோ'

என சஷ்டிகவசம் (பரங்குன்றம்) போற்றும்.

முருகப்பெருமானை வைத்து ஈஸ்வரனை குறிப்பிடும் தேவாரப்பாடல்கள் சில உண்டு. மயிலூர்த்தி தாதை, மயிலேறவன் தாதை, என்பன மயிலை முன்னிருத்திக் கூறும்.

மயில் வாகனக்காட்சியானது, மரகதத்தில் மாணிக்கம் பதித்தது போன்றுள்ளதென அருணகிரியார் 'வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறு மாணிக்கமே' என்கிறார் (கந்தரலங்காரம்) அனுபூதியிலோ, மயிலேறிய சேவகன் என்கிறார்.

மயில் விருத்தம் (அருணகிரியார்) மயில்பத்து (கந்தப்பதேசிகர்) போன்ற இலக்கியங்கள் மயில் முன்னிலைப் படுத்தி கந்தனின் வீரச்செயல்களைப் போற்றும்.

அருணகிரியார்— சம்பந்தாண்டார் விவாதத்தில் கம்பத்தில் (தூணில்) முருகனை வரவழைக்க வேண்டும் அதன்படி, அருணகிரிநாதர் மீண்டும் மீண்டும் பிரார்த்தித்தார். நிலைமையையுணர்ந்த அருணகிரி நாதர், 'மயிலுமாடி நீயுமாடி வரவேண்டும்' எனத்துதித்துப் பாடியதும் கம்பத்தில் காட்சிதந்தார். இன்றும் திருவருணையில் 'கம்பத்திளையனார்' ஸந்நிதி ராஜகோபுரம் தாண்டியதும் நம்மை அழைக்கிறார்.

பாம்பன் ஸ்வாமிகளும் குகனை மயில்மீது தரிசிக்கும் படி 'பகை கடிதல்' பதிகத்தைப் பாடியுள்ளார்.

அருணகிரிநாதர் தம் திருச்செந்தூர் திருப்புகழிலும் (முந்து தமிழ்மாலை கோடி கோடி) தம்மை ஆள்வதற்காக,

'திந்திதிமி தோதி தீதித்தீதி
தந்ததென தான தானத்தான
செஞ்செ ணகு சேகு தாளத்தோடு நடமாடும்
செம் சிறிய கால் விசால தோகை

துங்க அனுகூல பார்வை, தீர
செம் பொன் மயில் மீதில் எப்போது வருவாயே

எனப் பாடுகிறார்.

'போர்க்களத்தில், திந்திதிமி..... செகுண சேகு எனும் தாளகதியில் நடனம் புரியும், செம்மையான சிறிய கால்களையுடையதும், விசாலமான தோகையுடையதும், தடையகற்றி பவித்ர அருட்பார்வையைக் கொண்டதும், தைரியமானதும் செம்பொன் போல் ஒளிரும் மயில் வாகனத்தில் எப்போது வருவீர்' என மயில் போற்றி, சுப்ரமண்யரை வணங்குகிறார்.

பழமுதிர்சோலை திருப்புகழில் (அகரமுமாகி அதிபனுமாகி)

செககண சேகு தகுதிமி தோதி திமி என ஆடும்
மயிலோனே!

எனப்பாடுகிறார்.

'செககண சேகு தகுதிமி தோதி திமி! என்ற தாள இசையுடன் நடனம் புரியும் மயிலை வாஹன மாக உடையவரே' என்கிறார்.

சக்தயே சாபிதுப்யம்

சக்தி—வேல்

மயிலுக்கு நமஸ்காரம் என்றதும், வேலுக்கும் நமஸ்காரம் எனப்போற்றுகிறார்.

வேத ஏவ மயூரஸ்யாத் ப்ரணவ: ஷண்முகஸ்ததா |
ப்ரஹ்மவித்யாபி சக்திஸ்யாத் மோக்ஷ: தத் தர்சனாஸ்ம்ருத: ||

என்கிறது ஸ்காந்தபுராணம்.

வேதம்—மயில், ப்ரணவம்—ஷண்முகர், ப்ரம்ம வித்தை — சக்தி என்ற வேல். தத்துவங்களான மயில், வேல் என்பவைகளைத் தரிசித்தாலேயே மோக்ஷத்தை சுலபமாக அடையலாம் என்கிறது.

ஆதிசங்கரரும், சக்தி என்ற வேல் பற்றிய ஒரு ஸ்துதியில்,

சக்தே! பஜேத்வாம் ஜகதோ ஜனித்ரீம்
ஸுகஸ்ய தாத்ரீம் ப்ரணதார்த்திஹந்த்ரீம் |
நமோ நமஸ்தே குஹஹஸ்த பூஷே
பூயோ நமஸ்தே ஹ்ருதி ஸன்னிதஸ்வ ||

எனப் போற்றித் துதிக்கிறார்.

'வேல்' மட்டும் வைக்கப்பட்டு ஸுப்ரமண்யர் கந்தன் (முருகன்) வழிபடப்பட்டார் என சங்க நூல்களில் காணமுடிகிறது. திருப்பரங்குன்றம் சங்ககாலத்தில் வேற்கோட்டம் எனப்பட்டது. அங்கு வேலை வைத்து வணங்கும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. சில தலங்களில் திருமஞ்சனவழிபாடு வேலுக்குத்தான் நடைபெறும் கதிர்காமம் (இலங்கை) கதிரைமலை போன்ற தலங்களில் வேல் மட்டுமே உண்டு.

கந்தனின் படைக்கலன்களில் தலைமைப் பதவியை 'வேல்' பெறுகிறது. வேல்வேறு, கந்தன் வேறு என்று சொல்லமுடியாதபடி, திருமேனியுடன் வேல் ஒன்றியுள்ளது.

ஆன்மாக்களின் வினைமாய, வேல் அருளக்கூடியது. அதனால்தான். 'வேலுண்டு வினையில்லை' என்று வழக்கமாகக் கூறுகிறோம்

அருணகிரிநாதர், வேலை, 'ஞானபூரண சக்தி' என்று திருப்புகழில் கூறுகிறார்.

வேல் இருளை ஓட்டும். ப்ரகாசமான தீ, சூரியன், சந்திரன் ஆகிய இயற்கை சக்திகளை விளக்கக் கூடிய ஒரு குறியீடுவேல் என வேல்வகுப்பில் குறிப்பிடப்படும்.

மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ

வீரவேலேந்தும் வேளே நமோ நமோ

என்று வேலைப் போற்றுகிறது சஷ்டிகவசம் (பரங்குன்றம்)

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க சஷ்டிகவசம்

வேலைப்போற்றி 'வேல்பத்து' என்ற பாடல்களைக் கந்தப்பதேசிகர் எழுதியுள்ளார்.

'வேல்' என்றதும் ஆயுதத்தைத்தான் நினைக்கிறோம். ஆனால் வேல் என்பது ஞானமாகும். அதாவது ஞானசக்தி.

ஸுப்ரமண்யர். தன்னை வணங்குபவர்களுக்கு ஞானசக்தியைத் தருவார் என்பதன் குறிப்பே வேலேந்தும் பெருமான் அவரை வழிபட அஞ்ஞான இருள் நீங்கும்.

பழனித் திருப்புகழில்

> **அயிலும் மயிலும் அறமும் நிறமும்**
> **அழகும் உடைய பெருமாளே!**

என்கிறார்.

'வேலும் மயில்வாஹனமும் தர்மமும் ஒளியும் அழகுமுடைய பெருமாளே' எனப்போற்றப்படுகிறார்.

சாகநம:

சாக: — ஆடு.

ஸுப்ரமண்யருக்கு ஆடும் ஒருவாகனமாக இருந்தது.

நாரத முனிவர் ஒரு யாகம் செய்தார். அந்த யாகத்தில் செவ்வான நிறத்தில் ஒரு ஆடுதோன்றியது. அந்தக் கொடுமையான ஆடு வேள்வியை அழிக்கத் தொடங்கியது. நாரதர் ஸ்கந்தனை வேண்ட, அந்த பயங்கர ஆட்டை அடக்கித் தன் வாகனமாக்கிக் கொண்டதாக இலக்கியங்கள் கூறுகின்றன (கல்லாடம்— கடவுள் வாழ்த்து).

கந்தபுராணத்தில் இதனைத் 'தகரேறுபடல'த்தில் விரிவாகக் காண முடிகிறது. கந்தன், வீரவாகுவை அனுப்பி அதனைப் பிடித்துவரச் செய்து தன் ஊர்தியாக ஏற்றுக் கொண்டார் என்கிறது. மலைகளை அதிரச் செய்து, சந்த்ர சூர்யர்களின் தேர்களைத் தாக்கி நட்சத்திரங்களை உதிர்த்துக் கொடுமைகள் செய்ததாம் அந்த ஆடு (தகர்). அதனை அடக்கியதால் கந்தனின் ஆற்றல் போற்றப் படுகிறது.

மயிலை ஆணவமலமாகவும், யானையை கன்ம மலமாகவும், ஆட்டை மாயாமலமாகவும் விளக்கிக் கூறுவார் வாரியார் அவர்கள்.

ஆடு— அஞ்ஞானம் ஞானம் உயர்ந்த நிலையில் கந்தன் அதனை அடக்கினான் வாகனமாகக் கொண்டான்.

துப்யம் நம: குக்குடாய

குறுந்தொகை கடவுள்வாழ்த்தில், முருகன் கோழிக் கொடியையுடையவராகக் குறிப்பிடப்படுகிறார்.

குக்குடம்—சேவல். கதிரவன் வரவை உணர்த்தி ஞானபானுவான முருகன் வரவை உணர்த்தும்.

சூரபத்மனுடனான போரில், முருகன் கையிலிருந்த கோழி கூவியதால் (அக்னிதேவனே கோழி) சேனைகளழிந்ததாகவும் கந்தபுராணம் தெரிவிக்கிறது.

மயில்மேகத்தைக் கண்டு மங்கிய ஒளியில் ஆடும். சேவல் ப்ரகாச சூரியன் வரவைக் கூவிக் காட்டும். கந்தனோ இவையிரண்டினிடையில் பிரகாசிப்பவர்.

'நாதவிந்து கலாதீ நமோ நம' என்கிறது திருப்புகழ் இதில் நாதத் தத்துவம் சேவல்.

கந்தனின், கஜாரூடர், ஆறுமுகர், தேஸேனாபதி, சரவணபவர், தாரகாரி— ஆகிய திருமேனி வடிவங்களுக்குக் கோழிக் கொடி (கோழி) உண்டு இதனைத் தணிகைப்புராணம் தெரிவிக்கிறது.

முருகனின் சேவல் சிறகசைப்பால், அண்டங்கள், குலமலைகள், மாமேரு அதிர்ந்தன அத்தகைய ஆற்றல்பெற்றது (கந்தரலங்காரம்)

திக்கது மதிக்க வரு குக்குடமும்.........

என அருணகிரியார் திருப்புகழில் போற்றுகிறார்.

'சேவல் பத்து பாடலைக் கந்தப்பதேசிகர் தந்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் 'அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும், கோழிச் சேவற்கொடியோன் கோட்டமும்' எனக் காணப்படுகிறது. (பாடல் 5—170)

கந்தப் பெருமானின் கொடியின் சின்னம் சேவல் அச்சேவல் அருள்பெற்றதும் கூட அஞ்ஞான இருள் அகன்றிடவிடியுமாறு கூவும் சேவல் செந்நிறம் அதன் நாதம் பிரணவத்தை நினைவுபடுத்தும்.

வாழ்க வாழ்க வாரணத்துவசம் — சஷ்டிகவசம்

கோழிக் கொடியுடை கோவே நமோ நமோ

(சஷ்டிகவசம் பரங்குன்றம்)

கூவிய சேவற்கொடியோய் நமோ நமோ

சேவல் கொடியுடன் சிறப்புடன் இலங்க

(சஷ்டிகவசம் குன்றுதோறாடல்)

திகழொளிபவனே சேவற்கொடியாய்

நகமாயுதமுடை நாதனே சரணம்

(சஷ்டிகவசம்–பழமுதிர்ச்சோலை)

சேவலை நாம் போற்றி வணங்குவதால், அஞ்ஞானம் நீங்கி ஞானம் உண்டாகம் என்பது கருத்தாகும்.

நமஸ்ஸிந்தவே ஸிந்துதேசாய துப்யம்

ஆதிசங்கரர் ஸுப்ரமண்யரை நமஸ்கரிக்கும் போது உடனுள்ள மயில், கோழிக் கொடி, வேல், ஆடு மற்றும் கடல், கடற்கரை பிரதேசம் ஆகியவற்றையுநம் மஹிமை பொருந்தியவைகளாக வணங்குகிறார். மேலும், திருச்செந்தூர் ஷண்முக ஸ்தோத்திரத்தில்,

'பாவயாமி ஸிந்துதீரவாஸினம் ஷடானனம்' என்ற ஈற்றடி முடியுமாறும் அஷ்டகம் பாடியுள்ளார்.

'ஸிந்து தீரே ய ஆஸ்தே (எந்த ஸ்வாமி கடற்கரையில் எழுந்தருளியுள்ளாறோ) (ஸ்லோ.4)

யதாப்தேஸ் தரங்கா லயம்யாந்தி துங்கா (எப்போது கடலின் பெரிய அலைகள் எம்மை அடைகின்றனவோ (ஸ்லோ.5)

மஹாம்போதி தீரே (பெரியகடற்கரையில் (ஸ்லோ7)

ஜய ஆனந்த ஸிந்தோ (ஆனந்தக்கடலே) ஸ்லோ—32)

என ஸிந்து, அப்தி, போதி ஆகிய பதங்களைக் கொண்டு ஸமுத்ரத்தைக் குறிப்பிடுகிறார்.

திருச்செந்தூர் முருகனுக்குக் 'கடற்கரை ஆண்டி' என்ற பெயரும் உண்டு.

'ஸிந்து' என்பது ஸிந்து நதியைக் குறிக்கும். பொதுவாக நதி என்பதையும் குறிக்கும் ஆதலால் தாமிரபரணியைக்

குறித்ததாகலாம் செந்தூரருகே 'சிந்துபூந்துறை' என்ற தலம் உள்ளது. அவ்வூர் தாமிரபரணியாற்றுக் கரையின் ஒரு துறை.

அருணாசலமலையைச் சுற்றி எட்டுமைல் சுற்றளவு இடம் சிவ புண்ய பூமி; ஸாந்நித்யம் பெற்றது. என அருணாசல மஹாத்மியம் கூறும் அதுபோல, ஸுப்ரமண்யர் வாஸம் செய்யுமிடமும் ஸாந்நித்யம் பெற்றது. அதனால் கடற்கரைப் பிரதேசத்திற்கும் தம் வந்தனங்களைத் தெரிவிக்கிறார்.

வரலாற்று நோக்கின்படி, பிரபலமாகவிருந்த ஸ்கந்தன், மஹாஸேனன், குமாரன், கார்த்திகேயன் கோயில்கள் காலத்தாலழிந்துபட்டன. தற்காலத்தில் ஏராளமான முருகன் கோயில்கள் ஊருக்கு ஊர் தமிழ்நாட்டில்தான் உள்ளன. ஸ்கந்தனே வடதிசையை விட்டு தென்திசை வந்து திருச்செந்தூரில் தங்கி விட்டான் என்பார்கள். 'ஸிந்துதேசாய துப்யம்' என்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

புன:ஸ்கந்த மூர்த்தே! நமஸ்தே நமோஸ்து

ஸ்கந்தமூர்த்தியே மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

'ஸ்கந்தமூர்த்தி' என்பது இங்கு ஸிந்து தீர வாஸியான ஸுப்ரமண்ய மூர்த்தியைக் குறிக்கும் ஸ்கந்த: என்ற சொல்லுக்கு நதியின் கரைஎன்றும் பொருளுண்டு. தாமிரபரணி நதிக்கரையின் மூர்த்தியான ஸுப்ரமண்ய ராகவும் உள்ளார்.

ரிக்வேதம், 'ஸ்கந்தன் அக்னியின் அம்சமாக அக்னியிலிருந்து உண்டானவன்' எனக் கூறும் இந்த ஸுப்ரமண்ய ஸ்வாமியாகிய ஸ்கந்தமூர்த்தியோ ஸமுத்ரதீர வாஸியாகக் காட்சிதருவதும் ஒரு ஆச்சரியம்:

ஸாமவேதம் 'சாந்தப்படுத்த வேண்டிய தெய்வங்களில் ஸ்கந்தன் முக்கியமானவன்' என்கிறது. அவ்வாறே, போருக்குப்பின் இவ்விடத்தில் ஈஸ்வரனை பூஜித்துக் கொண்டு சாந்த நிலையிலுள்ளார் என்பதையும் கருத்தில் கொள்ளலாம்.

'நிக்ருஷ்வை ரஸமாயுதை..............' என்ற அருணமந்த்ர முடிவில் ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம், என மும்முறை உச்சரிக்கப்படுகிறது.

ப்ரம்ம ஞானத்தின் உறைவிடமாகவும், வேத வடிவினனாகவும் ஸ்கந்தன் கொள்ளப்படுவதால் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியாக இங்கு ப்ரகாசிக்கிறார். அவரை ஆதிசங்கரர் மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்கிறார்.

ஸுப்ரமண்ய புஜங்கப்ரயாதம்(1)ல், ஆதிசங்கரர் இதுபோன்றே துதிப்பதைக் காணலாம்.

நமஸ்தே நமஸ்சேஷரூபாய துப்யம்
நமஸ்தே நமோ திவ்யசாபாய துப்யம் |
நமஸ்தே நமஸ்ஸத்ப்ரதாபாய துப்யம்
நமஸ்தே நமஸ் ஸத்கலாபாய துப்யம் ||

நமஸ்தே நமஸ் ஸத்கிரீடாய துப்யம்
நமஸ்தே நம: ஸ்வர்ணபீடாய துப்யம் |
நமஸ்தே நமஸ் ஸல்லலாடாய துப்யம்
நமஸ்தே நமோ திவ்யரூபாய துப்யம் ||

எனத் துதிக்கிறார்.

தெய்வங்கள் மீது ஸ்துதிகள் பாடும் ஆதிசங்கரர், தம் நமஸ்காரங்களை வெவ்வேறு விதத்தில் கூறி நமஸ்கரிக் கிறார்.

நமஸ்தே நமஸ்தே விபோ விஸ்வமூர்த்தே

(வேதஸார சிவஸ்துதி)

தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணாமூர்தயே

(தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்)

நம: சிவாப்யாம் நவயௌவனாப்யாம்............
நமோ நம: சங்கரபார்வதீப்யாம் (உமா மஹேஸ்வர ஸ்துதி)

நமோஸ்து நாளீக நிபானனாயை..................

(கனகதார ஸ்தோத்ரம்)

நமஸ்தே நமஸ்தே மஹாசக்தி பாணே............

(ஸுப்ர. புஜங்கப்ரயாதம்)

அவ்வகையில், இங்கு

நம: கேகினே சக்தயே சாபி துப்யம்

நம: சாக துப்யம் நம: குக்குடாய

நம: ஸிந்தவே ஸிந்து தேசாய துப்யம்..........

என நமஸ்கரித்து துதிக்கிறார்.

கருத்து

நல்ல ஸாதகன் ஆயுதங்களை தியானம் செய்வான். ஆயுதங்களின் தியானத்தின் பயனாக மஹாமோஹம், மரணப் பீடை, மாயை ஆகியவற்றைக் கடக்க முடியும் என்பது பெரியோர் வாக்கு. அதையொட்டி இந்த ஸ்லோகம் அம்மாதிரி நினைவு கூறும்படி அமைந்துள்ளது.

ஸ்கந்தன் — பரப்ரம்ம (வடிவ ஸுப்ரமண்யன்)

மயில் — (ஒலி வடிவான) வேதம்

வேல் — ப்ரம்மவித்யை (ஞானம்)

சேவற்கொடி — ப்ரக்ஞை (விழித்துக் கொண்டதன் அடையாளம்)

32

போற்றி! போற்றி!

32. ஜயானந்தபூமன் ஜயாபாரதாமன்
ஜயாமோககீர்த்தே ஜயானந்த மூர்த்தே |
ஜயானந்த ஸிந்தோ ஜயாசேஷ பந்தோ
ஜய த்வம் ஸதா முக்திதானேஶஸூநோ ||

பதவுரை

ஜய ஆனந்த பூமன் — *ஆனந்தத்தின் உறைவிடமே (ஜய ஜய) போற்றி!;* ஜய அபார தாமன் — *அபாரசக்தி பெற்றவரே போற்றி!;* ஜய அமோக கீர்த்தே — *அமோகமான கீர்த்தி பெற்றவரே போற்றி!;* ஜய அனந்த மூர்த்தே — *அளவில்லா வடிவத்தினரே போற்றி!;* ஜய ஆனந்த ஸிந்தோ — *ஆனந்தக்கடலே போற்றி;* ஜய அசேஷ பந்தோ — *லோகத்தின் பந்துவே போற்றி!;* ஜய த்வம் ஸதா முக்திதான ஈச ஸூநோ — *எப்போதும் முக்தியளிக்கும் ஈசபுத்ரரே போற்றி! போற்றி!*

விளக்கவுரை

முக்தியளிக்கும் ஈசபுத்ரனான ஸுப்ரமண்யர் ஆனந்தமயமானவர். காந்தி, கீர்த்தி, ஆற்றல், வடிவு கொண்டவர். எப்போதும் அவ்விடத்திலேயே எழுந்தருளி வழிகாட்ட வேண்டுமென ஆதிசங்கரர் போற்றுகிறார்.

'ஜயம்' என்றால் வெற்றி என்பது பொருள். வெற்றிக்கு நாயகனாக, வெற்றிவேல் கொண்டு விளங்கும் தலைவனாக ஸுப்ரமண்யர் விளங்குகிறார்.

பாம்பன் ஸ்வாமிகளும் தம் குமாரஸ்தவத்தில் 'ஓம் ஜயஜய பதயே நமோ நம:' எனப் போற்றி வணங்குகிறார்.

'ஜெய ஜெய அருணாத்ரி நமச்சிவய' எனத் தொடங்கும் அருணைத்தலத் திருப்புகழும் இதற்கு ஒரு உதாரணம்.

மேலும் அருணகிரிநாதர் தம் திருப்புகழில்

நிருதரார்க்கொரு காலா ஜே ஜெய
சுரர்களேத்திடு வேலா ஜே ஜெய
நிமலனார்க் கொரு பாலா ஜே ஜெய விறலான

நெடியவேற்படை யானே ஜே ஜெய
என இராப்பகல் தானே நான் மிக
நினது தாள் தொழுமாறேதான்...

எனப்போற்றுவதைக் காணலாம்.

ஜய ஆனந்த பூமன்! ஜய அபார தாமன்!

ஆனந்தமாகவும், பிரம்மானந்தமாகவும் இருக்கின்றவர் ஸுப்ரமண்யர்.

'ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம' (தைத்ரிய உபநிஷத்— ஆனந்தவல்லி) அதுவே ஸத்தாகவும், சித்தாகவும் ஆனந்தமாகவும் உள்ளது. (பிரம்மம்)

ஆனந்தமய ஆத்மா— ஸம்ஸாரியான ஜீவன்
ஆதாரமான பிரம்மமே— பரமாத்மா

பரமாத்மாவான ஸுப்ரமண்யன் வஸிக்கும் பிரதேசமே ஆனந்தகமாக உள்ளது. ஏனெனில், இந்த ஆனந்தம் அங்கு இங்கு என்றில்லாமல் எங்கும் பிரகாசமாயிருப்பதைக் காணமுடிகிறது.

அபார— எல்லையற்ற கிரணங்கள்,

தாமன்— உறைவிடம், கிரணங்கள் ப்ரகாசம், சக்தி

அவருடைய இருப்பிடங்கள் குன்று மலை, படைவீடுகள், பாரதத்தில் அவருக்கான ஆலயங்கள் என எண்ணற்றவை. அவைகள் எப்போதும் இருக்கட்டும் வாழி வாழி! (ஜய ஜய)

ஸ்வாமியின் இருப்பிடம், உறைவிடம், இதயகுகை ப்ரகாசமான, ஸ்வபாஸா லஸந்தம் குஹம் போற்றி போற்றி! 'ஆனந்தவாரி பரப்ரம்மமே' 'அருவாகியே உருவாகியே ஒளிர்நிலை அன்பு கொண்டதடைய' என்பார் அச்சுததாஸர் (57)

ஜய அமோக கீர்த்தே

அழியா கீர்த்தி பெற்றவரே, அமோக கீர்த்தி பெற்றவரே வாழி. வாழ்க.

லக்ஷியத்தையடையும் கீர்த்தியையுடையவரே ப்ரகாசம் பொருந்தியவரே.

'கீர்த்தி' என்பதற்கு ஒலி என்றும் பொருள் சமுத்ர அலைகளின் அழியா ஒலியின்கண் இருப்பவரே (என்றும் கொள்ளலாம்) ஜய ஜய!

ஜய அனந்த மூர்த்தே

எப்பொழுதும் நிலைபெற்றிருப்பதாலும், எங்கும் வியாபித்திருப்பதாலும் தேச கால அளவுகள் இல்லாமையினாலும் அனந்தன் ஆகிய மூர்த்தி அளவற்ற, ஏராளமான வடிவினரே போற்றி.

தெய்வ உருவங்களைத் தெய்வங்களாகவே கொள்வது வழக்கம். அது ஓர் ஆழ்ந்த நம்பிக்கை வேல் எனவும், திருவடிகள் எனவும் தொடங்கியது வழிபாடு. புராணக் கதைகளுக்கேற்பவும், தியானத்தின் வெளிப்பாடுகளாலும் கந்தன், குமரன், குகன் கார்த்திகேயன், சரவணன், ஆறுமுகன், சேனானி, வள்ளிமணாளன், மயில் முருகன், சுப்ரமண்யன் எனப் பல மூர்த்தங்களாக ஆனார். ஜய ஜய போற்றி போற்றி!

ஓதமார் கடல் சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந்தருள்வாய்

என்கிறது சஷ்டிகவசம் (பரங்குன்றம்)

எனைத்தடுத்தாட்கொள் என்றெனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி சஷ்டிகவசம் (செந்தூர்)

ஜய ஆனந்த ஸிந்தோ

'ஆனந்தமே ப்ரம்மம்' என்று ஆராய்ந்தனர். ஆனந்தத்திலிருந்தே உயிர்கள் உண்டாகின்றன. ஆனந்தத்தாலேயே வாழ்கின்றன. ஆனந்தத்தினாலேயே மறைகின்றன! என தைத்திரியோ பநிஷத் தெளிவு படுத்துகிறது.

ஒரு மனித ஆனந்தத்தினளவைப்போல பல கோடி அளவு இந்திரன், பிரஹஸ்பதி போன்றவர்களுடைய ஆனந்தம் பிரம்மானந்தம் இதற்கெல்லாம் அப்பாற்பட்டது. அளவுகடந்தது மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதது. அத்தகைய ஆனந்தக்கடல், ஆனந்த ஸிந்து நீ ஜய ஜய

ஆனந்தமே அவன் ஸ்வரூபமும் கூட

ஜய அசேஷ பந்தோ

சேஷம்—மீதி: அசேஷம்—மீதியில்லாமல்.

பந்தம்— பிணைப்பு, பிடிப்பு, தொடர்பு, தனை ஆபத்துக் காலத்தில் உறுதுணையாகவிருக்கும் பந்துவைப் போன்றிருப்பவன்.

இன்பநுகர்ச்சியின் வெளிப்பாடுகள் எதுவும் மீதியில்லாமல் செய்து தம்முடன் ஒரு பிணைப்பை ஏற்படுத்துபவர்.

ஜயத்வம் ஸதா முக்திதான ஈஸஸூநோ

ஈச ஸூனோ— ஈசபுத்ரன். ஈசபுத்ரரே! தாங்கள் எப்போதும் முக்தியைத் தரும் ஈசஸூநு.

ஒருவன் எப்போது தனக்கும் பிரம்மத்துக்கும் பேதம் பார்ப்பதில்லையோ அப்போதுதான் அவன் ஒரு ஞானியாகிறான். அது ஒரு முக்தி நிலைப்பாடு.

முக்தி நிலையிலும் ஆன்மாவிற்குத் தலைவனாக உள்ளவர் ஈசபுத்ரனான ஸுப்ரமண்யர். குமாரஸ்தவத்தில் 'முக்தபதயே நமோநம' என்று பாம்பன் ஸ்வாமிகள் போற்றுகிறார். முக்தி நிலையிலுள்ளவர்களுக்கெல்லாம் முழுமுதற்பரம் பொருளாக விளங்குபவர் ஸுப்ரமண்யர். முக்தி என்பது முக்தித்தலங்களையும் குறிக்கும். தாங்கள் எப்போதும் முத்தியைத் தருவதில் வல்லவர் ஈசபுத்ரனே!

கருத்து

வேல்! வேல்! வெற்றிவேல்! என்பது போல 'ஜய ஜய' என்பது மந்திரச் சொற்களாக விளங்குபவை.

'போற்றி போற்றி வாழ்க' என மேம்பட்டு விளங்கும் தெய்வங்களைப் போற்றியும் வாழ்த்தியும் கூறுவது ஒரு மரபாகும் அவ்வகையில் ஆதிசங்கரர் புஜங்க விருத்தமுடிவில் ஸுப்ரமண்யரை 'ஜய ஜய' என்று ஒரு ஸ்லோகத்தில் வாழ்த்தி வணங்கிப்பாடுகிறார்.

பின்னாளில், பாலன் தேவராயர் சஷ்டிகவசத்தில் இம்மரபையொட்டி பாடுவதைக் காணலாம்.

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எந்தனுதுள்ளம் மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் ஸேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ்கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
வெட்சிப்புனையும் வேளே போற்றி (சஷ்டிகவசம்– செந்தூர்)

வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்தி செய்தவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
பூரணகிருபை புரிபவா போற்றி (சஷ்டிகவசம்–பரங்குன்றம்)

வேலவா போற்றி பாலா போற்றி
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
அதிசயமாக அமைந்தவா போற்றி (சஷ்டிகவசம் திருஏரகம்)

கந்தபுராணச் செய்யுளில்,

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்

கூறு செய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியாரெல்லாம்

எனப் போற்றும்.

திருச்செந்தூர் புராணம் போற்றுவதைக் காண்போம்

பன்னிருகரத்தாய் போற்றி!
பசும்பொன் மயிலாய் போற்றி!
முன்னிரு கருணை ஆறு
முகப் பரம் பொருளே போற்றி!
கன்னியிருவர் நீங்காக்
கருணை வாரிதியே போற்றி!
என்னிருகண்ணே! கண்ணுள்
இருக்குமாமணியே போற்றி!
சண்முகக் கடவுள் போற்றி!
சரவணத்துதித்தாய் போற்றி!
கண்மணி முருகா போற்றி!
கார்த்திகை பாலா போற்றி!
தண்மலர்க் கடப்பமாலை
தாங்கிய தோளா போற்றி!
விண்மதி வதன வள்ளி
வேலவா போற்றி போற்றி!

33

பலச்ருதி - நூற்பயன்

33. புஜங்காக்ய வ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம்ய:
படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய |
ஸுபுத்ரான் களத்ரம் தனம் தீர்க்கமாயுர்
லபேத் ஸ்கந்த ஸாயுஜ்யமந்தே நரஸ்ஸ: ||

பதவுரை

புஜங்காக்ய வ்ருத்தேன — *புஜங்கப்ரயாதம் என்ற யாப்பு முறையால்;* **க்லுப்தம் ஸ்தவம்** — *செய்யப்பட்ட ஸ்துதியை;* **ய: குஹம் ஸம்ப்ரணம்ய** — *எவனொருவன் ஸுப்ரமண்யரை நமஸ்கரித்து;* **பக்தியுக்த படேத்** — *பக்தியோடு படிக்கிறார்களோ;* **ஸுபுத்ரான் களத்ரம் தனம் தீர்க்கமாயு:** — *சத்புத்திரர்கள், மனைவி, பொருள், நீண்டஆயுள் இவைகளையடைந்து;* **அந்தே** — *முடிவு காலத்தில்;* **நர: லபேத் ஸ்கந்த ஸாயுஜ்யம்** — *அவன் (மனிதன்) ஸ்கந்த ஸாயுஜ்யம் அடைகிறான்.*

விளக்கவுரை

ஸ்தோத்திரங்களின் முடிவில் பலச்ருதி (நூற்பயன்) என்ற பகுதி உண்டு. ஸ்துதியைப் பாராயணம் செய்வதால் கிடைக்கும் பலன்கள் அதில் குறிப்பிடப்படும். அவ்வாறே ஸுப்ரமண்ய புஜங்க பாராயணப்பலன் இங்கு தரப்படுகிறது.

முன்னர் கத்யம், பதயம், என்பதை ஸ்லோகம் 2ல் அறிந்தோம். பத்யம் (ஒரு பாடல் அல்லது ஸ்லோகம்) நான்கு பாதங்கள் (கால் பகுதிகள்) கொண்டது. பத்யம்

என்பது விருத்தமாகவுமிருக்கலாம். ஜாதியாகவு மிருக்கலாம்.

சந்தஸ் சாஸ்திரப்படி, ஓர் எழுத்துக்கு ஓர் அக்ஷரம் என்றவாறுள்ள மீட்டர் 'விருத்தம்' எனப்படும். விருத்தங் களிலும் வகையுண்டு ஒரே மாதிரியான பாதங்களை யுடையது ஸமவிருத்தம் எனப்படும். அவ்வகையிலமைந்தது புஜங்க ப்ரயாத வ்ருத்தம்.

ஒரு கால்பகுதிக்கு பன்னிரண்டு அக்ஷரங்கள் கொண்ட மீட்டர் வகைகளில் புஜங்கப்ரயாதம் ஒன்று. பன்னிருதோள்கள், பன்னிரு கரங்கள், பன்னிரு கண்கள் உடையவரான ஸுப்ரமண்யருக்கு ஆதிசங்கரர் இவ்வகையில் ஸ்தோத்தரித்துள்ளார் போலும்!

புஜங்கம் என்றால் பாம்பு என்று பொருள். அதாவது புஜங்களால் தோளால் ஊர்ந்து செல்லக் கூடியது என்பதாம் வளைந்து வளைந்து செல்லும் பாம்பின் அசைவுக்கேற்றபடி, விருத்தப்பாவால் ஸ்தோத்தரிக்கிறார் சங்கரர்.

கலம்பகம் என்பது ஒரு சிற்றிலக்கிய வகை கலம்பகத்தில் ஒரு பிரிவு புயவகுப்பு, பாட்டுடைத் தலைவனின் தோள்வலிமையைப் புகழ்வதே புயங்கம் (புஜங்கம்) என்பது அறிஞர்கள் கருத்து. அருணகிரிநாதர் வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் பாடிப் போற்றியுள்ளார்.

ஆதிசங்கரரும் தோள் வலிமையை உயர்வாகப் போற்றியுள்ளார். *(ஸ்12)*

புஜங்காக்ய வ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம் ய:
படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய |

ஸுப்ரமண்யனே (குஹனை) நமஸ்கரித்து பக்தியுடையவனாக, புஜங்காக்ய விருத்தத்தினால் (புஜங்கப்ரயாத விருத்தத்தினால்) அமைந்த இந்த ஸ்தோத்திரத்தை— ஸுப்ரமண்ய புஜங்கத்தை எவனொருவன் படித்துப் பாராயணம் செய்கிறானோ அவன்,

ஸுபுத்ரான் களத்ரம் தனம் தீர்க்கமாயு:
லபேத் ஸ்கந்த ஸாயுஜ்ய மன்னே நரஸ்ஸ: ||

'ஸபுத்ரான் களத்ரம்' என்றும் பாடமுண்டு.

பக்தியுடன் படித்துப் பாராயணம் செய்பவர்கள், ஸத்ஸந்தானம், மனைவி, பொருள், தன தான்யம், நீண்ட ஆயுள்— ஆகியவற்றைப் பெறுகிறார்கள்.

முடிவில் ஸ்கந்த ஸாயுஜ்ய பதவியை அடைகிறான் ஸுப்ரமண்யரின் பரிபூர்ண கடாக்ஷத்தால், அவனது திருவடி நிழலையடைகிறான். ஜீவன் முக்தர்களாய் சிவப்பேரராளியாகக் காட்சியளிக்கும் ஐயன் ஸுப்ரமண்யனே!

சரியை நெறி— சாலோக முக்தி; கிரியை நெறி சாமீபமுக்தி; யோக நெறி— சாரூபமுக்தி; ஞானநெறி சாயுஜ்யமுக்தி என வகைத்தாகும்.

'நான் ஜீவனென்றும் பரன் என்னைவிடவேறு என்ற பேதப்படுத்தி எண்ணும் எண்ணநாசமே மோக்ஷமென்று முக்திக்கு இலக்கணம் கூறுவர்.

ஜீவபரமாத்மாக்கள் பரப்ரம்மத்தோடு ஒன்றுபடும் நிலை ஏற்படுமாயின் அந்நிலையே ஸாயுஜ்யரூபம் என்றமேலான மோக்ஷமாம் என ஸுத ஸம்ஹிதா ஸாரம் உரைக்கிறது.

இங்கு இப்புஜங்கத்தில் ஸகந்த ஸாயுஜ்யம் என்ற பதம் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

அச்சுததாசரும், தம் அத்வைத கீர்த்தனானந்த லஹரியில் இக்கருத்தினையே பாடுகிறார்.

'மாயா சகமருள் நீத்து ஒளி
வளர் ஆனந்த வாரியுள் வெளி
சாயுஜ்ய சாம ராச்ய ஸு
தாம தாயகனே' **(56)**

எனப்போற்றுகிறார்.

ஸுப்ரமண்ய புஜங்கப்ரயாதம் (1)லும் ஆதிசங்கரர்,

'புஜங்காக்ருதே த்வத் ப்ரியார்த்தம் மயேதப்
புஜங்கப்ரயாதேன வ்ருத்தேன க்லுப்தம் |
தவத்ஸ்தோத்ரமேதத் பவித்ரம் ஸுபுண்யம்
பராஹ ஸந்தோஹ ஸம்வர்த்த நாய || (29)

(புஜங்கப்ரயாத வ்ருத்தமானது உன்னிடத்திலுள்ள ப்ரீதிக்காக என்னால் செய்யப்பட்டது. உன்னுடைய இந்த ஸ்தோத்ரம் பவித்ரமானது புன்யமும்கூட பரானந்தத்தைத் தருவதாகும்.)

யதாசக்தி பக்த்யாக்ருதம் ஸ்லோகமேகம்
விபோமே பராதம் க்ஷமஸ்வாகிலேச (30)

(முடிந்த அளவு பக்தியால் செய்யப்பட்ட ஒரு ஸ்லோகமிது. என் குற்றங்களைப் பொருத்தருள்க அகில நாயகனே !)

இதம் தாரகாரேர் குணஸ்தோத்ரராஜம்
படந்த த்ரிகாலம் ப்ரபந்நா ஜனாயே |
ஸுபுத்ராஷ்டபோகாந் இஹத்வேவ புக்த்வா
லபந்தே ததந்தே பரம் ஸ்வர்க்க போகம் || (31)

(தாரகாரியின் பெருமைகளைக் கூறும் இந்த ஸ்தோத்ர ராஜத்தை எந்த ஜனங்கள் முக்காலங்களிலும் படிக்கிறார்களோ, அவர்கள் ஸத்புத்ரர் களையும் அஷ்டபோகங்களையும் இஹத்திலேயே அடைந்து முடிவில் பரத்தை ஸ்வர்கபோகத்தை யடைகிறார்கள் என்கிறார்.

ஸுப்ரமண்ய புஜங்கம் (2)ல் ஆதிசங்கரர், ஸதா யே பவந்தம் ஸ்மரந்தி படந்தி ப்ரஸந்நஸ்து தேஷாம் பஹு ஸ்ரீர் தனானி(16) (எப்போதும் எவர் அவரை — ஸுப்ரமண்யரை நினைத்துக் கொண்டு இதைப் பாராயணம் செய்கிறார்களோ அவர்களுக்குப் பிரஸன்னமாகி, ஏராளமான ஐஸ்வர்யங்களையளிப்பார்

குணஸ்தோத்ரமேதத் க்ருதம் தாரகாரேர் புஜங்கப்ரயாதேன பத்யேன காந்தம் | படந்த்யன்வஹம் யே ஜனா பக்தியுக்தா மநோவாஞ்சிதாந் ஸர்வகாமாந் லபந்தே (23)

(தாரகாரியின் குணங்களைக் கூறும் புஜங்கப்ரயாத பத்யத்தால் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை எந்த ஜனங்கள் பக்தியுடன் படிக்கிறார்களோ, அவர்களின் மனோபீஷ்டங்கள் நிறைவேறும் எல்லா விருப்பங்களையும் (காமனைகளையும் அடைகிறார்கள்) என்கிறார் ஆதிசங்கரர்.

"ஆதிசங்கரரின் உள்ளத்தினின்று இத்தகைய ஸ்தோத்திரத்தைத் (ஸுப்ரமண்ய புஜங்கத்தை தோற்று வித்தவர் ஸுப்ரமண்யரே. இந்த ஸுப்ரமண்யபுஜங்கமே ஸுப்ரமண்யஸ்வரூபம்தான் ஸ்தோத்திரத்தையே பவித்ரமான ஸுப்ரமண்யராக பாவித்துப் பாராயணம் செய்து பலனடைய வேண்டும்.

ஸ்ரீ சிதானந்த நாதர்

நூலாசிரியர் S. சௌந்தரராஜன்